
# பொருளியல் நோக்கு

மே-ஜூன் 1994





## இலங்கையில் தனியார் டியுசன் முறை


### கல்வியில் ஒரு புதிய பாணி

மக்கள் வங்கி வெளியீடு


# தேசிய கல்வி முறைக்கான அரசின் அர்ப்பணிப்பு


கல்வி மீதான அரச செலவினம்
1982 - 1993








பால் அடிப்படையில மாணவர் தொகை




மாகாண அடிப்படையில்
மாணவர் எண்ணிக்கை 1993




ஆதாரம் : புள்ளிவிவரப் பிரிவு, கல்வி அமைச்சு

# பொருளியல் நோக்கு

மலர் 20 இதழ் 2/ 3 மே/ ஜூன் 1994

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2,
இலங்கை.

## உள்ளே

### நிரல்கள்

| | | |
|---|---|---|
| பி. சிவராசா<br>ஆர். ஹரிஹரன் | 37 | ஆடு சந்தைப்படுத்தல் |
| டப்.ஜி.எஸ்.வைத்தியநாத | 39 | தேயிலையின் ஒப்பீட்டு ரீதியான செயலாற்றம் |
| ஜ். ஜயநாத் | 41 | வெளிநாட்டு வர்த்தகம் |
| டப்.ஏ.விஜேவர்தன | 59 | திருமணத்தின் பொருளியல் |

### விஷேச அறிக்கை

## இலங்கையில் தனியார் டியுசன் முறை

| | | |
|---|---|---|
| ஆரியதாஸ டி சில்வா | 3 | தனியார் டியுசனின் இன்றைய நிலை |
| சந்திரா குணவர்தன | 13 | இலங்கையில் தனியார் டியுசன் முறையின் தோற்றம் |
| ஜீ.எல்.எஸ்.நாணாயக்கார<br>மகிந்த ரணவீர | 17 | தனியார் டியுசனும் 21 ஆம் நூற்றாண்டின் கல்வித்துறை சவால்களும் |
| சுவர்ணா விஜேதுங்க | 23 | தனியார் டியுசன் முறையின் சில உளவியல் அம்சங்கள் |
| எச்.ரீ.விக்ரமசிங்க | 27 | போட்டிப் பரீட்சைகளால் துன்புறும் பிள்ளைகள் டியுசனுக்கான தேவை |
| பந்துல குணவர்தன | 30 | தற்போதைய கல்வி முறையில் |
| பி.வலிவிட்ட | 34 | டியுசன் எந்த அளவுக்கு உதவ முடியும்? |

### சிறப்புக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| ஏ.ஜே. வீரமுண்ட | 43 | சுற்றுலா வலயத்தில் சிறுவர் விபச்சாரம் : ஒரு மதிப்பீட்டாய்வு |
| ரீ.ஹெட்டியாரச்சி | 48 | கட்டுநாயக்கா வர்த்தக வலயத்தில் மகளிர் ஊழியம் |
| ஏ.டி.வீ.டி. எஸ். இந்திரரத்ன | 51 | புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடு என்ற அந்தஸ்தினை இலங்கை அண்மித்துள்ளதா ? |
| ஜே.டப்.வி. விக்கிரமசிங்க | 56 | வறுமையும் வருமானப் பகிர்வும் |

### அடுத்த இதழில்

- இலங்கையில் ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயங்களும் வெளிநாட்டு முதலீடும்
- வெளிநாட்டு நேரடி முதலீடும் ஏற்றுமதிக்கான பொருள் உற்பத்தியும்
- பொருளாதாரத்தில் ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயங்களின் பங்கு

அட்டைப்படம் : காமினி ஜயந்த மெண்டிஸ்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவு-களையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப்பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதி-பலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்-களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

# தனியார் டியுசன் குறித்து . . . .

■ டியுசன் முறை இலவசக் கல்வித்திட்டத்துக்குப் பொருந்தக் கூடியதல்ல; மாணவர்கள் தமது ஆசிரியர்களை மதிக்கத் தவறி விடுகின்றார்கள்.

-பேராசிரியர் கே. தர்மசேன,
களனி பல்கலைக்கழகம்

■ தற்போதைய பரீட்சை முறை மிகக் கடுமையான போட்டி இயல்பினைக் கொண்டதாக இருந்து வருகின்றது. இதனால், பெற்றோர், தமது பிள்ளைகளை டியுசன் வகுப்புக்களுக்கு அனுப்புவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். குறிப்பு நூல்களை உபயோகப்படுத்துவதற்கு ஊடாக பிள்ளைகளின் அறிவார்ந்த முயற்சிகளை விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்ட பரீட்சை முறையொன்றை உருவாக்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாக இருந்து வருகின்றது. எனினும், தற்போதைய டியுசன் வகுப்பு முறை, பிள்ளைகள் நாள் முழுவதும் படிக்கவேண்டிய அவசியத்தை எடுத்து வந்துள்ளது.

- பேராசியர் ஜீ.எல்.பீரிஸ்

■ டியுசன் வகுப்புக்களை தூற்றுவதை விட்டுவிட்டு, தனியார் டியுசன் முறைக்குப் பதிலாக மாற்று வழிமுறைகள் முன்வைக்கப்படுதல் வேண்டும். பிள்ளைகளின் கற்றுக் கொள்ளும் திறனைக் கவனத்தில் எடுத்து, பாடசாலை நேரம் 6 மணித்தியாலமாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போதைய டியுசன் வகுப்புக்களால் பிள்ளைகள் நாள் முழுவதும் படிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிறார்கள்.

- எச்.எம்.சிறிசேன
கல்விப் பணிப்பாளர், மேல் மாகாணம்

■ வினாத்தாள்கள் பாடத்திட்டத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. பாடத்திட்டம் முழு அளவில் கற்பிக்கப்பட்டால் மாணவர்கள் டியுசன் வகுப்புக்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

-ஆதர் வெதமுல்ல,
பரீட்சை ஆணையாளர்

■ ஆசிரியர்கள் உரிய காலத்தில் பாடத்திட்டத்தை முடித்து விடுவார்களேயானால் டியுசன் வகுப்புக்கள் பயனற்றவையாக மாறிவிடும்.

-ஏ.பி.குணரத்ன,
அதிபர், ஆனந்தா கல்லூரி

■ மிகக் கடுமையான போட்டி இடம்பெற்று வருவதனால், மாணவர்களுக்கு ஓரளவுக்கு உதவி தேவைப்படுகின்றது. ஆனால், டியுசன் வகுப்பு முறை, ஒரு பாரிய வர்த்தக தொழில் முயற்சியாக இப்பொழுது உருவாகியுள்ளது. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் உயர் தகைமை பெற்ற, திறமை வாய்ந்த ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கு இது ஊக்குவிப்பளித்துள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

- பி. சூரியாரச்சி
அதிபர், ரோயல் கல்லூரி

■ பரீட்சைகளில் தமது பிள்ளைகள் நல்ல பெறுபேறுகளைப் பெற வேண்டுமெனப் பெற்றோர் பெருமளவுக்கு வற்புறுத்தி வருவதனால், பல மாணவர்களின் மனநிலை பாதிப்படைந்துள்ளது. க.பொ.த. (சாதாரண தர) மற்றும் உயர்தர பரீட்சைகள் இடம்பெறும் காலப்பிரிவுகளின் போது இப்பிரச்சினையுடன் பல மாணவர்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள்.

-டாக்டர் காமினி பிரேமதிலக,
மனநல மருத்துவர்

நன்றி : இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

# இலங்கையில் தனியார் டியுசன் முறை இன்றைய கல்வியில் ஒரு புதிய பாணி




இலங்கையில் தனியார் டியுசன் கல்வி முறை, அத்தகைய டியுசனுக்கான தேவை இருந்து வரும் துறைகளிலெல்லாம் மிகவும் வேகமாக ஊடுருவி, பரவி வருகின்றது. சந்தையில் மாணவர்களைப் பெற்றுக் கொள்வதற்காக மிகக் கடுமையான போட்டிகளுடன் இணைந்த விதத்தில், டியுசன் வழங்கும் போதனா நிலையங்கள் சமீப காலத்தில் பல்கிப் பெருகி வந்துள்ளன. இது, இலங்கையில் தனியார் டியுசன் முறை ஓர் மாற்றுக் கல்வி முறையாக ஸ்தாபிதமாகியுள்ளது என்பதனை சுட்டிக் காட்டுகின்றது. தனியார் டியுசனுக் கான போட்டி மிகவும் உயர்ந்த அளவில் நிலவி வரும் துறைகளில், கல்வியின் அதிகாரச் சமநிலை கொள்கை வகுப்போரிடமிருந்தும் ஆசிரியர்களிட மிருந்தும் அகன்று, மாணவர்களையும் அவர்களுடைய பெற்றோர்களையும் நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருக்கின்றது. சந்தைப் போட்டிக்குச் சாதகமான விதத்தில் கல்விக் கொள்கை செயற்படுத்தப்பட்டு வராவிட்டாலும் கூட, பெருமளவில் வழங்குனர்கள் இந்த இலாபகரமான வர்த்தக முயற்சியில் தம்மை ஸ்தாபித்துக் கொள்ளும் நோக்குடன் மிகத்தீவிர மான விளம்பர உத்திகளுடன் சந்தைக்குள் பிரவேசித்து வருகின்றனர். பெரும்பாலான பெற்றோர் தனியார் டியுசனை தமது பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடிய பொருளாதார வசதியைக் கொண்டிருக்கும் ஒரு நிலையில், மானியப்படுத்தப் பட்டிருக்கும் தேசிய கல்வி முறையில் அவர்கள் தங்கியிருக்கும் அளவு குறைவடைந்து கொண்டு வருகின்றது. எனவே, தனியார் டியுசன் முறையில் நம்பிக்கையைத் தோற்று வித்துள்ள முக்கியமான விடயம் அதன் தாக்கத் திறனாகும். இம்முறையினால் பெருமளவுக்குப் பயன் அடைந்துள்ள செல்வந்தர்களினால் இது பெரும்பாலும் நிர்ண யிக்கப்பட்டு வருகின்றது. எவ்வா திருப்பினும், செல்வந்தர்கள் மட்டுமன்றி நடுத்தட்டு சமூகப் பிரிவினரும் இந்த புதிய கல்வி முறையுடன் சேர்ந்து தம்மையும் இனங்கண்டு கொள்ளும் பொருட்டு, இக்கல்வி முறையை விரும்பித் தெரிவு செய்து கொள்கின்றார்கள். இந்த நிலையில்,தனியார் டியுசன் முறையின் செயல் தாக்கத்திறன், நன்கு பிரபல்ய மடைந்துள்ள நிறுவனங்களினால் அறவிடப்பட்டு வரும் கட்டணங்களுடன் சம்பந்தப்பட் டுள்ளது. பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்காக, உயர் அளவிலான கட்டணங்களைச் செலுத்துவதற்குப் பெற்றோர் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். இப்போக்கு பணக் கஷ்டத்துக்கு வழிகோலுவது மட்டுமன்றி, கல்விக்கான செலவினையும் அதிகரிக்கச் செய்து வருகின்றது. இங்கு நிலவி வரும் மிகவும் பாரதூரமான பிரச்சினை, தமது குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதில் தோல்வியடையும் பெரும்பாலான பெற்றோரும் மாணவர்களும் இறுதியில் ஏமாற்றத்தையும் விரக்தியையும் எதிர்கொள் கின்றார்கள் என்பதாகும். சில சந்தர்ப்பங்களில், இது மனநலம் தொடர்பான பிரச்சினைகளையும் எடுத்து வந்து விடுகின்றது.

மறுபுறத்தில், தனியார் டியுசன் முறையின் தாக்கத்திறன், தேசியக் கல்விமுறை நலிவடை வதற்கு வழிகோல முடியும். இரண்டு பிரதான விடயங்கள் தொடர்பாக இந்த விவாதம் முன்வைக்கப்படுகின்றது. பொதுப் பாடசாலைக் கல்வி முறையில், தேசிய கல்வி முறையின் ஒட்டுமொத்த செயல்

( 29 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் தனியார் கல்விப் போதனை முறையின் இன்றைய நிலை

பேராசிரியர் ஆரியதாஸ டி சில்வா

*பேராசிரியர் ஆரியதாஸ டி சில்வா கொழும்பு பல்கலைக்கழகத்தில் மானிடவியல் கல்விப் பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றார். இலங்கையில் பாடசாலைக்கு வெளியேயான கல்வி போதனா முறை குறித்த பாரிய ஆராய்ச்சித்திட்டமொன்றை (1989 - 1990) அவர் நெறிப்படுத்தியுள்ளார்.*

பொதுக்கல்விக்குப் பொறுப்பான கல்வித்திணைக்களம் நிறுவப்பட்ட நூற்றாண்டு விழாவினை இலங்கை 1969இல் 'சியவச' என்ற பெயரில் கொண்டாடியது: இப்பொழுது நாட்டில் செயற்பட்டுவரும் பாடசாலைகளின் எண்ணிக்கை 10,000 புள்ளியையும் தாண்டியுள்ளது. இலவசக் கல்வி 1945 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. தொடர்ச்சியான ஓர் ஒழுங்கில் இல்லாவிட்டாலும்கூட, காலத்துக்குக்காலம் பள்ளிப்பிள்ளைகளுக்கு மதியபோசனம் வழங்கப்பட்டு வந்துள்ளது. அரசுக்குச் சொந்தமான புகையிரத சேவையிலும் போக்குவரத்துச் சேவையிலும் பள்ளிப் பிள்ளைகளுக்கான சலுகைரீதியான பயணத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்துள்ளன. ஒவ்வொரு வருடத்தின் போதும் தேவை மற்றும் தகுதி என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பெருந்தொகையான மாணவர்களுக்கு (இலவச தங்குமிடம் மற்றும் உணவு என்பவற்றை உள்ளடக்கிய) புலமைப் பரிசில்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்துள்ளன. இப்பொழுது பெருந்தொகையான மாணவர்களுக்கு பாடநூல்களும் பள்ளிச் சீருடைகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

கல்வியை பரவச் செய்து, முன்னேற்றும் நோக்குடன் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ள இந்த வழிமுறைகளின் பின்னணியில், பொதுவாக தனியார் டியுசன் (Private tuition)என்றழைக்கப்பட்டு வரும் பாடசாலைக்கு வெளியிலான போதனா முறைக்கு இலாபகரமான, கணிசமான அளவிலான ஒரு சந்தை நிலவி வருகின்றது என்பதனை இங்கு சுட்டிக்காட்டுவது ஓரளவுக்கு முரண்பட்ட ஒரு கூற்றாக தென்பட முடியும். இந்தச் சந்தை பெருமளவுக்கு முழு நேரப் பாடசாலை மாணவர்களின் அனுசரணையைப் பெற்று வருகின்றது என்பது இங்குள்ள மிக முக்கியமான விடயமாகும். இலங்கையில் எல்லா வயதுத் தொகுதிகளையும் தரங்களையும் சேர்ந்த பெருந்தொகையான பள்ளிப் பிள்ளைகள் பாடசாலையில் கற்பிக்கப்பட்டு வரும் பாடங்களில், பாடசாலைக்கு வெளியே ஓரளவுக்கு டியுசனைப் பெற்று வருகின்றார்கள் என்பது ஒரு பொதுவான நிகழ்வாகும். இந்த டியுசன் பின்வரும் ஏதாவது ஒரு வழிமுறைக்கூடாக அல்லது பல வழிமுறைகளுக்கூடாக பெறப் படுகின்றது:

1. தனிப்பட்ட ஒருவரிடமிருந்து டியுசன் பெறுதல்; அதாவது, வீட்டுக்கு வருகை தரும் ஒரு போதனாசிரியரிடமிருந்து அல்லது போதனாசிரியரின் வீட்டுக்குச் சென்று தனிப்பட்ட முறையில் டியுசன் எடுத்தல்.

2. ஒரு குழுவைச் சேர்ந்த உறுப்பினரின் வீட்டிற்கு வருகை தரும் ஒரு போதனாசிரியரிடம் (அல்லது அப்போதனாசிரியரின் வீட்டுக்குச் சென்று) டியுசன் பெறும் குழுவில் ஒருவராக இருத்தல்.

3. தனிப்பட்ட போதனாசிரியர் ஒருவரினால் நடாத்துப்பட்டு வரும் டியுசன் வகுப்பில்' சேர்ந்து கொள்ளல்.

4. கல்வித்துறை சார்ந்த அல்லது கல்வித் துறை சாராத தொழில் முயற்சியாளர் ஒருவரினால் நடத்துப்பட்டு வரும் தனியார் போதனா நிலையமொன்றில் (டியுட்டரியொன்றில்) ஒரு மாணவராக சேர்ந்து கொள்ளல்.

மேலே குறிப்பிடப்பட்டவை பாடசாலைக்கு வெளியேயான போதனா முறையின் பொதுவான வடிவங்களாக இருந்து வரும் அதேவேளையில், ஏனைய வடிவங்களும் இருந்து வரக்கூடிய சாத்தியம் உண்டு.

தனியார் டியுசன் முறை இலங்கையின் கல்வித்துறையில் துரித வளர்ச்சி கண்டுவரும் ஓர் அற்புதமாக உருவெடுத்துள்ளது. அது இப்பொழுது அநேகமாக பிள்ளைகளாலும் அவர்களுடைய பெற்றோர்களாலும் ஓர் அவசியமான கூறாகவே கருதப்பட்டு வருகின்றது. மூன்று தேசிய பரீட்சைகள் குறிப்பிட்ட நிர்ப்பந்தப் புள்ளிகளாக செயற்பட்டு வருகின்றன. ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சாதாரணதர) பரீட்சை, க.பொ.த. (உயர்தர) பரீட்சை என்பனவே இந்த மூன்று புள்ளிகளுமாகும். ஏற்கனவே, பிரபல்யம் வாய்ந்த ஒரு பாடசாலைக்குச் சமூகமளிக்காத மாணவர்களைப் பொறுத் தமட்டில், ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் நல்ல முறையில் சித்தி பெறுவது என்பது, சிறந்த நடுநிலைக் கல்விப் பாடசாலையொன்றில் அனுமதி கிடைத்தல் என்றே பொருள்படுகிறது. மேலும், அவர்களின் குடும்ப நிலைமையை அடிப்படையாகக் கொண்டு இது நிதிசார்

அனுகூலங்களையும் கூட எடுத்து வர முடியும். க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நல்ல பெறும்பேறுகளைப் பெறுவது, விஞ்ஞானப் பிரிவில் அல்லது வர்த்தகப் பிரிவில் ஒருவர் இடம் பெறுவதனை உறுதி செய்கின்றது. ஆகக் கூடிய ஒட்டு மொத்த மதிப்பெண்களுடன் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் சித்தி பெறுவது, மதிப்பு மிக்க தொழில்சார் தகைமை யொன்றுடன் கூடிய பல்கலைக்கழக கல்வியை பெறுவதற்கான வாய்ப்பினை எடுத்து வருகின்றது.

ஒவ்வொரு பெற்றோரும் இச் சாத்தியப்பாடுகளை கருத்தில் கொண்டுள்ளார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனவே, கல்வியில் மிகக் கடுமையான போட்டி இடம்பெற்று வரும் இன்றைய காலகட்டத்தில், தமது பிள்ளைகள் படிப்பில் நல்ல கெட்டிக் காரர்களாக இருந்து வர வேண்டும் என அவர்கள் விரும்புவது இயல்பானதாகும். இந்த வகையில், மேற்சொன்ன பகிரங்க பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார்ப் படுத்தும் பொருட்டு, தனியார் கல்விப் போதனா முறைக்கான தேவை எழுச்சியடைகின்றது. இலங்கையில் தனியார் டியுசன் கைத்தொழில் இப்பொழுது நாடெங்கிலும் பேரளவில் வியாபித்துக் காணப்படுகின்றது. நாட்டில் ஸ்தாபிதமாகியிருக்கும் கல்வி முறைக்கு சவால் விடக்கூடிய அளவுக்கு ஒரு நிழல் கல்வி முறையாக,இணையான ஒரு சக்தியாக அது உருவெடுத்துள்ளது.

இலங்கையின் தனியார் டியுசன் முறையின் இன்றைய நிலை, பரீட்சைப் பெறுபேறுகளுக்கும் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கும் இடையில் நிலவிவரும் மிக நெருக்கமான பிணைப்பினை பிரதி பலிப்பதாக இருந்து வருகின்றது. முக்கியமான பரீட்சைகளில் மாணவர்கள் பெறும் பெறுபேறுகள், அவர்கள் உயர்ந்த வேதனங்களையும் சமூக அந்தஸ்தினையும் பெற்றுத் தரக்கூடிய கல்வி முறையில் தொடர்ந்து இருப்பார்களா ? அல்லது குறைந்த வருமானம் மற்றும் அந்தஸ்து என்பவற்றைக் கொண்ட ஊழியர் படையில் சேர்ந்து கொள்வார்களா என்பதனை நிர்ணயம் செய்வதாக இருந்து வருகின்றது. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும், ஏனைய பல உயர்நிலை நிறுவனங்களும், வேலை கொள்வோரும் மாணவர்களை பாட நெறிகளில் சேர்த்துக் கொள்ளல் மற்றும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளல் போன்ற தீர்மானங் களை எடுப்பதில் அவர்களுடைய பரீட்சை மதிப்பெண்களை கவனத்தில் எடுத்து வருகின்றார்கள்.

தனியார் டியுசன் முறையின் மிகப் பரவலான முறையில் ஏற்றுக் கொள்ளப் படும் அனுகூலம், அது, மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும். அதன் மூலம் பல்கலைக்கழக அனுமதியினை அல்லது வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கும் ஒரு மேலதிக சக்தியை வழங்கி வருகின்றது என்பதாகும். தனிப்பட்ட முறையில் வழங்கப்படும் டியுசன், பலவீனமான மாணவர்கள், அவர்களின் செயல்திறன் குறைவாக இருந்து வரும் பாடங்களில் அதிகளவு கவனம் செலுத்துவதற்கு உதவ முடியும். தனிப்பட்ட ஒவ்வொரு மாணவரினதும் தேவைக்குப் பொருந்தக்கூடிய விதத்திலான ஒரு போதனா முறையை அது சாத்தியப் படுத்துகின்றது. மாணவர்/ஆசிரியர் வர வின்மை, பாடசாலை அடிக்கடி மூடப்படுதல், தாக்கமற்ற போதனா முறை, ஆசிரியரின் அக்கறையின்மை போன்ற பலவிதமான காரணிகளினால் மாணவர்களின் படிப்பில் பாரிய இடை வெளிகள் தோன்றுகின்றன. கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற முக்கியமான பாடங்கள் தொடர்பான சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள ஆசிரியர்களை பெரும்பாலான பாடசாலைகள் போதியளவில் பெற்றிருக்கவில்லை. இப் பாடங்களைப் போதித்து வரும் அனுபவமோ முதிர்ச்சியோ அற்ற அல்லது உரிய தகைமைகளைப் பெற்றிராத ஆசிரியர்கள், அந்தந்தப் பாடங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளை மாணவர் களுக்கு சிறப்பாக எடுத்து விளக்க முடியாதவர்களாக இருந்து வருகின் றார்கள். இந்த மாணவர்கள், இத்தகைய இடைவெளிகளை அல்லது குறைபாடு களை வெற்றி கொள்வதற்கு தாக்கமான தனியார் டியுசன் முறை உதவ முடியும். மேலும், மாணவர்கள் ஏனையவர்களுடன் போட்டி போடக்கூடிய ஒரு நம்பிக்கையையும், சந்தோசமான வாழ்க்கை அனுபவத்தினையும் அது அவர்களுக்கு அளிக்க முடியும்.

உண்மையிலேயே, கல்வியில் உதவி தேவையாக இருக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் (பாடசாலைக்கு வெளியேயான) கல்வி ஆதரவு, அவர்களுக்கு மிகச் சிறந்த பயன்களை அளிக்கக்கூடியதாக இருந்து வருகின்றது. இது, அவர்கள் பலவீனமாக இருந்து வரும் துறைகளில் அப்பலவீனங்களைப் போக்கிக் கொள்வதற்கு உதவுவதுடன், ஆகக் குறைந்தது சராசரி மாணவர் களாகவேனும் வகுப்பில் செயற்பட்டு வருவதற்கு அவர்களுக்கு ஆற்றலைக் கொடுக்கின்றது. ஆனால், இங்கு மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கெட்டிக்கார மாணவர்களும் அதேபோல பலவீனமான மாணவர்களும் பாரபட்சமெதுவுமின்றி போதனையைப் பெற்று வரும் ஒரு டியுசன் முறை, பல அச்ச உணர்வு களையும் ஐயப்பாடுகளையும் எடுத்து வந்துள்ளது. பரீட்சைகளில் வெற்றி பெறுவதற்கு பாடசாலைக்கு வெளியேயான கல்வி ஆதரவு அவசியமாகும் என்ற ஓர் உணர்வினை அது தோற்றுவித் திருப்பதனாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

தனியார் டியுசன் முறை, மிக முக்கியமாக முறைசார்ந்த பள்ளிக் கல்வியின் தாக்கத்திறன் மற்றும் பயன்பாடு என்பன குறித்த கேள்விகளை எழுப்பி வருவதுடன், பொதுக் கல்வியின் தரத்தின் மீதும் தாக்கங்களை எடுத்து வருகின்றது. இந்த இணையான கல்வி முறை (Parallel system) பாடசாலைக் கல்வி அமைப்பின் மீது எடுத்து வந்துள்ள பின்னோக்கிய தாக்கங்கள் குறித்து கல்வியாளர்களிடையே பெருமளவுக்குக் கவலை உணர்வு தோன்றியுள்ளது. டியுசன் பெறும் மாணவர்களினதும் அதேபோல டியுசன் கொடுக்கும் ஆசிரியர்களினதும் நேரத்தின் மீதும், சக்தியின் மீதும் இது எடுத்துவரும் நிர்ப்பந்தங்கள், பாடசாலையில் பயிற்று விக்கும்/பயிலும் நிகழ்வுப்போக்கினை பலவீ னப்படுத்தும் ஒரு போக்கினை எடுத்து வர முடியும். மாணவர்களும் அதே போல ஆசிரியர்களும் தமது டியுசன் வகுப்புக்கள் மீீது பெருமளவுக்குக் கவனம் செலுத்தி வரும் ஒரு நிலையில், பாடசாலையில் இடம்பெறும் பயிற்று விக்கும்/ பயிலும் நிகழ்வுப்போக்கினை அதிகளவில் பொருட்படுத்தாதிருக்கும் வாய்ப்புள்ளது. டியுசன் வகுப்புக்களில் தம்மைப் பெருமளவுக்கு ஈடுபடுத்திக் கொண்டுள்ள ஆசிரியர்களும் மாணவர் களும் ஒரு சலுகை மற்றும் மரியாதை என்பவற்றின் நிமித்தம் மட்டுமே தமது

பிரசன்னத்தை பாடசாலையில் பதிவு செய்கின்றார்கள். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், நல்ல பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்து வரும் பிரபல்யம் மிக்க பாடசாலைகளுடன் முறையான ஒரு தொடர்பினை வைத்திருப்பது, அவர்களுக்குச் சொந்த ஆதாயங்களைத் தரும் ஒரு விடயமாக இருந்து வருகின்றது. ஏனெனில், டியுசன் துறையில் நிலைத் திருப்பதற்கு இந்தத் தொடர்பு அவர் களுக்குக் கைகொடுக்கின்றது. பல்கலைக் கழக அனுமதிக்கான மாவட்ட கோட்டா முறையின் அனுகூலங்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில், பல மாணவர்கள் தொலை தூர இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்வது இப்பொழுது பொதுவாக இடம்பெற்று வரும் ஒரு சம்பவமாகும். ஆனால், இவர்கள், கொழும்பு நகரில் அல்லது அதன் அயல் பகுதிகளில் செயற்பட்டு வரும் டியுட்டரி களில் முழுநேர மாணவர்களாக சேர்ந்து படித்து வருகின்றனர்.

வார நாட்களிலும் வார இறுதி விடுமுறை நாட்களிலும் பாடசாலை விடுமுறை நாட்களிலும் காலையிலிருந்து மாலை வரையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் பயிற்றுவித்தல்/பயிலல் நிகழ்வுப்போக்கு, ஆசிரியர்களுக்கும் அதே போல மாணவர்களுக்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஓய்வினையும், பொழுதுபோக்குகளையும் பறித்துக் கொண்டு விடுகின்றது. இது அவர்களிடையே ஒரு விதமான சோர்வு நிலையை உருவாக்குவதுடன், இந்தச் சூழ்நிலையில், ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலையில் சற்று ஓய்வாக இருப்பதற்கே விரும்புகின்றார்கள். சில ஆசிரியர்கள், வகுப்பில் தமது ஒழுங்கான கல்விப் போதனையில் அக்கறை காட்டாது, தாம் நடாத்தும் டியுசன் வகுப்புக்களில் மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டுமென பகிரங்க மாகவே வேண்டுகோள் விடுத்து வருவதாக அடிக்கடி குற்றச் சாட்டுகள் முன்வைக் கப்பட்டு வந்துள்ளன. இத்தகைய ஆசிரியர்கள், தமது வகுப்பு மாணவர்களின் மிக அபூர்வமான, எப்போதாவது ஒரு முறை இடம்பெறும் தவறுகளையும் பலவீனங்களையும் குறைபாடுகளையும் அளவுக்கதிகமாகப் பெரிதுபடுத்திக் காட்டி, மாணவர்களின் தன்னம்பிக்கையை குன்றச் செய்து, அவர்கள் தமது டியுசன் வகுப்புக்களில் சேர்ந்து கொள்வதற்கு மறைமுகமாக தூண்டுதல் அளித்து வருகின்றார்கள் என்று கூறப்படுகின்றது. மேலும், இத்தகைய ஆசிரியர்கள் தமது டியுசன் வகுப்புகளுக்கு சமூகமளிக்கும் மாணவர்களுக்கு பரீட்சை நேரத்தின் போது சில சலுகைகளை வழங்கக்கூடியவர்க ளாகவும் இருந்து வருகின்றனர். டியுசன் துறையில் ஈடுபட்டு வரும் பல பள்ளி ஆசிரியர்கள் தமது பாடசாலையில் தம்மிடம் பயிலும் மாணவர்களிடம் கட்டணம் அறவிட்டு டியுசன் வழங்கும் வழக்கத்தை தவிர்த்து வருகின்றனர் என்பது வரவேற்கக் கூடிய ஒரு விஷயமாகும்.

பரீட்சைகளுக்குத் தேவையான சிறப்புத் தேர்ச்சிகளை வழங்கும் விஷயத் தில், டியுசன் முறை பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும் மாணவர்கள், பள்ளிக் கல்வியிலும் பார்க்க டியுசன் கல்வி தமக்கு அதிகளவுக்கு பயனுள்ளதாக இருந்து வருகின்றதெ‌ன கருதுகிறார்கள். அதனால், அவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக சமூகமளிப் பதில்லை; பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பாடங்களில் ஆர்வத்தினை இழந்து வருகின்றனர் என்பதனை உணர்ந்து கொள்ளும் பொழுது, டியுசன் ஆசிரியர்களைப் போலவே தாமும் பரீட்சையில் சித்தி எய்தும் நுட்பங்களில் மட்டுமே கவனம் செலுத்தி, உடனடியாக விடைகளைப் பெற்றுக் கொடுக்கும் போதனா முறையில் அதிகளவுக்கு கவனம் செலுத்தத் தொடங்குகின்றனர். இதன் விளைவாக, முழு அளவிலான கல்வி கற்றலின் குறிக்கோளும் தாத்பரியமும் இழக்கப்பட்டு விடும் ஒரு நிலை தோன்ற முடியும். பரீட்சைகளில் சித்தி எய்துவ தற்காக மட்டும் மாணவர்களை தயார் படுத்தும் பொழுது, பாடத்திட்டத்தில் பெரும்பாலான பகுதிகளை விட்டுவிட வேண்டி ஏற்படுகின்றது. அதாவது, 'பரீட்சை பெறுமதி' இருந்து வரும் விடயங்களில் மட்டுமே முழு அளவில் கவனம் செலுத்தப்படுகின்றது. கல்வியின் அழகியல், தார்மீக மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் புறக்கணிக்கப்படுவதற்கும் தனியார் டியுசன் முறை காரணமாக இருந்து வருகின்றது.

இரண்டாவதாக, பெற்றோரின் நிதி மூலவளங்கள் மீதான நெருக்குதலும், அதன் பின்விளைவாக இலவசக் கல்வியின் அனுகூலங்கள் இல்லாது ஒழிக்கப் படுவதும் மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக எழுச்சியடைந்துள்ளது. தனியார் டியுசன் வகுப்புக்களில் முதலில் சேர்ந்து கொள்வதும், தமக்குத் தேவையான டியுசன் வகையைத் தெரிவு செய்து கொள்வதும் தொடர்பான தீர்மானங்கள், பெருமளவுக்கு பணம் செலுத்தக் கூடிய சக்தியிலேயே தங்கி உள்ளன. வசதியான ஓரிடத்தில் டியுசன் வகுப்புக்கள் நடாத்தப்படுவதும் ஒரு முக்கியமான காரணியாக உள்ளது. எனவே, இந்த நிலையில், தனியார் டியுசன் முறை, இலங்கையின் பொதுக்கல்வி முறையுடன் சமாந்தரமான முறையில் இடம் பெற்றுவரும் கட்டணங்களை அறவிடும் ஒரு கல்வி முறையாக இருந்து வருவதனால், அது, சமூகத்தின் வசதி குறைந்த, சலுகைகள் மறுக்கப்பட்ட பிரிவினர் கல்வியின் முழுப் பயன்களையும் பெற்றுக் கொள்வதில் நின்றும் அவர்களைத் தடுத்துள்ளது. இது எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்றால், பல்வேறு சமூக மற்றும் நலன் புரி நிறுவனங்கள் வசதி குறைந்த மாணவர்களுக்கு குறைந்த கட்டணங்களில் (அல்லது இலவசமாக) தனியார் டியுசன் முறையை இப்பொழுது பெற்றுக் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

நல்ல கல்வித்திறன் கொண்டவர் களும் சக்தி வாய்ந்தவர்களும் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, டியுசன் வசதிகளை பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த விளையாட்டின் விதிகள் செல்வந்தர்களுக்கு (அவர்களுக்கு டியுசன் தேவையாக இருந்தாலும் சரி, தேவை இல்லாவிட்டாலும் சரி) சாதகமானவையாக இருந்து வருகின்றன. மேலதிக போதனா உதவி தேவைப்படுபவர்கள், அத்தகைய உதவியை பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலை தோன்ற முடியும். இது பல்வேறு சமூக குழுக்களிடையே கல்வியில் நிலவிவரும் ஏற்றத்தாழ்வினை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்யும். சமத்துவத்தை சீர்குலைக்கும் இந்தச்சக்தி மறைமுகமாகவும் செயற்பட முடியும். பெரும்பாலும் நகர்ப்புறங்களை அடிப்படையாகக் கொண்ட உயர் பொருளாதார, சமூக அந்தஸ்தினைக் கொண்டிருக்கும் குடும்பங்கள் குறைந்த எண்ணிக்கையிலான பிள்ளைகளைக் கொண்டிருக்கும் ஒரு போக்கினைக் காட்டுகின்றன. இத்தகைய வசதிமிக்க குடும்பங்கள் தமது பிள்ளைகள் அனைவருக்கும் டியுசன் வசதியைப்

பெற்றுக் கொடுக்கக் கூடிய நிதி வசதிகளைக் கொண்டுள்ளன. மறு புறத்தில், நகர்ப் புறங்களிலும் கிராமப் புறங்களிலும் வாழும் வறிய சமூக பொருளாதார பின்னணியைக் கொண்ட குடும்பங்களால் அத்தகைய வசதிகளை போதுமான அளவில் பெற்றுக் கொடுப்பதற்கு முடிவதில்லை. ஆகவே, இந்நிலைமை பல்வேறு சமூகக் குழுக்களிடையிலான கல்வி இடை வெளியை மேலும் விரிவடையச் செய்கின்றது. இத்தகைய ஒரு கல்வி நிலைமை, கல்வி வாய்ப்புக்களின் சமத்துவம், இலங்கைச் சமூகத்தின் மறுசீரமைப்பு என்பவற்றின் மீது கடுமையான தாக்கங்களை எடுத்துவர முடியும்.

டியுசன் ஆசிரியர்களும், பள்ளி ஆசிரியர்களைப் போலவே கற்பிக்கும் திறன், தாக்கம், மாணவர்களை தூண்டி விடுதல் மற்றும் அர்ப்பணிப்புணர்வு என்பவற்றை பொறுத்தவரையில் வேறுபாடுகளைக் கொண்டவர்களாக இருந்துவர முடியும். இது வழங்கப்படும் டியுசன் கல்வியின் தரத்தில் வேறு பாடுகளை எடுத்துவரும். பிரபல்யம் பெற்றுள்ள டியுசன் ஆசிரியர்களிடமிருந்து தனிப்பட்ட முறையில் அல்லது குழுக்களாக டியுசனைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள், ஏனையவர்களிலும் பார்க்க நல்ல தரமான போதனையைப் பெற்று வருகின்றார்கள் என்று பொதுவாக கருதப் படுகின்றது. தாழ்ந்த சமூக-பொருளாதார பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையிலான உயர்தர டியுசன் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. எனவே, இரண்டு அடுக்குகளைக் கொண்ட ஒரு டியுசன் முறை தோன்றி வருவதனைக் காண முடிகின்றது. நகர உயர் சமூக-பொருளாதார மட்டங்களைச் சேர்ந்த மாணவர் பிரிவினருக்கு உயர்தரமான டியுசன் வசதிகள் கிடைக் கின்றன. மறுபுறத்தில், சமூகத்தின் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர் களுக்கு தரக்குறைவான டியுசன் போதனையே கிடைத்து வருகின்றது. தரமான டியுசன் வாய்ப்புக்கள் கிடைக்காது இருப்பதன் பிரதிகூலங்கள், இவர்களுக்கு வழங்கப்படும் டியுசனின் கால அளவு குறுகியதாக இருந்து வருவதன் காரணமாக மேலும் தீவிரமடைகின்றன. பொதுவாக வசதி படைத்த நகர சமூகப்பிரிவினர் தமது பிள்ளைகளுக்கு சிறுபருவத்தி லிருந்தே தொடர்ச்சியான ஒரு அடிப்படையில் டியுசன் பெற்றுக் கொடுக்கக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். ஆனால், வசதி குறைந்த சமூகப் பிரிவினர் தமது பிள்ளைகளுக்கு பொதுவாக பரீட்சைகளுக்கு முன்னரேயே டியுசன் பெற்றுக் கொடுக்கக் கூடியவர் களாக உள்ளனர்.

மூன்றாவதாக, டியுசன் கல்வி முறையின் மிதமிஞ்சிய அளவிலான நெருக்குதல்கள் பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சியின் மீதும், சமூக வளர்ச் சியின் மீதும் எடுத்து வரக்கூடிய மோசமான தாக்கங்கள் குறித்து பொதுமக்கள், அரசியல்வாதிகள், கல்வித் துறை அதிகாரிகள், சமய மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோர் கவலை தெரிவித்து வந்துள்ளனர். பிள்ளைகள் நாளின் பெரும்பாலான நேரங்களில் வீட்டுக்கு வெளியே இருக்க வேண்டியுள்ளது. இது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையிலான நெருக்கமான பிணைப் பினையும் உறவினையும் பாதித்து வருகின்றது. பாடசாலை முடிந்ததன் பின்னர், மாணவர்கள் பொருத்தமான உணவையோ அல்லது ஓய்வினையோ பெற்றுக் கொள்ளாதவர்களாக அவசர அவசரமாக டியுசன் வகுப்புக்களுக்குச் செல்ல வேண்டியவர்களாக உள்ளனர். டியுசன் வகுப்புக்கள் முடிந்த பின்னர் களைப்புற்று, சோர்ந்து போனவர்களாக வீட்டுக்கு திரும்பி வருகின்றார்கள். தங்களுடைய சொந்த பொழுதுபோக்கு தொடர்பான விருப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர்களுக்குப் போதிய கால அவகாசம் கிட்டுவதில்லை. பெரும்பாலான சந்தர்ப் பங்களில், தமது சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்குக் கூட அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. டியுசன் வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் மூடப்பட வேண்டும் என்றும், அதன் மூலம் மாணவர்கள் ஞாயிறு பாடசாலைகளுக்கு சமூகமளிப் பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் சமயத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். டியுட்டரிகள் பெருமளவுக்கு சுதந்திரமாக, தடைகள் அற்ற ஒரு சூழ்நிலையில் இயங்கி வருகின்றன. மேலும், மாணவர்களுக்கு நீண்டநேரம் வீட்டிலிருந்து விடுபட்டிருப்பதற்கான வாய்ப்பும் கிட்டுகின்றது. இவை விரும்பத்தகாத விளைவுகளை எடுத்துவர முடியும். இந்த கட்டுப்பாடற்ற போக்கு பாடசாலையிலும் வீட்டிலும் ஒழுங்கீனம் தோன்றும் ஒரு நிலைமைக்கு வழிகோல முடியும் என்றும் அச்ச உணர்வுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே, தனியார் டியுசன் முறையின் செயற்பாடு மற்றும் அதன் பின்விளைவுகள் என்பவற்றை மிகக் கவனமான முறையில் பகுப்பாய்வு செய்ய வேண்டிய அவசியம் இருந்து வருகின்றது. கொள்கைத் தீர்மானங்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

பாடசாலைக்கு வெளியேயான டியுசன் முறை குறித்து பல்வேறு தரப்பினர்களும் தமது அபிப்பிராயங்களை தெரிவித்து வந்துள்ளனர். எனினும், இந்த விடயம் குறித்த பிரசுரிக்கப்பட்ட ஆய்வுகள் மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. யாழ்ப்பாண தீபகற்பம் குறித்த ஓர் ஆய்வினை மேற்கொண்ட பரராசசிங்கம், தீபகற்பத்தில் 1980இல் 39 டியுசன் வழங்கும் நிறுவனங்கள் இயங்கி வந்ததாக குறிப்பிட்டுள்ளார். இவை நிறுவனங்கள், நிலையங்கள், டியுட்டோரியல் கல்லூரிகள், மண்டபங்கள், டியுட்டரிகள், கழகங்கள் மற்றும் அக்கடமிகள் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வாளர் விஜயம் செய்த மொத்தம் 27 டியுட்டரிகளில் 23 டியுட்டரிகள், பள்ளி செல்லாத மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிக எண்ணிக்கையிலான பள்ளி மாணவர்களை மாணவர்களாகக் கொண்டிருந்தன. தனியார் டியுட்டரிகள் அரசாங்கப் பாடசாலைகளுக்கு இணையான ஒரு மட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றன என்ற உண்மையை இது நிரூபித்துக் காட்டுகின்றது. தமது சொந்த வீடுகளில் தனிப்பட்ட முறையில் டியுசன் கொடுத்து வந்த ஆசிரியர்களை மற்றும் மாணவர்க ளின் வீடுகளுக்கு வந்து டியுசன் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்கள் என்பவர்களுக்கு மேலதிகமாக இந்த டியுட்டரிகள் இயங்கி வந்தன. இந்த ஆய்வின் முக்கிய கண்டு பிடிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

க.பொ.த.(சா.த.) மற்றும் (உயர்தர) வகுப்புக்களில் படித்து வந்த மாணவர் களில் உயர் விகிதத்தினர் தனியார் டியுசனை நாடிச் செல்பவர்களாக இருந்தார்கள்:

| | க.பொ.த. (சா.த.) | க.பொ.த. (உ.த.) |
|---|---|---|
| மாதிரியின் எண்ணிக்கை | 275 | 271 |
| டியுசன் எடுப்பவர்களின் எண்ணிக்கை | 200 | 236 |
| சதவீதம் | 72.7 | 87.1 |

டியுசன் பெறுவதில் அரசாங்கப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்குமிடையில் முக்கியமான வித்தியாசங்கள் எதுவும் நிலவி வரவில்லை. பாடசாலையில் போதிக்கப்பட்டு வந்த அனைத்துப் பாடங்களும் டியுட்டரிகளிலும் போதிக்கப்பட்டன. ஆனால், பொதுவாக பெரும்பாலான டியுட்டரிகள் விஞ்ஞானம் மற்றும் கணிதம் போன்ற பாடங்களுக்கு முக்கிய இடத்தை அளித்து வந்தன. பிரயோக பயிற்சிகள் பொதுவாக மேற்கொள்ளப்படவில்லை.

டியுட்டரிகளினால் பின்பற்றப்பட்டு வந்த போதனா முறை பெருமளவுக்கு பாடசாலையை அடிப்படையாகக் கொண்டதாக இருந்து வந்தது. இந்த டியுட்டரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், முதலில், பாடத் திட்டத்தில் பரீட்சைக்கு முக்கியமான பகுதிகளை வலியுறுத்திக்கூறி, முழுப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கும் விதத்தில் பொதுவாக கற்பிப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். குறிப்பிட்ட ஒரு பிரிவு கற்பிக்கப்பட்ட பின்னர், கடந்த காலப் பரீட்சைகளின் போது அப்பிரிவு தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளும், எதிர்காலத்தில் கேட்கப்படக்கூடிய கேள்விகளும் வகுப்பில் கலந்துரையாடப் படுகின்றன. பின்னர் மாணவர்களுக்கு அப்பிரிவு குறித்து பரீட்சை நடத்தப் படுகின்றது. அப்பரீட்சையின் மதிப் பெண்கள் பெற்றோருக்கு அறிவிக்கப் படுகின்றன. பின்னர் மாணவர்கள் எழுதியுள்ள விடைகள் வகுப்பில் கலந்துரை யாடப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட பாட நெறியின் முடிவின் பின்னர் வழங்கப்படும் விசேஷ பரீட்சைச் சேவை தனித்துவமானதாகும். பாடநெறிகளின் முடிவில் கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், இக்கருத்தரங்கு களுக்கு பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள், பல்வேறு பாடங்கள் தொடர்பான பிரதம பரீட்சகர்கள் போன்ற தகுதிவாய்ந்த நபர்கள் அழைக்கப் படுகின்றார்கள். இவர்கள், பரீட்சையில் விடை எழுதுவது எப்படி என்பது குறித்து விரிவுரைகளை நடத்துவதுடன்,

அட்டவணை 1

டியுசன் வகுப்புக்களுக்கு சமூகமளிப்போர் எண்ணிக்கை

| | கலை | வர்த்தகம் | பௌதீக விஞ்ஞானம் | உயிரியல் விஞ்ஞானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு நகரம்** | | | | | |
| சமூகமளிப்போர் வீதம் | 32 | 69 | 99 | 96 | 84 |
| சமூகமளிக்காதோர் வீதம் | 68 | 31 | 01 | 04 | 16 |
| **கேகாலை மாவட்டம்** | | | | | |
| சமூகமளிப்போர் வீதம் | 53 | 45 | 85 | 68 | 61 |
| சமூகமளிக்காதோர் வீதம் | 47 | 55 | 15 | 32 | 39 |

அட்டவணை 2

ஆண்டு - 5 மாணவர்கள் வாரமொன்றுக்கு டியுசன் வகுப்புக்களில் செலவிடும் நேரம்

| பாடம் | 1 -3 மணிநேரம் | | 3-5 மணிநேரம் | | 5மணிக்கு மேல் | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | % | எண் | % | எண். | % |
| சிங்களம் | 68 | 68 | 30 | 30 | 2 | 02.0 |
| கணிதம் | 77 | 73.3 | 25 | 23.8 | 3 | 02.9 |
| ஆங்கிலம் | 39 | 92.8 | 3 | 7.1 | - | -- |

முக்கியமான பல விடயங்களையும் மாணவர்களுடன் கலந்துரையாடுகின்றனர். டியுட்டரிகளின் பணிப்பாளர்கள், தமது நிறுவனங்களின் ஆசிரியர்களாக, தற்பொழுது ஆசிரியப்பணி புரிந்து வருபவர்கள், பட்டதாரி மாணவர்கள், வேலையற்ற பட்டதாரிகள், (உரிய காலம் வரு முன்னரேயே) ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் போன்றவர்களைச் சேர்த்துக் கொள்கின்றனர்.

இந்தத் தனியார் டியுட்டரிகள் ஏற்கனவே நன்கு பிரபல்யம் பெற்றவை யாக இருந்து வந்த போதிலும், அவை இன்னமும் கூட செய்திப் பத்திரிகைகள், வானொலி, சுவரொட்டிகள் மற்றும் சினிமாத் தியேட்டர்களில் காட்டப்படும் ஸ்லைடுகள் போன்ற ஊடகங்களுக் கூடாக விளம்பரங்களை செய்து வருகின்றன. இந்த விளம்பரங்கள் தவிர இவை வேறு சில வழிமுறைகளையும் பின்பற்றி வருகின்றன.

1. தமது வளவுக்குள் சமய விழாக் களைக் கொண்டாடுதல்;

2. பல்வேறு துறைகளிலும் புகழ் பெற்று விளங்கும் பிரமுகர்களின் உரைகளை ஏற்பாடு செய்தல்.

3. மக்களை ஒன்று திரட்டுவதற்காக விளையாட்டுப் போட்டிகள், நாடகங்கள் மற்றும் ஏனைய வைபவங்கள் போன்ற வற்றை ஏற்பாடு செய்தல்.

டியுட்டரிகளின் சொந்தக்காரர்கள் அல்லது அவற்றின் பணிப்பாளர்கள் பாடசாலைகளுக்கு அருகில் தமது டியுட்டரிகளை அமைத்துக் கொள்ளவே விரும்புகின்றார்கள். பாடசாலை மாணவர்கள் டியுசன் வகுப்புக்களுக்குச் சமூகமளிப்பதற்கு இது வசதி அளிக்கும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். பல பெற்றோர், தனியார் டியுசன் முறை குறித்து அதிக அளவுக்கு நம்பிக்கை தெரிவித்து வந்துள்ளனர். பகிரங்கப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கு டியுசன் முறை அத்தியாவசியமானது என அவர்கள் கருதினர். இப்பொழுது ஒருவர் பல்கலைக் கழகத்துக்குள் பிரவேசிக்க விரும்பினால், டியுசன் ஓர் அத்தியாவசியத் தேவையாக இருந்து வருகின்றதென்றும் அவர்கள் கூறினர். தனியார் டியுட்டரிகளின் உதவி இல்லாதிருந்தால், தமது பிள்ளைகள் பரீட்சைகளில் சித்தி எய்தியிருக்க முடியாதென்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மாணவர்கள், டியுசன் பெற்றுக் கொள்வதில் கணிசமான அளவு நேரத்தை செலவிட்டு வருகின்றனர். க.பொ.த. (சா.த.) மாணவன் ஒருவன் மாதமொன்றுக்கு சராசரியாக 11.38 மணி

நேரங்களை டியுசன் வகுப்புக்களில் செலவிட்டு வந்துள்ளான். க.பொ.த. (உ.த.) மாணவர்களைப் பொறுத்த வரையில், இது 13.24 மணி நேரமாக இருந்து வந்துள்ளது. பெரும்பாலான மாணவர்கள்– குறிப்பாக க.பொ.த. (உ.த) மாணவர்கள்–தாம் ஒன்றுக்கு மேற்பட்ட டியுட்டரிகளுக்கு செல்வதாக ஒப்புக்கொண்டனர். நல்ல டியுசன் ஆசிரியர்கள் பல்வேறு டியுட்டரிகளுக்கிடையிலும் பகிரப்பட்டுள்ளார்கள் என்றும், எனவே ஒரே பாடம் குறித்து வேறுபட்ட ஆசிரியர்களிடமிருந்து போதனைகளை பெற்றுக் கொள்வதற்காக தாம் ஒன்றுக்கு மேற்பட்ட டியுட்டரிகளுக்கு சென்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். பொதுவாக, மாணவர்கள் ஆண்டு முழுவதும் டியுட்டரிகளுக்குச் செல்கின்றனர். தெரிவு செய்யப்பட்ட மாதிரியான 546 பெற்றோர்களில் 13 பெற்றோர்களால் நிதி நெருக்கடி காரணமாக, தமது பிள்ளை களை தனியார் டியுசன் வகுப்புக்களுக்கு அனுப்ப முடியவில்லை.

**ஹேமச்சந்திராவின் ஆய்வு**

டியுசன் வகுப்புக்களின் உதவியை நாடும் மாணவர்களின் தேவைகள் குறித்தும், கொழும்பு நகர் மற்றும் கேகாலை மாவட்டம் ஆகிய பகுதிகளில் இது தொடர்பான சமூக காரணிகள் குறித்தும் ஹேமச்சந்திரா ஒரு ஆய்வை மேற்கொண்டார். கேகாலை மாவட்டத்துடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது, கொழும்பு நகரில், உயர் விகிதத்திலான மாணவர்கள் டியுசன் வகுப்புக்களுக்கு சமூகமளித்து வந்தார்களென்றும், இந்த இரு பகுதிகளிலும் க.பொ.த. (உ.த.) மாணவர்களில் டியுசன் வகுப்புக்களுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை பொதுவாக உயர்வாக இருந்து வருகின்றது என்றும் அவர் கண்டறிந்துள்ளார்.

| | க.பொ.த. (சா.த.) | க.பொ.த. (உ.த.) |
|---|---|---|
| **கொழும்பு நகரம்** | | |
| சமூகமளிப்போர் வீதம் | 60 | 84 |
| சமூகமளிக்காதோர் வீதம் | 40 | 16 |
| **கேகாலை மாவட்டம்** | | |
| சமூகமளிப்போர் வீதம் | 47 | 61 |
| சமூகமளிக்காதோர் வீதம் | 53 | 39 |

கொழும்பு நகரில் டியுசன் வகுப்புக்குச் செல்பவர்களில் ஆகக்கூடிய சதவீதத்தினர் க.பொ.த. (உ.த.) வகுப்பில் இருந்து வருகின்றனர். இதற்கு இரண்டு காரணிகள் பொறுப்பாக இருந்து வருகின்றன என்று கருதப்பட்டது:

1. மாவட்ட கோட்டா முறையின் கீழ், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்காக ஆக உயர் மட்டத்திலான மதிப்பெண்களைப் பெற வேண்டிய அவசியம் இருந்து வந்தது.

2. கொழும்பு நகரில் பெரும்பாலான மாணவர்கள் விஞ்ஞானத் துறையிலேயே கல்வி கற்று வந்தனர். விஞ்ஞானத் துறையைப் பொறுத்தமட்டில், பல்கலைக்கழக அனுமதிக்கு (ஏனைய துறைகளிலும் பார்க்க) உயர்வான மதிப்பெண்களை பெற வேண்டியிருந்தது.

டியுசன் வகுப்புக்களுக்குச் சமூகமளிக்கும் புலமைப்பரிசில் பெற்றிருப்பவர்களுக்கும் புலமைப்பரிசில் பெறாதவர்களுக்குமிடையில் கணிசமான வேறுபாடுகள் எவையும் நிலவி வரவில்லை. எனினும், புலமைப்பரிசில் பெற்றவர்களின் டியுசன் வகுப்புக்களுக்குச் சமூகமளிக்க வேண்டிய தேவை குறைவானதாக இருந்து வந்துள்ளது என அனுமானித்துக் கொள்ள முடியும். கொழும்பு நகரில் க.பொ.த. (உயர்தர) மற்றும் சாதாரண தர மாணவர்கள் வாரமொன்றுக்கு டியுசன் வகுப்புக்களில் 9 தொடக்கம் 10 மணி நேரங்களை செலவிட்டு வந்துள்ளனர். கேகாலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இது 6 தொடக்கம் 9.15 மணித்தியாலங்கள் வரை இருந்து வந்தது.

செலுத்தப்பட்ட டியுசன் கட்டணம் அமைவிடம், நிறுவனம்/டியுசன் ஆசிரியர் மற்றும் பாடநெறி என்பவற்றுக்கேற்ப வேறுபட்டிருந்தது. கொழும்பு நகரிலும் கேகாலை மாவட்டத்திலும் உயிரியல் விஞ்ஞானங்கள் மற்றும் பௌதீக விஞ்ஞானங்கள் போன்றவற்றுக்கான டியுசன் கட்டணங்கள் கலை மற்றும் வர்த்தக துறைகளுக்கான கட்டணங்களிலும் பார்க்க உயர்வாக இருந்து வந்தன. மேலும், பிரபல்யம் மிக்க பாடசாலைகளுக்கு சமூகமளிக்கும் மாணவர்கள் செலவு கூடிய டியுசன் வகுப்புகளுக்கு சமூகமளித்து வந்துள்ளனர் என்று இந்த ஆய்வு எடுத்துக் காட்டி வந்துள்ளது. குடும்ப வருமானத்துக்கும் டியுசன் வகுப்புக்களுக்குச் சமூகமளிப்பதற்குமிடையில் ஒரு தொடர்பு நிலவி வந்துள்ளது. நடுத்தட்டு மற்றும் மேல் தட்டு வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள், தமது வர்க்க அந்தஸ்தினை நிலைநாட்டிக் கொள்வதற்காக, கல்வியையும் ஒரு சாதனமாக பயன்படுத்திக் கொள்வதற்கு முயன்று வந்தார்கள்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட "இலங்கையில் கல்வியும் பயிற்சியும்" என்ற தலைப்பிலான அறிக்கை சில முக்கியமான விடயங்களை எடுத்துக் காட்டியுள்ளது. வெளிவாரிப் பரீட்சைகள் மீது மிதமிஞ்சிய அளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தமையின் விளைவாக ஏற்றத்தாழ்வு அதிகரித்து வந்துள்ளது என அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. ஏனெனில், செல்வ வசதி மிக்க பெற்றோர், தமது பிள்ளைகளை பரீட்சைகளுக்குத் தயார்படுத்துவதற்காக தனியார் டியுசன் ஆசிரியர்களின் சேவைகளை கொடுப்பனவின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருந்து வருகின்றனர். வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளினால் இக்கட்டணங்களை செலுத்த முடியாதிருப்பதனால், அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த அறிக்கை தவிர, 1990–91 இல் "இலங்கையில் பாடசாலைக்கு வெளியிலான கல்வி போதனை" குறித்த பாரிய ஆய்வொன்று சர்வதேச அபிவிருத்தி ஆய்வு மையத்தின் உதவியுடன் ஆய்வாளர் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டது. இக்குழுவின் முக்கிய உறுப்பினர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தை சேர்ந்தவர்களாக இருந்தனர். அடுத்து வரும் பகுதிகளில் இந்த ஆய்வின் சில முக்கியமான கண்டு பிடிப்புக்கள் தொகுத்துத் தரப்படுகின்றன:

**டியுசன் முறையின் அமைப்பு**

தனிப்பட்ட பாடங்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலான மாணவர்கள் தனியார் டியுட்டரிகளுக்கு சமூகமளித்து வருவதாக தெரிவித்தனர். இந்த டியுட்டரிகளில் பிரபல்யமான ஆசிரியர்கள் படிப்பித்து வந்தமையும், தங்கள் பாடங்களில் அவர்கள் நன்கு அறியப்பட்டவர்களாக இருந்தமையும் மாணவர்கள் இவ்விதம் கவரப்பட்டமைக்கான காரணங்களாக இருந்திருக்க

முடியும். மேலும், இந்த டியுட்டரிகளில், தனிப்பட்ட டியுசனிலும் பார்க்க குறைவான கட்டணங்கள் அறவிடப்பட்டு வந்தமையும் மாணவர்களை அவற்றின் பால் கவர்ந்திழுத்திருக்க முடியும். குறைந்த வருமானப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் உயர் விகிதத்தில் இந்த டியுட்டரிகளுக்கு சமூகமளித்து வருவது இதற்குச் சான்று பகர்கின்றது. "தனியார் டியுசன் முறை" என்ற சர்வ வியாபகமான அற்புதமும் கூட, சமூக பொருளாதார சூழ்நிலையில் நிலவிவரும் அடுக்கு முறைக்கு ஏற்றவிதத்தில் பல்வேறு வடிவங்களை எடுத்து வருவதனை இங்கு காண முடிகிறது. வசதிமிக்க பெற்றோர், தமது பிள்ளைகளுக்காக தனிப்பட்ட டியுசனை அல்லது சிறு குழுக்களுக்கான டியுசனை ஏற்பாடு செய்து கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தனர்.

ஆரம்பக்கல்வி மட்டத்தில் டியுசன் வகுப்புகளுக்குச் சென்றவர்களின் விகிதம் மிகக்குறைவானதாக இருந்து வந்தது. ஆகக் கூடிய சதவிகிதத்தினர் – அதாவது 30.4 சதவிகிதத்தினர் – இரண்டு வருட க.பொ.த.(சா.த.) பாட நெறியின் தொடக்க ஆண்டான ஆண்டு 10 இல் டியுசனை ஆரம்பித்தனர். தாம் முதன் முதலாகச் சந்திக்கவிருக்கும் பகிரங்கப் பரீட்சைக்கு தயாராவதற்காக மேலதிக போதனை அசியமானது என இவர்கள் கருதி வந்தமையினால், டியுசன் வகுப்புக் களுக்குச் செல்வதற்குத் தூண்டப்பட்டிருக்க முடியும். மாறாக, மொத்த மாதிரியில் 6.8 சதவீதத்தினர் க.பொ.த. (உ.த.) பாட நெறியின் தொடக்க ஆண்டான ஆண்டு 12இல் தமது டியுசன் வகுப்புக்களை ஆரம்பித்தனர். மொத்த மாதிரியில் 4.2 சதவீதத்தினர் மட்டுமே ஆரம்ப கல்வி மட்டத்தில் தமது டியுசன் வகுப்புக்களை ஆரம்பித்திருந்தனர் என இந்த ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, மாதிரிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட டியுசன் ஆசிரியர்களின் எண்ணிக்கை பெருமளவுக்கு வரையறுக்கப்பட்டதாக இருந்தது. எனவே, இந்த ஆசிரியர்களின் குணாம்சங்களை பொதுமைப்படுத்தி நோக்குவதனை இது சாத்தியமற்றதாக்கியது. பத்து டியுசன் ஆசிரியர்களில் ஆறுபேர் விஞ்ஞானப் பட்டதாரிகளாக இருந்து வந்ததுடன், இருவர் கலைத்துறைப் பட்டதாரிகளாக இருந்தனர். க.பொ.த. (உயர்தர) வகுப்பு மாணவர்கள் பாடம்

அட்டவணை 3

| மாதமொன்றுக்கான சராசரி டியுசன் செலவுகள் | | | |
|---|---|---|---|
| வருடம் | டியுசன் எடுக்கும் மொத்த மாணவர்கள் | மாதமொன்றுக்கு செலுத்தப்படும் மொத்தத் தொகை | மாதமொன்றுக்கான சராசரி |
| ஆண்டு 11 | 547 | Rs. 67,996 | Rs. 124.31 |
| 13/ கலை | 220 | Rs. 17,085 | Rs. 77.56 |
| 13/வர்த்தகம் | 202 | Rs. 24,599 | Rs. 121.78 |
| 13/ விஞ்ஞானம் | 267 | Rs. 76,969 | Rs. 288.27 |

அட்டவணை 4

| மாணவர்களால் செலுத்தப்படும் தொகைகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| சமூக-பொருளாதார அந்தஸ்து | ரூ. 250க்கு எண். | % | ரூ. 250 க்கு மேல் எண். | % | மொத்தம் |
| மேல்தட்டு | 28 | 41.8 | 39 | 58.2 | 67 |
| மேல் நடுத்தட்டு | 185 | 77.4 | 54 | 22.6 | 239 |
| கீழ் நடுத்தட்டு | 357 | 89.0 | 44 | 11.0 | 401 |
| கீழ் தட்டு | 451 | 96.4 | 17 | 3.6 | 468 |

கேட்ட அனைத்து டியுசன் ஆசிரியர்களும் அநேகமாக பட்டதாரிகளாக இருந்து வந்தனர். குறிப்பாக, ஆண்டு 12 விஞ்ஞானப் பிரிவில் டியுசன் கல்வி மிகப் பெருமளவில் நிலவி வந்தது. டியுசன் ஆசிரியர் தொகையில் விஞ்ஞானப் பட்டதாரிகளின் எண்ணிக்கை மிதமிஞ்சியளவில் காணப்படுவதற்கு இதுவே காரணமாகும். பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக டியுசன் ஆசிரியர்களை எவ்வாறு தெரிவு செய்து கொண்டார்கள் என்பதனை பின்வரும் சான்றுகளிலிருந்து காணக் கூடியதாகவுள்ளது:

| | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| பத்தரிகை விளம்பரம் | 23 | 8.3 |
| சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியன | 70 | 25.4 |
| நண்பரின் ஆலோசனை | 54 | 19.6 |
| டியுசன் ஆசிரியரின் நேரடியான சேவை | 59 | 21.4 |
| நண்பர்களின் பிள்ளைகள் மூலம் | 70 | 25.4 |

இந்த ஆய்வாளர்கள், ஒவ் வொரு பாடம் தொடர்பாகவும் மாணவர்களின் எதிர்விளைவுகளை மிகவும் விரிவான முறையில் பெற்றுக் கொண்டார்கள். கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட க.பொ.த. (சா.த.) மற்றும் (உ.த.) வகுப்புக்களுக்கான மொத்தம் 21 பாடங்களில் 3 பாடங்கள் மட்டுமே 50 சதவீதத்துக்குக் கூடுதலான மாணவர் விகிதாசாரத்தை பெற்றிருந்தன.

| | | |
|---|---|---|
| அளவையியல் | (ஆண்டு 13) | 74% |
| வர்த்தகம் | (ஆண்டு 13) | 54% |
| பொருளியல் | (ஆண்டு 13) | 54% |

பின்வரும் பாடங்களில் பாடசாலையில், ஆசிரியர் கற்பிப்பதைக் காட்டிலும் டியுசன் ஆசிரியர் சிறந்த முறையில் கற்பித்து வந்தார் என 40 சதவீதத்துக்கும் 50 சதவீதத்துக்கு மிடையிலானோர் தெரிவித்தனர்:

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | ஆண்டு 11 | 43.03% |
| வர்த்தகம் | ஆண்டு 11 | 44.0 % |
| விலங்கியல் | ஆண்டு 11 | 44.0 % |

ஒவ்வொரு பாடத்திலும் டியுசன் பெற்றுவரும் மாணவர்களின் சதவீத அடிப்படையில் பல்வேறு பாடங்களும் இறங்குமுகமான விதத்தில் வரிசைப் படுத்தப்படும்பொழுது, முதல் ஆறு இடங்களையும் விஞ்ஞானத்துறை பெற்றுள்ளதனைக் காண முடிகிறது.

| | | |
|---|---|---|
| தூயகணிதம் | 13/விஞ். | 100.0% |
| பிரயோக கணிதம் | 13/விஞ். | 100.0% |
| இரசாயனம் | 13/விஞ். | 84.4% |
| பௌதீகம் | 13/விஞ். | 83.5% |
| கணிதம் | ஆண்டு 11 | 74.3% |
| கணிதம் | ஆண்டு 6 | 69.5% |

அடுத்த நான்கு நிலைகளும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| சிங்களம் | ஆண்டு 11 | 68.5% |
| சிங்களம் | ஆண்டு 5 | 67.7% |
| கணக்கியல் | 13/வர்த். | 67.3% |
| விஞ்ஞானம் | ஆண்டு 11 | 66.6% |

ஏனைய கலைத்துறைப் பாடங்களைப் பொறுத்தமட்டில், மிகக் குறைந்த தொகையினரே டியுசன் வகுப்புக்களில் பங்கேற்றுவந்தனர்.

**டியுசன் முறைகள்**

மாணவர்களிடம் பின்வரும் 7 டியுசன் உத்திகள் முன்வைக்கப்பட்டு, தமது டியுசன் ஆசிரியர்கள் பின்பற்றிவரும் முறையை குறிப்பிட்டுக்காட்டுமாறு கேட்கப் பட்டிருந்தது:

1. கண்டிப்பான ஒழுங்கு முறையும், பயிற்சிகளும்.

2. பரீட்சைக் கேள்விகளையும் மாதிரி விடைகளையும் வழங்குதல்.

3. கேள்வி கேட்பதிலும் அவற்றுக்குப் பதில்களை அளிப்பதிலும் நேரத்தைச் செலவிடுதல்.

4. அச்சிடப்பட்ட குறிப்புகளையும் விசேஷ குறைநிரப்பு போதனா உபகரணங்களையும் வழங்குதல்.

5. விரிவுரைகளுக்கூடாக விளங்கப் படுத்துதல்.

6. வீட்டு வேலைகளை கொடுத்து, அவற்றுக்குப்புள்ளிகளை வழங்குதல்.

7. கட்புல, செவிப்புல சாதனங் களையும் ஏனைய கற்பித்தல் உபகரணங் களையும் பயன்படுத்துதல்.

டியுசன் ஆசிரியர்களின் பயிற்று விக்கும் முறை வெவ்வேறு பாட நெறிகளுக்கு இடையிலும், ஒரு பாட நெறிக்குள் பல்வேறு பாடங்களுக் கிடையிலும் வேறுபட்டுச் செல்கின்றது. எனினும், 13/விஞ். வகுப்பில் 6 பாடங் களிலும் நன்கு பிரபல்யம் பெற்றுள்ள டியுசன் முறை, பரீட்சை வினாக்களையும் மாதிரி விடைகளையும் அளிப்பதாகவே இருந்து வந்துள்ளது. பௌதீக பாட போதனையின் போது மட்டும் கேள்விகளைக் கேட்டு, அவற்றுக்கு பதில் அளிக்கும் நடைமுறை பெருமளவுக்குப் பின்பற்றப்பட்டு வந்தது. கலைத் துறையைப் பொறுத்தவரையில், சிங்களம், வரலாறு மற்றும் அரசறிவியல் ஆகிய பாடங்களில் டியுசன் வழங்குவதில் பரீட்சை வினாக்களையும் மாதிரி விடைகளையும் வழங்குவது இன்னமும் பரவலாக நிலவி வருகின்றது.

மூன்று முறைகள் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக டியுசன் ஆசிரியர்கள் தெரிவித்தனர்:

1. வாய்மூலமான விளக்கங்கள்.

2. கடந்த கால பரீட்சை வினாத் தாள்களுக்கு மாணவர்களைக் கொண்டு விடை எழுதச் செய்தல்.

3. பயிற்சிகளை/ ஒப்படைகளை வழங்கி, அவற்றுக்கு மதிப்பெண்களை கொடுத்தல்.

**நிதிசார் அம்சம்**

ஆண்டு 5ஐச் சேர்ந்த மாணவர்கள் குறைந்தளவிலான டியுசன் கட்டணங்களை செலுத்தி வந்துள்ளனர். சுமார் 74 சதவீதமானவர்கள் மாதமொன்றுக்கு 50 ரூபாவை செலுத்தி வந்துள்ளனர். ஆண்டு 13 விஞ். வகுப்பு மாணவர்கள் ஆக உயர்ந்த கட்டணங்களை செலுத்தி வந்தனர். சுமார் 18 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் தாம் மாதமொன்றுக்கு டியுசன் கட்டணமாக 250 ரூபாவுக்கும் கூடுதலான தொகையை செலுத்தி வந்ததாக குறிப்பிட்டனர். இதற்கு, ஆண்டு – 13 மட்டத்தில் விஞ்ஞானப் பாடங்களை கற்பிப்பதற்கு திறமை பெற்றுள்ள பட்டதாரி டியுசன் ஆசிரியர் களில் பற்றாக்குறை நிலவி வருவது காரணமாக இருக்க முடியும்.

**பெற்றோரின் கருத்து**

பெற்றோரில் 27 சதவீதத்தினர் மட்டுமே, தமது பிள்ளைகள் சித்தியடைவதற்கு டியுசன் அவசியம் என்று கருதினர். டியுசன் வகுப்புக்கள் சிறந்த கல்வியை அளித்து வந்தனவா என்று வினவப்பட்டபொழுது, 46.72 சதவீதத்தினரால் உறுதியாக ஒன்றையும் கூற முடியவில்லை. அதேபோல, தமக்கு வசதி இருந்தால் எல்லாப் பிள்ளைகளையும் டியுசன் வகுப்புக்களுக்கு அனுப்புவதற்கு விரும்புவார்களா என்று கேட்கப்பட்டபொழுது, பெரும்பாலான வர்கள் (65.75%) அதற்கு எதிர்மறையாகவே பதில் அளித்தனர். எனினும், டியுசன் முறை தடைசெய்யப்பட வேண்டும் என்ற யோசனைக்கு பெரும்பாலான பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது, பெற்றோர், நடைமுறை அனுகூலங்களை கவனத்தில் எடுத்து இந்த டியுசன் முறையை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

மாதிரிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள், டியுசன் முறை அத்தியாவசியமானது என்பதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பலவீனமான மாணவர்கள் மட்டும் தகுதி வாய்ந்த டியுசன் ஆசிரியர்களிடமிருந்து போதனையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அவர்கள் கருதினர்.

**மாணவர்களின் கருத்துக்கள்**

இந்த ஆய்வுக்கு பதிலளித்த 69 தொடக்கம் 93 சதவீதம் வரையிலான மாணவர்கள், டியுசன் முறையை பெரிதும் சிலாகித்துப் பேசினர். தாம் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தமது கல்வி தொடர்பான அபிலாஷைகளை மேம்படுத்துவதற்கும், அதிக அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கும், வகுப்பு வேலைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும் டியுசன் வகுப்புக்கள் உதவியுள்ளன என்று அவர்கள் தெரிவித்தார்கள். மேலும், டியுசன் வகுப்புக்களுக்கு போவதனால் படிப்பதற்கும், பாடசாலை வேலைகளை செய்வதற்கும் நேரம் கிடைக்கவில்லை எனப் பலர் கூறினர். டியுசனின் முக்கியத்துவம் அதிகரித்து வரும் ஒரு சூழ்நிலையில், பாடசாலையில் ஆசிரியரின் பணி குறைவாக மதிப்பிடப்படுவதற்கு வாய்ப்பிருக்கின்றதா என்று வினவப்பட்ட போது, பெரும்பாலானமாணவர்கள் அக்கருத்தினை ஒரேயடியாக நிரா கரித்தனர்.

தனியார் டியுசன் முறையின் முக்கிய நோக்கம், பரீட்சைகளில் மதிப்பெண்களை உயர்த்திக் கொள்வதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால், இந்தக் குறிக் கோளைத் துரத்திச் செல்லும்பொழுது, சமூகமயமாக்கல் மற்றும் ஆளுமை அபிவிருத்தி என்பன தொடர்பான பெறுமதிமிக்க அம்சங்கள் புறக்கணிக்கப் பட்டு விடுகின்றன. கல்வியின் மிகக் குறுகிய கருதுகோளொன்றினை மட்டுமே இலக்காகக் கொண்டு முயற்சிகளை மேற்கொண்டு வரும் மாணவர்கள், தனிப்பட்ட வளர்ச்சி, அறிவின் எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்ளல் மற்றும் அழகியல் திறன்களை வளர்த்துக் கொள்வதற்காக கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளல் போன்றவற்றில் மிக அரிய வாய்ப்புக்களை இழந்துவிட நேரிடுகின்றது.

## முடிவுரை

இலங்கையில் தனியார் டியுசன் கைத்தொழில் செழித்து வளர்ந்து வருகின்றது என்ற உண்மையை இந்த ஆய்வறிக்கைகள் நிரூபித்துக் காட்டுகின்றன. பாடசாலைக்கு வெளியேயான போதனா முறை, கல்வித்துறையில் வெற்றியை நிர்ணயம் செய்யும் ஒரு முக்கிய காரணியாக இருந்து வருகின்றது எனப் பெரும்பாலான மாணவர்கள் கருதி வருகின்றார்கள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. பாடங்களில் பெறும் நல்ல தரங்களுக்கு உயர் முக்கியத்துவம் அளித்துவரும் கல்வி முறையொன்றில், "வெற்றியாளர்களாக" எழுச்சியடைவதற்கான போட்டி அனுகூலத்தை தனியார் டியுசன் முறை வழங்க முடியும் என அனைத்துத் தரப்பினரும் நம்பி வந்தனர்.

இந்த ஆய்வுகளின் மற்றொரு கண்டுபிடிப்பு, இலங்கையில் தனியார் டியுசன் முறை செல்வந்தர்களின் ஒரு சொகுசுப் பொருளாக இருந்து வராவிட்டாலும் கூட, பணம் செலுத்தும் சக்தியிலேயே எது பெருமளவுக்கு தங்கியிருந்து வருகின்றது என்பதாகும். வசதிமிக்க பெற்றோர்கள், தமது பிள்ளைகள் பிரபல்யமான டியுசன் ஆசிரியர்களிடமிருந்து மிகச் சிறந்த கல்வி உதவியைப்பெற வேண்டும் என்பதற்காக கணிசமான அளவிலான பணத்தை செலவிடுவதற்கு தயாராக உள்ளனர். மறுபுறத்தில், பொருளாதார வசதி குறைந்த பெற்றோர்கள், தமது பிள்ளைகளை மலிவான டியுட்டரிகளுக்கே அனுப்பக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர். இந்த மலிவான கட்டணங்களையும் கூட செலுத்தக்கூடிய நிலையில் அவர்கள் இருந்து வரவில்லை. தனியார் டியுசன் முறை, கல்வி வாய்ப்புக்களில் நிலவி வரும் சமூக, வர்க்க வேறுபாடுகளை தணிப்பதற்கு பதிலாக மேலும் தீவிரப் படுத்தியிருப்பதாகவே தோன்றுகின்றது.

## சிபார்சுகள்

அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் வழங்கும் டியுசனும் கூட ஒரு சட்டவிரோத நடவடிக்கையாக கருதப்படுவதில்லை. இந்த ஆராய்ச்சியும் இந்நடைமுறைக்கெதிரான உறுதியான சாட்சியங்களை எடுத்து வரவில்லை. எனவே, தனியார் டியுசன் தடை செய்யப்படவேண்டுமென யோசனை தெரிவிப்பது புத்திசாலித்தனமான காரியமொன்றாக இருக்கமாட்டாது; தற்போதைய கல்வி முறையில் நிலவி வரும் சில குறைபாடுகளினாலேயே பாடசாலைக்கு வெளியேயான போதனா முறையின் தேவை உருவாகியுள்ளது. எனவே, இந்தக் காரணிகளை சரியாக இனங்கண்டு கொள்வதற்கான விரிவான ஒரு பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனையே இங்கு சிபார்சு செய்ய முடியும். இவற்றைச் சரியாக இனங்கண்டு கொண்ட பின்னர், இக் காரணிகளை நீக்குவதற்காக தாக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். வெற்றிகரமாக மேற் கொள்ளப்படும் அத்தகைய வழிமுறைகள், இறுதியில், முறைசார்ந்த கல்வி முறையை பலப்படுத்த முடியும்.

பின்வரும் வகைகளைச் சேர்ந்த பரிகார நடவடிக்கைகளே பெருமளவுக்கு அவசியமாக உள்ளன:

1. கல்வி ஏற்பாடுகளில் கணிசமான அளவிலான முன்னேற்றங்கள்: பாட சாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அதேவேளையில், கல்வியின் தரத்திலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். இந்நிலை சமூக ஏற்றத்தாழ்வுகள் குறைவடைவதற்கு வழிகோலும்.

2. மேலதிக கல்வி உதவி தேவைப்படும் அனைவருக்கும், சம்பந்தப்பட்ட பாடசாலையினாலேயே இலவச அல்லது செலவு குறைந்த செலவிலான டியுசன் சேவைகளை வழங்குதல்.

3. பாடசாலையில் படிப்பிக்கும் பாடங்களை தெரிவு செய்வதில் ஓரளவுக்கு நெகிழ்ச்சித்தன்மையை அறிமுகப் படுத்துதல்; இது மாணவர்கள் தமக்கு இயல்பாக ஆர்வமும் திறமையும் உள்ள பாடங்களை கற்பதற்கு வாய்ப்பளிப் பதுடன், டியுசனுக்கான தேவையையும் குறைத்துவிடும்.

4. உண்மையான தகவர்களை நினைவுபடுத்தி பரீட்சை எழுதுவதற்குப் பதிலாக, ஆக்கத்திறனுக்கும் தர்க்கத் திறனுக்கும் முன்னுரிமை அளிக்கும் விதத்தில் பரீட்சை முறையில் சீர்திருத்தங்களை எடுத்து வருதல்.

5. ஆசிரியர்களின் சேவை நிலைமைகளில் மாற்றங்களை எடுத்துவருதல்; வகுப்புக்களில் மிகவும் திறமையான முறையில் பாடம் நடத்துவதற்கு அவசியமான அனைத்து வசதிகளையும் அவர்களுக்கு வழங்கு வதுடன், மனக்குறைகள் அற்ற ஒரு பிரிவாக அவர்களை வைத்திருப்பதற்கு இது வழிகோலும்.

6. தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு மற்றும் உயர் கல்விக்கான மாணவர் தெரிவு என்பவற்றில் மாற்றங்களை அறிமுகப் படுத்துதல்; இதன் கீழ், எழுத்துப் பரீட்சையில் பெற்றுள்ள மதிபெண்கள் தவிர, நபரொருவரின் பொருத்தப்பாடு குறித்த ஏனைய வழிமுறைகளையும் கவனத்தில் எடுக்க முடியும்.

### சந்தாதாரர் கவனத்துக்கு

இம்முறை "பொருளியல் நோக்கு" (மே/ஜூன் 1994) இரட்டை இதழாக வெளியிடப்படுகின்றது. சந்தா நோக்கங்களுக்காக இரு இதழ்களாக கணிக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

# இலங்கையில் தனியார் டியுசன் முறையின் தோற்றம்

பேராசிரியர் சந்திரா குணவர்தன

*இக்கட்டுரையாளர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவர் முன்னர், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் மூத்த விரிவுரையாளராக இருந்துள்ளார். உயர் கல்வி, கல்வியின் மீதான சமூகத் தாக்கங்கள் போன்ற துறைகளில் அவர் ஆராய்ச்சி ஈடுபாடு கொண்டுள்ளார்.*

இலங்கையில் தனியார் டியுசன் முறை அனைத்துத் திசைகளிலும், நாட்டின் அனைத்துப் புவியியல் பிரதேசங்களிலும் மிகத் துரிதமாக ஊடுருவி, வியாபித்துச் சென்றுள்ளது. அது முறைசார்ந்த கல்வி அமைப்பின் அனைத்து மட்டங்களையும் பாடத்திட்டத்தின் அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கிய விதத்தில், பரவிச் சென்றுள்ளது. எனவே, அது, ஒரு மாற்றுக் கல்வி முறையென அடிக்கடி அழைக்கப்பட்டு வருகின்றது. அதாவது, முறைசார்ந்த பள்ளிக் கல்விமுறைக்கு சமாந்தரமான ஒரு கல்விமுறையாக தனியார் டியுசன் முறை வளர்ச்சி கண்டு வந்துள்ளது. இந்த அற்புதம் எமது நாட்டுக்கு மட்டும் தனித்துவமான ஒரு காட்சியுண்மையாக இருந்து வரவில்லை. உயர் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் சமூக ஏணியில் மேலே ஏறுதல் என்பவற்றுக்கான வாய்ப்புக்கள் பெருமளவுக்கு வரையறுக்கப்பட்ட அளவில் காணப்படும் வளர்முக உலக நாடுகளில் இது ஒரு பொது நிகழ்வாக இடம்பெற்று வருகின்றது.

## 1.0 சுதந்திரத்தின் பின்னர் கல்வியில், ஏற்பட்டு வந்துள்ள மாற்றம்

பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரையில் இலவசக் கல்வியின் அறிமுகம், பயிற்றுவிக்கும் மொழி ஆங்கிலத்திலிருந்து தாய்மொழியாக மாற்றப்பட்டமை மற்றும் பாடசாலை அமைப்பின் விரிவாக்கம், குறிப்பாக, மகா வித்தியாலயங்கள் மற்றும் மத்திய மகா வித்தியாலயங்கள் என்பவற்றின் பரவல், வசதி குறிந்த திறமையான பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டு வந்த புலமைப்பரிசில் உதவி ஆகிய அனைத்தும், இலங்கையில் ஆரம்பக் கல்வியையும் இரண்டாந்தரக் கல்வியையும் விரிவுபடுத்தும் தமது குறிக் கோளினை சாதித்துக்கொள்வதற்கு கொள்கை வகுப்போருக்கு வாய்ப்பளித்தன. இது, பெரும்பாலான வளர்முக நாடுகளில் போலவே, இலங்கையிலும் "பெருகிவரும் அபிலாசைகளின் புரட்சி" என்றழைக்கப் படக்கூடிய ஒரு நிலைமைக்கு வழிகோலியது. நாட்டின் பாடசாலைகள் தொடர்பான 1953 தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரையிலான தொகை மதிப்புத் தரவுகள், பள்ளிக்கல்வி முறையில் ஏற்பட்டு வந்துள்ள பாரிய அளவிலான விரிவாக்கத் தினை நன்கு எடுத்துக் காட்டுகின்றன (அட்டவணை 1).

அதிகளவிலான பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்ந்து, முறைசார்ந்த கல்வியில் பங்கேற்று வருகின்றார்கள் என்பதனையும், கல்வித் தகைமைகளைப் பெற்று வருகின்றார்கள் என்பதனையும் மிகத் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. இந்தத் தரவுகள், பாடசாலையில் ஒரு போதும் சேர்ந்து கொள்ளாத பிள்ளைகளையும், கல்வியை இடையில் விட்டுச் செல்லும் பிள்ளைகளையும் சுட்டிக் காட்டாதிருந்த போதிலும், நாட்டின் கல்வி வாய்ப்புக்களில் ஏற்பட்டு வந்துள்ள பிரமிக்கத்தக்க விதத்திலான விரிவாக்கத் தினை அவை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

## 2.0 சமூக-பொருளாதாரப் பின்னணியில் கல்வித்துறையின் விரிவாக்கம்.

கல்வியினைப் பெறுவதற்கான செயற்தூண்டல், கல்வித் தகைமைகள் இறுதியில் எடுத்து வரக்கூடிய சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் குறித்த சாத்தியப்பாடுகளிலிருந்தே தோன்றுகின்றது. பல்வேறு மட்டங்களிலும் கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் அனைவருக்கும் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும் ஒரு நிலைமையில், தனிநபர் திருப்தியும் கல்வியிலிருந்து தொழிற் சந்தைக்கான நிலைமாற்றமும் இறுதி விளைவாக இருந்து வருகின்றது. இதற்கு மாறாக, படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் நிலவி வருமானால், கல்வி தொடர்பான எதிர் விளைவுகளும் அதன்மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளும் மாற்றமடையத் தொடங்கும்.

இலங்கை, 1960 களின் போது அநேகமாக ஒரு பொருளாதார மந்த நிலையை எதிர் கொண்டிருந்தது. வளர்ந்து வரும் அந்நியச் செலாவணி இடைவெளியை நிரப்புவதற்காக வெளி நாட்டுக் கடன்கள் பயன்படுத்தப்பட்டன. 1970 அளவில் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான கொடுப்பனவுகளுக்காக, கடன்களில் 65 சதவீதத்துக்கும் கூடுதலான பகுதி அவசியமாக இருந்து வந்தது (திட்டமிடல் அமைச்சு, 1970). மிக மோசமான பொருளாதார நிலைமைக்கு மத்தியிலும் கூட, நாடு தொடர்ந்தும் சமூக நலன்புரிச் சேவைகளைப் பேணி வந்தது. குடித்தொகையில் தீவிரமான

கொழும்பு தமிழ்ச் சங்கம்

அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்த நிலையில், இது பொருளாதாரத்தின் மீது தாங்க முடியாத சுமைகளை எடுத்து வந்திருந்தது.

தொழிற் சந்தைக்குள் பெருந் தொகையானோர் ஆண்டுதோறும் பிரவேசித்துக் கொண்டிருந்தனர். ஆண்டொன்றுக்கு சுமார் 120,000 வேலை தேடுவோர் தொழிற்சந்தைக்குள் சேர்ந்து கொண்டிருந்தார்கள் என மதிப்பிடப்பட்டிருந்தது (நிதி அமைச்சு, 1971). இதே வேளையில், 1963 தொடக்கம் 1971 வரையான காலப்பகுதியின் போது சுமார் 10 இலட்சம் பேர் ஊழியர் படையில் சேர்ந்து கொண்டிருந்தனர். ஊழியர் சந்தையில் புதிதாகச் சேர்ந்து கொண்டவர்களின் கல்வித் தகைமைகள் தொடர்பான குணாம்சங்களில் பாரிய மாற்றங்கள் இடம் பெற்றிருந்தன. இது இலங்கையின் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளது (அட்டவணை 2).

வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞர்களின் ஒரு பிரச்சினையாக மட்டும் இருந்து வரவில்லை; அது படித்த இளைஞர்களின் ஒரு பிரச்சினையாக மிக வேகமாக வளர்ச்சி அடைந்து கொண்டு வந்தது. இந்த மோசமான அறிகுறிகளைக் கொண்ட நிலைமைக்கு மத்தியிலும் கூட, கல்விப் பெருக்கம், தொழில் அபிலாஷைகளின் பெருக்கத்துக்கு வழிகோலியிருந்தது. இந்தப் பின்னணியில், பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் இளைஞர்களில் பெரும்பாலானவர்கள், உடலுழைப்பை வெறுத்து, வெள்ளை வேட்டித் தொழில்களை பெற்றுக் கொள்வதில் வேணவா கொண்டிருந்தார்கள். பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலனவர்கள் அரசாங்கத் துறையில் தொழில்களைப் பெற்றுக் கொள்ளவே விரும்பி இருந்தார்கள் என்றும், ஓய்வூதியம், சுதந்திரம் மற்றும் சிறப்பு அனுகூலங்கள் என்பவற்றை இதற்கான காரணங்களாக தெரிவித்திருந்தார்கள் என்றுமே டட்லி சியர்ஸின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது (சர்வதேச தொழில் தாபனம், 1971).

படித்த இளைஞர்களின் இந்த அபிலாஷைகளுக்கு மாறான விதத்தில், அவர்கள் நீண்டகாலம் வேலையற்றவர்களாக இருந்து வர வேண்டிய ஒரு நிலைமை நாட்டில் தோன்றியிருந்தது.

அட்டவணை 1

பாடசாலைகளில் அனுமதி (1953-1970)

| வகுப்புக்கள் | 1953 | 1963 | 1970 |
|---|---|---|---|
| 1 - 5 | 1,237,191 | 1,750,239 | 1,680,245 |
| 6 - 8 | 240,768 | 430,313 | 587,080 |
| 9 - 10 | 81,840 | 245,457 | 310,216 |
| 11 - 12 | 5,870 | 34,678 | 45,612 |

ஆதாரம் : வருடாந்த பாடசாலை தொகை மதிப்பு, கல்வி அமைச்சு

நிரல் 1

| காரணம் | (சதவீதங்கள்) ஆண்டு 13/ கலை | 13/ விஞ். | 13/ வர்த். |
|---|---|---|---|
| 1. நான் கூடிய புள்ளிகளை பெற வேண்டும் | 97.6 | 93.6 | 97.3 |
| 2. டியுசன் வகுப்புக்களில், "பரீட்சையில் கேள்விகளுக்கு பதிலளிப்பது எப்படி" என்பதை தெரிந்து கொள்கிறேன். | 96.6 | 94.3 | 89.2 |
| 3. பாடசாலையில் பாடத்திட்டம் முழுவதும் முடிக்கப்படுவதில்லை. | 89.5 | 72.1 | 74.9 |
| 4. ஆசிரியர் ஒரு புதிய விடயத்தை ஆரம்பிக்கும் பொழுது அதற்கு நான் தயாராக இருக்கமுடியும். | 87.9 | 86.0 | 85.0 |
| 5. டியுசன் காரணமாக எனது ஓய்வு நேரத்தை பிரயோசனமான விதத்தில் பயன்படுத்த முடியும். | 83.0 | 67.8 | 78.5 |
| 6. எனது டியுசன் ஆசிரியரிடம் படித்த எல்லா மாணவர்களும் நன்றாக சித்தியடைந்துள்ளார்கள். | 77.3 | 48.8 | 76.3 |
| 7. பாடசாலையில் படிக்கப்படும் விடயங்களின் அளவு பரீட்சையில் சித்தியடைவதற்கு போதுமானவையல்ல. | 72.4 | 55.7 | 71.4 |
| பதிலளித்த ஆகக்கூடிய எண்ணிக்கை | 206 | 215 | 199 |

இது அவர்களிடையே விரக்தி உணர்வும், ஆற்றாமையும் பரவுவதற்கு வழி வகுத்ததுடன், இறுதியில், குறைந்த சம்பளமும் சமூக அந்தஸ்தும் கொண்ட தொழில்களில் சேர்ந்து கொள்வதற்கும் அவர்களை நிர்ப்பந்தித்திருந்தது. பல்கலைக்கழகங்களில் இருந்து வந்த வரையறுக்கப்பட்ட இடங்களைப் பெற்றுக் கொள்வதற்காக இடம்பெற்ற மிகக் கடுமையான போட்டியினால் இந்நிலைமை மேலும் தீவிரமடைந்திருந்தது. இது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகைமை பெற்றுக் கொள்பவர்களில் பல்கலைக்கழக அனுமதி பெறுபவர்களின் சதவீதத்தினை படிப்படியாக குறைவடையச் செய்து கொண்டு வந்தது. இந்த விகிதம் 1953 இல் 24.1 சதவீதமாக இருந்து 1966 இல் 11.6 சதவீதமாகவும், 1977 இல் 5.9 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது.

இதன் விளைவாக, படித்த இளைஞர்களிடையே கல்வியின் மீது ஒரு விரக்தி உணர்வு நிச்சயமாகத் தோன்றியிருக்க முடியும். இது இப்பொழுதும் ஓரளவுக்கு இடம் பெற்று வரக்கூடும். இந்த நிலைமைக்குக் காட்டப்பட்டு வரும் ஒரு பொதுவான எதிர்விளைவு, மிகச் சிறந்த தகைமைகளைப் பெற்றுக்

கொள்வதற்கும், உயர்ந்த மட்டங்களில் தரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்வதாகும். பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதிலும் வேலைகளுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதிலும் உயர் கல்வித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் வேலை கொள்வோரும் வெட்டுப் புள்ளிகளை / கல்வித் தகைமைகளை தொடர்ச்சியாக உயர்த்திக் கொண்டு வந்துள்ளார்கள். இத்தகைய நிலைமைகளை எதிர் கொள்வதற்காகவே மாணவர்கள் தமது மதிப்பெண்களை/தகைமைகளை ஆக உச்ச மட்டத்தில் அதிகரித்துக் கொள்வதற்கு முயற்சிகளை எடுத்து வந்தார்கள்.

### 3.0 தனியார் டியூசன் முறை தோன்றுவதற்கான காரணங்கள்

பின்புலக் காரணிகள் குறித்த மேற்போந்த பகுப்பாய்வு, சமீபத்திய காட்சி உண்மையான தனியார் டியூசன் முறையின் எழுச்சிக்கும், இலங்கையில் உயர் கல்விக்கும் தொழில் வாய்ப்புக் களுக்கும் நிலவி வரும் வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களுக்குமிடையே ஒரு நேரடித் தொடர்பு நிலவி வருவதனைச் சுட்டிக் காட்டுகின்றது. ஒரு பிள்ளையின் கல்வி வாழ்க்கையில் காணப்படும் சில நிர்ணயகரமான அம்சங்களை இங்கு இனங்கண்டு கொள்ள முடியும். இவை இந்த உயர் கல்வி/தொழில் வாய்ப்புக்களுடன் நேரடியாக சம்பந்தப் பட்டுள்ளன.

உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு என்பன தனிநபர் ஒருவரின் கல்வி முயற்சியின் இறுதி இலக்குகளாக இருந்து வருகின்றன. வேலை வாய்ப்பொன்றி னைப்பெறுவது இறுதி இலட்சியமாக இருந்து வரும் அதேவேளையில், இதற்கான ஆற்றலை பெற்றிருக்காத பலர், மேட்டுக்குடியினரின் தனிச் சொத்தாகக் கருதப்பட்டுவரும் உயர் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு விரும்பக் கூடும். பாடசாலை ஒன்றில் அனுமதி பெறுதல், ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் நல்ல மதிப்பெண்களைப் பெறுதல், க.பொ.த.(சா.த.) மற்றும் க.பொ.த.(உ.த.) போன்ற பகிரங்கப் பரீட்சைகளில் நல்ல தரங்களைப் பெற்றுக் கொள்ளுதல், ஒரு தொழிலில் சேர்ந்து கொள்ளல் என்பன ஒரு பிள்ளையின் கல்வி வாழ்க்கையில் குறுக்கிடும் மிக நிர்ணயகரமான புள்ளிகளாக இருந்து வருகின்றன. மேல் அடுக்குகளின் நிர்ப்பந்தம் கீழ் அடுக்கு களின்மீது நெருக்குதல்களை எடுத்து வரும்போது, இந்த நிர்ணயகரமான புள்ளிகள் தலைகீழான முறையில் செயற்படுகின்றன.

### 3.1 தொழில்களில் சேர்ந்து கொள்வதற்கான தகைமைகள் உயர்த்தப்பட்டமை

தேக்கமுற்றிருந்த இலங்கையின் பொருளாதாரத்தினால், கல்வி நிறுவனங்களிலிருந்து வெளியேறும் பெருந் தொகையான இளைஞர்களை தொழில் வாய்ப்புக்களில் உறிஞ்சிக் கொள்ள முடியதிருந்து. இந்த நிலையில், வரையறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் மட்டுமே உருவாக்கப்பட்டமையினால், தொழில்களில் ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான தகைமைத் தேவைகள் உயர்த்தப்பட்டன. இங்குள்ள எதிர்முரண் நிலை, ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலையில்லாதவர்களாக வருந்திக் கொண்டிருந்த அதே வேளையில், பல்கலைக்கழகக் கல்விக்கான கிராக்கி இடையறாது அதிகரித்து வந்துள்ளது என்பதாகும். இளைஞர் விவகார, வேலை வாய்ப்பு அமைச்சு, 13 தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பாக தொழில் வழிகாட்டல் தகவல் முறைகளை பிரசுரித்திருந்தது. இந்தத் தகவல்களை பகுப்பாய்வு செய்யும் பொழுது, இந்தக் கைத்தொழில்களில், தொழில்களில் சேர்ந்து கொள்ளும் பெரும்பான்மையானவர்கள் முற்றுப் பெறாத அல்லது முற்றுப்பெற்ற இரண்டாந்தரக் கல்வியை பெற்றுள்ளார்கள் என்பதனையும், பெரும்பாலானவர்கள் தாம் சேர்த்துக் கொள்ளப்படும் தொழில் களில், தொழில்பயிலுனர் முறையின் கீழ் அல்லது வேலையிலிருக்கும் போதே பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் முறையின் கீழ் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர் என்பதனையும் காண முடிகின்றது.

### 3.2 பல்கலைக்கழக அனுமதி

ஊழியச் சந்தையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறுவதற்கான ஒரு நேரடி வழி, பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதாகும். பல்கலைக்கழக கல்வியின் தரம் தாழ்ந்து வருவது குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்த போதிலும்,மருத்துவம், சட்டம், பல் வைத்தியம் மற்றும் பொறியியல் போன்ற மதிப்புமிக்க தொழில் துறைகளில் பிரவேசிப்பவர்கள் அனைவரும் பல்கலைக் கழகத் தயாரிப்புக்களாகவே இருந்து வருகின்றனர். வரையறுக்கப்பட்ட பல் கலைக்கழக இடங்களுக்கான போட்டி அதிகரித்துக் கொண்டு வந்த நிலையில், பல்வேறு பாடநெறிகளும் தொடர்பான வெட்டுப் புள்ளிகளை உயர்ந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு அதிகாரிகள் நிர்ப்பந் திக்கப்பட்டனர். 1991 இல் மொத்தம் 122,869 பரீட்சார்த்திகள் க.பொ.த.(உ.த.) பரீட்சைக்கு தோற்றினார்கள். இவர்களில் 37,374 பரீட்சார்த்திகள் (அல்லது 30 சதவீதத்தினர்) பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான ஆகக்குறைந்த தகைமையைப் பெற்றுக் கொண்டனர். தகைமை பெற்ற பரீட்சார்த்திகள், ஒன்றில், நான்கு பாடங்களிலும் சித்தி பெற்றிருந்தனர் அல்லது மூன்று பாடங்களில் சித்தி பெற்று, நான்காவது பாடத்தில் 25 மதிப்பெண்களுக்கு கூடுதலாக மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். இந்த இரு வகையைச் சேர்ந்த பரீட்சார்த்தி களையும் பொறுத்தவரையில், கூட்டு மொத்த மதிப்பெண் 180க்கும் கூடுதலானதாக இருந்தது. பல்கலைக்கழக பீடங்களுக்கு அனுமதிக்கப்படுவதற்கான வெட்டுப்புள்ளிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இந்த மட்டத்தில் நிலவி வரும் மிகக்கடுமையான போட்டியை இது நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

டப்.ஏ.சில்வாவும் வேறு சிலரும் இலங்கையில் தனியார் டியுசன் முறை குறித்த விரிவான ஆய்வொன்றை (1991) மேற்கொண்டனர். மாதிரிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களிடம், 'தனியார் டியுசன் பெறுவதற்கு அவர்களைத் தூண்டியது எது?' என வினவப்பட்ட பொழுது, அவர்கள் முன்வைத்த காரணங்கள் நிரல் 1இல் தரப்பட்டுள்ளன. இந்தப் பதில்கள், தனியார் டியுசன் முறையின் இரு அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றன. மாணவர்கள் பரீட்சையில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவதற்கு டியுசன் அவர்களைத் தயாரிப் படுத்துகின்றது என்ற நம்பிக்கை ஒன்றாகும். பாடத்திட்டத்தை பூர்த்தி செய்து கொள்வதில் டியுசன் வகித்து வரும் குறைநிரப்பு பங்கு இரண்டாவது அம்சமாகும்.

### 3.3 க.பொ.த. (உ.த) பரீட்சை

ஒரு மாணவன் க.பொ.த. (உ.த.) வகுப்பில் அனுமதி பெறுவது – முக்கியமாக குறிப்பிட்ட பாடப்பிரிவுகளில் அனுமதி பெறுவது – பெருமளவுக்கு, அம்மாணவன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் பெற்றுள்ள தரங்களினாலேயே நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக, ஒரு மாணவன் எல்லாப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றிருந்தால் மட்டுமே பிரபல்யம் மிக்க பாடசாலையொன்றில் மதிப்புமிக்க பாடநெறியொன்றில் சேர்ந்து கொள்வதற்கு

| பீடம் | வெட்டுப்புள்ளி (கொழும்பு மாவட்டம்) |
|---|---|
| மருத்துவம் | 266 |
| உயிரியல்-விஞ்ஞானம் | 241 |
| பௌதீக விஞ். | 242 |
| பொறியியல் I | 286 |
| பொறியியல் II | 276 |
| கால்நடை மருத்துவம் | 269 |
| பல்மருத்துவம் | 262 |
| விவசாயம் | 249 |
| கட்டடக் கலை | 213 |
| கலை | 243 |
| முகாமை | 291 |
| சட்டம் | 281 |
| வர்த்தகம் | 273 |
| தொகை அளவை | 270 |

வாய்ப்புக் கிட்டும். இதுதவிர, க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருப்பது, இப்பொழுது அரசாங்க மற்றும் தனியார் துறை வெள்ளை வேட்டித் தொழில் களுக்கான ஆகக் குறைந்தபட்ச தகைமையாக இருந்து வருகின்றது. அத்துடன், தொழில்நுட்ப கல்லூரிகளில் பாடநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கும் அது அவசியமாக உள்ளது. எனவே, க.பொ.த.(சா.த.) பரீட்சையில் வெறுமனே சித்தியை மட்டும் பெறுவதற்கும் மாணவர்கள் விருப்பம் காட்டவில்லை; ஆகக் கூடிய அதிவிசேட சித்திகளையும் திறைமைச் சித்திகளையும் பெறவே விரும்புகின்றார்கள்.

### 3.4 ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை

கடந்த சில வருடங்களில், கல்வியில், பரீட்சைகளின் ஆதிக்கம் நிலவி வந்துள்ளதுடன், அது ஆண்டு 5 மட்டம் வரையில் இறங்கி வந்துள்ளது. ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒரு கட்டாயப் பரீட்சையாகவோ அல்லது தகைமை பெறும் பரீட்சையாகவோ இருந்து வரவில்லை; எனினும், தமது கல்வி எதிர்காலத்தை மாற்றியமைப்பதில் இப்பரீட்சை கொண்டிருக்கும் சக்தியைக் கருத்தில் கொண்டே பெரும்பாலான பிள்ளைகள் இப்பரீட்சைக்கு தோற்றி வருகின்றனர். இப் பரீட்சையில் கிட்டும் வெற்றி மாணவர்களுக்கு பின்வரும் அனுகூலங்களை பெற்றுக் கொடுக்கின்றது:

1. தலைநகரில் அல்லது மாகாண நகரமொன்றில் பிரபல்யமிக்க பாடசாலை யொன்றில் சேர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு; இந்த பிரபல்யமிக்க பாடசாலைகள், ஏனைய பாடசாலைகளிலும் பார்க்க நல்ல பொருளாதார சூழ்நிலையையும், வசதிகளையும் வழங்கி வருகின்றன.

2. வருட வருமானம் ரூ.6,000 க்கு குறைவாக இருந்துவரும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு உணவு, தங்குமிடம் மற்றும் ஏனைய வசதிகளுக்காக ஆண்டொன்றுக்கு ரூ.1,000 வழங்கப்படுகின்றது.

3. தனியார்/உதவி பெறும் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகள் இப்பரீட்சையில் சித்தி யடைந்தால், அரசாங்க பாடசாலை யொன்றில் சேர்ந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது.

இந்த நிலைமைகளின் விளைவாக, முழு நாட்டிலும் சிறு தொகையினரான பிள்ளைகள் மட்டுமே இப்பரீட்சைக்கு தோற்றாதிருந்து வருகின்றனர். பெரும் பாலான பாடசாலைகளில், மாணவர்களை இப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்காக, ஆசிரியர்கள் (பாடசாலை நேரத்தின் போதும், பாடசாலை நேரத்தின் பின்னரும்) கணிசமான அளவிலான மேலதிக கல்விப் போதனைகளை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக, கணிதம், தாய்மொழி ஆகிய இரு பாடங்களுக்கும் தனியார் டியுசனுக்கு நல்ல கிராக்கி நிலவி வருகின்றது. இந்தப் பின்னணியில் பாடத்திட்டத்தில் உள்ள ஏனைய பாடங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த ஆய்வில் (டி சில்வா, 1991) பதிலளித்த ஆண்டு 6 மாணவர்கள், தாம் ஏன் டியுசன் முறையை நாடினார்கள் என்பதற்கான காரணங் களை கூறியிருந்தார்கள். நிரல் 2ல் தரப் பட்டுள்ளன. இந்த பதில்கள் தனியார் டியுசனுக்கான முக்கிய காரணங்களை எடுத்துக்காட்டுகின்றன. மாணவர்கள் 10 வயதிலிருந்தே, தாம் எதிர்நோக்க வேண்டி யிருக்கும் கடுமையான போட்டி குறித்து நன்கு உணர்ந்துள்ளார்கள்.

அட்டவணை 2

வேலையில்லாத்திண்டாட்டம்

| வயது | கல்வி மட்டம் பாடசாலை செல்லாத | ஆரம்ப | இடைத்தர | சா.த. | உ.த. + |
|---|---|---|---|---|---|
| 15 - 19 | 6.5 | 31.8 | 48.5 | 11.5 | 1.7 |
| 20 - 24 | 3.0 | 13.5 | 45.1 | 34.8 | 3.6 |
| கூட்டு மொத்தம் | 5.5 | 22.5 | 44.6 | 24.1 | 3.3 |

ஆதரம் : சமூக- பொருளாதார மதிப்பீடு 1969/70, தொகை மதிப்பு, புள்ளிவிவர திணைக்களம், கொழும்பு

| காரணம் | எண்ணிக்கை |
|---|---|
| 1. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு | 63 |
| 2. அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு | 21 |
| 3. நன்றாகப் படிப்பதற்கு | 10 |
| 4. என் பெற்றோர் என்னை டியுசனுக்கு அனுப்புகிறார்கள் | 8 |
| 5. படிப்பில் மேலதிக உதவியைப் பெறுவதற்கு | 5 |
| 6. நான் படிப்பில் மிக மோசமாக இருந்து வருவதால் | 4 |
| 7. ஒரு நல்ல பர்டசாலையில் படிப்பதற்கு | 3 |
| 8. ஆர்வம் | 2 |

( 22 ஆம் பக்கம் பார்க்க)

# தனியார் டியுசனின் தாக்கமும் 21 ஆம் நூற்றாண்டின் கல்வித்துறை சவால்களும்

*ஜீ.எல்.எஸ்.நாணாயக்கார*

*மகிந்த ரணவீர*

*கலாநிதி ஜீ.எல்.எஸ்.நாணயக்கார, பீ.எஸ்.சி., பீ.எச்.டி. ; பிரதம செய்திட்ட அலுவலர், தேசிய கல்வி நிறுவகம், மகரகமை ; பல வருட காலம் கல்வியமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் முக்கிய பதவிகளை வகித்தவர்.*

*மகிந்த ரணவீர எம்.எஸ்.சி. (விஞ்ஞானக் கல்வி) கொலம்பியா பல்கலைக்கழகம் ; யுனிசெப் கல்வி ஆலோசகர்; முன்னர் கல்வி அமைச்சிலும் பல சர்வதேச அமைப்புக்களிலும் பணி புரிந்தவர்.*

### 1. அறிமுகம்

இப்பொழுது நாங்கள் 21 ஆவது நூற்றாண்டின் நுழைவாயிலில் நின்று கொண்டிருக்கிறோம்; புதிய நூற்றாண்டின் பிரஜைகளாக வாழவிருக்கும் இன்றைய இளைய தலைமுறையினரை வார்த்தெடுப்பதில் கல்வி மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வர வேண்டியுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. புதிய நூற்றாண்டில் இடம்பெற இருக்கும் பிரமிக்கத்தக்க பெரு மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, புதிய சூழ்நிலையின் யதார்த்தங்களை அனுசரித்து வாழ்வதற்கு, கல்வி அவர்களை தயார்ப் படுத்த வேண்டியுள்ளது.

எதிர்காலம் குறித்த அவுஸ்திரேலிய ஆணைக்குழு அதன் காப்பு வாசகத்தில், எதிர்காலத்துக்குத் தயார் ஆவதில் நாங்கள் பின்பற்ற வேண்டிய பொருத்தமான அணுகுமுறையைப் பின்வருமாறு தொகுத்துத் தருகின்றது:

> " எதிர்காலம் என்பது, நாங்கள் செல்லும் இடம் அல்ல; மாறாக, நாங்கள் அதனை உருவாக்குகின்றோம். அதற்கான வழிகள் கண்டறியப்படுவதில்லை; உருவாக்கப்படுகின்றன. அத்தகைய வழிகளை உருவாக்குவது, உருவாக்குபவரையும் சென்றடையும் இடத்தையும் மாற்றியமைக்கிறது."

இன்றைய தலைமுறையினருக்கான கல்வி, இந்த வழிகளை உருவாக்குவதில் மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வர வேண்டியுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. தனியார் டியுசன் முறையின் தாக்கம், குறிப்பாக இந்தப் பின்புலத்திலிருந்தே நோக்கப்படுதல் வேண்டும். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான அமைப்பின் (OECD) கல்வி ஆராய்ச்சி மற்றும் புதுமைப்புனைவு மையத்துக்காக கொலின் போல் என்பவரால் தயாரிக்கப் பட்ட ஓர் அறிக்கை, இன்றைய உலகிலும் வருங்கால உலகிலும் தனிநபர்களின் வெற்றிக்கு அவசியமாக இருந்துவரும் கல்வி தொடர்பான மூன்று நுழைவுச் சீட்டுக்களை பட்டியலிடுகின்றது. அவையாவன:

- கல்வி தொடர்பான நுழைவுச்சீட்டு -இது கல்வியின் பாரம்பரிய பங்காகும். இது எழுத்தறிவு, எண்அறிவு மற்றும் அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றை வலியுறுத்துகின்றது.

- தொழிலுக்கான நுழைவுச்சீட்டு-இது, துரித தொழில்நுட்ப மாற்றங்கள் இடம் பெற்றுவரும் உலகில், 'தொழில் செய்வதற்கு கல்வி அவசியமானது' என்பதனை வலியுறுத்துகின்றது.

- தொழில் முயற்சிக்கான அனுமதிச் சீட்டு-தொழில் முயற்சியாளராக வருவதற்குத் தேவையான சில திறன்கள் வருமாறு: சிந்தித்தல், திட்டமிடல், ஒத்துழைத்தல், தொடர்புகொள்ளல், ஒழுங்கமைத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் கண்காணித்தல். அடுத்த நூற்றாண்டில் வாழ்வதற்காக, இந்த நுழைவுரிமைப் பிரிவுகள் அனைத்திலும் வாழ்நாள் முழுவதிலும் கல்வி அளித்து வரக்கூடிய கல்வி முறை ஒன்று இயங்கி வர வேண்டியுள்ளது.

இருபத்தோராம் நூற்றாண்டின் கல்விச் சவால்களின் மீது இலங்கையில் தனியார் டியுசன் முறை எடுத்து வரக்கூடிய தாக்கம் குறித்து பரிசீலனை செய்வதற்கு இக்கட்டுரையில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பரிசீலனையின்போது, பொதுக் கல்வியின் நோக்கங்கள், பயிற்றுவிக்கும்/ பயிலும்

முறைகள், பரீட்சைகள் மற்றும் மதிப்பீடு என்பவற்றின் மீது விசேஷ கவனம் செலுத்தப்படும்.

**2. கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும்**

பாடசாலையின் முக்கிய பணி, நாட்டில் வாழும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் ஒரு பொதுக் கல்வியை வழங்குவதாகும். இந்த விசயத்தில், பள்ளிக்கல்வி, அடிப்படை செயல்திறன்கள் தொகுதியொன்றினை அபிவிருத்தி செய்வதனையே அதன் தலையாய நோக்கமாகக் கொள்ள வேண்டியுள்ளது. தேசிய கல்வி ஆணைக் குழு, அடிப்படைத் திறன்களில் ஐந்து தொகுதிகளை இனங் கண்டுள்ளது. கல்வியுடன் சம்பந்தப்பட்ட தேசியக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கான முன்நிபந்தனைகளாக இவை இருந்து வருவதாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது (தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை, மே 1992):

(அ) தொடர்பு கொள்வதில் திறன்கள்; இவை மூன்று உப தொகுதிகளைக் கொண்டுள்ளன: எழுத்தறிவு, எண்அறிவு, விளக்கக் கணிப்பு.

(ஆ) சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட திறன்கள்: சமூக, உயிரியல், மற்றும் பௌதீக சுற்றாடல்கள்.

(இ) ஒழுக்கவியல் மற்றும் சமயம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட திறன்கள்: விழுமியங்கள் மற்றும் மனப்பாங்கு.

(ஈ) விளையாட்டு மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல் என்பவற்றிலான திறன்கள்-சந்தோசம், களிப்பு, விளாட்டுக்கள், உடற்பயிற்சி மற்றும் ஓய்வு நேர நடவடிக்கைகள் என்பவற்றில் வெளிப்படுத்தப்படும் மனித செயல் தூண்டுதல்கள்.

(உ) "பயில்வதற்கு பயில்வதுடன்" சம்பந்தப்பட்ட திறன்கள் - இவை துரிதமாக மாற்றமடைந்து வரும், சிக்கலான நெருக்கடியான உலக இயல்பிலிருந்து நேரடியாக வருகின்றன.

இலங்கையின் பள்ளிக் கல்வி முறையின் மேலே விவரிக்கப்பட்ட இந்த திறன்கள், பாடசாலை பாடவிதானத்துக்கூடாக சாதித்துக் கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலை பாடவிதானம் ஒரு பொதுக் கல்வியினை வழங்கும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், அந்தப் பொதுக் கல்வி, மொழிகள், விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி, சுகாதாரம் மற்றும் உடற்கல்வி அழகியல் மற்றும் வாழ்க்கை திறன்கள்/ தொழிநுட்ப/ தொழில் முன்னிலை பாடங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மூன்று பிரதான செயற்களங்களை உள்ளடக்கிய கல்விசார் குறிக்கோள்களின் முறையியல் ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம், பாடசாலை பாடத்திட்டத்தின் குறிக்கோள்களை முறையான ஓர் அடிப்படையில் பகுப்பாய்வு செய்ய முடியும். புலன்சார்ந்த செயல், உளவியல் தூண்டுதல் செயல், உணர்ச்சி சார்ந்த செயல் என்பனவே இந்த செயற்களங்களாகும். சாதாரண சொற்களில் கூறுவதாயின், இவை, முறையே, அறிவைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இடம் பெறும் கல்வி, திறன்கள் மற்றும் ஆற்றல்களின் அபிவிருத்தி மற்றும் விழுமியங்களையும் மனப்பான்மைகளையும் ஆழப்பதிய வைத்தல் என்பனவாக இருந்து வருகின்றன. கல்விசார் குறிக்கோள்கள், கல்வி நிகழ்வுப்போக்கினால் மாணவர்களை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை மிகத்தெளிவாக முன்வைக்கின்றன. அதாவது, மாணவர்கள் தமது சிந்தனையை, செயல்களை, உணர்வுகளை மாற்றிக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை அது வழங்குகின்றது.

புலன்சார் செயற்களத்துக்கான கல்விக் குறிக்கோள்களின் முறையியலை புளூம் என்பவரும் மற்றும் சிலரும் வகுத்துள்ளனர்:

1. அறிவு (விடயங்களை நினைவுக்கு கொண்டுவருதல்)

2. கிரகிப்பு (மொழிபெயர்ப்பு, பொருள் விளக்கம் மற்றும் ஊகத்திறன்)

3. பிரயோகித்தல்

4. பகுப்பாய்வு

5. சொற்கூட்டு

6. மதிப்பீடு

இந்த குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டே பாடத்திட்டம் வடிவமைக்கப்படுவதுடன், பாட போதனையும் நெறிப்படுத்தப்படுகின்றது. மேலும், கல்வி பயிலலை மதிப்பீடு வதற்கான அளவுகோல்களாகவும், பிரமாணங்களாகவும் அவை இருந்து வருகின்றன. இந்த வகையில், முழுக் கல்வி முறையிலும் தனியார் டியுசன் முறையின் தாக்கத்திறனை மதிப்பிட்டுக் கொள்வதற்காக குறிக்கோள்களின் பகுப்பு முறை பயனுள்ளதாக இருக்கும். பள்ளிக் கல்வியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் பிறிதொரு தளத்திலிருந்தும் – அதாவது, நாளாந்த வாழ்க்கையின் நடைமுறை மற்றும் சம்பந்தம் என்பவற்றிலிருந்தும்- பரிசீலிக்க முடியும். இங்கு அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள பகுப்பாய்விலிருந்து, கல்வி பயில்வோரின் பல்வேறு தேவைகளுடனும் பாடத்திட்டம் கொண்டுள்ள சம்பந்தத்தை கண்டறிய முடியும்.

இந்த அட்டவணையின் பகுதி 1, உதாரணமாக, பரீட்சைகளுக்கும் சான்றிதழ் நோக்கங்களுக்கும் அவசியமான நிகழ்வுகளைக் கொண்ட அறிவினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. பிரிவு 5 நல்ல வீட்டு வாழ்க்கைக்கும் குடும்ப வாழ்க்கைக்கும் தேவையான திறன்களையும் ஆற்றல்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. பிரிவு 18 நல்ல பிரஜைகளாக இருப்பதற்கு வளர்த்துக் கொள்ள வேண்டிய மனப்பாங்குகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

பாடசாலை மட்டத்திலான அனைத்துமடங்கிய அர்த்தமுள்ள பொதுக் கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்று, மேலே உள்ள அட்டவணையின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலை கல்விக்காக கிடைக்கக் கூடியதாக இருக்கும் மூலவளங்களின் வரம்புக்குள் இதனை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இந்த வகையைச் சேர்ந்த ஒரு பகுப்பாய்வு, தனியார் டியுசனையும் உள்ளடக்கிய பொதுக் கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்றின் செயல்திறனையும், தாக்கத்தையும் மதிப்பிட்டுக் கொள்வதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருந்து வர முடியும். மேலே விவரிக்கப்பட்ட பொதுக்

அட்டவணை 1

| பிரயோக துறை (சில உதாரணங்கள் மட்டும்) | புலன்சார் (அறிவு) | உளத்தூண்டல் (திறன்கள்) | உணர்ச்சி (மனப்பாங்குகள்) |
|---|---|---|---|
| கல்வி நுழைவுச்சீட்டு (பரீட்சைகள்) | 1 | 2 | 3 |
| வீடு மற்றும் குடும்ப வாழ்க்கை | 4 | 5 | 6 |
| சுகாதாரமும் பொது சௌக்கியமும் | 7 | 8 | 9 |
| தொழில் பெறக்கூடிய திறன்கள்/ ஆற்றல்கள் | 10 | 11 | 12 |
| ஓய்வு நேர பயன்பாடு/கலாச்சார நடவடிக்கைகள்/விளையாட்டு | 13 | 14 | 15 |
| குடியுரிமை | 16 | 17 | 18 |
| ஏனையன | 19 | - | - |

கல்வியின் கருதுகோள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றின் பின்னணியில், தனியார் டியுசன், இந்தக் குறிக்கோள்களை எந்த அளவுக்கு நிறைவு செய்து வருகின்றது என்பதனை விமர்சன ரீதியாக பரிசீலிப்பது இந்தக் கட்டத்தில் பயனுள்ளதாக இருக்கும்.

மாணவர்கள், பிரதானமாக, பகிரங்கப் போட்டிப் பரீட்சைகள் தொடர்பான கல்விப் போதனைகளை பெற்றுக் கொள்வதற்காகவே டியுசன் வகுப்புக்களுக்குச் செல்கின்றனர். இந்தப் பரீட்சைகள் மாணவர்களுக்கு அவசியமான கல்வி சார்ந்த நுழைவு உரிமைச் சீட்டினை வழங்குகின்றன. இந்த உரிமைச்சீட்டு, நவீன துறையில் தொழில் சந்தையில் பிரவேசிப்பதற்கு வாய்ப்பளிப்பதுடன், பாதுகாப்பான வசதிகள் நிறைந்த வாழ்க்கை ஒன்றுக்கும் உத்தரவாதம் அளிக்கின்றது. எனவே, தனியார் டியுசன் முறையின் உள்ளடக்கம், அனைத்து மடங்கிய விரிவான பொதுக் கல்வி முறையொன்றுக்கென வகுக்கப்பட்டுள்ள பரந்த அளவிலான பாடத்திட்டத்தில் அக்கறை செலுத்துவதில்லை; மாறாக, தற்போதைய எழுத்துப்பரீட்சை முறையில் சமர்ப்பிக்கப் பட வேண்டிய விடயங்களுக்கு மட்டுமே அதன் உள்ளடக்கம் வரையறுக்கப்பட்டதாக இருந்து வருகின்றது. மாணவர்களிடையே பிரபல்யத்தை பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வரும் டியுசன் ஆசிரியர்கள், பகிரங்கப் பரீட்சைகளில் கேள்விகள் எடுக்கப் படுவதற்கு உயர் அளவில் சாத்தியப்பாடு நிலவி வரும் பகுதிகளில் மட்டுமே முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றார்கள். இந்த நிலையில், அவர்கள் முழுப் பாடத்திட்டத்திலன்றி 'வரக்கூடிய கேள்விகள்' என்ற அம்சத்திலேயே அழுத்தத்தைக் காட்டுகின்றார்கள். எனவே, பாடத்திட்டத்தின் முழு உள்ளடக்கத்திலும் பரீட்சைப் பெறுமதி நிலவி வரும் பிரிவுகள் மட்டுமே கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

பொதுக் கல்வியின் திறன்கள், கல்விசார் நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் ஏனைய குணாம்சங்கள் என்பவற்றை நோக்கும் பொழுது, தனியார் டியுசன், பரந்த அடிப்படையிலான பொதுக் கல்வியின் தேவைகளை நிறைவு செய்வதில்லை என ஒருவர் முடிவாகக் கூறமுடியும். ஏனெனில்,

1. மேலே எடுத்து விளக்கப்பட்ட ஐந்து அடிப்படைத் திறன்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு அது முயற்சிப்பதில்லை.

2. அது உணர்வு சார்ந்த பிரிவுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இருந்து வருகின்றது: உளவியல் தூண்டுதல் மற்றும் உணர்ச்சி அம்சம் என்பவற்றில் போதிய கவனம் செலுத்துவதில்லை.

3. உணர்வு சார்ந்த பிரிவிலும் கூட, அது பிரதானமாக கிரகித்தல், உயர் மட்டத்திலான பகுப்பாய்வு, மதிப்பீடு என்பவற்றில் அதிகளவு கவனம் செலுத்தாது, விடயங்களை நினைவு படுத்திக் கொள்வதற்கு மட்டுமே வரையறுக்கப்பட் டுள்ளது.

4. அது மிக குறுகிய ஒரு பிரிவுக்கு மட்டும் (அதாவது, பரீட்சைக்குத் தேவையான அறிவை வழங்குவதில் மட்டும்) கவனம் செலுத்தி வருகின்றது. அட்டவணை 1ல் தரப்பட்டுள்ள ஏனைய விடயங்களை நிறைவு செய்வதில் அது போதியளவில் கவனம் செலுத்துவதில்லை.

எனவே, உள்ளடக்கத்தின் அடிப்படையில் நோக்கும்பொழுது, பொதுக் கல்வியின் நோக்கங்கள், குறிக்கோள்கள் என்பவற்றினால் முன்வைக்கப்பட்டுள்ள அளவுகோளினை தனியார் டியுசன் முறை நிறைவு செய்து வரவில்லை என்பதனைக் காண முடிகிறது. கல்வி பயில்பவர்களின் பயிலும் மாதிரிகள், பயிற்றுவிக்கும் மாதிரிகள் மற்றும் மாணவர்களின் ஆக்கத்திறன் என்பவற்றின் மீதான தனியார் டியுசனின் தாக்கத்தினை இப்பொழுது நோக்குவோம்.

### 3. கற்றல்/கற்பித்தல் நிகழ்வுப்போக்கு

கல்வியைப் பெற்றுக் கொள்பவர், தன்னுடைய உள்ளார்ந்த ஆற்றலை முழு நிறைவான விதத்தில் அபிவிருத்தி செய்து, கண்டறிந்து கொள்வதற்கு கல்வி உதவ வேண்டும். அது இரு வழிகளில் நிர்ணயகரமான பங்கினை வகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது:

> கல்வியின் ஊட்டுக்கடத்தும் கருமம்: அதாவது, தற்போதைய அறிவு, விழுமியங்கள், மனப்பாங்கு என்பவற்றை உள்ளவாறே பாதுகாத்துக் கொள்ளல்.
>
> நிலைமாற்றக் கருமம்: அதாவது, புதுமைப்புனைவு, ஆக்கத்திறன், சமூக சீர்திருத்தம் முதலியவற்றை ஊக்குவித்தல்.

கற்றல் நிகழ்வுப்போக்கு, இந்த பெறுபேறுகளை சாதித்துக் கொள்ளக் கூடிய விதத்தில் நெறிப்படுத்தப்படுதல் வேண்டும். கல்வி பயிலும் நிகழ்வுப் போக்கினை தாக்கத்திறன் வாய்ந்ததாக மாற்றியமைப்பது எப்படி என்பதனை நிர்ணயித்துக் கொள்ளும் பொருட்டு, கல்வி பயில்வதனை பாதித்து வரும் காரணிகளை பரிசீலனை செய்வது அவசியமாகும்.

கல்வி கற்றல், கல்வி கற்பவர் இடைத்தொடர்புகளைக் கொண்டிருக்கும்

பல்வேறு சூழல் காரணிகளினாலும் செல்வாக்குப்படுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக, பௌதீக மற்றும் பொருள் சார்ந்த சூழல் (வகுப்பறை, வசதிகள், உபகரணம்), தனிப்பட்ட சூழல் (ஆசிரியர், படிப்பிக்கும் முறை), கற்றல் உள்ளடக்கம் (பாடத்திட்டம், போதனை, குறிக்கோள்கள்), கல்விக்கொள்கையும் திட்டமிடலும் (பாடசாலை முறைமைகள், நிர்வாகம்), சமூக மற்றும் சமுதாயச் சூழல் முதலியன. இவற்றுள் ஒரு சில காரணிகள், ஏனையவற்றிலும் பார்க்க கல்வியின் மீது அதிகளவுக்குச் செல்வாக்கினை செலுத்தி வருகின்றன (உதாரணம் ஆசிரியர்கள் படிப்பிக்கும் மாதிரிகள், படிப்பிக்கும் உபகரணங்கள் முதலியன) எனினும், கற்றல் என்பது, வெறுமனே ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் ஒரு வழி நிகழ்வுப்போக்கொன்றாக இருந்து வரவில்லை. அது உத்வேகம் கொண்ட இரு வழி நிகழ்வுப்போக்கொன்றாக இருந்து வருகின்றது. தனியார் டியுசன் முறையின் தாக்கத்திறனை மதிப்பிடுவதில் இந்தக் காரணி பெருமளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. கல்வி கற்பவர், மேற்குறிப்பிடப்பட்ட சூழல் காரணிகளால் வெறுமனே பாதிக்கப்படுவதில்லை. சுறுசுறுப்பான, வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு ஜீவன் என்ற முறையில் சூழலுடன் இடைத்தொடர்பு கொள்ளக் கூடிய ஆற்றலை அவர் கொண்டுள்ளார். இத்தகைய இடைத்தொடர்பு கல்வி பயில்பவரை செழுமையான, அர்த்தமுள்ள கல்வி அனுபவங்களுக்கு இட்டுச் செல்ல முடியும். இத்தகைய அனுபவங்கள் விமர்சனபூர்வமான சிந்தனையையும், ஆக்கத்திறனையும், பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றலையும், முடிவெடுக்கும் திறனையும் மேம்படுத்தும். இந்தக் கண்ணோட்டத்தில் இருந்து நோக்கும் பொழுது, கல்வி கற்றல் என்பது, ஆசிரியர்களுக்கும் கற்பவர்களுக்கும் மற்றும் கல்வி பயிலும் சூழலில் காணப்படும் ஏனைய காரணிகளுக்குமிடையிலான செயல் முனைப்பு மிகுந்த பரஸ்பர நிகழ்வுப்போக்கொன்றாக இருந்து வருவதனைக் காண முடிகிறது. தனியார் டியுசன் வகுப்பொன்றில், இத்தகைய செயல்முனைப்பு மிகுந்த பரஸ்பர இடைத்தொடர்பும், பயில்வோர் பங்கேற்பும் எந்த அளவுக்கு இடம் பெற முடியும்?

கல்வி கற்பவரின் சுறுசுறுப்பான, நேரடியான பங்கேற்பு அதிகரித்துக் கொண்டு வரும் போதும், அவர் கல்வி பயிலும் தூண்டுகைக்கு, மனப்பதிவு, பொருள் விளக்கம், பகுப்பாய்வு, கூட்டுச் சேர்க்கை, மதிப்பீடு, செயற்தூண்டல், மன உணர்வுகள், மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்கள் போன்ற தனது உளவியல் அம்சங்கள் மூலம் எதிர்விளைவு காட்டும் போதும் கல்வி பயிலும் நிகழ்வுப்போக்கு பெருமளவுக்கு தாக்கத்திறன் கொண்டதாக மாற்றமடைகின்றது. கல்வி பயில்பவரின் தரப்பிலிருந்து இத்தகைய பரஸ்பர செயல்களும் சுறுசுறுப்பான பங்கேற்பும் இடம் பெறாதவிடத்து, அவர் வெறுமனே கல்வியைப் பெற்றுக் கொள்ளும் ஒருவராக மட்டும் இருந்து வருகின்றார். அப்பொழுது, மனப்பாடம் செய்யும் கல்வி முறையை மட்டுமே அவர் பெற்றுக் கொள்கிறார். மனப்பாடத்தில் பயிலும் முறையின் விளைவாக, கல்வியின் உயர் நோக்கங்களும் குறிக்கோள்களும் மாசுபடுத்தப்படுவதுடன், விமர்சனபூர்வமான சிந்தனையாற்றல், ஆக்கத்திறன், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் மற்றும் முடிவு எடுக்கும் திறன் போன்ற விரும்பத்தக்க குணாம்சங்களும் அழிக்கப்படுகின்றன.

தனியார் டியுசன் முறையின் தாக்கத்துடன் தொடர்பாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய கற்றல்/கற்பித்தல் நிகழ்வுப்போக்கில் மற்றொரு அம்சமும் உள்ளது. எமது இன்றைய சமூகத்தில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் பொருட்டு, கல்வி பயிலல் பெருமளவுக்கு பயில்வோரின் தூண்டுதலைக் கொண்டதாகவும், பயில்வோரினால் உந்தப்பட்டதாகவும் இருந்துவர வேண்டியுள்ளது. கல்வித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வந்துள்ள புதிய முன்னேற்றங்களுடன் இணைந்த விதத்தில், ஆசிரியரால் (டியுசன் ஆசிரியரால்) நெறிப்படுத்தப்படும் கல்விப் போதனையின் இடத்தில், சுய கல்வியும் சுயமாக நெறிப்படுத்தப்பட்ட கல்வியும் படிப்படியாக இடம் பெற்று வரும். இந்த மாற்றங்களை கவனத்தில் எடுக்கும் பொழுது, எதிர்காலத்தின் தேவை, சுய கல்வித் திறன்களை அபிவிருத்தி செய்வதாகவே ("பயில்வது எப்படி என்பதை பயில்வதாகவே") இருந்து வர முடியும். அதாவது, பயிற்றுவிக்கக் கூடிய தன்மையை உயர்த்துவதாகவே அது இருக்கும். கல்வி பயிற்றுவிக்கக் கூடிய இயல்பு குறித்த கருதுகோள், அடிப்படைப் பயிலும் திறன்கள், பல்வேறு பயிலும் முறைகளை பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் மற்றும் தேவைகளை இனங்கண்டுகொள்வதற்கூடாக ஒருவரின் சொந்த பயிலும் அனுபவங்களை ஒழுங்குபடுத்துக் கொள்ளல், பயிலும் நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ளல், ஒருவரின் சொந்த சாதனைகளை மதிப்பீடு செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இன்றைய தனியார் டியுசன் முறை, கல்வி பயிலும் முறை ஒன்று என்ற வகையில், மனப்பாடம் செய்வதனையே அதிகளவுக்கு வலியுறுத்தி வருகின்றது. மேலும், இந்த முறை, கேள்வியொன்றுக்கான பதிலை பெற்றுக் கொள்ளும் வழிமுறையிலும் பார்க்க, அந்தப் பதில் மீது மட்டுமே மிதமிஞ்சிய அளவுக்குக் கவனம் செலுத்தி வருகின்றது. அதனால், மேலே குறிப்பிடப்பட்ட பயிலும் நிகழ்வுப்போக்கின் அபிவிருத்தி, கல்வி ஊட்டப்படக் கூடிய தன்மை மற்றும் சுய கல்வி போன்ற விரும்பத்தக்க போக்குகளை மேம்படுத்துவதற்கான கல்வி முறைமையின் ஆற்றலையும் அது அழித்து வருகின்றது.

### 4. மதிப்பீடும் பரீட்சைகளும்

எந்த ஒரு கற்றல்/கற்பித்தல் முயற்சியினதும் - அது பாடசாலையில் ஒரு வகுப்பறையில் இடம்பெற்றாலும் சரி அல்லது தனியார் டியுசன் வகுப்பொன்றில்இடம்பெற்றாலும் சரி - பிரதான நோக்கம், பிள்ளைகளின் கல்வி பயிலலை மேம்படுத்துவதாகும். கற்றல்/கற்பித்தல் நிகழ்வுப்போக்கின் செயல்முனைப்பு மிகுந்த இயல்பு, அதில் பங்கேற்கும் மாணவர்கள் இடையறாது அதில் அபிவிருத்தி கண்டு வருகிறார்கள் என்பதனை உணர்த்துகிறது. கற்றலுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, ஆசிரியர்கள், மாணவர்கள் எட்டியுள்ள மட்டங்களையும், அவர்களுடைய வளர்ச்சி விகிதங்களையும் அறிந்திருக்க வேண்டும். எந்த ஒரு கற்றல்/கற்பித்தல் நிகழ்வுப்போக்கினதும் ஒருங்கிணைந்த பாகமாக இருந்து வரும் மதிப்பீட்டு நிகழ்வுப்போக்கொன்றுக்கு ஊடாக மட்டுமே இந்த தேவையை நிறைவு செய்து கொள்ள முடியும். மதிப்பீடு பல வடிவங்களை எடுக்க முடியும். அது, ஆசிரியர், மாணவர்களின் தோள்களுக்கு மேல் எட்டிப் பார்க்கும் ஒரு முறையில் இருக்கவும் முடியும்; கண்டிப்பான பரீட்சை நிபந்தனைகளின் கீழ் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை

ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படவும் முடியும். பிள்ளைகளின் கற்றலையும் முன்னேற்றத்தினையும் முறையாக ஒரு ஒழுங்கில் மதிப்பீடு செய்யாத நிலையில், தாக்கமான கற்றலும் கற்பித்தலும் இடம் பெறுவது அநேகமாக சாத்தியமில்லை.

ஓர் ஆசிரியர் கற்றல்/கற்பித்தல் நிகழ்வுப்போக்கின் போது, ஒரு மாணவனின் கல்வியை பல்வேறு புள்ளிகளில் மதிப்பிட்டுக் கொள்ள முடியும். அவற்றை விரிவான முறையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம். போதனை தொடங்குவதற்கு முன்னர் (முன் பரீட்சிப்பு); கல்வி போதனையின் போது (உருவாக்கம்); மற்றும் போதனையின் முடிவில் (ஒட்டுமொத்த மதிப்பீடு).

கல்விப் போதனை தாக்கத்திறன் கொண்டதாக இருந்துவர வேண்டுமானால், அது, மாணவர்களின் மட்டத்தில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். மாணவனின் முன் தேவைப் பொருட்கள் தொடர்பான ஆற்றலையும் படிப்பிக்க விருக்கும் விடயங்கள் தொடர்பான அறிவினையும் நிர்ணயித்துக் கொள்வதற்காக கல்விப் போதனை ஆரம்பிப்பதற்கு முன்னர் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பிள்ளைகள் தேவையான திறன்களை நன்கு கற்றுக் கொண்டால் ஆசிரியர் போதனையை தொடரமுடியும். போதிய ஆற்றல்களை பெற்றிராதவர்களுக்கு பரிகார போதனை வழங்கப்படுதல் வேண்டும்.

உருவாக்க மதிப்பீடுகள் கற்றல் கற்பித்தல் நிகழ்வுப்போக்கில் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வருகின்றன. மேலும், இவற்றுக்கூடாகத் திரட்டப்படும் தகவல்களை, கற்றலையும் கற்பித்தலையும் திருத்தியமைத்து நெறிப்படுத்துவதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த மதிப்பீடுகளுக்கூடாக, மாணவர்கள், தமது கல்வி எந்த அளவுக்கு முன்னேற்றமடைந்து செல்கின்றது என்பதனைக் கண்டறிந்து கொள்ள முடியும். தவறுகள் தொடர்பான தகவல்கள் குறிப்பாக பயனுள்ளவையாக இருந்து வருகின்றன. ஏனெனில், இந்தத் தவறுகள் அவர்களுடைய தப்பெண்ணங்களைச் சுட்டிகாட்டுகின்றன. இந்தத் தப்பெண்ணங்கள் தெளிவுபடுத்தப்படாவிட்டால், அவை எதிர்கால கல்வியினை மிகத் தீவிரமாக பாதிக்க முடியும். இந்த மதிப்பீடு, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வீச்சிலான மதிப்பீட்டு நடவடிக்கைகளை கொண்டுள்ளது. முறைசாராத அவதானிப்புக்களிலிருந்து வாய் மூலமான மதிப்பீடுகள் வரையிலும், பிரயோக அல்லது எழுத்து மூலமான நடைமுறைகள் போன்ற வீச்சுக்களில் அவை காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில், குறித்துரைக்கப்பட்ட விரிவான தகவல்களை திரட்டிக் கொள்ளாது, ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு மாணவனுக்கான பொருத்தமான கற்பித்தல் நடவடிக்கையை தெரிவு செய்வது சாத்தியமற்றதாக இருந்து வர முடியும். கற்பித்தலுக்காக இவ்விதம் தகவல்களைத் திரட்டுவது, "நோய்க்குறி மதிப்பீடு" என அழைக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக, இந்த மதிப்பீடு எல்லா மாணவர்களுக்கும் எல்லா நேரங்களிலும் அவசியப்படுவதில்லை. ஆனால், பொதுவாக உருவாக்க மதிப்பீடுகள், மாணவர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை சுட்டிக்காட்டத் தவறும் பொழுது இது அவசியப்படுகின்றது. தனிப்பட்ட மாணவர்கள் விடும் தவறுகளின் வகையையும் தவறுகளின் மாதிரிகளையும் ஆராய்ந்து பார்ப்பதன் மூலம், ஆசிரியர் இம்மாணவர்களின் தப்பெண்ணங்களை இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருந்துவருவார். அத்துடன், பொருத்தமான பரிகார நடவடிக்கைகளை அவர் விதித்துரைக்க முடியும்.

பொதுவாக, மாணவர்கள் படிப்பிக்கப்பட்டிருக்கும் விடயங்களை எந்த அளவுக்கு புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நிர்ணயிப்பதற்காக ஒட்டுமொத்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்போந்த கலந்துரையாடலில், பல்வேறு மட்டங்களில், பல்வேறு வழிகளில் கற்றல்/கற்பித்தல் நிகழ்வுப் போக்கு தொடர்பான பல தகவல்களைத் திரட்ட வேண்டியுள்ளது என்பதனை தெளிவுபடுத்துவதற்காக ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வியில் தாக்கமான முறையில் முன்னேற்றத்தை எடுத்து வருவதற்கும், எந்த அளவுக்கு கற்றல் இடம் பெற்று வருகின்றது என்பதை நிர்ணயித்துக் கொள்வதற்காகவும் இந்தத் தகவல்கள் அவசியப்படுகின்றன.

இத்தகைய உறுதியான மதிப்பீட்டு வழிமுறைகள் தனியார் டியுசன் முறையில் எந்த அளவுக்கு இருந்து வருகின்றன என்பதனை நோக்குவோம். கல்வி பயிலும் மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பான முறையான மதிப்பீடும் கண்காணிப்பும் தனியார் டியுசன் வகுப்புகளில் மிகக் குறைந்த மட்டத்திலேயே இடம்பெற்று வருகின்றன. முறையான மதிப்பீடுகள் எவையுமில்லாத தனியார் டியுசன் வகுப்புக்கள், அந்த வகுப்புக்களுக்குச் சமூகமளிக்கும் திறமைவாய்ந்த ஒரு சில மாணவர்களுக்கு மட்டுமே பயனுடையதாக இருந்து வர முடியும். இத்தகைய வகுப்புக்கள், பெரும்பாலான மாணவர்களின் கற்றல் தொடர்பான பிரச்சினைகளையும், தப்பெண்ணங்களையும் இனங்காணத் தவறி விடுகின்றன. மேலும், அத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் அவை எத்தகைய முயற்சிகளையும் எடுப்பதில்லை. எனவே, கற்றல் தொடர்பான பிரச்சினைகளைக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு, தாக்கமான கற்கும் சூழலொன்றை தனியார் டியுசன் முறையால் வழங்க முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதாகும்.

எமது கல்வி முறையின் முனைப்பான அக்கறைக்குரிய பன்முகப்பட்ட சிறுவர்களுக்கும், இள வயதுப் பிரிவினருக்கும் வெற்றிகரமான முறையில் கல்வி போதிப்பதே இன்றைய அறைகூவலாக இருந்து வருகின்றது என்று கிளேஸர் (1986) சுட்டிக் காட்டுகிறார். கற்பதற்கு தயக்கம் காட்டும் அல்லது சிரமப்படும் பிள்ளைகளை கையுதிர்த்து விடுவது ஒரு தீர்வாக இருக்க முடியாது. மிகத்திறமை வாய்ந்த மாணவர்களும் அதேபோல பலவீனமான மாணவர்களும் தமது கல்வியை உச்சமட்டத்தில் பெற்றுக் கொள்வதனை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுக் கல்வியின் அனைத்து மட்டங்களிலும் தனியார் டியுசனுக்கான கேள்வி அதிகரித்து வருவதனை காண முடிகிறது. டியுசன் வகுப்புக்களுக்குச் சமூகமளித்து வரும் இடைநிலைக் கல்விப் பிரிவுப் பிள்ளைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு (மஞ்சநாயகா, நாணாயக்கார, 1986), பகிரங்கப் பரீட்சைகளுக்கு தயாராகி வரும் பிள்ளைகளில் டியுசனை நாடுபவர்களின் விகிதாசாரம் உயர்வாக இருந்து வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டியுள்ளது. ஆண்டுகள் 11, 12 மற்றும்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

13 என்பன தொடர்பாக இது 75% ஆக உள்ளது. பகிரங்கப் பரீட்சைகளால் முன் வைக்கப்பட்டு வரும் சவால், இலங்கையில் தனியார் டியுசனுக்கு சாதகமாக இருந்து வரும் ஒரு நிர்ணய காரணியாக காணப் படுகிறது.

பொதுக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் (உணர்வு சார்ந்த தளத்தில்) அறிவு வளர்ச்சியை மேம்படுத்துவது மட்டுமன்றி (உளத்தூண்டுதல் பிரிவு) திறன்கள் மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் என முன்னர் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், எமது பகிரங்கப் பரீட்சைகள் மூலம் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான மதிப்பீடுகள், எழுத்து மூலமான பரீட்சிப்பு முறைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டவையாக இருந்து வருகின்றன. இத்தகைய பகிரங்கப் பரீட்சைகள் திறன்களையும் மனப்பாங்குகளையும் திருப்திகரமாக மதிப்பீடு செய்து கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை. இது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. ஒரு புறத்தில், மதிப்பீடு ஒரு அம்சத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருப்பதால், அதனை செல்லுபடியாகத்தக்க ஒரு மதிப்பீட்டு முறையாக அங்கீகரிக்க முடியாதுள்ளது. மறுபுறத்தில், இந்த மதிப்பீட்டு முறை தனியார் டியுசன் ஆசிரியர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. அதாவது, இவர்கள், நியாயமான அல்லது நன்கு அறியப்பட்ட வகைகளைச் சேர்ந்த கேள்விகளுக்கு சரியான விடைகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம், மாணவர்கள் பரீட்சைகளில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கு உதவி வருகின்றனர். ஆனால், மாணவர்கள் குறிப்பிட்ட பாடம் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகளையோ கருதுகோள்களையோ இக்கல்வி முறையின் மூலம் புரிந்து கொள்வதில்லை. இது குறுங்காலத்தில் வெற்றியை எடுத்து வரக்கூடியதாக இருந்து வந்த போதிலும், பிள்ளைகளிடையே நீண்ட காலத்தில் விரும்பத்தகாத விளைவுகளை எடுத்துவர முடியும்.

## முடிவுரை

பொதுக்கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும், கற்றல்/கற்பித்தல் நிகழ்வுப்போக்கு, பரீட்சைகள் மற்றும் மதிப்பீடு போன்ற விடயங்கள் இதுவரையில் கலந்துரையாடப்பட்டன. இந்தப் பின்னணியில், ஒட்டுமொத்தக் கல்வி முறையின் மீது தனியார் டியுசன் எடுத்து வரக்கூடிய தாக்கங்களை நோக்குவோம்.

டியுசன் முறையின் உள்ளடக்கம், பொதுக்கல்வியின் அளவுகோல்களை நிறைவு செய்யவில்லை என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. உண்மையிலேயே, அது பொதுக் கல்வியின் முழு நிறைவான நோக்கங்களையும் குறிக்கோள்களையும் களங்கப்படுத்தி வருகின்றது. அத்துடன் பரீட்சைத் தேவைகளை நோக்கி வழிப்படுத்தப்பட்டுள்ள மனப்பாடக் கல்வி முறைக்கு மட்டும் அது வரையறுக்கப்பட்டுள்ளது. பரீட்சைகளும் கூட, வரையறுக்கப்பட்ட ஒரு தொகுதி குறிக்கோள்களை மட்டுமே பரீட்சிப்பதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளன. பிரதானமாக, முதலாவது மட்டமான உணர்வு சார்ந்த அறிவினை மட்டுமே அவை பரீட்சிக்கின்றன. பிரயோகம், பகுப்பாய்வு, கூட்டுச்சேர்க்கை மற்றும் மதிப்பீடு போன்ற உயர்மட்ட விடயங்களுக்கு இப்பரீட்சைகள் உரிய அங்கீகாரத்தை அளிப்பதில்லை. எழுத்து மூலமான பரீட்சைகளினால், உள்தூண்டல் திறன்கள், மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றை எந்த வகையிலும் பரீட்சிக்க முடியாது. எனவே, தனியார் டியுசனும் பரீட்சை முறையும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உதவி வரும் அதே வேளையில், கல்வியின் அடிப்படை நோக்கங்களை அவை புறக்கணித்து வருகின்றன.

தனியார் டியுசன், பாடசாலை வகுப்பறைக் கல்வி போதனையில் பிறிதொரு வகையான ஒரு பிரச்சினையையும் எடுத்து வருகின்றது. வகுப்பறை ஒழுக்கம் மற்றும் அவதானம் என்பவற்றின் மீது அது ஒரு எதிர்மறையான தாக்கத்தினை எடுத்து வருகின்றது. பாடசாலையில், ஆசிரியரால் நடாத்தப்படும் பாட போதனையின் மீது பிள்ளைகள் போதியளவில் கவனம் செலுத்துவதில்லை; ஒன்றில் அது டியுசன் வகுப்புக்களில் ஏற்கனவே படிப்பிக்கப்பட்ட ஒரு விடயமாக இருக்கலாம்; அல்லது டியுசன் அசிரியர் இந்த விடயத்தை மேலும் தாக்கமான முறையில் விளங்கப்படுத்துவார் என பிள்ளைகள் எதிர்பார்க்கின்றார்கள். டியுசன் வகுப்புக்களில் வழங்கப்படும் போதனை, பாடசாலையில் வழங்கப்படும் போதனையிலும் பார்க்க உயர்ந்ததாக இருந்து வந்தது என்பதனை உயர்தர வகுப்பு மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தெரிவித்தனரென முன்னர் குறிப்பிடப்பட்ட ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது. இது பாடசாலை ஆசிரியர் மீதும் அவருடைய கல்வி போதனை மீதும் மாணவர்கள் கொண்டுள்ள மரியாதையிலும் நம்பிக்கையிலும் ஒரு எதிர்மறைத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. இதனால், ஒரு விஷச்சுழல் தோன்றுகின்றது. அதாவது, எதிர்மறையான மாணவர் நடத்தையும் கற்றல்/கற்பித்தல் நடைமுறையில் பங்கேற்காமையும் பாட போதனையின் தரம் குறைவடைவதற்கு வழிகோலுகின்றது; போதனையின் தரம் விழ்ச்சியடையும் பொழுது, அது தனியார் டியுசனுக்கு வழி கோலுகின்றது. மறுபுறத்தில், தனியார் டியுசன், பாடசாலையில் மாணவர்களின் எதிர்மறை நடத்தைக்கு வழிகோலிவிடுகின்றது. இந்த விஷச்சுழல் இவ்விதமாக செயற்பட்டு வருகிறது.

தனியார் டியுசனின் மிக அழிவுகரமான தாக்கம், மாணவர்களின் படிப்பு மாதிரிகளிலும், படிப்பு பழக்கங்களிலும் அது எடுத்து வரும் தாக்கமாகும். பெரும்பாலான டியுசன் வகுப்புக்களில் பின்பற்றப்பட்டு வரும் "வாய்க்குள் ஊட்டி விடும்" அணுகுமுறை, கல்வி கற்பவரின் முன்முயற்சிகளையும், உந்துதல் உணர்வுகளையும் அழித்து விடுகின்றது. மேலும், மாணவன் சுயமாக கற்றுக்கொள்ளக் கூடிய தனது ஆற்றல்களை வளர்தது்க் கொள்வதற்கு அது இடையூறாகவும் இருந்து வருகின்றது.

( 16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### 4.0 முடிவுக் குறிப்பு

மேலே எடுத்துக் காட்டப்பட்டது போல, ஒவ்வொரு உப பிரிவையும் (அதாவது ஆண்டு 6, ஆண்டு 11, ஆண்டு 13/விஞ்., 13/கலை மற்றும் 13/வர்த்தகம் ஆகிய வகுப்புக்களைச்சேர்ந்த, மாணவர்களில் 90 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள், பரீட்சைகளில் ஆக உயர்ந்த மதிப்பெண்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமே தம்மை தனியார் டியுசனுக்கு தூண்டியது என தெரிவித்திருந்தனர். டியுசன் வகுப்புக்களுக்குச் செல்வதன் மூலம், 'பரீட்சையில் கேள்விகளுக்கு எப்படி விடையளிப்பது' என்பதனை தம்மால் தெரிந்து கொள்ள முடிந்தது என்ற விடயத்துக்கே மாணவர்கள் அதிக முக்கியத்துவம் அளித்தார்கள்.

# தனியார் டியுசன் முறையின் சில உளவியல் அம்சங்கள்

**கலாநிதி சுவர்ணா விஜயதுங்க**

*(முத்த விரிவுரையாளர், கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)*

பாடசாலைக்கு வெளியான கல்வி போதனை அல்லது தனியார் டியுசன் முறை, இலங்கையின் பிள்ளைப் பிராயத்தின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக இப்பொழுது உருவாகி வந்துள்ளது. அனைத்து வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பிள்ளைகள் – அதாவது, குழந்தைகள் முதல் வளரிளம் பருவத்தினர் வரையில் – இந்த வலையில் சிக்குண்டு உள்ளதுடன், புற்றீசல்கள் நெருப்பை நோக்கிச் செல்வது போல தனியார் டியுசனை நோக்கி இவர்கள் அனைவரும் ஈர்க்கப்பட்டு வருகின்றார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் பாடசாலை நேரத்தின் பின்னரும் வார இறுதி நாட்களிலும் மட்டுமன்றி, பாடசாலை தொடங்குவதற்கு முன்னரும் பாடசாலை நேரத்தின் போதும் கூட டியுசன் வகுப்புக்களை முற்றுகையிட்டு வருகின்றனர். பிரபல்யம் மிக்க ஆசிரியர்களிடமிருந்து டியுசன் பெற்றுக் கொள்வதற்காவோ அல்லது அதிகளவுக்குப் பிரத்தியேக வழியைச் சேர்ந்த டியுசனைப் பெற்றுக் கொள்வதற்காகவோ சில மாணவர்கள் நீண்ட தூரம் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். சிறு பிள்ளைகளை பெற்றோர் தமது கரங்களில் ஏந்திச் செல்கின்றனர். வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பவற்றிலான படிப்பை ஆரம்பிப்பதற்காகவும், பேச்சுப் பயிற்சியை பெறுவதற்காகவும் இவர்கள் இவ்விதம் டியுசன் வகுப்புக்களை நோக்கிச் செல்கின்றார்கள். பலவீனமான மாணவர்கள், சராசரி மாணவர்கள் மற்றும் புத்திக் கூர்மை கொண்டவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் -விருப்பமுள்ளவர்களும் விருப்பமில்லாதவர்களும்- இந்த இரண்டாவது கல்வி முறையில் கட்டாயமாக பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர். க.பொ.த.(சா.த.) பரீட்சை, க.பொ.த.(உ.த.) பரீட்சை மற்றும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை என்பன இந்த இரண்டாவது கல்வி முறையின் பிரத்தியேகப் பிராந்தியங்களாக மிக வேகமாக மாற்றமடைந்து வருகின்றன. இந்த டியுசன் காய்ச்சல், எந்த அளவுக்கு பரவி இருக்கின்றது என்றால், முறை சார்ந்த பாடசாலையில் (அதாவது முதலாவது கல்வி முறையில்) சேர்ந்து கொள்வதற்கு முன்னரும் கூட, பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக புலமைப் பரிசில் டியுசன் வகுப்புக்களுக்கான இடங்களை ஒதுக்கிக் கொள்ளும் அளவுக்கு சென்றுள்ளனர். இந்த இரண்டாவது கல்வி முறையினால் வழங்கப்பட்டு வரும் நிபுணத்துவமும் சிறப்புத் தேர்ச்சியும் இணையற்றதாகும்; பல உயர்தர வகுப்பு மாணவர்கள் தனியொரு பாடத்துக்குள் பல்வேறு பிரிவுகள் தொடர்பாக அல்லது தலைப்புக்கள் தொடர்பாக டியுசன் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர். இது எந்த அளவுக்கு சென்றிருக்கின்றது என்றால், ஒரு பாடத்துக்கு 4 அல்லது அதற்குக் கூடிய டியுசன் ஆசிரியர்களை வைத்திருப்பது இப்பொழுது ஒரு சாதாரண விஷயமாக மாறியுள்ளது.

சிறுவர்களுக்காக குரல் எழுப்பி வரும் ஜோன் ஹோல்ட் என்பவர், பெரும்பாலானவர்கள், பிள்ளைப் பிராயத்தினை மதில்களால் சூழப்பட்டுள்ள ஒரு தோட்டமாக கருதி வருகின்றனர் என்றும், பிள்ளைகள் சிறியவர்களாகவும் பலவீனமானவர்களாகவும் இருந்து வருவதனால் வெளியுலகின் கடுமைகளிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றார்கள் என்றும் கருதுகின்றார்கள் எனக் குறிப்பிடுகின்றார். உலகத்துடன் ஈடுகொடுத்து வாழ்வதற்கு சக்தியையும் புத்தி சாதுர்யத்தையும் இப்பிள்ளைகள் பெற்றுக் கொள்ளும் வரையில், இவர்கள் இவ்விதம் பாதுகாக்கப்பட்டு வர வேண்டும் என்றும் அவர்கள் கருதுகின்றனர். ஆனால், பெரும்பாலான சிறுவர்களைப் பொறுத்தவரையில், பிள்ளைப் பருவம் ஒரு தோட்டமாக இருந்து வரவில்லை என்றும், அது ஒரு சிறை அனுபவமாக இருந்து வருகின்றதென்றும் ஹோல்ட் வாதிடுகின்றார். எனவே, மதில்களால் சூழப்பட்ட இந்தத் தோட்டம், அதற்குள் வசித்துவரும் பிள்ளைகளில் பெரும்பாலானவர்களைப் பொறுத்தமட்டில், வெளி உலகினை விடவும் சிறந்ததொன்றாக இருந்து வரவில்லை. சில சந்தர்ப்பங்களில், வெளி உலகிலும் பார்க்க மிக மோசமான போட்டி நிலவி வரும் ஓரிடமாகவும் கொடூரமும் அவமதிப்பும் மலிந்துள்ள ஓரிடமாகவும் அது இருந்து வருகின்றது. சிறுவர்கள் தொடர்பான ஹோல்டின் அக்கறை, சமகால இலங்கையில் வாழ்ந்து வரும் சிறுவர்களின் பரிதாப நிலையைப் பார்க்கும் பொழுது முக்கியத்துவம் பெறுகின்றது. இன்றைய இலங்கையின் பிள்ளைப் பருவ வாழ்க்கையை மதில்களால் சூழப்பட்ட ஒரு சிறைக்கூடம் என உருவகப்படுத்துவது மிகப் பொருத்தமானதாக இருந்து வரும் அதே வேளையில், பிள்ளைப் பிராயம் என்பது ஒவ்வொருவரினதும் பிறப்புரிமையாக இருந்து வருவதுடன், அந்த உரிமை இப்பொழுது நமது தேசத்தின் பிள்ளைகளுக்கு மறுக்கப்பட்டு வருகின்றது எனவும் வாதிட முடியும்.

தேசத்தின் பிள்ளைகள் அனைவரும் அபாய ஏதுவொன்றை எதிர்நோக்கியிருக்கும் வேளையில், அந்நிலைமையைத் தணிப்பதற்கு மிகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகும். பிள்ளைகளை இந்த அவலநிலைக்கு தள்ளியுள்ளது எது என்ற விடயம் முழு அளவில் ஆராயப்பட்டு, விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். இந்த ஆய்வில், தனியார்

டியுசன் முறை, பன்முகப்பட்ட, சிக்கலான காரணிகளைக் கொண்ட ஒரு முறையாக நோக்கப்படுகின்றது. இது, தனிநபர்கள் உளவியல் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடிய நிலைக்கு தள்ளி விடுகின்றது. தனியார் டியுசன் முறை என்பது, தனித்த ஒரு விடயமாக இருந்து வர வில்லை; முழுச் சமூகத்தின் மீதும் வியாபித்திருக்கும் முறைமை சார்ந்த பெருவியாதி ஒன்றின் ஒரு பாகமாக மட்டுமே அது இருந்து வருகின்றது. இந்த வியாதியைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால், அதன் சிக்கலான பல தோற்றக் காரணிகளும் பன்முகத் தாக்கங்களும் முறையான ஓர் ஒழுங்கில் மதிப்பிடப்படுதல் வேண்டும். இப்பொழுது நாட்டில் வாழும் பிள்ளைகளின் கல்வி மட்டும் ஓர் அச்சுறுத்தலை எதிர்நோக்கி யிருக்கவில்லை; அவர்களின் மன நலம், ஆரோக்கியம் – சுருங்கக் கூறின் அனைத்துக் கூறுகளும் – இப்பொழுது ஆபத்தினை எதிர் நோக்கியுள்ளன. இந்த உளவியல் அம்சங்கள் சிலவற்றை சற்று விரிவாக நோக்க வேண்டியுள்ளது.

அனைத்து மனிதர்களும் பிள்ளைகளாகவே வாழ்க்கையைத் தொடங்கு கின்றனர்; அதாவது, மனிதர்கள் ஒரு நீண்ட பிள்ளைப் பருவத்தை கொண்டி ருப்பது இயல்பானதாகும். மனிதர்கள், மெதுவாக பரிணாம வளர்ச்சி கண்டுவரும் பிள்ளைப் பிராயமொன்றுக்கூடாக ஏன் முன்னேறிச் செல்கின்றார்கள் என்பதனை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். பிள்ளைகளுடன் நட்புணர் வுடன் பழகும், கடுமையான விதிமுறைகள் அற்ற, ஆதரவான சூழல் ஒன்றில், அர்ப்பணிப்புணர்வுடன் கூடிய நிலையான ஒரு அடிப்படையில் அவர்களை வளர்த்து வருவதற்கூடாக மட்டுமே மனித குழந்தையின் உயிரியல், உளவியல் மற்றும் சமூக அபிவிருத்தி முழு நிறைவினை அடைய முடியும். பிள்ளைப் பருவம் பல வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டதாக இருந்து வருகின்றது; இந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் அதற்கே உரிய குணாம்சங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கட்டத்தின்போதும், சம நிலையான உடல், உள மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படுவதற்கு, அத்தகைய அபிவிருத்திக்கு உசிதமான சூழ்நிலைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

ஹவிகேர்ஸ்ட் (1972) என்பவர் விளக் கியுள்ள "வளர்ச்சி சார்ந்த பணி" என்ற கருதுகோளின் அடிப்படையில் இந்த அம்சத்தை எடுத்து விளக்க முடியும். அவர், "வளர்ச்சி சார்ந்தத பணி" என்பதனை, 'தனி நபர் ஒருவரின் வாழ்க்கையில் குறிப்பிட்ட ஒரு காலப் பிரிவில் எழுச்சியடையும் ஒரு பணி' என வரைவிலக்கணம் வழங்கியுள்ளார். இந்தப் பணி வெற்றிகரமான முறையில் சாதித்துக் கொள்ளப்பட்டால், அது மகிழ்ச்சிக்கும் அதன் பின்னரான பணிகளின் வெற்றிக்கும் வழிகோலுகின்றது என்றும், இதில் தோல்வி ஏற்பட்டால், அது, துயரத்ததுக்கும், சமூகத்தின் அங்கீகார மறுப்புக்கும் வழிகோலும் என்றும், இதன் விளைவாக, பின்னர் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகள் கடினமானவையாக மாற்றமடைந்து விடும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். பிள்ளைப் பிராயத்தின் நடுப்பருவ (அதாவது, இலங்கையின் ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் வயதுத் தொகுதியான 5 – 10 வயதுப் பிரிவின் போது) வளர்ச்சி சார்ந்த பணிகள் பின்வருமாறு : சாதாரண விளையாட்டுக் களுக்கு அவசியமான உடல் திறன்களை பயிலுதல், வளர்ந்து வரும் ஓர் ஜீவி என்ற முறையில் தன்னைக் குறித்த ஒட்டு மொத்தமான மனப்பாங்குகளைக் கட்டியெழுப்புதல், சகாக்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு பழகிக் கொள்ளல், வாசிப்பு, எழுத்து மற்றும் கணக்கு என்பவற்றிலான அடிப்படைத் திறன்களை வளர்த்துக் கொள்ளல், நாளாந்த வாழ்க்கைக்கு அவசியமான கருதுகோள்களை உருவாக்கிக் கொள்ளல், மனச்சாட்சி, ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்து கொள்ளல், தனிப்பட்ட சுதந்திரத்தை சாதித்துக் கொள்ளல், சமூகக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பன தொடர்பான அணுகுமுறைகளை வளர்த்துக் கொள்ளல்.

இலங்கையில் வாழும் சிறுவர் களுக்கு, தமது பிள்ளைப் பிராயத்தின் நடுப்பருவத்தின் இந்த வளர்ச்சி சார்ந்த தேவைகளை சாதித்துக் கொள்வதற்காக வழங்கப்பட்டு வரும் வாய்ப்புக்களை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். புலமைப் பரிசில் பரீட்சை குறித்து பெற்றோர் அதீத ஈடுபாடு செலுத்துதல், சரியான தரத்தை எட்டுவதற்காக பெருமளவுக்கு உயர் மட்டத்திலான சாதனை அவசியப்படுதல், குறிப்பாக, பிரபல்யம் மிக்க பாடசாலையொன்றில் ஓர் இடத்தை பெற்றுக் கொள்வதற்காக ஆக உயர்ந்த மதிப்பெண்களைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் என்பவற்றின் காரணமாக பிள்ளைகள் சிறு பருவத்தி லிருந்தே டியுசன் வகுப்புக்களுக்குச் செல்வதற்கு தூண்டப்பட்டு வருகின் றார்கள். பாடசாலை முடிந்த பின்னர், அவசர அவசரமாக ஏதாவது உணவை உட்கொண்டுவிட்டு அவர்கள் டியுசன் வகுப்புக்களுக்குச் செல்கிறார்கள். டியுசன் வகுப்புக்களில் இந்தப் பிள்ளையின் ஆற்றல்களும் திறன்களும் இதே வயதைச் சேர்ந்த ஏனைய பிள்ளைகளின் ஆற்றல் களுக்கும் திறன்களுக்கும் எதிராக பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றன. இந்த விளையாட்டின் விதி "கடும் போட்டி" என்பதாகவே இருந்து வருகின்றது. டியுசன் ஆசிரியர் எடுத்து வரும் பெறுபேறுகளிலேயே அவருடைய வெற்றி தங்கியுள்ளது. இந்த வயதுக்குப் பொருத்தமான வளர்ச்சித் தேவைகளான தன்னைக்குறித்த ஒட்டுமொத்தமான மனப்பாங்குகளை உருவாக்கிக் கொள்ளுதல், சகாக்களுடன் சேர்ந்து வாழ்வதற்குப் பழகுதல், மனச்சாட்சியையும் ஒழுக்கத்தையும் விழுமியங்களையும் வளர்தத்துக் கொள்ளல் என்பவற்றை இந்த கடுமையான போட்டிச் சூழ்நிலையில் நிறைவு செய்து கொள்வதற்கு அநேகமாக வாய்ப்புக் கிடைப்பதில்லை. சமநிலையான ஆளுமை அபிவிருத்தி மற்றும் மனநலம் என்பன இந்த ஆரம்ப வருடங்களின் போது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் விடயங்களாக இருந்து வருகின்றன. பிள்ளைப் பருவத்தின் போதே, வயது முதிர்ந்த நிலையின் ஆளுமையும் நடத்தைப் பாங்குகளும் உருவாக்கப்படுகின்றன.

மானிட அபிவிருத்தியின் மிக முக்கியமான உரு குணாம்சம், உடலியல், உளவியல் மற்றும் சமூக நெருக்குதல்களை தாக்குப் பிடித்து வாழ்ந்து வருவதாகும். மன அழுத்தத்தை வெற்றி கொள்வது என்பது, ஆரோக்கியமான வளர்ச்சியை மேம்படுத்துகின்றது. இதனை வெற்றி கரமான முறையில் தாக்குப் பிடிக்க முடியாத நிலை, எதிர்மறையான தாக்கத்தை எடுத்து வருகின்றது. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பிள்ளைகள் எதிர்கொள்ளும் மன அழுத்தத்தினையும் அறைகூவல்களையும் அவர்கள் வெற்றி கரமான முறையில் தாக்குப் பிடிப்பதில் இருந்து, தன்னம்பிக்கை மற்றும் சுய கௌரவம் என்பன தொடர்பான அடிப்படை உரிமைகளை பிள்ளைகள்

பெற்றுக் கொள்கின்றனர். மறுபுறத்தில், சிறுவர்களால் தாங்கிக் கொள்ளமுடியாத மித மிஞ்சிய மன அழுத்தம், வளர்ச்சி தொடர்பான மிக மோசமான பின் விளைவுகளை எடுத்து வர முடியும். அத்தகைய சூழ்நிலைகளில், இந்தப் பிரச்சினையை உணர்ந்து, நிலைமைகளைச் சமாளிப்பதற்கு பிள்ளைகளுக்கு அவசியமான மேலதிக மூலவளங்களையும் ஆதரவினையும் அளிப்பது பராமரிப்பாளர்களினதும், சமூக நிறுவனங்களினதும், முகவரகங்களினதும் பொறுப்பாக இருந்து வருகின்றது. மன அழுத்தத்தைத் தாக்குப் பிடிப்பதற்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும் மூலவளங்களும், தனிநபர்கள் உண்மையில் எவ்விதம் தாக்குப்பிடித்து வருகின்றார்கள் என்ற முறையும் சாதகமான வளர்ச்சி மாதிரிகளை நிர்ணயம் செய்து வரும் முக்கியமான காரணிகளாக இருந்து வருகின்றன.

லஸாரஸ் மற்றும் போக்மன் (1984) 'எதிர்த்து நின்று சமாளித்தல்' என்பதற்கு தரும் வரைவிலக்கணம் : "தனிநபர் ஒவரின் மூலவளங்கள் மீதான அளவுக்கு அதிகமான நெருக்குதல்கள் அல்லது அந்த மூலவளங்களையும் மிஞ்சிய நெருக்குதல்கள் என மதிப்பிடப்படும் குறித்துரைக்கப்பட்ட வெளி மற்றும்/ அல்லது உள் கோரிக்கைகளை சமாளிப்பதற்கான உணர்வுபூர்வமான மற்றும் நடத்தைபூர்வமான முயற்சிகளை தொடர்ச்சியாக மாற்றியமைத்து வருதல்". மன அழுத்தத்தைச் சமாளிப்பது என்பது, மன அழுத்தத்தை ஏற்றுக் கொள்ளுதல், சகித்துக் கொள்ளல், தவிர்த்தல் அல்லது குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்ளல் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எதிர்த்து நின்று சமாளித்தல் குறித்த பாரம்பரிய கருத்து, சூழ்நிலையை வெற்றி கொள்வது என்பதாகும். இந்த அடிப்படையிலேயே, மன அழுத்தத்தைச் சமாளிப்பதற்கான அர்த்தபுஷ்டியான வழிமுறை ஒன்றை வழங்குவதன் மூலம் டியுசன் முறை மாணவர்களுக்கு ஆதரவு வழங்கக் கூடிய ஒரு முறையாக இருந்து வருகின்றது.

எதிர்த்து நின்று சமாளிக்கும் மாதிரிகளில் கணிசமான அளவில் வேறுபாடுகள் நிலவி வருகின்றன. இது குறிப்பிட்ட ஒரு நெருக்குதல் சூழ்நிலையில் தனிநபர் ஒருவர் வெளிப்படுத்திக் காட்டும் எதிர்விளைவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு பிள்ளையின் எதிர்த்து நிற்கும் முயற்சிகளுக்கு, அப்பிள்ளையின் உளவியல் அல்லது உடலியல் ஆயத்த நிலை இடையூறாக இருந்து வர முடியும். எனவே, குறிப்பிட்ட சில வகையைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தமட்டில், தனியார் டியுசன் உதவியுடன் எதிர்த்து நின்று சமாளிப்பதன் பின்விளைவுகள் தீங்கு பயப்பனவாக இருந்து வர முடியும்.

நாங்கள் பிள்ளைகளினதும் வளரிளம் பருவத்தினரதும் 'A' வகையை சேர்ந்த நடத்தையை நோக்குவோம்: பிள்ளைகளின் வகையைச் சேர்ந்த 'A' நடத்தை, "பெருமளவுக்குக் கட்டுப்படுத்த முடியாத நிகழ்வுகளை எதிர்த்து நின்று சமாளிக்கும் தனித்துவமான ஒரு பாணியாக" கோட்பாட்டாக்கம் செய்யப்பட்டுள்ளது. 'A' மாதிரியின் 3 பிரதான நடத்தைக் கூறுகள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன: போட்டிபோடும் சாதனை முயற்சி, அவசர உணர்வும் பொறுமையின்மையும் மற்றும் மூர்க்கத்தனமான பகைமையுணர்வு என்பனவே இந்த மூன்று கூறுகளுமாகும். இவற்றை அபிவிருத்தி சார்ந்த ஒரு கண்ணோட்டத்தில் இருந்து நோக்கும் பொழுது, பிள்ளைப் பருவத்திலும் விடலைப் பருவத்திலும் காணப்படும் இந்த மாதிரிகள், வயது முதிர்ந்த பருவத்தில் தோன்றக் கூடிய இருதய நோய்களுக்கான முன்னோடிகளாக இருந்து வருவதாகக் கருதப்படுகின்றது. பிள்ளைகளில் அவதானிக்கப்பட்டுள்ள 'A' வகையைச் சேர்ந்த நடத்தை மாதிரி வயது முதிர்ந்தவர்களில் அவதானிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணையானதாக இருந்து, வருகின்றது. குறிப்பாக, தனி நபர்கள் கட்டுப்பாட்டினை இழந்து விட்டோம், என்ற அச்ச உணர்வினை எதிர்கொள்ளும் சூழ்நிலைகளாக இவையுள்ளன. 'A' வகையைச் சேர்ந்த பிள்ளைகள், கட்டுப்பாட்டை இழந்து விட்ட ஓர் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பொழுது, தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக பெருமளவுக்கு முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். 'A' வகை நடத்தையுடன் சம்பந்தப்பட்ட போட்டியிடும், சகிப்புத் தன்மையற்ற, பகைமை உணர்வுகள் தனிநபர்களை, பிறரின் நலனைக் கவனத்திலெடுப்பதினின்றும் பிரித்து விடுகின்றன.

இங்கு 'A' மாதிரி என வகைப் படுத்தப்பட்டிருக்கும் இந்த வகையைச் சேர்ந்த பிள்ளைகளினதும், வளரிளம் பருவத்தினரதும் ஆரோக்கியம் குறித்தும், நலன் குறித்தும் பெற்றோரும் ஆசிரியர்களும் சகாக்களும் அடிக்கடி தமது அக்கறையை வெளிக்காட்டி வருகின்றனர். உதாரணமாக, உயர்தர வகுப்பில் படித்து வரும் 'A' வகையைச் சேர்ந்த ஒரு மாணவன், கடுமையான போட்டி நிலவி வரும் பரீட்சையின் மேலாதிக்கம் எங்கும் வியாபித்திருக்கும் ஒரு சூழ்நிலையில், டியுசன் முறையின் மிகக் கடுமையான நெருக்குதல்களினால் பாதிக்கப்பட்டு, தான் கட்டுப்பாட்டினை இழந்திருக்கும் ஒரு கையறு நிலையினை உணர்ந்து கொள்கின்றான். பரீட்சையில் ஆக உச்ச மட்ட சாதனையை ஈட்டிக் கொள்ள விரும்பும் உயர்தர வகுப்பு மாணவன் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் மிகச் சிறந்த டியுசன் ஆசிரியர்களைத் தேடி அலைகின்றான். முன்னர் குறிப்பிடப்பட்டது போல, அந்த மாணவன் ஒரு பாடத்தில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களிடமிருந்து டியுசன் பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படக் கூடும். இந்த வகையில், ஒரு வளரும் பிள்ளையின் மீது உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் திணிக்கப்படும் சுமை குறுங்காலத்திலும் நீண்ட காலத்திலும் தீங்கினை எடுத்து வரக்கூடிய இயல்பினைக் கொண்டதாக இருந்து வர முடியும். இளவயதுக் பிரிவினரின் தகவல்களைக் கிரகித்துக் கொள்ளும் முறைமையின் மீது இவ்விதம் மிதமிஞ்சிய அளவிலான தகவல்கள் திணிக்கப்படும் போது, இந்த முழு முறைமையும் நிலை குலைந்து போக முடியும். இந்தப் பின்னணியில், வருங்காலத்தில் இருதய நோய்க்கு ஆளாகும் அந்தப் பிள்ளையின் சாத்தியப்பாடு மேலும் பலப்படுத்தப் படுகின்றதென்றே இங்கு கூற வேண்டியுள்ளது.

ஒரு பிள்ளையின் வளர்ச்சியில், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், தமது சகாக்களுடனான தொடர்புகள் மற்றும் சமூக உறவுகள் போன்ற அம்சங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தனியார் டியுசன் முறை இந்த அத்தியாவசிய வளர்ச்சிக் கூறுகளை எந்த அளவுக்குப் பாதித்து வருகின்றது? ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சிப் பரிசீலனையின் போது பதிலளித்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள், தாம் டியுசன் வகுப்புக்களுச் செல்வதனால் வானொலி, தொலைக்காட்சி, வீடியோ மற்றும் வேறு

வகையான பொழுதுபோக்குகள் போன்றவை வரையறுக்கப்பட்டிருந்தன எனக் கூறினர். மேலும், நண்பர்கள், அயலவர்கள் போன்றவர்களுடன் செலவிடுவதற்கும், குடும்ப உறுப்பினர்களுடன் பிரயாணங்களை மேற்கொள்வதற்கும் தமக்கு நேரம் கிடைக்கவில்லையென அவர்கள் தெரிவித்தனர். எனினும், பிள்ளைப் பருவம் மற்றும் விடலைப் பருவம் என்பவற்றின் உளவியல், சமூக அபிவிருத்தியில் விளையாட்டு, தேகாப்பியாசம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் ஆட்களுக்கிடையிலான உறவு முறைகள் மற்றும் அனுபவங்கள் என்பன மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன.

நாங்கள் நீண்ட காலமாக அறிந்து வந்திருப்பது போல, மனிதன் சாப்பிடுவதற்காக மட்டும் வாழவில்லை; அதேபோல, வளர்ந்துவரும் ஒரு பிள்ளைக்கு விளையாட்டிலிருந்து கிடைக்கும் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொண்ட உளவியல் ஊட்டச் சத்துக்களை எவரும் அவர்களுக்கு மறுக்க முடியாது. விளையாட்டு என்பது, ஒரு பிள்ளை வாழ்க்கையின் மீது காட்டி வரும் எதிர்விளைவாகுமென ஓர் அறிஞர் கூறியிருந்தார். இது என்றைக்கும் பொருந்தக் கூடிய ஒரு கூற்றாகும். விளையாட்டு, ஒரு பிள்ளை வாழ்க்கையின் மீது காட்டி வரும் எதிர் விளைவாக இருந்து வருவதுடன், அது ஆக்கத்திறனும் சுறுசுறுப்பும் கொண்ட பிள்ளையாக இருக்க வேண்டுமானால், விளையாட்டு அப்பிள்ளையின் வாழ்க்கை யாகவும் இருந்து வர வேண்டும். விளையாட்டில் ஈடுபட்டு வரும் ஒரு பிள்ளை, தன்னைப் பொறுத்தவரையில் மிகுந்த முக்கியத்துவம் கொண்ட ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த விளையாட்டு ஊக்குவிக்கப்படுவது மட்டுமன்றி மதிக்கப் படுதலும் வேண்டும்.

பிள்ளைகளின் விளையாட்டு நேரத்தினை டியுசன் எவ்வாறு பறித்துக் கொண்டு வருகின்றது என்பதனை நாங்கள் அனைவரும் நன்கு அறிவோம். பிந்திய மாலை நேரம் வரையில், பிள்ளைகள் தமது புத்தகங்களையும் உபகரணங்களையும் காவிக் கொண்டு டியுசன் வகுப்புகளுக்குச் செல்வதும் திரும்பி வருவதும் இப்பொழுது அன்றாட காட்சிகளாக இருந்து வருகின்றன. நகர்ப் புறங்களிலும் தொலைதூர கிராமப் புறங்களிலும் இக்காட்சிகளை சர்வ சாதாரணமாக நாங்கள் காண முடியும். ஒரு சிறு பையனின் தாய், அவனுடைய புலமைப் பரிசில் பரீட்சைக்காக மிகச்சிறந்த டியுசன் வசதியை ஏற்பாடு செய்திருந்தார். மேலும், வீட்டுப் படிப்பிலும் அப் பிள்ளையை முழு நேரமும் கட்டிப் போட்டிருந்தார். கடைசியில், பரீட்சையை எழுதி முடித்து விட்டு வீட்டுக்கு வந்த அந்தப் பையன், தனது தாயாரைப் பார்த்து இப்படிக் கேட்டான்: "அம்மா! உங்கள் பரீட்சை முடிந்து விட்டது! நான் இப்பொழுது விளை யாடலாமா"? இது மிகவும் இயல்பான ஒரு வெளிப்பாடாகும். பிள்ளைகளைப் பொறுத்தவரையில், விளையாட்டு என்பது அவர்களுடைய வாழ்க்கையின் ஓர் இணை பிரியாத அங்கமாக இருந்து வருகின்றது. இந்தப் பையனுக்கு இயல்பாகவே அந்தத் தேவை இருந்து வந்த நாட்களில் அது மறுக்கப்பட்டு வந்துள்ளது. விளையாட்டின் உளவியல் பெறுமதி ஒரு புறம் இருக்க, அது வளர்ந்து வரும் ஒரு பிள்ளைக்கு பல அடிப்படை வழிகளில் உதவி வருகின்றது. விளையாட்டின் மூலம் ஒரு பிள்ளை, அதற்கு எவருமே படிப்பிக்க முடியாத விடயங்களை கற்றுக் கொள்கின்றது. ஒரு பிள்ளை விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலமே காலம், இடம், விலங்குகள், அமைப்புக்கள் மற்றும் மக்கள் என்பவற்றை உள்ளடக்கிய உண்மையான உலகினை கண்டறிந்து கொள்கின்றது. விளையாட்டுக்கு ஊடாக, அர்த்தங்களும் விழுமியங்களும் கொண்ட எமது குறியீட்டு உலகில் வாழ்வதற்கு அது பழகிக் கொள்கின்றது. மேலும், ஒரு பிள்ளை விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் மனித வாழ்க்கையின் சிக்கலான மாதிரிகளை தொடர்ந்தும் ஒத்திகை பார்த்து வருகின்றது. எமது சமூக வாழ்க்கையில் எதிர்காலத்தில் அது பங்கேற்க வேண்டுமானால், இந்த விளையாட்டுக்களிலிருந்து அப்பிள்ளை முழு அனுபவத்தினையும் பெற்றுக் கொள்ள வேண்டும். விளையாட்டில் ஈடுபடுவதற்கான உரிமையை மறுப்பதென்பது, அப்பிள்ளையின் பிள்ளைப் பிராயத்தின் மிக முக்கியமான ஓர் அங்கத்தினை மறுப்பதாகவே இருந்து வருகின்றது.

விடலைப் பருவத்தினை பொறுத்த வரையில், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மேலும் புதிய ஒரு பரிமாணத்தைப் பெறுகின்றன. அப்பருவத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன், பல்வேறு வழிகளில் வாழ்க்கையுடன் அனுசரித்துச் செல்ல வேண்டியுள்ளது. அவன் உடல்ரீதியாக ஆரோக்கியமானவனாகவும், உளரீதியாக விழிப்புணர்வு கொண்டவனாகவும், சமூக ரீதியாக இணங்கிச் செல்லக் கூடியவனாகவும், உணர்வுபூர்வமாக முதிர்ச்சியடைந்தவனாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. விளையாட்டு என்பது, ஒரு சர்வரோக நிவாரணியாக இருந்து வராவிட்டாலும் கூட, இந்த தேவைகள் ஒவ்வொன்றையும் நிறைவு செய்வதில், அது அளவிடற்கரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. விடலைப் பருவத்தினர் தமது உடல்கள் குறித்து துல்லியமாக அறிந்து கொண்டுள்ளனர். விளையாட்டுக்களை உள்ளடக்கிய ஒரு முழு நிறைவான நிகழ்ச்சித் திட்டம், அவர்களை நல்ல நிலைமையில் வைத்துக் கொள்வதற்கு உதவும். விளையாட்டுத் துறையில் அவர்கள் விருத்தி செய்து கொள்ளும் திறன்கள், ஏனையவர்களால் உடனடியாக அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டப்படுகின்றன. இது அவர்களுடைய தன்னம்பிக்கையை மேலும் உயர்த்துவதற்கு உதவும். துடிப்பும் விழிப்புணர்வும் கொண்ட ஒரு உடல், வாழ்க்கையின் நிர்ப்பந்தங்களை அவர்கள் தாக்குப்பிடிப்பதற்கு உதவும். தேகாப்பியாசப் பழக்கம், அவர்கள் அடக்கி வைத்திருக்கும் உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு உதவுவதுடன், அவர்களை சுறுசுறுப்பானவர்களாகவும் ஆக்கிவிடும். விடலைப்பருவத்தினர், பொதுவாக, தமது உடல் நலத்திலும் பார்க்க தமது சமூக வாழ்க்கையிலேயே பெருமளவுக்கு அக்கறை செலுத்தி வருகின்றனர். ஒரு முழு நிறைவான பொழுதுபோக்குகளை உள்ளடக்கிய வாழ்க்கை முறை, தம்மை பரீட்சித்துக் கொள்வதற்குத் தேவையான வாய்ப்பினை அவர்களுக்கு அளிப்பதுடன், தாம் வகிக்க வேண்டியிருக்கும் சமூகப் பங்குகளை கண்டறிந்து கொள்வதற்கும் உதவும்.

உடல் ரீதியாக நோக்கும் பொழுது, விடலைப் பருவத்துக்கு முற்பட்ட வருடங்களும் விடலைப் பருவ வருடங்களும் (அதாவது 10 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பருவம்) ஆரோக்கியம், சுறுசுறுப்பு, உயிர்த்துடிப்பு மற்றும் ஆற்றல் என்பவற்றுக்கான உகந்த வயதாகும். வாழ்க்கை என்பது ஒரு சாகச பயணமாக இருந்து வருவதுடன், இளைஞர்கள்

( 29 ஆம் பக்கம் பார்க்க)

# போட்டிப் பரீட்சைகளில் பிள்ளைகளின் மன அழுத்தம்

டாக்டர் எச்.ரீ.விக்கிரமசிங்க
(குழந்தை மருத்துவ ஆலோசகர், பொது மருத்துவமனை, ஸ்ரீ ஜயவர்தனபுர)

பெருமளவுக்கு அறிவுத்திறம் கொண்டிருக்கும் பிள்ளைகளை நாட்டின் பிரபல்யம் பெற்றுள்ள பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு தெரிவு செய்து கொள்வதற்காக, இலங்கையில், வருடாந்தம் ஆண்டு 5 பாடசாலைப் பிள்ளைகளுக்கென ஒரு புலமைப்பரிசில் பரீட்சை நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பரீட்சை உயர் கல்விக்கான ஒரு நுழைவாயிலாக இருந்து வருவதனால், பெற்றோரும் அசிரியர்களும் இப் பரீட்சைக்காக மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் பெரும் பிரயாசை எடுத்து வருகின்றனர். பொதுவாக, பத்து வயது பருவத்தில் இருந்து வரும் ஒரு பிள்ளையைப் பொறுத்தவரையில், இது மிகக் கடினமான, மன அழுத்தம் நிறைந்த அனுபவமாக இருந்து வருகின்றது. பிள்ளைகள், தமது ஆரம்பக் கல்வியின் தொடக்கத்திலிருந்தே இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தயாராக வேண்டியவர்களாக இருந்து வருகின்றார்கள். பாடசாலை நேரத்தின் பின்னர் பயிற்சியைப் பெறுவதற்காக, பெற்றோர் அல்லது ஆசிரியர்கள் மிகக் கடுமையான நிகழ்ச்சி நிரலொன்றை பிள்ளகளிடம் முன் வைக்கின்றார்கள். பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த முறையில் போதனை வழங்கப்படாவிட்டால், அவர்களில் பெரும்பான்மையானவர்களால் எதிர்பார்க்கப்படும் மதிப்பெண்களை பெற முடியாது போய்விடும் என நம்பப்படுகின்றது. ஏழு வயது நிறைந்த ஒரு பிள்ளை பாடசாலைக்குப் பின்னர் நடாத்தப்படும் வகுப்புக்களில் சமூகமளிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படும் பொழுது, அது எதிர் நோக்கும் சிரமங்களை எம்மால் கற்பனை செய்து பார்க்க முடியும்.

இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த பெருந்தொகையான பிள்ளைகள், பல்வேறு நோய்க் குறிகள் தொடர்பாக வைத்திய உதவியை பெற்று வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. கவனமாக கேள்விகளை தொடுத்து, விடயங்களை அவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளும் பொழுது, இந்த நோய்க் குறிகளில் பெரும்பாலானவை இந்தப் பரீட்சைக்குத் தயாராகும் பொழுது ஏற்படும் மன அழுத்தத்துடன் சம்பந்தப்பட்டவை என்பதனை கண்டறிந்து கொள்ள முடிகின்றது. வேலை நிர்ப்பந்தம், பெற்றோரின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாத நிலை என்பவற்றுடனேயே இந்த மன அழுத்தம் பெருமளவுக்குச் சம்பந்தப்பட்டுள்ளது. இந்தப் பிள்ளைகளின் உடல் ரீதியான செயற்பாட்டில் தோன்றியிருக்கும் ஒழுங்கீனத்தை கண்டறிந்து கொள்வதற்காக, இந்த மன அழுத்தக் காரணிகளை இனங்கண்டு கொள்வது அவசியமாகும்.

**அட்டவணை 1**

**நோய்க்குறிகள் பகுப்பாய்வு**

| நோய்க்குறி | பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| தலைவலி | 10 |
| பார்வை மங்குதல் | 5 |
| தலை சுற்றல் | 3 |
| நாட்பட்ட வயிற்றுவலி | 3 |
| மூட்டு வலிகள் | 4 |
| தசை வலி | 1 |
| மூர்ச்சையடைதல்/வலிப்பு | 1 |
| மூச்சுத்திணறல் | 5 |
| தூக்கமின்மை | 2 |
| | 4 |

இந்தப் பரீட்சைகள் தொடர்பாக இப்பிள்ளைகள் அனுபவித்து வரும் மன அழுத்தக் காரணிகளை மதிப்பிட்டுக் கொள்வதற்காக ஓர் ஆய்வினை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக, சிலாபத்தில் அமைந்துள்ள ஆதார வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவப் பிரிவிற்கு பிள்ளைகள் எடுத்துவரப்பட்டனர். இப்பிள்ளைகள், மூன்று மாத காலப் பிரிவின்போது பேட்டிக்கு உட்படுத்தப்பட்டனர். இப்பேட்டிகள் முறைசாராத ஓர் அடிப்படையில் நடத்தப்பட்டன. எனினும், முன்னரேயே வடிவமைக்கப்பட்ட எளிமையான வினாக்கொத்தொன்று பயன்படுத்தப்பட்டது. இந்தச் சிறுவர்கள், தமது பெற்றோருக்கு எதிரில் தமது துன்பத்தினை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தயக்கம் காட்டியமையினால் விடயத்தை நேரடியாகப் பெற்றுக் கொள்வது என்பது மிகவும் சிரமமான ஒரு காரியமாக இருந்தது. பெற்றோர் எதிரில் இல்லாத சந்தர்ப்பங்களிலும் கூட, இப்பிள்ளைகள் தமது அச்ச உணர்வினையும் தவிப்பினையும் வெளிப்படுததுவதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்காக, இந்தக் கலந்துரையாடலுக்கும் அவர்களுடைய சுகவீனத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்பதையும், இது அவர்களுடைய படிப்பு மற்றும் பரீட்சை என்பவற்றுடன் மட்டுமே சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும் அவர்களுக்கு நாங்கள் புரிய வைத்தோம். மன அழுத்தக் காரணிகளை இனங்கண்டு கொள்வதே எமது பிரதான நோக்கமாக இருந்து வந்தமையால், நோய்க் குறிகள் குறித்த கலந்துரையாடல்களை நாங்கள் வேண்டுமென்றே தவிர்த்து வந்தோம்.

இந்த ஆய்வு, 18 பிள்ளைகள், பரீட்சையுடன் சம்பந்தப்பட்ட சில நோய்க் குறிகளை கொண்டிருந்ததனைக் கண்டறிந்துள்ளது. அவ்களில் பெரும்பாலானவர்கள் தலைவலி, மூர்ச்சையடைதல் மற்றும் பார்வை மங்கல் போன்ற முறைப்பாடுகளை தெரிவித்தனர். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட நோய்க் குறிகளை கொண்டிருந்தனர். இவை அட்டவணை 1 இல் விளக்கப்பட்டுள்ளன. பரீட்சை தொடர்பான நோய்க் குறிகளைக் கொண்டிருந்த 18 பிள்ளைகளில் 7 பேர் ஆண் பிள்ளைகளாக இருந்ததுடன், 11 பேர் பெண் பிள்ளைகளாக இருந்தனர். இது, ஆண் பிள்ளைகளுடன் ஒப்பிடும்

பொழுது, பெண் பிள்ளைகள் மன அழுத்தத்துக்கு அதிகளவில் உள்ளாக்கப் பட்டு வருகின்றனர் என்பதனை காட்டுகின்றது.

பெற்றோரின் தொழில்கள் பரிசீலிக் கப்பட்ட பொழுது, இப்பிள்ளைகளின்

அட்டவணை 2


| பெற்றோரின் தொழில் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தொழில் | தொழில்சார் | இலிகிதர் | தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | தேர்ச்சியற்ற தொழிலாளர் | சுய தொழில் | வேலை யற்றோர் | மொத்தம் |
| தந்தை | 8 | 3 | 6 | | 1 | | 18 |
| தாய் | 11 | 1 | | | | 6 | 18 |

பெற்றோரில் பெரும்பாலானவர்கள் மத்திய தர வர்க்க மற்றும் கீழ் மத்தியதர வர்க்க தொழில்களில் ஈடுபட்டு வந்ததனை காணக் கூடியதாக இருந்தது (அட்டவணை 2). பெற்றோரின் தொழில் மாதிரியினை பகுப்பாய்வு செய்த பொழுது கிடைத்த ஓர் உண்மை, இந்த 18 பிள்ளைகளில் 15 பிள்ளைகளின் (83%) தந்தை அல்லது தாய்

அட்டவணை 3

| ஆசிரியர்களின் பிள்ளைகள் | | | |
|---|---|---|---|
| பெற்றோர் | தந்தை | தாய் | இரு வரும் |
| பிள்ளைகளின் எண்ணிக்கை | 6 | 9 | 5 |

பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கை




அல்லது பெற்றோர் இருவரும் ஆசிரியர்களாக இருந்து வந்தார்கள் என்பதாகும். இந்தப் பிரச்சினையினால் மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதனை யும், இந்த சமூக வர்க்கத்துக்குள் குறிப்பாக, ஆசிரியர்களின் பிள்ளைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஒப்பீட்டு ரீதியில், மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் இப்பிரச்சினையினால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டு வந்துள்ளனர் என்ற அவதானிப்பினை, இந்தப் பிள்ளைகளின் குடும்பங்களின் வருமானப் பகிர்வு மாதிரி மேலும் ஊர்ஜிதப்படுத்துகின்றது. உதாரணமாக, 18 பிள்ளைகளில் 16 பிள்ளைகள் (81%) ரூபா 2,000 தொடக்கம் 5,000 வரையிலான மாத வருமானத்தைப்

| பரீட்சையில் தோல்வி காரணமாக தற்கொலைகள் | | |
|---|---|---|
| வயது பிரிவு | பிள்ளைகளின் எண்ணிக்கை | |
| | 1990 | 1991 |
| 8 வருடங்கள் 16 வயதுக்கு கீழ் | 2 | 6 |
| 16 வருடங்கள் 20 வயதுக்கு கீழ் | 18 | 18 |
| 20-25 வயது | 12 | 15 |
| மொத்தம் | 32 | 39 |

அட்டவணை 4

| | மாதாந்த குடும்ப வருமானம் | | | |
|---|---|---|---|---|
| மாதாந்த குடும்ப வருமானம் | 5000க்கு மேல் | ரூ2000 முதல் 5000 வரை | 2000க்கு குறைய | மொத்தம் |
| பிள்ளைகளின் எண்ணிக்கை | 1 | 16 | 1 | 18 |

பெற்றுவரும் குடும்பங்களைச் சேர்ந்த வர்களாக இருந்து வருகின்றார்கள். இப் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் தமது பாடசாலை வேலைகளில் சிறந்த செயலாற்றுங்களை காட்டியிருந்தனர். ஒருவரைத்தவிர ஏனைய அனைவரும் வகுப்பில் முதலாவது 10 பேர்களுக்குள் வருபவர்களாக இருந்தனர். இவர்களில் 5 பேர் வகுப்பில் முதல் ஸ்தானத்தைப் பெற்றவர்களாக இருந்தனர்.

இந்தப் பிள்ளைகளின் பெற் றோர்களில் அதிகமானவர்கள் புலமைப் பரிசில் குறித்த உயர் அளவிலான அபிலாசைகளைக் கொண்டிருந்தனர். பத்து பிள்ளைகளின் பெற்றோர், பரீட்சையில் தமது பிள்ளைகள் ஆக உயர்ந்த புள்ளிகளைப் பெற வேண்டும் என விரும்பினர். இவர்களுள் 4 பெற்றோர், தமது பிள்ளைகள் மாவட்டத் தில் சித்தியடையும் முதலாவது 10 பேருக்குள் வர வேண்டுமென எதிர்பார்ததனர். பெற்றோர் மட்டுமன்றி, இந்தப் பிள்ளைகளின் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களும் (18 பேரில் 15 பேர்) பரீட்சையில் பிள்ளைகள் மிகச் சிறந்த முறையில் செயலாற்ற வேண்டும் என எதிர்பார்த்திருந்தனர். தமது பிள்ளைகளின் வெற்றி குறித்து பெற்றோர் உயர் அபிலாஷைகளை கொண்டிருந்த போதிலும், பெரும்பாலான பெற்றோர் (12) மிக கடினமாக முறையில் படித்துவர வேண்டும் என தமது பிள்ளைகளை நிர்ப்பந்திக்கவில்லை.

பெரும்பாலான பெற்றோர், தமது பிள்ளைகளை படிக்க வேண்டும் என நிர்ப்பந்திக்காவிட்டாலும் கூட, பரீட்சை தொடர்பாக படிப்பதில் தமக்கு உயர் அளவிலான நெருக்குதல்கள் இருந்து வந்தன என்பதனை எல்லாப் பிள்ளை களும் ஏற்றுக் கொண்டனர். தமது பெற் றோரினதும் ஆசிரியர்களினதும் அபிலாஷை களை இப்பிள்ளைகள் உணர்ந்திருந்த மையாலும், அவர்கள் எதிர்நோக்கிய கடும் போட்டிச் சூழ்நிலை காரணமாகவும் அவர்களிடையே ஒரு நிர்ப்பந்த உணர்வு

உருவாகியிருந்தது. இந்த 18 பிள்ளைகளும் பரீட்சைக்குத் தயாராவதற்காக, பாடசாலை நேரத்தின் பின்னர் டியுசன் வகுப்புக் களுக்குச் சென்றனர். பரீட்சைக்குத் தயாராகி வந்த காலப்பிரிவின் போது, அனைத்துப் பிள்ளைகளினதும் நாளாந்த வேலைப்பட்டியல் சுமை கூடியதாகவும், தாங்கிக் கொள்ள முடியாததாகவும் இருந்து வந்தது. பொதுவாக, இப் பிள்ளைகள் அதிகாலை 4.30 மணிக்கு படுக்கையிலிருந்து எழுந்து விடுகின்றனர். தமது வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு, காலையில் சுமார் 6.30 மணியளவில் அவர்கள் பாடசாலைக்கு செல்கிறார்கள். பாடசாலை முடிந்து டியுசன் வகுப்புகளுக்குச் செல்லும் அந்தப் பிள்ளைகள், மாலை 6 மணியளவிலேயே வீட்டுக்குத் திரும்பி வருகின்றார்கள். (சில பிள்ளைகள் பாடசாலை முடிந்த பின்னர் வீட்டுக்குச் செல்லாமல் நேரடியாக டியுசன் வகுப்புகளுக்குச் சென்றுவிடுகின்றனர்). அவர்கள் இரவு சுமார் 10.30 மணி வரையில் வீட்டில் படித்து வருகின்றனர். அதன் பின்னர், படுக்கைக்குச் செல்கின் றார்கள். இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு 8 தொடக்கம் 10 மணி நேரம் வரையிலான தூக்கம் அவசியமாக இருந்தபோதும், அவர்களால் சுமார் 6 மணி நேரம் மட்டுமே தூங்க முடிகின்றது.

இந்தக் காலப் பிரிவின் போது, வெளி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ அல்லது பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதற்கோ இந்தப் பிள்ளைகளுக்கு ஓய்வு நேரம் கொஞ்சமும் கிடைப்பதில்லை. முற்று முழுதாக பரீட்சைக்கென நேரத்தை செலவிட்டு வருவதனால் அவர்களுடைய பிள்ளைப் பருவம் அவர்களுக்கு மறுக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இந்தப் 18 பிள்ளைகளில் அனைவரும், தொலைக் காட்சியைப் பார்ப்பதற்கான தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தனர். ஆனால், இவர்களில் 15 பிள்ளைகள், அவர்களுடைய பெற்றோர் அனுமதி வழங்காதிருந்தமையினால் இக்காலப் பிரிவின் போது தொலைக்காட்சி நிகழ்ச்சி களை அறவே பார்க்க முடியாதவர்களாக இருந்தனர். தொலைக்காட்சி நிகழ்ச்சி களைப் பார்த்த 3 பிள்ளைகளும் கூட, ஜனரஞ்சகமான ஒரு தொலைக்காட்சி நாடகத்தை மட்டுமே பார்த்து வந்தனர். இந்தப் 18 பிள்ளைகளில் 15 பிள்ளைகள், முன்னர் ஏதோ ஒரு வகையிலான விளை யாட்டுக்களில் ஈடுபட்டு வந்தனர். ஆனால், இவர்களில் 13 பேர் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த காலப்பிரிவின் போது விளையாட்டுக்களில் ஈடுபடுவதனை முற்றாகக் கைவிட்டிருந்தனர்.

இந்தப் பிள்ளைகள் முழு நேரத்தையும் பரீட்சைக்கென ஒதுக்கி, தமது உச்ச மட்ட சக்தியை பயன்படுத்திக் கொண்டபோதிலும், இவர்களில் பெரும் பாலானவர்கள் உள அளவில் இன்னமும் ஆயத்தமற்றவர்களாகவே இருந்து வந்தனர். தாம் இதுவரை செய்திருப்பது தமது எதிர்பார்ப்புக்களை சாதித்துக் கொள்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை என அவர்கள் கருதியமையே இதற்கான காரணமாகும். தாம் பரீட்சை குறித்து கவலை கொண்டிருப்பதாக இந்தப் பிள்ளைகள் அனைவரும் தெரிவித்தனர். இப் பிள்ளைகள் அனைவரும் நல்ல முறையில் பரீட்சையினை எழுதி யிருந்தனர். பெற்றோரின் நெருக்குதல் நீங்கியபொழுது, இவர்களில் பெரும்பாலானவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இந்த ஆய்வின் கண்டுபிடிப்புக் களை பகுப்பாய்வு செய்யும் பொழுது, இரண்டு மிகத் தெளிவான அம்சங்களை காணக்கூடியதாக உள்ளது:

1. இந்தப் பிள்ளைகளில் பெரும்பா லானவர்கள் புத்திக்கூர்மை கொண்டவர் களாகவும் அறிவுத்திறம் பெற்றவர் களாகவும் இருந்து வருகின்றனர்.

2. இது அடிப்படையில்,மத்திய தர வர்க்க மற்றும் கீழ் மத்திய தர வர்க்க குணாம்சமொன்றாக இருந்து வருகின்றது.

நாம் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பொருத்தமான, சக்தி வாய்ந்த எதிர்கால தலைமுறை ஒன்றினை உருவாக்க வேண்டுமானால், இலங்கையின் ஆரம்பக் கல்வியில் காணப்படும் தற்போதைய பரீட்சைகள் முறையை ஒழித்து விடுவதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும் என்பதே எனது உறுதியான கருத்தாகும்.

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திறனை விருத்தி செய்யக்கூடிய போட்டி அமைப்பொன்றின் உருவாக்கம் முதலாவது விடயமாகும். இதன் ஒட்டு மொத்த தாக்கம் பொதுப் பாடசாலை கல்வியின் தரத்தினை நலிவடையச் செய்து விடும் என்பது இரண்டாவது விடயமாகும். இந்த இரு விடயங்களும், வர்த்தக அடிப்படையிலான டியுசன் முறை மற்றும் மானியம் வழங்கப்பட்டு வரும் பொதுக் கல்விமுறை ஆகிய இருமுறைகளும் சக ஜீவனம் நடத்தி வருவதன் தாக்கங்கள் குறித்த பொது விவாதமொன்றினைத் தூண்டி விட்டுள்ளன. தனியார் டியுசன் முறை மிகுந்த செயல் முனைப்புடன் சந்தையில் செயற்பட்டு வருகின்றது என்றும், அது குறிப்பிட்ட ஒரு சமூக வர்க்கத்தைச் சார்ந்த ஒரு கல்வி முறையாக இருந்து வருவதனால், அதற்கு மலிவான பதிலீடுகள் இல்லாதிருக்கும் ஒரு நிலையில், தேசியக் கல்வி அமைப்பின் மீது பாரிய சமூகத் தாக்கங்களை எடுத்து வர முடியும் என்றும் ஒரு சாரார் வாதிட்டு வருகின்றனர். தேசியக்கல்வி முறை, நடைமுறையில், வசதி குறைந்த பெற்றோரினதும் பிள்ளைகளினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைக்கக் கூடியளவுக்கு செயல்திறன் கொண்ட ஒரு முறையாக இருந்து வராவிட்டால், முறையான ஒரு மாற்று வழியினை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் பெற்றுக் கொடுப்பதற்கான வழி முறைகளை கண்டறிவதே இன்று நம்முன் உள்ள மிக முக்கியமான சவாலாகும்.

அடுத்து வரும் பக்கங்களில் இந்த சிக்கலான பிரச்சினை குறித்த பல்வேறு விரிவான கண்ணோட் டங்களும் அலசல்களும் முன்வைக் கப்படுகின்றன.

( 26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து விதமான நடவடிக்கைகளையும், அக்கறைகளையும் துருவித் துருவி ஆராய விரும்புகின்றார்கள். இலங்கையில் தற்பொழுது நிலவி வரும் இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த இளம் பிள்ளைகளின் வாழ்க்கை முறை, இவற்றுக்கு நேர் மாறானதாக இருந்து வருவது போல் தோன்றுகின்றது. அது சாதாரண, இயல்பான வளர்ச்சி உந்துதல்களுக்கு முரணானதாக இருந்து வருகின்றது. விளையாட்டுக்களுக்கும் ஏனைய பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்து வரும் எந்த ஒரு பாடசாலை அதிபரோ ஆசிரியரோ அல்லது மாணவரோ பாடசாலை நேரத்தின் பின்னர் இந்நோக்கங்களுக்காக பிள்ளை களை பிடித்து வைத்துக் கொள்வது அறவே சாத்தியமற்றது என்ற உண்மையை அறுதியிட்டுக் கூறுவார்கள். ஏனெனில், பாடசாலை நேரத்தின் பின்னர், மாணவர்களைப் பொறுத்தவரையில், டியுசன் முன்னுரிமையைப் பெறுகின்றது.

# இன்றைய கல்வி முறையில் டியுசன் வகுப்புக்களுக்கான தேவை

பந்துல குணவர்தன

*திரு .பந்துல குணவர்தன தனது டியுசன் வகுப்புக்களுக்கூடாக பெருந்தொகையான மாணவர்களுக்கு உதவி வந்துள்ளார். இக்கட்டுரையில், க.பொ.த.(உயர்தர) வகுப்பு மாணவர்களின் கல்வி தொடர்பான சில விடயங்களை அவர் இங்கு கலந்துரையாடுகின்றார்.*

டியுசன் வகுப்புக்களிலான பிரமிக்கத்தக்க வளர்ச்சி, நாட்டில் 1970களிலும் 1980 களிலுமேயே ஏற்பட்டு வந்தது. இலங்கையில் 1947 இல் இலவசக் கல்வி ஆரம்பமாகியதனையடுத்து, கல்வித் துறையில் பரந்த அடிப்படையிலான மாற்றங்கள் இடம்பெற்று வந்தன. 1950களில் தேசிய மொழிகள் போதனா மொழிகளாக மாற்றமடைந்ததுடன் இணைந்த விதத்தில், கிராமப் பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளம் ஆண்களும் பெண்களும் கல்வியில் நாட்டம் கொண்டனர். கல்விகான தேவை 1960 களின் தசாப்தம் தொடக்கம் 1990 கள் வரையிலும் இடையறாது பேரளவில் அதிகரித்து வந்துள்ளது. தற்பொழுது நமது நாட்டில் நிலவி வரும் டியுசன் வகுப்பு முறை, தாய்மொழி மூலமான கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப வருடங்களில் காணப்படவில்லை. அதற்கு ஒரு காரணமும் இருந்தது: அந்த தொடக்க காலப் பிரிவின் போது, கல்வியில் வழங்கல் இருந்த அளவுக்குக் கேள்வி நிலவி வரவில்லை. அதன் விளைவாக, ஆகக் குறைந்தபட்ச புள்ளி களைப் பெற்றுள்ள மாணவர்களும் கூட பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடிந்தது.

எனினும், 1950 களின் பின்னர் கல்வி வாய்ப்புக்களுக்கான கேள்வி பெருமளவில் அதிகரித்து வந்த போதிலும், கல்வியின் தரத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. மாணவர்களின் எண்ணிக்கையில் கணிசமான அளவில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால், அதற்கு இணையான விதத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையிலும் நூல்நிலைய வசதிகளிலும் விருத்தி நிலைமை ஏற்பட்டிருக்கவில்லை. பாடபோதனை தேசிய மொழிகளுக்கு மாற்றப்பட்ட தொடக்க காலத்தில், வினாப் பத்திரங்கள் மிக எளிதானவையாக இருந்து வந்தன. பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டி அதிகரித்துச் சென்ற பொழுது, வினாப்பத்திரங்களும் மிகக் கடுமையானவையாக மாற்றமடைந்தன. க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கான பாடத்திட்டம் விரிவான ஒரு பாடத்திட்டமாக உருவாக்கப் பட்டதுடன், இரண்டு வருட காலத்துக்குள் அதனை பூர்த்தி செய்வது என்பதும் மாணவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு சிரமமான காரியமாக மாற்றமடைந்தது. பாடத்திட்டம் விரிவடைந்து வந்தமையினால், பாடசாலையில் வழங்கப்படும் கல்வி போதியதாக இருக்கவில்லை. பாடசாலைகள் தற்போதைய பரீட்சை மாதிரிக்குப் பொருந்தக்கூடிய முழு நிறைவான கல்வி ஒன்றினை அளிக்கத் தவறியமையின் விளைவாகவே பிரதானமாக தனியார் டியுசன் முறை எழுச்சி அடைந்தது எனக் கூற வேண்டும். இதற்குப் பல காரணிகள் பங்களிப்புச் செய்திருந்தன.

1. குறிப்பாக, கஷ்டப் பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவி வருகின்றது. இந்தப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் படிப்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர்கள் இருந்து வந்தபோதிலும், பல்வேறு பாடங்களிலும் சிறப்புப் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் இருந்து வரவில்லை. தமது பாடங்களில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்துள்ள பட்டதாரிகள் பள்ளி ஆசிரியர்களாக வருவதற்கு விரும்புவதில்லை. ஆசிரியர் தொழிலில் சாதாரண பட்டதாரிகள் மட்டுமே ஈடுபட்டு வருகின்றனர். சாதாரண பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்களைக்கூட, கொண்டிராத பாடசாலைகள் உள்ளன.

2, பாடம் தொடர்பான ஆசிரியரின் அறிவை விருத்தி செய்வதற்கான திட்டங்கள் இருந்து வரவில்லை. சில சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட ஆசிரியர்களின் அறிவு காலாவதியாகிவிட்ட அறிவாக உள்ளது. உதாரணமாக, 1960களில் பட்டம் பெற்றுள்ள ஒருவரைப் பொறுத்த மட்டில், தற்போதைய பாடத்திட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகள் குறித்த அறிவினை அவர் புதுப்பித்துக் கொள்ள வேண்டியுள்ளது. உயர்தர வகுப்புக்களுக்கு பொறுப்பான ஆசிரியர்கள் விடைத்தாள்களை திருத்துவதற்கு வரும்பொழுது அவர்களுக்குக் கிடைக்கும் புள்ளிகள் வழங்கும் முறை தவிர, குறிப்பிட்ட பாடங்கள் தொடர்பான அறிவு மட்டத்தை உயர்த்திக் கொள்வதற்காக அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுவதில்லை: அதனால், புதிய அறிவினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வரையறுக்கப்பட்ட அளவிலேயே அவர்களுக்குக் கிடைத்து வருகின்றது.

உதாரணமாக, 1987இன் பின்னர் பொருளாதாரத்தில் இடம்பெற்று வந்துள்ள மாற்றங்கள் காரணமாக, வர்த்தகத்திலும் வாணிபத்திலும் தொடர்ச்சியாக மாற்றங்கள் இடம் பெற்றுக்கொண்டு வருகின்றன. அவற்றுடன் சம்பந்தப்பட்ட சட்டவாக்கங்கள் அநேகமாக மாதாமாதம் திருத்தப்பட்டு வருகின்றன. பரீட்சை வினாத்தாள்கள், இந்த மாற்றங்கள் குறித்து மாணவர்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றன. எனினும், தொலைதூர இடங்களில் பணி புரிந்துவரும் ஆசிரியர்கள் இதற்காக மாணவர்களைத் தயார்ப்படுத்துவதற்கென அறிவினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே கிடைக்கின்றது. தொலைதூர கிராமப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் ஆசிரியர்களும் மாணவர்களும் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகளைக் கூட பெற்றுக் கொள்வதில்லை.

3. கடந்த காலத்தில் மாணவர்கள் அறிவைத் தேடிச் சென்றனர். ஆனால், இன்றைய மாணவர்களோ அறிவைத் தேடிச் செல்வதற்கு அவசியமான பரந்த சிந்தனையை கொண்டவர்களாக இருந்து வரவில்லை. நடப்பு விவகாரங்கள் தொடர்பான தகவல்களை தேடிப் பெற்றுக் கொள்வதில் அவர்கள் அக்கறை காட்டுவதுமில்லை; மேலோட்டமான விடயங்களில் மட்டுமே அவர்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றார்கள். பாடசாலைகள் அதிகளவில் நூலக வசதிகளை கொண்டிருக்க வேண்டியிருந்த போதிலும், அதற்கென ஒதுக்கப்படும் நிதிகள் மிகச் சிறு அளவிலேயே இருந்து வருகின்றன. இதன் விளைவாக, பாடசாலை நூல் நிலையங்கள் தற்பொழுது நலிவுற்றுப் போயுள்ளன. நூல் நிலையங்களை உபயோகப்படுத்தும் பழக்கம் மாணவர்களிடையே குறைந்து வந்துள்ளது. அறிவை அவர்களுக்கு பொதிகளில் அடைத்து, பரிமாற வேண்டிய ஒரு நிலை தோன்றியுள்ளது. தற்பொழுது நிலவி வரும் கல்வி முறை மாணவர்களை சிந்திப்பதற்குப் பயிற்றுவிப்பதில்லை. மாறாக, பரீட்சைகளில் அவர்கள் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும் விடயங்களை நினைவில் வைத்துக் கொள்ளும் ஒரு முறையையே அது ஊக்குவித்து வருகின்றது. பெருந்தொகையான மாணவர்கள் பரீட்சைகளில் தோல்வியடைவதற்கு இதுவே காரணமாகும்.

4. உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலையில் செலவிடும் இரண்டு வருடங்களில், வெளி வேலைகளிலும் தமது நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது. பாடசாலை விடுமுறைகள் தவிர, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்வேறுபட்ட விழாக்கள், கொண்டாட்டங்கள் போன்றவற்றுக்கும் அவர்கள் நேரத்தை ஒதுக்க வேண்டியுள்ளது. இவை அனைத்தும் மாணவர்களுக்கு படிப்பதற்காகக் கிடைக்கும் நேரத்தை குறைத்து விடுகின்றன.

5. தனியொரு ஆசிரியர், உயர்தர வகுப்புப் பாடமொன்றினை தொடக்கத்திலிருந்து முடிவு வரையில் (குறுக்கீடுகள் எவையும் இன்றி) முறையாகப் படிப்பித்து வருவதற்கான வாய்ப்பு இலங்கையில் அநேகமாகக் கிடைப்பதில்லை. ஆசிரியர்கள் தொடர்பான இடமாற்ற முறையே இதற்கான காரணமாகும். இந்தக் காரணிகளில் இருந்து தோன்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக மாணவர்கள் டியுசன் வகுப்புக்களை நோக்கிச் செல்கின்றார்கள்.

தற்பொழுது நாடெங்கிலும் பரவலாக வியாபித்திருக்கும் டியுசன் வகுப்பு முறைக்கு சில சமூகப் பிரிவினர் ஆட்சேபணை தெரிவித்து வருகின்றனர். இந்த சமூகப் பிரிவுகளை பிரதிநித்துவம் செய்யும் வர்க்கங்கள் எவை என்பதை தெரிந்து கொள்வது மிக முக்கியமாகும். இப்பொழுது சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக நாட்டில் ஒரு பெரும் நெருக்கடி நிலவி வருகின்றது. முன்னர் இந்தப் பாடசாலைகள் இருந்து வரவில்லை. அவை இப்பொழுது நாட்டின் கல்வி அமைப்புக்கு வெளியே இயங்கி வருகின்றன. இந்நாட்டில் உள்ள பாடசாலைகளை இரண்டு குழுக்களாக என்னால் வகைப்படுத்த முடியும்:

1. சர்வதேசப் பாடசாலைகள்; 2. தேசியப் பாடசாலைகள். சர்வதேசப் பாடசாலைகள், அரசாங்கம் எத்தகைய கட்டுப்பாட்டதிகாரத்தையும் கொண்டிராத ஒரு நிறுவன அமைப்பாக செயற்பட்டு வருகின்றன. எனினும், அரசாங்கத்தின் கீழும் ஒரு சர்வதேச பாடசாலை உள்ளது. இது கொழும்பு நகரில் அமைந்துள்ள கொழும்பு சர்வதேச பாடசாலையாகும். இப்பாடசாலை திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ், அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்துக்குச் சொந்தமானதாக இருந்து வருவதுடன், அதன் அதிபர் ஒரு வெளிநாட்டவர் ஆவர். இங்கு படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.7,000 தொடக்கம் 20,000 வரையிலான வீச்சில் சம்பளங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆசிரியர்களுக்கு வருமான வரி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைக்கான நுழைவுக் கட்டணம் சுமார் 70,000 ரூபாவிலிருந்து 90,000 ரூபா வரையில் இருந்து வருகின்றது. ஒரு தவணைக்கான டியுசன் கட்டணம் ரூபா 25,000 ஆகும். அமைச்சர்கள் முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சுச் செயலாளர்கள் போன்றவர்களின் பிள்ளைகள் இங்கு கல்வி கற்று வருகின்றனர்.

அதாவது, மேட்டுக்குடி வகுப்பொன்றினைச் சேர்ந்த பிள்ளைகள் இப்பாடசாலையில் படித்து வருகின்றனர். இலங்கையின் கல்விக் கொள்கையின் பிரகாரம், பிள்ளைகளுக்கு தமது தாய்மொழியில் –அதாவது, சிங்களத்தில் அல்லது தமிழில் – கல்வியூட்டப்படுதல் வேண்டும். ஆனால், சர்வதேச பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு பாலர் வகுப்பு தொடக்கம் ஆங்கில மொழி மூலமாகவே கல்வி போதனை வழங்கப்பட்டு வருகின்றது. இப்பாடசாலைகள் இலங்கையின் பாடத்திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை; மாறாக, லண்டன் O' LEVEL, லண்டன் A' LEVEL பாடத்திட்டங்களையே கொண்டுள்ளன. இந்த இரு பரீட்சைகளினதும் கல்வித்தரம், இலங்கையில் சிங்கள மொழி மூலமும் தமிழ் மொழி மூலமும் நடாத்தப்படட்டு வரும் க.பொ.த. (சா.த.), க.பொ.த. (உ.த.) பரீட்சைகளின் கல்வித்தரத்திலும் பார்க்க குறைவானது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒரு விடயமாகும். எனவே, இந்த வகையில், சர்வதேச பாடசாலைகள் பாடங்கள் தொடர்பான குறைந்த மட்டத்திலான ஒரு அறிவினையே ஆங்கில மொழி மூலம் போதித்து வருகின்றன.

எனது தனிப்பட்ட மதிப்பீடுகளின் படி, இலங்கையில் சுமார் 67 சர்வதேச பாடசாலைகள் இருந்து வருகின்றன. அவற்றில் சுமார் 20,000 பிள்ளைகள் படித்து வருகின்றார்கள். இவர்கள் சமூகத்தின் மேல் நடுத்தப்பட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகளாகவே இருந்து வருகின்றார்கள். இது முழுவதும் ஒரு

தனியார் துறை கல்வி முறையாகும். தனியார் டியுசன் வகுப்புக்கள் நாடெங்கிலும் வியாபித்து வருவது குறித்து உரத்த குரலில் ஆட்சேபணை தெரிவித்து வரும் நபர்கள் இந்த சர்வதேச பாடசாலை முறையை ஏன் எதிர்க்கவில்லை என்பது வியப்பூட்டும் ஒரு விஷயமாகும். அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் நடாத்தப்பட்டு, அரசாங்கத்தினால் வேதனங்கள் செலுத்தப்பட்டுவரும் தனியார் பாடசாலைகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவையாகும். இலங்கையில் அத்தகைய பாடசாலைகள் பெரும் எண்ணிக்கையில் இருந்து வருகின்றன. (சென்ட் தோமஸ் கல்லூரி, சென்ட் பீட்டர்ஸ் கல்லூரி, சென்ட் பிரிஜட்ஸ் கன்னியர் மடம் முதலியவற்றை உதாரணங்களாக காட்ட முடியும்).

இந்தப் பாடசாலைகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தினால் வேதனம் வழங்கப்பட்டு வந்தபோதிலும், உயர்தர வகுப்புக்களில் படிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரும் ரூபா 600 க்கும் ரூபா 1,000 க்கும் இடையிலான ஒரு தொகையை செலுத்த வேண்டியுள்ளது. இந்தப் பாடசாலைகளுக்கு எவரிடமிருந்தும் ஆட்சேபணைகள் கிளம்பவில்லை. இதற்கான காரணம் இவை குறிப்பிட்ட ஒரு சமூக வர்க்கத்தினை பிரதிநிதித்துவம் செய்து வருவதாகும். சிங்கள மொழி மூலம் கல்வி போதித்து வரும் பாடசாலை களாக இவை இருந்து வந்த போதிலும், கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக இருந்து வருகின்றன. அண்மைக் காலத்தில், சர்வதேச பாடசாலை வகையையோ அல்லது அரசாங்க உதவி பெறும் தனியார் பாடசாலை வகையையோ சேராத பிறிதொரு வகையான பாடசாலை தோன்றியுள்ளது. பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு விளம்பரத்தின் படி, தேசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நடாத்தப்பட்டு வரும் தொழிநுட்பக் கல்வி நிறுவனம் (ITS) இதற்கான உதாரணமாகும். இந்த நிறுவனம் அறவிடும் கட்டணங்கள்: தரம் 12 – ரூ.190,300; தரம் 11–ரூ.161,300; தரம் 10 – ரூ.137,700; தரம் 9– ரூ.115,800; தரம் 8 – ரூ.98,200; தரம் 7– ரூ. 83,200; தரம் 6– ரூ. 70,500; தரம் 5– ரூ.60,000. எனவே, இந்த அடிப்படையில் நோக்கும் பொழுது, ஆயிரக்கணக்கான ரூபாய்களை கட்டணங்களாக அறவிட்டு வரும் பாடசாலைகள் இலங்கையில் இயங்கி வருவதனைக் காண முடிகிறது. எனினும், இத்தகைய பாடசாலைகளுக்கும் கூட எந்த விதமான ஆட்சேபணைகளும் தெரிவிக்கப் படவில்லை.

சிலர், தமது பிள்ளைகளை எந்த வகையான டியுசன் வகுப்புகளுக்கும் அனுப்புவதில்லை. ஆனால், அந்தப் பிள்ளைகள் 'வீட்டு டியுசன்' என்றழைக்கப்படும் ஒரு முறைக்கூடாக கல்வி உதவியைப் பெற்று வருகின்றார்கள். இந்த வகையில், பெற்றோர், பாடசாலை நேரத்தின் பின்னர் வாகனம் அனுப்பி, பாடசாலை ஆசிரியர் ஒருவரை அல்லது வேறு ஆசிரியர் ஒருவரை தமது வீட்டுக்கு வரவழைத்து, பிள்ளைகளுக்கு டியுசன் வழங்கச் செய்கின்றனர். இந்த வழக்கம் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. வீட்டுக்கு ஒரு ஆசிரியரை அழைத்து வந்து பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கும் பொழுது வெளியாட்கள் அதனைப் பார்ப்பதில்லை. இத்தகைய டியுசன்களுக்கு மணித்தியால அடிப்படையில் (சராசரியாக 1 மணி நேரத்துக்கு ரூ.200 என்ற அளவில்) கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இது இதனுடன் சம்பந்தப்பட்ட ஆட்களின் ஒரு தனிப்பட்ட விவகாரம் எனக் கருதப்பட்டு வருவதனால், இதனை யாரும் ஆட்சேபிப்பதில்லை. குழு வகுப்புக்கள் என்ற ஒரு முறையும் இருந்து வருகின்றது. இத்தகைய வகுப்புக்களுக்கு ஒரே மாதிரியான சமூக அந்தஸ்தினைக் கொண்ட மேல் தட்டு அல்லது நடுத்தட்டுப் பெற்றோரின் சுமார் 30 அல்லது 40 பிள்ளைகள் வரையில் சமூகமளிக்கின்றனர். இந்த வகுப்புக்களில் உயர்தர வகுப்பு மாணவனொருவனிடமிருந்து சராசரியாக ரூ.500 அறவிடப்படுகின்றது. குழு வகுப்புக்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவிலான மாணவர்கள் மட்டுமே சமூகமளித்து வருகின்றனர். உயர்ந்த கட்டணங்களை செலுத்தக் கூடிய நிலையில் இருந்து வரும் மாணவர்களின் சிறு தொகையினருக்கென நடத்தப்பட்டு வரும் இந்த வகையைச் சேர்ந்த டியுசன் வகுப்புக்களுக்கும் கூட ஆட்சேபணைகள் தெரிவிக்கப்படவில்லை.

ஆகவே, எந்த வகையைச் சேர்ந்த டியுசன் வகுப்புக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு வருகின்றது ? பெருந்தொகையான மாணவர்களை உள்ளடக்கிய பரந்த அடிப்படையிலான பொதுவான டியுசன் வகுப்புக்களுக்கு எதிராக மட்டுமே ஆட்சேபணைகள் கிளப்பப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் என்ன ? குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பெருந்தொகையான மாணவர்கள் இத்தகைய டியுசன் வகுப்புக்களுக்குச் சமூகமளித்து வருவதே இதற்கான காரணமாகும். இந்த ஆசிரியர்களுக்கான சம்பளங்களை அரசாங்கம் செலுத்துவதில்லை; மேலும், இந்த வகுப்புக்களுக்கான கட்டணங்களையோ அல்லது வேறு ஏதேனும் பொருளாதார உதவியையோ அது அளித்து வருவதுமில்லை. இவற்றில் இடப்பட்டுள்ள மூலதனம் ஆசிரியர்களின் தனிப்பட்ட மூலதனமாகும். பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்த வகுப்புக்களுக்குச் சமூகமளித்து வருவதனால், கட்டணங்கள் தாழ்ந்த மட்டத்தில் வைக்கப்பட்டுள்ளன. உயர்தர வகுப்புப் பாடமொன்றுக்குக் கட்டணம் ரூ.25-50 வரையில் வேறுபட்டுச் செல்கின்றது. சம்பந்தப்பட்ட ஆசிரியரின் சுய விருப்பின் பேரில் இந்தக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த பரந்த அடிப்படையிலான வகுப்புக்களுக்கு வறிய மாணவர்கள் சமூகமளித்து, உயர் கல்விக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களில் பெருந்தொகையானவற்றைக் கைப்பற்றிக் கொள்ளும் பொழுது, வீட்டுக்கு ஆசிரியர்களை வரவழைத்து டியுசன் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கும் குழு வகுப்புக்களில் டியுசன் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கும் உயர்கல்வி வாய்ப்புக்கள் குறைந்து செல்கின்றன. எனவே, இந்தப் பின்புலத்தில், பரந்த அடிப்படையிலான டியுசன் வகுப்புக்களுக்கு, மேல் தட்டு மற்றும் நடுத்தட்டு வர்க்கங்களிலிருந்து பெருமளவுக்கு ஆட்சேபணை கிளம்புகின்றது.

இலவசக் கல்வி முறைக்கு ஊடாக அறிவைப் பெற்றுக் கொண்டிருப்பவர்கள், தாம் பெற்றிருக்கும் அறிவினை நாட்டு நலனுக்காக பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தெளிவான நிகழ்ச்சித்திட்டம் எதுவும் இல்லாத ஒரு நிலையில், அந்த அறிவை விற்பனை செய்து வருகின்றார்கள். உதாரணமாக, பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு முன்னர், மகா வித்தியாலயங்களிலும் மத்திய மகா வித்தியாலயங்களிலும் கல்வி கற்று வந்துள்ள அரச துறை மருத்துவர்களில் பெரும்பாலானவர்கள், கடமை நேரத்தின் பின்னர் தனிப்பட்ட முறையில் வைத்திய சேவைகளை அளித்து வருகின்றார்கள். அவர்கள் மருத்துவ ஆலோசனைக் கட்டணமாக ரூ.100 வரையில் அறவிட்டு வருகின்றார்கள். ஆனால், தனிப்பட்ட

வைத்தியர் ஒருவர் என்ற முறையில் இந்தச் சேவை வழங்கப்பட்டு வருவதனால், இது குறித்து எத்தகைய கேள்விகளும் எழுப்பப்படுவதில்லை. இலவசக் கல்வியை பெற்றுக் கொண்டுள்ள ஒரு வாக்கறிஞர், ஒரு வழக்கில் அஜராவதற்கு ரூ.5,000 வரையில் கட்டணம் அறவிடுகின்றார்; இது குறித்தும் எவரும் கேள்வி எழுப்புவதில்லை. இலவசக் கல்வியின் அனுகூலத்தை பெற்றுள்ள கணக்காளர் ஒருவர், கணக்குகளை பாிசீலித்து, தனது கையொப்பத்தை வைத்து, அதற்கான கட்டணமாக 25,000 ரூபாவை அறவிட்டு வருகின்றார். இது குறித்தும் எவரும் ஆட்சேபணை எழுப்புவதில்லை. இவை அனைத்தும் அவரவரின் தனிப்பட்ட விவகாரங்கள் என கருதப்பட்டு வருவதனால், அவற்றுக்கு எதிராக ஆட்சேபணைக் குரல்கள் எழுப்பப்படுவதில்லை. ஆனால், ஒரு டியுசன் ஆசிரியர், ஒரு மாணவாிடமிருந்து மாதமொன்றுக்கு கட்டணமாக 25 ரூபாவை அல்லது 50 ரூபாவை அறவிடும் பொழுது அது குறித்துக் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. கல்வியில் சமமான வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு முன்னர், பரவலான டியுசன் வகுப்புக்களுக்கு ஆட்சேபணை தெரிவித்து வரும் அனைவரும், தெரிந்தோ தெரியாமலோ ஒரு மேல் தட்டு சமூக வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களாகவே இருந்து வருகின்றனர்.

அரசாங்கப் பாடசாலை வகுப்புக்களினால் சாதிக்க முடியாத பல விடயங்களை இந்த டியுசன் வகுப்புக்கள் சாதிக்கின்றன. மிகச் சிறந்த பெறுபேறுகளை உருவாக்கிக் காட்டாது, டியுசன் வகுப்பொன்று மாணவர்களை தன்பக்கம் கவா்ந்திழுப்பது மிகவும் சிரமமான ஒரு காாியமாகும். எனவே, இந்த டியுசன் வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்கள் போட்டித் திறன் கொண்டவர்களாக இருந்து வர வேண்டியுள்ளதுடன், பாடத்திட்டத்தில் இடம் பெற்றுவரும் மாற்றங்களை அறிந்து, அவற்றை உடனடியாக மாணவர்களுக்கு தெரிவிக்கக் கூடியவர்களாகவும் இருந்து வர வேண்டும். டியுசன் வகுப்புக்களில் பாடம் நடத்தி வரும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டதாாிகளாக இருந்து வருகின்றனர். தகுதியற்ற ஒரு நபர் பிள்ளைகளை ஒரு சிறிது காலத்துக்கு மட்டுமே ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும். ஓர் அரசாங்கப் பாடசாலை ஆசிரியரைப் பொறுத்த வரையில், அவர் படிப்பிக்கும் பாடத்தில் அனைத்து மாணவர்களும் சித்திபெறத் தவறி விட்டாலும் கூட, அவருடைய தொழில் பாதுகாப்பாக இருக்கும். மறுபுறத்தில், ஒரு டியுசன் ஆசிாியாின் மாணவர்கள் அனைவரும் ஒரு வருடத்தில் பாீட்சையில் தோல்வி அடைந்தால் இந்த விடயத்துக்கு மிக மோசமான விளம்பரம் கிடைக்கின்றது. அடுத்து வரும் ஓரிரு வருடங்களில், டியுசன் வகுப்புக்களுக்கான போட்டிச் சந்தையினால் அவர் தமது தொழிலிருந்து வெளியே தள்ளப்பட்டு விடுவார். எனவே, தனியார் டியுசன் ஆசிரியர் ஒருவர், சிறந்த பாீட்சை பெறுபேறு களை எடுத்து வரக் கூடிய கல்வியை அளித்து வர வேண்டியுள்ளது.

ஒரு வருட காலத்துக்குள் முழு பாடத்திட்டத்தையும் படிப்பிப்பது மிகவும் சிரமமானதாக இருந்து வருவதனால் பெருந்தொகையான மேலதிக வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டியுள்ளன. மேலோட்டமாக முன்வைக்கப்பட்டு வரும் முக்கியமான ஆட்சேபணைகளில் ஒன்று, போயா நாட்களில் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதாகும். ஒரு மேலதிக வகுப்பினை வார நாட்களில் நடத்த முடியாவிட்டால், அதனை போயா நாட்களிலோ அல்லது அரசாங்க விடுமுறை தினங்களிலோ நடத்த வேண்டியுள்ளது. தற்பொழுது க.பொ.த. உயர்தரப் பாீட்சையில் இடம் பெறும் மிகக் கடுமையான போட்டியை எதிர்கொள்வதற்காக, டியுசன் ஆசிரியர், மாணவர்களை தயார்ப்படுத்த வேண்டியுள்ளது. இந் நோக்கத்துக்காக அவர் பெருந்தொகையான மேலதிக வகுப்புக்களை திட்டமிட வேண்டும். அந்த வகையில், பாடசாலையில் ஒருமாத காலம் செய்யப்பட்டு வரும் வேலையை ஒரு நாளில் அவரால் முடித்துக் கொள்வது சாத்தியமாகும். இல்லாவிட்டால் அவரால் பாடத் திட்டத்தை பூர்த்தி செய்து கொள்ள முடியாது போய்விடும். முழுப் பாடத் திட்டத்தையும் பூர்த்தி செய்யாத நிலையில், சிறந்த பாீட்சைப் பெறுபேறுகளை எடுத்து வருவது கடினமானதாகும்.

மாணவர்களிடையே அச்சிடப்பட்ட அல்லது தட்டச்சில் பொறிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் சிறு பிரசுரங்கள் போன்றவற்றை பகிர்ந்தளிப்பதற்கு ஒரு பாடசாலை ஆசிரியரைப் பொறுத்த வரையில் போதிய வசதிகள் கிடைப்பதில்லை. அவர் இந்த நோக்கத்துக்காக ஒரு கட்டணத்தை அறவிட்டால், பாடசாலையில் அதற்கு எதிர்ப்புக் கிளம்ப முடியும். ஆனால், ஒரு டியுசன் ஆசிரியர் எத்தகைய பிரச்சினைகளும் இல்லாமல் அதனைச் செய்ய முடியும். நல்ல பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் பாடசாலையில் முழுப் பாடத் திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டால் மாணவர்கள் டியுசன் வகுப்புகளுக்குச் செல்ல மாட்டார்கள். இது எந்த அளவுக்கு சாத்தியமாக முடியும்? தேசியக் கல்வி மூலவளங்களின் பகிர்வில் மிகக் கடுமையான ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கல்வியின் எண்ணிக்கை அடிப்படையிலான வளர்ச்சிக்கும் தரத்தின் அடிப்படையிலான வளர்ச்சிக்கும் இடையில் பெருமளவுக்கு வேறுபாடு நிலவி வருவதனால், இன்றைய கல்வித்துறை ஒரு முக்கியமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. டியுசன் வகுப்பு முறை இதன் ஒரு துணை உற்பத்தியாகவே இருந்து வருகின்றது. இந்த நெருக்கடியைத் தீர்க்காமல் இந்த துணை உற்பத்தியை அப்புறப்படுத்துவது சாத்தியமற்றதாகும். தற்போதைய டியுசன் வகுப்பு முறையை விமர்சித்து வருபவர்கள், தாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கையிலும் பார்க்க மாறுபட்ட விதத்திலான ஒரு நடவடிக்கையை ஏனையவர்கள் பின்பற்றி வருகின்றார்களா என்பதனை முதலில் கண்டறிந்து கொள்ள வேண்டும். கல்வி நெருக்கடியின் முழுப் பாிமாணத்தினையும் முழுதாக நோக்க வேண்டும்.

டியுசன் வகுப்புக்களில் எத்தகைய குறைபாடுகளும் நிலவி வரவில்லை என நான் கூறமாட்டேன். உண்மையிலேயே பல குறைபாடுகள் உள்ளன. அவையாவன: (1) ஒவ்வொரு மாணவாினதும் பலவீனம் தொடர்பாக ஆசிரியர் போதியளவில் கவனம் செலுத்தாமை; (2, பாீட்சையில் வெற்றி பெறுவதற்காக ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் புறக்கணித்து, படிப்பில் மட்டும் முழுக் கவனத்தையும் செலுத்துதல்; (3) சில டியுசன் வகுப்புக்களில் காணப்படும் ஒழுக்கக்கேடு என்பனவாகும்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்



நூலகம்

# டியுசன் எந்தளவுக்கு உதவ முடியும்

பிரேமசிரி வலிவிட்ட

## அறிமுகம்

முறையாக ஒழுங்கமைந்த வடிவிலான டியுசன் வகுப்புக்களும் டியுட்டரிகளும் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இப்பொழுது வியாபித்துள்ளன. இந்த நடவடிக்கையின் முக்கிய இலக்குப்பிரிவினர், பகிரங்கப் போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றி வரும் பெருந்தொகையான பரீட்சார்த்திகளாவர்; எதிர்காலத்தில் இடம் பெற இருக்கும் பரீட்சைகளை எழுத காத்துக் கொண்டிருக்கும் பிரிவினரும் இதற்கான ஓர் இலக்குப் பிரிவினராக இருந்து வருகின்றனர். நாட்டில் தற்பொழுது செயற்பட்டு வரும் மொத்த டியுசன் வகுப்புக்களினதும் டியுட்டரிகளினதும் எண்ணிக்கை அநேகமாக மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க உயர்வானதாக இருந்துவர முடியும். இந்த டியுசன் வகுப்புக்கள் பகிரங்க போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்கு ஒரு மேலதிக உதவியை வழங்கக் கூடிய வழிமுறையொன்றாக இருந்து வருகின்றது என்பது ஒரு பொதுவான நம்பிக்கையாகும். ஓர் ஆற்றைக் கடப்பதற்கு உதவும் தோணியொன்றைப் போல, கடக்க முடியாத பரீட்சை தடைச் சுவர்களை கடப்பதற்கு கைகொடுக்கும் ஒரு நட்பு நிறுவனமாக அது கருதப்பட்டு வருகின்றது. மறுபுறத்தில், இந்த டியுசன் வகுப்பு முறைக்கு எதிராக மிகக் கடுமையான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. இது குடும்பங்களைப் பொறுத்தமட்டில் ஒரு சாபக்கேடாக இருந்து வருகின்றது என்றும், குடும்பத்தின் மீது தாங்க முடியாத சுமைகளை சுமத்தி வருகின்றது என்றும் மிக வன்மையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த டியுசன் முறை நல்லதோ கெட்டதோ, அது, இப்பொழுது நாட்டின் அநேகமாக அனைத்துப் பாடசாலைகளிலும் வீடு களிலும் கல்வி நிறுவனங்களிலும் முக்கியமான ஒரு செல்வாக்கினை செலுத்தி வருவதனைக் கண்கூடாகக் காண முடிகிறது.

## தேவை

டியுசன் வகுப்புக்களுக்கான தேவை ஏன் நிலவி வருகின்றது என்பதனை கண்டறிந்து கொள்வது மிக முக்கியமாகும். இதற்குப் பல காரணங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. பாடசாலைக் கல்விப் போதனையின் குறைபாடு; டியுசன் வகுப்புக்கள் நேரடியாக பரீட்சைகளுடன் சம்பந்தப்பட்டிருத்தல்; போட்டிப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவை உத்தரவாதமளிக்கின்றமை; அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களின் செயல்திறன் அற்ற நிலை; பிள்ளைகளுக்கு வீட்டுப் படிப்பில் பெற்றோரால் உதவ முடியாத நிலை; சம்பந்தப்பட்ட பாடத்தில் தாய் மொழியில் போதியளவிலான பாடநூல்கள், வழிகாட்டிகள், மேலதிக வாசிப்பு நூல்கள் என்பன கிடைக்காதிருத்தல்; தன்னம்பிக்கை வளர்ப்பதற்கான ஒரு வழிமுறை; பள்ளி ஆசிரியர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, டியுசன் ஆசிரியர்கள், மாணவர்கள் தொடர்பாக காட்டி வரும் நட்புறவுடன் கூடிய அணுகுமுறை; நல்ல பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற வேண்டுமானால், அந்தந்தப் பாடம் தொடர்பாக பிரபல்யம் பெற்றிருக்கும் டியுசன் ஆசிரியர்களிடம் போதனையைப் பெற வேண்டும் என்ற நம்பிக்கை; தனியார் டியுசன் வகுப்புக்களுக்குச் செல்லுமாறு மாணவர்களை ஆசிரியர்கள் தூண்டி வருதல்; பாடசாலையில் குறிப்பிட்ட பாடத்தை போதித்துவரும் ஆசிரியர், மாணவர்கள் தனது டியுசன் வகுப்புக்கு வர வேண்டும் எனக் கட்டாயப்படுத்துதல் அல்லது ஊக்குவித்தல்; மலிவான நகைச்சுவை, துணுக்குகள் மற்றும் தனிநபர் வழிபாடு என்பவற்றைப் பயன்படுத்தி டியுசன் வகுப்புக்களின் மீது மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுதல்; கடந்த கால வினாப்பத்திரங்கள், மாதிரி விடைகள் என்பவற்றைப் பயன்படுத்தி ஒரு நடைமுறை அணுகுமுறையைப் பின்பற்றுதல்; டியுசன் ஆசிரியர்கள் பள்ளி ஆசிரியர்களைப் போலன்றி உரிய நேரத்தில், நன்கு தயார் நிலையில் வருதல்; நவீன போதனா முறைகளையும் உபகரணங்களையும் பயன்படுத்துதல்; இந்த வகுப்புக்கள் தொடர்பாக பரவலாக இடப் பெற்றுவரும் பிரச்சாரம் போன்ற பெருந்தொகையான காரணங்கள் இதன் வளர்ச்சிக்கு வழிகோலி வந்துள்ளன. இந்தக் காரணிகள், சாதாரண முறைசார் கல்வி அமைப்புக்கு மிகக் கடுமையான முறையில் சவால் விடக்கூடிய விதத்தில், தனியார் டியுசன் வகுப்புக்களால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன.

பிறிதொரு கண்ணோட்டத்தில், தனியார் டியுசன் முறை, பள்ளி ஆசிரியர்கள் தமது தொழிலை பள்ளிக்கு வெளியே மேற்கொள்வதற்கு உதவி வரும் ஒரு முறையாக இருந்து வருகின்றது என்றும் கூறப்படுகின்றது. ஆசிரியர்கள் குறைந்த அளவில் வருமானம் பெற்று வருவதுடன் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் இது உதவி வருகின்றதென வாதிடப் படுகின்றது.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட பெரும்பாலான காரணங்கள், டியுசன் வகுப்புக்கள், குறிப்பாக, பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்கும் பொதுவாக, மாணவர்களுக்கும் நட்புச் சூழலுடன் கூடிய ஒரு மாற்று வழியை வழங்கி வருகின்றன என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.

இதற்கு மாறான ஒரு கருத்தும் நாட்டில் நிலவி வருகின்றது என்பது முன்னர் சுட்டிக்காட்டப்பட்டது. பரீட்சைகளை அண்மித்து பரீட்சைக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பவர் களைப் பொறுத்த மட்டில், தனியார் டியுசன் முறை ஒரு தீவிர சிகிச்சை அலகாக நமது சமூகத்துக்குள் ஆழமாக வேரூன்றி வருகின்றது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டும். மேலும், இம்முறை தொடர்ந்தும் 'ஆலோசனை' பெற்று வருமாறு ஏனையவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது. இந்த வகுப்புக்கள் சமூக ரீதியில் நியாயமானவையாக உள்ளன என்பதை எடுத்துக் காட்டுவதற்கும் சான்றுகள் உள்ளன. தொடக்கத்தில், தனியார் டியுசன் என்பது மிகவும் சிரமமான பாடங்களில் மாணவர்களுக்கு உதவு வதற்காக வீட்டில் ஒரு ஆசிரியரை அமர்த்திக் கொள்ளும் விதத்திலேயே இடம் பெற்று வந்தது. நல்ல பணவசதி பெற்றிருப்பவர்களால் மட்டுமே, வீட்டுக்கு வந்து பாடம் சொல்லிக் கொடுக்கும் ஓர் ஆசிரியரின் சேவையை பெற்றுக் கொள்ள முடியும். தற்போதைய பரந்த மட்டத்திலான பெரிய டியுட்டரிகளை அல்லது நிறுவனங்களை மையமாகக் கொண்ட டியுசன் வகுப்பு முறை சமூகத்தில் பெரும்பாலானவர்களுக்கு இந்த வாய்ப்பினை வழங்குவதற்கான கதவுகளைத் திறந்து விட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்த அணுகுமுறையைக் கொண்ட டியுசன் முறையின் நோக்கம், வறிய பிள்ளைகளுக்கு நியாய்மான கட்டணத்தில் டியுசன் வழங்குவதாகும் என குறிப்பிடப்படுகின்றது. இந்த தனியார் டியுசன் வகுப்புக்களுக்குச் சமூகமளிப்பதற்கென இலவச புலமைப் பரிசில்கள் வழங்கப்படும் சம்பவங்களும் இடம் பெற்று வந்துள்ளன.

## இலக்குக் குழுவினருக்கு வழங்கப்படும் சேவை

முன்னர் குறிப்பிடப்பட்டது போல, டியுசன் வகுப்புக்களின் பிரதான இலக்குக் குழுவினர் பகிரங்கப் போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவே இருந்து வருகின்றனர். பல சந்தர்ப்பங்களில் ஒரே பிள்ளை ஒரே பாடம் தொடர்பாக பல டியுசன் வகுப்புக்களுக்குச் சென்று வருவததனைக் காண முடிகின்றது. எனவே, தனியார் டியுசன் வகுப்புக்களில் சேர்ந்துள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கையிலும் பார்க்க பன்மடங்கு உயர்வானதாக இருந்து வர முடியும்.

தனியார் டியுசன் வகுப்புக்களில் பெரும் எண்ணிக்கையிலான பிள்ளைகள் இப்போது பங்கேற்று வருகின்றார்கள். மேலும், நாட்டின் முறைசார்ந்த பாடசாலைகளும், சாத்தியமான அனைத்து வழிமுறைகளிலும் உச்ச மட்டத்தில் மாணவர்களுக்கு உதவி வருகின்றன. எனினும், இவை அனைத்துக்கும் மத்தியிலும் கூட, பகிரங்கப் பரீட்சைகளில் மாணவர்களின் செயலாற்றம் அவ்வளவு திருப்தியளிக்கக்கூடிய நிலையை பிரதிபலிக்கவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. குறிப்பிட்ட ஒரு பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கையில், அப்பரீட்சையில் சித்தி அடையும் சதவீதத்தினை கவனத்தில் எடுக்கும் பொழுது விசனமூட்டும் ஒரு சித்திரத்தையே நாம் காண முடிகிறது. பரீட்சை முறையிலிருந்து வெளியே தள்ளப்பட்டு வருபவர்களைப் பொறுத்த வரையில் (இவர்களின் எண்ணிக்கை வர வர அதிகரித்துக் கொண்டு வருகின்றது). தனியார் டியுசன் வகுப்புக்கள் பயனுள்ள எதனையும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. நாட்டின் கல்வித்துறையை ஒரு வணிகச் சூழ்நிலைக்குள் எடுத்து வந்திருப்பதாகக் கருதப்படக்கூடிய தனியார் டியுசன் வகுப்புக்கள் இந்த முதலீட்டு வாய்ப்பினை மிகவும் இலாபகரமான முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்க முடியும். அப்பாவிப் பிள்ளைகளைச் சுரண்டி வரும் பொறுப்பற்ற ஒரு வர்த்தக முயற்சியாக அதனை நாம் தவறாக நோக்கக்கூடாது. தனியார் டியுசன் நிறுவனங்கள், பகிரங்கப் பரீட்சைகளில் தோல்வியடையும் பிள்ளைகளைப் பயன்படுத்தி ஒரு வியாபாரம் நடத்தி வருகின்றனவா? போட்டிப் பரீட்சைகளும் தனியார் டியுசன் வகுப்புக்களும் மிக நெருக்கமான கூட்டாளிகளாக இருந்து வருகின்றன: ஆனால், அவை இன்னமும் ஆரோக்கியமான கூட்டாளிகளாக இருந்து வரவில்லை. பரீட்சையின் போட்டித் தன்மையின் திரைக்குப் பின்னால் இருந்துவரும் யதார்த்தத்துக்குள் ஒழிந்து கொண்டு, அப்பாவி மாணவர்களிடம் ஒரேயடியாக எல்லாவற்றையும் உறிஞ்சிக் கொள்வது ஒரு மென்மையான அணுகுமுறையாக இருந்துவர முடியாது. யதார்த்தத்தை திறந்து காட்டி, இந்த நிலைமையிலிருந்து மாணவனை விடுவிப்பதற்கான வழியைக் காட்டுவது உசிதமான ஒரு முறையாக இருக்க முடியும். இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை, தரம் மற்றும் கால அளவு என்பவற்றில் பாரியளவிலான ஆற்றல்கள் உட்பொதிந்துள்ளன. உடனடியான, மலிவான சுரண்டல் அணுகுமுறை மட்டுமே மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், தனியார் டியுசன் முறை நாட்டின் கல்வியையும் மாணவர்களையும் பீடித்துக் கொண்டிருக்கும் ஒரு கொடிய புற்றுநோயாக அல்லது ஒட்டுண்ணியாக இருந்து வருகின்றது என்ற அடிப்படையில் நிலவி வரும் உணர்வுகளை ஒழிப்பது சிரமமாகிவிடும். இந்தப் புற்று முழு அமைப்பினையும் சாப்பிட்டு, கல்வி முறையை நிர்மூலம் செய்து விடும் வரையில் நாங்கள் காத்துக் கொண்டிருக்க முடியாது.

ஆண்டு-5 புலமைப்பரிசில் பரீட்சையை, தனியார் டியுசன் முறையின் ஒரு முக்கியமான அம்சமாக கவனத்தில் எடுதது, முதல் மொழி (சிங்களம்) தொடர்பான மதிப்பெண்கள் குறித்த ஒரு பகுப்பாய்வு அட்டவணை 1 இல் தரப்படடுள்ளது. 1993இல் இலங்கையில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களில் சுமார் 17 சதவிதத்தினரால் 100 மதிப்பெண்களில் ஆகக்குறைந்தது 10 மதிப்பெண்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாமல் போய் விட்டது. இந்தப் பிள்ளைகள் டியுசன் வகுப்புக்களுக்குச் செல்லாதிருந்தமையால் தான் ஆகக் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள் என்று எவராவது கூற முடியுமா ? மேலும், 50 மதிப்பெண்களுக்குக் கூடுதலாக பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை கடந்த சில வருடங்களில் அதிகரித்து வரவும் இல்லை. இந்தப் பரீட்சையில் மிகச்சிறந்த முறையில் சித்தியடைந்தவர்களைப் பொறுத்த வரையில், டியுசன் வகுப்புக்களில் அவர்கள் செலவிட்ட நேரம், அவர்களை மிக மோசமாகப் பாதித்துள்ளதென்றும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது தவிர, இப்பிள்ளைகள் இந்தப் போட்டிப் பரீட்சைக்கான இரு பாடங்களில் மட்டுமே முழுக் கவனத்தையும் செலுத்தி வந்திருப்பதனால், ஏனைய பாடங்களில்

அவர்கள் பெற வேண்டிய அறிவு போதியளவில் அவர்களிடம் காணப்படவில்லை. 1993இல் தனி ஒரு புள்ளியைக்கூட (கணிதத்தில் பூச்சியம்) பெற்றுக்கொள்ள முடியாது போனவர்களின் எண்ணிக்கை 2,593 ஆகும். இன்னொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது; அதாவது, ஆண்டு 5 புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளுக்கு பாடசாலை மட்டத்தில் விசேஷ போதனை உதவி வழங்கப்படட்டு வருவதுடன், அநேகமாக 3 வருட காலத்துக்கு (அதாவது ஆண்டு 3 தொடக்கம்) பல்வேறு டியுசன் வகுப்புக்களும் பிள்ளைகளை அப் பரீட்சைக்கென தயார் படுத்தி வருகின்றன ஆனால், இவை அனைத்துக்கும் மத்தியிலும் கூட, இந்த வகுப்பில் பயிலும் மொத்த மாணவர் எண்ணிக்கையில் சுமார் 50 தொடக்கம் 60 சதவீதத்தினர் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றி வருகின்றனர்.

### தனியார் டியுசன் வகுப்பு முறை குறித்த மாயை

தனியார் டியுசன் வகுப்புக்கள் குறித்த விளம்பரங்கள் அனைத்தும், எல்லா வகுப்புக்களுக்கும், எல்லாப் பாடங்களுக்கும், எல்லாப் பரீட்சைகளுக்கும் எல்லா மட்டங்களிலும், வயதுப் பிரிவுகளிலும் டியுசன் வசதி இப்பொழுது கிடைத்து வருகின்றது என பறை சாற்றுகின்றன. இந்த சேவையை வழங்கும் பெரும்பாலானவர்கள், "சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம்" என்ற ஜனரஞ்சகமான சுலோகத்தினை முன்வைத்து வருகின்றார்கள். இது ஒரு மிகப் பெரிய மாயையாகும். இந்த விளம்பரங்களை நம்பிச் செல்லும் ஆயிரக் கணக்கான பிள்ளைகளைப் பொறுத்தவரையிலும் கூட, இது ஒரு சாபக்கேடாக இருந்து வருகின்றது. தனியார் டியுசன் வகுப்புக்கள், தனியாகவோ அல்லது கூட்டாகவோ போட்டிப் பரீட்சைகளில் இதனை ஒரு போதும் சாதித்துக் கொண்டிருக்க முடியாது; அது அறவே சாத்தியமற்றதாகும். கடந்த சில வருடங்களின் போது, க.பொ.த. (சா.த.) பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. அதேபோல, ஒவ்வொரு மட்டத்திலும் பெறப்படும் சித்திகளிலும் அதற்கு இணையான ஓர் அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. எனினும், கடந்த காலத்தில், பரீட்சைப் பெறுபேறுகளின்

அட்டவணை 1

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை- சிங்களம்

| | | | |
|---|---|---|---|
| 1. வருடம் | 1991 | 1992 | 1993 |
| 2. தோற்றியோர் | 203,597 | 182,260 | 184,220 |
| 3. 09க்கு கீழ் புள்ளிகளைப் பெற்றோர் | 38,383 | 19,952 | 31,679 |
| 4. அதன் சதவீதம் | 10.85 | 10.95 | 17.2 |
| 5. 19க்கு கீழ் புள்ளிகளைப் பெற்றோர் | 86,443 | 42,550 | 69,187 |
| 6. அதன் சதவீதம் | 42.44 | 23.35 | 37.56 |
| 7. 39க்கு கீழ் புள்ளிகளைப் பெற்றோர் | 149,150 | 106,404 | 124,617 |
| 8. அதன் சதவீதம் | 73.26 | 58.38 | 67.65 |

ஆதாரம்: பரீட்சைகள் திணைக்களம்.

அட்டவணை 2

நல்ல தேர்ச்சி மட்டங்களைப் பெறாதவர்கள் 1992-93

| | | |
|---|---|---|
| 1. | பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றும் அனுமதி கிடைக்காதோர் | 44,000 |
| 2. | உ.த. பரீட்சைக்கு தோற்றி தகைமை பெறாதவர்கள் | 100,000 |
| 3. | சா. த. பரீட்சையில் தேறியும் உ. த. வகுப்பில் சேராதவர்கள | 160,000 |
| 4. | சா. த. பரீட்சையில் தகைமை பெறாதவர்கள் | 225,000 |
| | | 529,000 |

ஆதாரம்: கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம்

பொது மாதிரிகளில் கணிசமான அளவிலான மாற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதனையும் நன்கு அவதானிக்க முடிகிறது.

கடந்த 10 வருட காலத்தில், க.பொ.த. (சாதாரணதரப்) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் தோல்வி அடைந்தவர்களின் சதவிகிதம் 9 லிருந்து 10 சதவீதம் வரையில் நிலையாக இருந்து வந்துள்ளது. க.பொ.த. (உயர்தர) வகுப்புக்கு தகைமை பெறுபவர்களின் அளவு 25 சதவீதத்தைத் தாண்டிச் செல்லவில்லை. 1992 இல் முதல் மொழியில் – அதாவது சிங்களத்தில்– சித்தி அடைந்தவர்கள் 23% ஆக இருந்து வந்தனர்; கணிதத்தைப் பொறுத்தவரையில் இது 68.6% ஆகவும், விஞ்ஞானத்தில் 70% ஆகவும் இருந்து வந்தது. பாடசாலைப் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு முதல் தடவையாக சுமார் 3,00,000 மாணவர்கள் தோற்றி வருவதுடன், க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு 1,40,000 மாணவர்கள் தோற்றி வருகின்றார்கள். வருடாந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் அவ்வளவு திருப்திகரமானவையாக இருந்து வரவில்லை என்பதனை அட்டவணை 2 காட்டுகின்றது.

பாடங்களில் பெற்றுள்ள சித்தி மட்டங்களை நோக்கும் பொழுது, தனியார் டியுசன் பிரபல்யம் பெற்றுள்ள பாடங்களில் மாணவர்கள் குறைந்த மதிப்பெண்களையே பெற்று வந்துள்ளனர் என்பதனை காண முடிகிறது. தாவரவியல் தவிர்ந்த ஏனைய விஞ்ஞானப் பாடங்கள் அனைத்திலும் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சித்தி சுமார் 50% வரையிலேயே இருந்து வந்துள்ளது. தரம் 'A' மற்றும் 'B' போன்ற மட்டங்கள் 5 சதவீதம்

( 61 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலங்கையில் ஆடுகளை சந்தைப்படுத்துதல்


பி.சிவராஜா ஆர்.ஹரிஹரன்

(விவசாயப் பிரிவு, கிழக்கு பல்கலைக்கழகம்)


## அறிமுகம்

கிழக்கிலங்கையில்- அதாவது, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில்- சுமார் 12,400 ஆடுகள் இருந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது (இலங்கை கால்நடை புள்ளி விவரங்கள், 1988). கிழக்கு மாகாணத்தில் 1986-87 இல் 98%க்கும் அதிகமான ஆடுகள், சிறு அளவில் ஆடு வளர்ப்பவர்களாலேயே வளர்க்கப்பட்டு வந்தன என்பது கண்டறியப்பட்டுள்ளது (அம்பாறை - 99.05%இ மட்டக்களப்பு - 99%, திருகோணமலை - 97.9%).

இலங்கையில் கால்நடை உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை அமைப்பொன்று இருந்து வரவில்லை. எனவே, நாட்டின் பல பாகங்களில் இப்பொருட்களை சந்தைப்படுத்துவது ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. சந்தைச் சேவைகளின் குறைபாடு உற்பத்தி விரிவாக்கத்தை மட்டுப்படுத்தியிருக்க முடியும்; அல்லது விளைதிறனை விருத்தி செய்வதற்கான விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டமொன்றின் அனுகூலத் தாக்கங்களை பயனற்றவையாக்கிவிட முடியும்.

கிழக்கு மாகாணத்தின் (அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய) இரு மாவட்டங்களில் ஒரு மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இரண்டு மாவட்டங்களையும் சேர்ந்த கால்நடை மருத்துவர் பிரிவுகளில் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டு வந்த 167 விவசாயிகள் (அம்பாறை 81, மட்டக்களப்பு 86) எழுந்தமானமான மாதிரியொன்றின் அடிப்படையில் இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். முன் பரீட்சிப்புக்குப் பின்னர், சம்பந்தப்பட்ட தரவுகளைத்திரட்டிக் கொள்வதற்காக ஒரு வினாக்கொத்து பயன்படுத்திக் கொள்ளப் பட்டது.

## சமூக-பொருளாதார நிலைமைகள்

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆய்வுக்குட்படுத்தப்பட்ட விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் (62.96%) முழு நேர அடிப்படையில் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டு வந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இவர்களின் சதவீதம் குறைவானதாக (44.1%) காணப்பட்டது. மேலும், அம்பாறையில் 6.2% விவசாயிகள் 'ஆடுகளைத் திரட்டும் ஒப்பந்த முறையின் கீழ்'(1) ஆடு வளர்ப்பில் ஆடுபட்டிருந்தனர். இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படவில்லை. விவசாயிகளின் பாடசாலைக் கல்வி கால அளவில்) சுமார் 6 வருடங்கள்) பரந்த அளவிலான வேறு;பாடுகள் நிலவிவரவில்லையாயினும், ஆடு வளர்ப்பு அனுபவம் வேறுபட்ட அளவுகளில் இருந்து வந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த அனுபவம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்வானதாகவும் (9.25 வருடங்கள்), அம்பாறையில் சற்று குறைவானதாகவும் (8.6 வருடங்கள். இருந்து வந்தது.

மட்டக்களப்பை பொறுத்தமட்டில், இந்த விவசாயிகளின் வருடாந்த சராசரி குடும்ப வருமானம் உயர்வானதாக (ரூ.15,808) இருந்து வந்த அதேவேளையில், அம்பாறையில் குறைவானதாக (ரூ.14,257) காணப்பட்டது. ஆனால், ஆடு வளர்ப்பின் மூலமான சராசரி வருடாந்த பண்ணை வருமான மட்டங்கள் அம்பாறையில் உயர்வாகவும் (ரூ.7,575) மட்டக்களப்பில்

அட்டவணை 1

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஆடு வளர்க்கும் விவசாயிகள்

| குணாம்சங்கள் | அம்பாறை (எண்.=81) சராசரி | மட்டக்களப்பு எண்.=86) சராசரி |
|---|---|---|
| 1. குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை | 6.54 | 5.81 |
| 2. கல்வி மட்டம் (வருடங்கள்) | 6.60 | 5.80 |
| 3. ஆடு வளர்ப்பில் அனுபவம் (வருடங்கள்) | 8.60 | 9.25 |
| 4. சராசரி வருடாந்த வருமானம் (ரூ) | 14,257 | 15,808 |
| 5. சராசரி வருடாந்த ஆட்டு வருமானம் (ரூ) | 7.516 | 3,168 |
| 6. தொழில் | | |
| முழுநேரம் (%) | 62.96 | 44.10 |
| பகுதி நேரம் (%) | 37.04 | 55.90 |

அட்டவணை 2


ஆடுகளை விற்பதற்கான காரணங்கள்

| முக்கிய காரணங்கள் | பதிலளித்தோர் வீதம் அம்பாறை (81) | மட்டக்களப்பு (86) |
|---|---|---|
| 1. பணம்/ பண வருவாய் | 51.89 | 56.80 |
| 2. நோய்/ களவு என்பவற்றின் நட்டங்களைக் குறைப்பதற்கு | 10.17 | 4.60 |
| 3. நிர்வாகப் பிரச்சினைகளும் மேற்சொன்ன இரு காரண. | 34.17 | 31.40 |
| 4. விற்க வேண்டிய அவசரம் | 3.79 | 6.90 |

குறைவாகவும் (ரூ.3,168) நிலவி வந்தன. எனவே, அம்பாறையில் ஆடு வளர்க்கும் விவசாயிகளின் மொத்த குடும்ப வருமானத்தில் ஆடு விற்பனைகளிலிருந்து கிடைக்கும் தொகை 53% ஆக இருந்து வந்தது.

**வரைபடம் 1**

**முதிர்ச்சியடைந்த ஆடுகளை சந்தைப்படுத்தும் வழிமுறைகள்**



**சந்தைப்படுத்தல்**

விவசாயிகள், பிரதானமாக வருமானம் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே தமது வளர்ந்த ஆடுகளை விற்பனை செய்கிறார்கள் (பதிலளித்தவர்களில் 50%). மேலும், நோய்ச் சம்பவங்கள் மற்றும்முகாமைக் காரணங்களினாலும் சிலர் ஆடுகளை விற்று வருகின்றனர் (5% – 10%); குறிப்பாக, பெரிய ஆட்டு மந்தைகளை வைத்திருப்பவர்களே இத்தகைய விற்பனைகளைச் செய்கிறார்கள். அவசர பணத் தேவைகள் காரணமாக, குறைந்த விலைகளுக்கு இடைத்தரகர்களிடம் தாம் ஆடுகளை விற்று விட நேர்ந்தது என்றும் சிலர் (4% – 7%) தெரிவித்தார்கள்.

இரு மாவட்டங்களிலும் விற்கப்படும் ஆடுகளின் சராசரி வயது அநேகமாக ஒரே அளவிலேயே காணப்பட்டது. கிடாய்கள் 10–12 மாதங்கள்; பெட்டை ஆடுகள் 60–65 மாதங்கள்.

**அட்டவணை 3**

**விற்கப்பட்ட ஆடுகளின் சராசரி வயது, நிறை, விலை மற்றும் எண்ணிக்கை – வருடம்**

| விவரம் | அம்பாறை | மட்டக்களப்பு |
|---|---|---|
| 1. வயது (மாதங்கள்) | | |
| ஆண் | 11.9 (13.5)[1] | 10.2 (28.4) |
| பெண் | 64.6 (23.9) | 60.4 (19.80) |
| 2. நிறை (கி.கி) | | |
| ஆண் | 24.3 (8.64) | 18.8 (13.2) |
| பெண் | 28.8 (7.29) | 23.0 (12.2) |
| 3. விலை (ரூபா) | | |
| ஆண் | 630.7 (4.2) | 475 (18.0) |
| பெண் | 729.0 (3.13) | 489 (15.4) |
| சராசரி | 680.0 | 482 |
| 4. ஆண்டொன்றில் விற்கப்பட்ட ஆடுகள் | 12.86 | 8.45 |
| 5. விற்கும் விவசாயிகள் சதவீதம் | 93.8 (76)[2] | 89.5 (55) |

**அட்டவணை 4**

**ஆடுகளை சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள் (பதிலளித்த விவசாயிகள்%)**

| பிரச்சினை | அம்பாறை (எண்.–81) | மட்டக்களப்பு (எண்.–86) |
|---|---|---|
| 1. போக்குவரத்து வசதியின்மை | 24.69 | 37.20 |
| 2. விலைத்தகவல் இன்மை/ குறைந்த விலைகள் | 12.85 | 20.90 |
| 3. மேற்சொன்ன இரண்டும் | 44.44 | -- |
| 4. சமய/பாரம்பரிய நம்பிக்கைகள் | -- | 13.90 |

ஆனால், விற்கப்படும் ஆடுகளின் எடை மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைவானதாக இருந்தது. மேலும், உயிருடன் விற்கப்படும் வளர்ந்த ஆடொன்றுக்கான விலையும் அம்பாறை மாவட்டத்துடன் ஒப்பு நோக்கும்பொழுது, மட்டக்களப்பு மாவட்டத்தில் (கிடாய், பெட்டை ஆடுகள் தொடர்பாக) குறைவானதாக இருந்து வந்தது (அட்டவணை 3). அம்பாறை மாவட்டத்தில் விற்கப்படும் ஆடுகளின் எடை அதிகமாக இருந்து வருவதே இதற்கான காரணமாகும். முதிர்ச்சியடைந்த ஆடுகள் வளர்ப்புக்காகவும், கசாப்புக்காகவும் (எடை அடிப்படையில் அல்லாது) தனித்தனியாக உயிருடன் விற்கப்பட்டு வருவதால், இங்கு அலகு விலைகளை ஒப்பிடுவது சிரமமாக உள்ளது.

ஆடுகள் தொடர்பான சந்தைப் படுத்தல் வழிமுறை வரைபடம் – 1இல் இங்கு காட்டப்பட்டுள்ளது. வளர்ப்புக்கான ஆடுகள் நேரடியாக அத்தகைய விவசாயிகளுக்கு விற்கப்பட்டு வருகின்றன. அதேவேளையில், இறைச்சிக்கான ஆடுகள் கிராம/நகர்ப்புறங்களைச் சேர்ந்த இடைத்தரகர்களுக்கும், அதேபோல உள்ளூர் நுகர்வோருக்கும் நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றன. இடைத்தரகர்களுக்கூடாகவே நகர இறைச்சிக் கடைக்காரர்கள் ஆடுகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். கிராம இறைச்சிக்கடைக் காரர்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக ஆடுகளை வாங்குகிறார்கள். வளர்ப்புக் கான ஆடுகள், இறைச்சிக்கான ஆடு களிலும் பார்க்க கூடுதலான விலைகளைப் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்போரில் 90% க்கும் மேற்பட்டவர்கள், வயது முதிர்ந்த ஆடுகளை தாம் ஆண்டு தோறும் விற்பனை செய்து வந்ததாக தெரிவித்தனர். ஆண்டொன்றின்போது விற்பனை செய்யப்படும் ஆடுகளின் எண்ணிக்கை அம்பாறை மாவட்டத்தில் உயர்வானதாக காணப்பட்டது. ஒவ்வோர் ஆடும் பெற்றுத் தந்த சராசரி விலையும் அம்பாறையில் உயர்வானதாக (ரூ.680) இருந்ததுடன், மட்டக்களப்பில் (ரூ.482) குறைவானதாக இருந்தது.

( 61 ஆம் பக்கம் பார்க்க)

# தேயிலையின் ஒப்பீட்டு ரீதியான செயலாற்றம்

டப்.ஜீ.எஸ்.வைத்தியநாத
(ஆராய்ச்சிப் பிரிவு, மக்கள் வங்கி)

வேளாண்மைத்துறையில் 1992 இல் மிக முக்கியமான அமைப்புரீதியான மாற்றமொன்று எடுத்து வரப்பட்டது; அதாவது, அரசுக்குச் சொந்தமான தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களின் முகாமை தனியார்மய மாக்கப்பட்டது. மொத்தம் 449 பெருந்தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் கையளிக்கப்பட்டன; இவற்றில் 94,541 ஹெக்டேயார் பரப்பளவைக் கொண்ட 356 தேயிலைத் தோட்டங்களும் அடங்கியிருந்தன.

வேளாண்மைத்துறையில் 1991 மற்றும் 1992 ஆகிய வருடங்களில் தொடர்ச்சியாக ஒரு பின்னடைவு இடம் பெற்றிருந்தது. காலநிலை சாதகமானதாக இருந்து வந்ததன் காரணமாக 1993 இல் நிலைமை பெருமளவுக்கு விருத்தியடைந் திருந்தது. நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு தேயிலைக் கைத்தொழில் வழங்கி வந்த பங்களிப்பு 1992 இல் 1.63% ஆக இருந்து, 1993 இல் 1.98% ஆக அதிகரித்திருந்தது.

நீடித்த வறட்சி நிலவி வந்தமையால், 1992 இல் நாட்டின் ஒட்டு மொத்த வேளாண்மைத்துறை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இதன் விளைவாக, 1982/83 நிலைமையை ஒத்தவிதத்தில் தேயிலை உற்பத்தி குறைந்த மட்டங்களில் வீழ்ச்சியடைந்திருந்தது. உற்பத்தி 1993 இல் கடந்த இரண்டு தசாப்த கால சராசரி உற்பத்தி அளவிலும் (அதாவது 20 கோடி கிலோ கிறாம் களிலும்) பார்க்க சிறிதளவே உயர்வானதாக காணப்பட்டது.

தேயிலை உற்பத்தி, 1992 இல், கடந்த 15 வருட காலத்தில் பதிவு செய்த ஆகக்குறைந்த மட்டத்தை பதிவு செய் திருந்தது. இந்நிலைமையில் 1993 இல் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருந்ததுடன், உற்பத்தி 231.9 மில்லியன் கிலோகிறாம் களாக காணப்பட்டது. 1992 இன் (178.9 மில். கிகி) உற்பத்தியுடன் ஒப்பிடும்பொழுது 1993 இல் 29.6% அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. அட்டவணை – 1 தேயிலை உற்பத்தி தொடர்பான நான்காண்டு கால (1990–1993) தரவுகளைத் தருகின்றது. உயர்நிலத் தேயிலையிலேயே ஆகக்கூடிய உற்பத்தி அதிகரிப்பு (15.2%) பதிவு செய்யப்பட்டிருந்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் அரச பெருந்தோட்ட கூட்டுத் தாபனம் என்பவற்றால் தனியார் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்ட பாரிய பெருந்தோட்டங்களே பெருமளவுக்கு இந்த வகையைச் சேர்ந்த தேயிலையை உற்பத்தி செய்து உள்ளன.

## ஏற்றுமதிகள்

இலங்கை, 1993 இல் 218.4 மில். கிகி தேயிலையை ஏற்றுமதி செய்தது; இது, இறக்குமதி செய்யப்பட்டு பின்னர் மீள ஏற்றுமதி செய்யப்பட்ட 77 இலட்சம் கிகி தேயிலையையும் உள்ளடக்கியிருந்தது. இதன்படி, 1993இல் தேறிய தேயிலை ஏற்றுமதி 210.5 மில்லியன் கி.கிறாம்களாக இருந்தது. 1992இன் ஏற்றுமதி அளவுடன் ஒப்பிடும்பொழுது இவ்வாண்டில் 18.1% அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

பெறுமதி அடிப்படையில் நோக்கும் பொழுது, 1992 இல் ஏற்றுமதிப் பெறுமதி

**அட்டவணை 1**

**இலங்கையில் தேயிலை உற்பத்தி (1990-1993)**
(பத்து இலட்சம் கி. கிராம்கள்)

| வருடம் | மொத்தம் | முன்னைய ஆண்டிலும் பார்க்க % அதிகரிப்பு | உயர் நிலம் | மத்திய நிலம் | தாழ்நிலம் |
|---|---|---|---|---|---|
| 1990 | 233.2 | | 76.1 | 51.9 | 105.2 |
| 1991 | 240.6 | 7.4 | 73.2 | 51.3 | 115.9 |
| 1992 | 178.9 | 25.6 | 53.7 | 37.9 | 87.3 |
| 1993 | 231.9 | 29.6 | 72.6 | 47.2 | 112.1 |

**அட்டவணை 2**

**தேயிலை ஏற்றுமதி ஜன. / டிசம். 1993**

| | ஜன/டிசம் 1993 கப்பற்றளம் வரையில் | | ஜன/ டிசம்1992 கப்பற்றளம் வரையில் | |
|---|---|---|---|---|
| | கிகி '000 | ரூபா.இ | கிகி '000 | ரூபா.இ |
| தொகை தேயிலை | 129,003 | 10,812.6 | 117,699 | 8,971.4 |
| பையிலடைக்கப்பட்ட தேயிலை | 74,384 | 6,688.8 | 55,033 | 4,434.1 |
| தேயிலை பைகளி | 5,138 | 1,210.1 | 4,541 | 949.4 |
| உடன் தேயிலை | 734 | 313.6 | 414 | 146.6 |
| பச்சைத் தேயிலை | 1,171 | 119.6 | 400 | 27.4 |
| ஏனையன | 23 | 4.4 | 129 | 7.5 |
| மொத்தம் | 210,452 | 19,149.1 | 178,215 | 14,536.4 |
| மீள் ஏற்றுமதி | 7,726 | 730.4 | 3,461 | 357.0 |
| கூட்டு மொத்தம் | 218,178 | 19,879.5 | 181,676 | 14,893.4 |

ஆதாரம் : போர்பஸ் அன்ட் வோகர் நிறுவனம், பெப். 1994 தேயிலை புள்ளிவிவரங்கள்

14,536.4 மில்லியன் ரூபாவாக இருந்து, 1993இல் 19,149.1 மில்லியன் ரூபாவாக – 13.7% ஆல் – அதிகரித்திருந்தது. தொகையாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் கிலோ ஒன்றுக்கான விலை 1992 இல் 67 ரூபாவாக இருந்து, 1993இல் 84 ரூபாவாக அதிகரித்துச் சென்றிருந்தது. இது 25.4% அதிகரிப்பாகும். பக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட தேயிலை பெற்றுக்கொண்ட விலை கிலோ ஒன்றுக்கு 90 ரூபாவாக இருந்தது.

பெறுமதி சேர்க்கப்பட்ட பல்வேறு வகைகளையும் உள்ளடக்கிய விதத்தில் தேயிலை உற்பத்தியை பன்முகப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. சீரீசீ வகை தேயிலை உற்பத்தி இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. வட இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையில் பெரும்பகுதி இந்த வகையைச் சேர்ந்ததாக உள்ளது. பாகிஸ்தான், எகிப்து மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இவ்வகை தேயிலைக்கு நல்ல கிராக்கி நிலவி வருகின்றது. இந்த சீரீசீ வகை தேயிலை இப்பொழுது இலங்கையில் சிறு அளவில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. நாட்டின் தென் பாகத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் சீரீசீ தேயிலை உற்பத்தி நிலையம், இந்த வகை தேயிலையின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கு உதவ முடியும்.

அட்டவணை 3

**தேயிலை ஏற்றுமதி-முதல் 10 நாடுகள்**

| நாடு | 1993 அளவு (பத்இலட். கி.கி) | 1993 நிலை | 1992 அளவு (பத்இலட். கி.கி) | 1992 நிலை |
|---|---|---|---|---|
| சுதந்திர அரசுகளின் பொதுநலவமைப்பு | 27.7 | 1 | 4.9 | 10 |
| ஜோர்தான் | 27.1 | 2 | 21.8 | 2 |
| சிரியா | 17.8 | 3 | 4.8 | 10க்கு கீழே |
| ஐ-அ. எமிரேட்டுகள் | 17.7 | 4 | 4.8 | 10க்கு கீழே |
| ஐக்கிய இராச்சியம் | 13.6 | 5 | 10.6 | 6 |
| எகிப்து | 13.0 | 6 | 18.6 | 3 |
| ஈரான் | 8.5 | 7 | 24.5 | 1 |
| பாகிஸ்தான் | 8.2 | 8 | 5.2 | 9 |
| லிபியா | 8.0 | 9 | 6.3 | 7 |
| சவுதி அரேபியா | 7.3 | 10 | 11.3 | 5 |

ஆதாரம் : போர்பஸ் லங்கா லிமிட்.

அட்டவணை 4

**தேயிலை ஏற்றுமதியின் பெறுமதி**

| வருடம் | பெறுமதி (ரூபத்து இலட்சம்) | பெறுமதி எஸ்.டி.ஆர் | எஸ்.டி.ஆர் ஒன்றின் ரூபா பெறுமதி |
|---|---|---|---|
| 1990 | 19823.3 | 364.3 | 54.42 |
| 1991 | 17866.8 | 315.6 | 56.61 |
| 1992 | 14893.4 | 241.2 | 61.75 |
| 1993 | 19911.1 | 295.5 | 67.39 |

ஆதாரம்: மத்திய வங்கி வருடாந்த அறிக்கை

### சந்தை

இலங்கையின் தேயிலையைக் கொள்வனவு செய்யும் நாடுகளைப் பொறுத்தவரையில், 1993இல் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. இலங்கையின் தேயிலையை கொள்வனவு செய்வதில் 1992 இல் பத்தாவது ஸ்தானத்தில் இருந்து வந்த பொதுநலவாய சுதந்திர அரசுகள் 1993இல் முன்னணிக் கொள்வனவு நாடுகளாக மாற்றமடைந்திருந்தன. இவை தமது கொள்வனவுகளை ஐந்து மடங்காக அதிகரித்துக் கொண்டிருந்தன. அதேவேளையில், 1992 இல் முன்னணிக் கொள்வனவு நாடாக இருந்து வந்த ஈரான் 1993இல் அதன் கொள்வனவைக் குறைத்துக் கொண்டு, 7வது ஸ்தானத்துக்கு இறங்கியிருந்தது. ஜோர்தான் தொடர்ந்தும் இரண்டாவது ஸ்தானத்தில் இருந்து வந்தது. முன்னர் பத்தாவது ஸ்தானத்துக்கும் கீழே இருந்த சிரியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்டுகள் ஆகிய நாடுகள் தமது ஸ்தானங்களை முறையே மூன்றாவதாகவும் நான்காவதாகவும் அதிகரித்துக் கொண்டன. இலங்கை தேயிலையின் பிரதான கொள்வனவு நாடுகளாக இருந்து வந்த ஈரான், எகிப்து மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் தமது கொள்வனவு அளவுகளை வெகுவாக குறைத்துக் கொண்டிருந்தமையும் இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

அனைத்து தேயிலைப் பயிர்ச் செய்கை மாவட்டங்களிலும் 1993 இல் உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டது. சாதகமான காலநிலை நிலைமைகள் 1993இல், தேயிலைத் தோட்டங்களில் சகஜ உற்பத்தி நிலையை மீண்டும் எடுத்து வந்தன. வருடத்தின் இறுதிப் பகுதிகளில் உற்பத்தி மட்டம் முன்னெப்பொழுதும் இருந்திராத அளவுகளில் அதிகரித்திருந்தது. தாழ்நிலப் பிரதேசங்களில் டிசம்பர் மாதத்தில் பெறப்பட்ட உற்பத்தி ஒரு சாதனை மட்டமாக இருந்து வந்தது.

### 1994 இல் நிலைமை

தேயிலைப் பயிரைப் பொறுத்த வரையில், 1994 இன் முதலாவது காலாண்டு சாதகமான நிலைமைகள் காணப்பட்ட ஒரு காலப்பிரிவாக இருந்தது. ஜனவரி மாதத்தில் விளைச்சல் அவ்வளவு உயர்வாக இருக்கவில்லை என்ற போதிலும் கூட, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் விளைச்சல் சாதனை மட்டங்களில் இடம் பெற்றிருந்தது. முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்பொழுது, இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் உற்பத்தி 35% அதிகரித்திருந்தது. அதேபோல மார்ச் மாத உற்பத்தி முன்னைய வருட மார்ச் மாதத்தின் உற்பத்தியிலும் பார்க்க 21% உயர்வானதாக இருந்தது. இவ் வருடத்தின் முதலாவது காலாண்டு முடிவடைந்த பொழுது, தேயிலை உற்பத்தி 60 இலட்சம் கிகி களாக சாதனை மட்டத்தில் நிலவி வந்தது. காலநிலை நிலைமைகள் இன்னமும் சாதகமானவையாக இருந்து வருகின்றன. அடுத்து வரும் ஒரு சில மாதங்களில் பாரிய மாற்றங்கள் எவையும் ஏற்படாதிருப்பின், நாடு 1991ஆம் ஆண்டின் 240 மில்லியன் கிகி உற்பத்தி மட்டத்தை எட்டும் என உறுதியாக கூற முடியும்.

( 42 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு வர்த்தகம்

ஜீ.ஜயநாத்
(ஆராய்ச்சிப் பிரிவு,
மக்கள் வங்கி)

அண்மைய வருடங்களில், இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் ஏற்றுமதித்துறையில் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, 1988 இன் பின்னரான ஐந்து வருட காலத்தின் போது வருடாந்த வளர்ச்சி 11% ஆக இருந்து வந்தது. எனினும், இறக்குமதிச் செலவு அதிகரிப்பு காரணமாக, வர்த்தக நிலுவையின் இடைவெளி விரிவடைந்து வந்தமை கவலையளிக்கும் ஒரு விடயமாக காணப்பட்டது. வர்த்தகப் பற்றாக்குறை 1984இல் 38 கோடி சிஎஉ ஆக இருந்து 1991 இல் 80.6 கோடி சிஎஉ ஆக அதிகரித்திருந்தது. இது 1993 செப்டம்பர் அளவில் 52.8 கோடி சிஎஉ ஆக வீழ்ச்சியடைந்திருந்தது.

### ஏற்றுமதிகள்

நாட்டின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியங்கள் 1983இல் 100.1 கோடி சிஎஉ ஆக (2, 518.3 கோடி ரூபாவாக) இருந்து 1992 இல் 174.1 கோடி சிஎஉ ஆக (அதாவது, 10,750.9 கோடி ரூபாவாக) உயர் அளவில் அதிகரித்துக் காணப்பட்டன. கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட சம்பாத்தியங்களே இதற்கு பெருமளவுக்கு பங்களிப்புச் செய்திருந்தன. கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் 1983இல் 35% ஆக இருந்து, 1992 இல் 69% ஆக அதிகரித்திருந்தன. இவற்றில் புடவைகள் மற்றும் ஆடைகள் என்பன மிக முக்கிய பங்கொன்றினை வகித்து வந்தன. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளின் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்கள் 1983 இல் 19% ஆக இருந்து, 1993 இல் 49% ஆக அதிகரித்திருந்தன. இது தவிர, பெற்றோலியப் பொருட்கள் மூலமான அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களும் கணிசமான அளவிலான பங்களிப்புக்களை வழங்கியிருந்தன.

பாரம்பரிய வேளாண்மைத்துறை உற்பத்திப்பொருட்களின் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்கள் 1984இல் மிகவும் தாழ்ந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்திருந்தன. தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டிருந்த மிக மோசமான வீழ்ச்சி இந்நிலைமைக்கு பங்களிப்புச் செய்திருந்தது. எனினும், 1993 அளவில் தேயிலை வெளியீட்டில் சிறிதளவிலான ஓர் ஏறுமுகப் போக்கு அவதானிக்கப்பட்டது.

அட்டவணை 1

வெளிநாட்டு வர்த்தகம் பத்து இலட்சம் எஸ்.டி.ஆர்
(அடைப்புக்குள் ரூ. பத்து இலட்சங்களில்)

| வருடம் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக பற்றாக்குறை |
|---|---|---|---|
| 1987 | 1,048<br>(39,801) | 1,568<br>(59,750) | 522<br>(19,889) |
| 1992 | 1,741<br>(107,509) | 2,425<br>(149,780) | 685<br>(42,272) |
| 1993* | 1,465<br>(98,045) | 1,993<br>(133,409) | 528<br>(32,412) |

● ஜனவரி தொடக்கம் செப்டம்பர் வரை

அட்டவணை 2

ஏற்றுமதி விலைகள்

| வருடம் | 1988 | 1990 | 1993* |
|---|---|---|---|
| கொக்கோ உற்பத்திகள் | 55.97 | 39.56 | -- |
| மிளகு | 108.26 | 90.03 | 48.06 |
| ஏலக்காய் | 112.25 | 102.62 | 38.94 |

● ஆகஸ்ட 1993 வரையில்

இறப்பர் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் 1984இன் பின்னர் ஒரு படிப்படியான வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. 1984இல் 2.62 கோடி கிகி இறப்பர் ஏற்றுமதி செய்யப்பட்டு 330.1 கோடி ரூபா சம்பாதிக்கப்பட்டிருந்தது. 1992 இல் இறப்பர் ஏற்றுமதி மூலமான சம்பாத்தியம் 296 கோடி ரூபாவாக வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், 1993 செப்டம்பரில் ஏற்றுமதிகளில் ஓரளவுக்கு விருத்தி நிலைமை தோன்றியிருந்தது.

1988 இல் தெங்குப் பயிரில் உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டதனையடுத்து ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் 3.6 கோடி சிஎஉ ஆக (89.5 கேடி ரூபாவாக) மிகத் தாழ்ந்த மட்டங்களை பதிவு செய்தன. எனினும், பின்னர் உற்பத்தியில் விருத்தி நிலைமை தோன்றியதையடுத்து 1992 இல் திருப்திகரமான 6 கோடி சிஎஉ வருமானம் பெறப்பட்டது. எனினும், 1985 இன் சாதனை அளவான 11.1 கோடி சிஎஉ அளவினை அது எட்டத் தவறிவிட்டது. பிரசுரிக்கப்பட்டுள்ள தரவுகளின் படி, தெங்கு உற்பத்திப் பொருட்கள் மூலமான ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் 1993 செப்டம்பர் வரையில் 37% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தன. இவ்வாண்டில் இடம்பெற்ற திருப்தியற்ற விளைச்சல் ஏற்றுமதி இலக்குகளை பாதித்துள்ளது. இக்காலப் பிரிவின் போது உற்பத்தி 15% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

சிறு விவசாய ஏற்றுமதிப் பொருட்களைப் பொறுத்தவரையில், ஏற்றுமதிக்கான உற்பத்தியில் ஒரு பெருக்கம்

அட்டவணை 3

தெரிவு செய்யப்பட்ட சில இறக்குமதிகளின் வருடாந்த சராசரி
(மொத்த பெறுமதியின் சதவிகிதமாக)

| பொருள் | 1988-92 | 1993* |
|---|---|---|
| அரிசி | 2.3 | 0.9 |
| சீனி | 4.5 | 3.5 |
| பால் | 2.4 | 2.0 |
| மோட்டார்கார்/சைக்கிள் | 2.6 | 1.4 |
| பெற்றோலியம் | 10.8 | 7.8 |
| புடவைகள் | 14.2 | 21.2 |
| கட்டடப் பொருட்கள் | 3.9 | 4.6 |
| போக்குவரத்து | 3.9 | 8.6 |
| இயந்திரம், உபகரணம் | 9.5 | 11.4 |
| ஏனையன | 45.9 | 38.6 |
| | 100.0 | 100.0 |

ஆதாரம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 4

இறக்குமதி விலைகள் (ரூபா)

| வருடம் | அரிசி பெறுமதி தொன் | சீனி பெறுமதி தொன் | பெற்றோலியம் பீப்பா ஒன்று |
|---|---|---|---|
| 1987 | 6,086 | 6,348 | 544 |
| 1992 | 12,021 | 13,383 | 803 |
| 1993 | 11,833 | 14,183 | -- |

ஏற்பட்டுள்ளது. இந்த சிறு ஏற்றுமதிப் பண்டங்களில் கறுவா சுமார் 38%ஐ பெற்றிருந்தது. கறுவா ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு சிறு விவசாய ஏற்றுமதிப் பண்டங்களின் அளவை கணிசமான அளவுக்கு உயரச் செய்தது. கறுவா ஏற்றுமதி 1988 இல் 6,810 மெட்ரிக் தொன்களாக இருந்து, 1992 இல் 8,238 மெற்றிக் தொன்களாக அதிகரித்துக் காணப் பட்டது. மரக்கறி வகைகள், பழங்கள், நிலக்கடலை, பதப்படுத்தப்படாத புகையிலை மற்றும் வெற்றிலை போன்ற ஏற்றுமதி உற்பத்திகளிலும் கணிசமான அளவிலான ஒரு பெருக்கம் ஏற்பட்டிருந்தது.

கடந்த ஐந்து வருட காலத்தின் போது, முதலீட்டுப் பொருட்களுக்காக ஒதுக்கப்பட்ட அந்நியச் செலாவணியின் அளவில் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட் டிருந்தது. இந்தப் பொருட்களில் இயந்திரங்களின் இறக்குமதிக்கென 10% அந்நியச் செலாவணிகள் ஒதுக்கப் பட்டிருந்தன. அதேவேளையில், அண்மைய வருடங்களில் போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் கட்டடப்பொருட்கள் என்பவற்றில் விருத்தி நிலைமை ஏற்பட்டு வந்துள்ளது. வெளிநாட்டுச் சந்தைகளில் விலைகள் வீழ்ச்சியடைந்திருந்தமையின் காரணமாக, கறுவா, மிளகு, கோப்பி போன்றவற்றில் எதிர்பார்க்கப்பட்ட உற் பத்தி இலக்குகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இலங்கையின் ஏற்றுமதிச் சம்பாத்தி யங்கள் (1992) நாட்டின் மொத்த இறக்குமதிகளில் 72% ஐ நிதிப்படுத்துவதற்கு மட்டுமே போதியவையாக இருந்து வந்தன. மேலும், ஆண்டுதோறும் நாட்டின் இறக்குமதிச் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு வருகின்றன. கடந்த ஐந்துவருட காலத்தின் போது இறக்குமதிகளின் பெருக்க விகிதம் 9.3% ஆக இருந்து வந்தது. இறக்குமதிகளுக்காக ஒதுக்கப்படும் அந்நியச் செலாவணியில் 54% நடுத்தரப் பொருட்களை பதப்படுத்து வதற்காக செலவிடப்பட்டு வருகின்றது. இப்பொருட்களில் புடவைகள், பெற்றோல் மற்றும் உர வகைகள் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சதவீத அடிப்படையில் இவை 27% ஆக இருந்து வருகின்றன. உலகச் சந்தையில் சுத்திகரிக் கப்படாத எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை அதிகரித்து வந்திருப்பதன் காரணமாக, பெற்றோலிய இறக்குமதி களுக்காக அதிகளவிலான அந்நியச் செலாவணியை ஒதுக்க வேண்டியிருந்தது. கடந்த சில வருட காலத்தில் ஆடைக் கைத்தொழிலில் தீவிர விஸ்தரிப்பு ஏற்பட்டு வந்துள்ளமையால் புடவை இறக்குமதிகள் பெருமளவில் அதிகரித்திருந்தன. அதனால் இந்த இறக்குமதிகள் தொடர்பான அந்நியச் செலாவணிச் செலவினம் ஆண்டுதோறும் அதிகரித்து வந்துள்ளது. கடந்த ஐந்து வருட காலத்தின் போது அரிசி, சீனி, பாலுணவு போன்ற நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவுகளும் அதிகரித்து வந்துள்ளன. சீனி இறக்குமதிகளின் அளவில் பெருமளவு வேறுபாடுகள் ஏற்பட்டிராதபோதிலும், சீனி மெற்றிக் தொன் ஒன்றின் விலை இரு மடங்கால் அதிகரித்திருந்தது. அரிசி இறக்குமதி களிலும் இதே மாதிரியான போக்குக்கள் அவதானிக்கப்பட்டன.

( 40 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை, தேயிலை உற்பத்தியில் பெருமைப்படத்தக்க ஒரு மீட்சியை சாதித்துக் கொண்டிருந்தது என்பது உண்மை தான். எனினும், இலங்கையின் ரூபா உலகின் ஏனைய பிரதான நாணயங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக பெறுமதி இறக்கம் கண்டு வந்தமையால் இந்த மீட்சியின் அனுகூலங்களை நாடு முழு அளவில் பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. சிறப்பு எடுப்பனவு உரிமைக்கு (SDR) எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்து வந்திருப்பதனை அவதானிப் பதன் மூலம் இதனை மதிப்பிட்டுக் கொள்ள முடியும். சிஎஉ தொடர்பான இலங்கை ரூபாவின் மாற்று விகிதம் 1993 ஜனவரியில் ரூபா 64.12 ஆக இருந்து வந்தது; இது 1993 இன் முடிவில் ரூபா 68.19 ஆக அதிகரித்திருந்தது. இலங்கை ரூபா சிஎஉ வுக்கு எதிராக 6.39% பெறுமதியி றக்கம் கண்டுள்ளது. எனவே, தேயிலை ஏற்றுமதி மூலமான வருமானம் 1993 இல் ரூபா அடிப்படையில் 33.78% அதிகரித்திருந்த போதிலும், சிஎஉ அடிப்படையில் ஏற்பட்ட அதிகரிப்பு 9.1% ஆக மட்டுமே இருந்தது.

# வறுமையும் சிறுவர் விபச்சாரமும் : மேல் மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பள்ளிப் பிள்ளைகள் குறித்த ஒரு மதிப்பீட்டாய்வு

கலாநிதி ஏ.ஜே. வீரமுண்ட
(மூத்த விரிவுரையாளர்,
சமூகவியல் பிரிவு,
கொழும்பு பல்கலைக்கழகம்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### குடிசனவியல் அம்சங்கள்

மாதிரியில் 63 சதவீதத்தினர் ஆண்களாக இருந்ததுடன், 37 சதவீதத்தினர் பெண்களாக இருந்தனர். வயதைப் பொறுத்தமட்டில், 11 தொடக்கம் 17 வயது வரையிலான பிள்ளைகள் இதில் சம்பந்தப்பட்டிருந்தனர். குறிப்பாக, 14-15 வயதுப் பிரிவினரின் விகிதாசாரம் உயர்வாக (47%) காணப்பட்டது. அனைத்துப் பிள்ளைகளும் (6ஆம் வகுப்பு தொடக்கம்) பாடசாலைக்கு சமூகமளிப்பவர்களாக இருந்ததுடன், 50 சதவீதத்தினர் 9-10 ஆம் வகுப்புக்களில் படித்து வந்தனர்.

பெரும்பாலான பிள்ளைகள் (70%) தமது பெற்றோருடன் வாழ்ந்து வந்தவர்களாகவே இருந்தனர். எனவே, பெற்றோர் - ஒருவர் அல்லது இருவரும்- இல்லாதிருந்தமையால் பிள்ளைகள் வழி தவறிச் சென்றுள்ளார்கள் என்று கூற முடியாதுள்ளது. எனினும், சுமார் 20 சதவீதம் பிள்ளைகள் ஒரு பெற்றோருடன் வாழ்ந்து வந்தனர். வீட்டு வசதிகளைப் பொறுத்தமட்டில், 45% பிள்ளைகள் நிரந்தர வீடுகளில் வாழ்ந்து வந்தனர். இருப்பிட வசதி, வீட்டில் படிக்கக்கூடிய வசதிகளை நிர்ணயம் செய்து வருகின்றது. தமக்கு வீட்டில் படிப்பதற்கு வசதிகள் இருந்ததாக பெரும்பாலான பிள்ளைகள் தெரிவித்தார்கள். தமது வீடுகள் கடற்கரையில் அமைந்திருந்தமையாலும் (கடலின் இரைச்சல்) மின்சார வசதி இல்லாமையாலும் தமக்கு வீட்டில் படிப்பதற்கு வசதி இருக்கவில்லை என மூன்றில் ஒரு பங்கினர் கூறினார்கள். வீட்டில் படிப்பதற்கு இட வசதியும் மின்சாரம் கிடைக்கக் கூடியதாக இருப்பதும் நெறிதவறிச் செல்வதிலிருந்தும் பிள்ளைகளைத் தடுக்கவில்லை என்பதனை காண முடிகிறது.

### பொருளாதார அமைப்பு

பொருளாதார தளத்திலேயே குறிப்பாக, பெற்றோரின் வேலைவாய்ப்புக்களின் முறைகளிலேயே இப்பிரச்சினையின் முக்கிய கூறு தங்கியிருந்தது. தந்தையரில் பெரும்பாலானவர்கள் (89%) கள் இறக்குபவர்கள், மேசன் வேலை, தச்சர், மீனவர், வழிகாட்டிகள், வியாபாரிகள் அல்லது சமயாசமய தொழிலாளர் போன்ற தொழில் பிரிவுகளிலேயே ஈடுபட்டிருந்தனர். தாய்மாரில் அதிகமானவர்கள் (65%) தொழில் செய்யாதவர்களாக இருந்தனர். கயிறு திரித்தல் போன்ற குடிசைக் கைத்தொழில்களில் 25 சதவீதத்தினர் ஈடுபட்டிருந்தனர். இந்தப் பிள்ளைகளின் தந்தைமாரின் 50 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் மாதமொன்றுக்கு 1,500 ரூபாவுக்கு குறைந்த மொத்த வருமானத்தைப் பெறுபவர்களாகவே இருந்து வந்தனர்.

மிகுதிப்பேர் மாத வருமானமாக 1,500 தொடக்கம் 2,500 ரூபா வரையில் உழைத்து வரும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். சுமார் 32% தாய்மார் தொழில் செய்து வந்தபோதிலும், அவர்கள் பெற்ற மாத வருமானம் ரூ.1,500 க்கு குறைவானதாகவே இருந்து வந்தது. எல்லா வருமானங்களையும் சேர்த்துப் பார்க்கும் போது சராசரி மாத வருமானம் 2,828 ரூபாவாக இருந்து வந்துள்ளதனை காண முடிகிறது. இதனை ஒரு உயர் வருமானமாக கருத முடியாவிட்டாலும் கூட, இது வறுமைக் கோட்டிலும் பார்க்க உயர்ந்த வருமானமாகவே உள்ளது. குடும்ப உறுப்பினர்கள் இருவர் அல்லது மூவர் தொழில் செய்யும் ஒரு சில குடும்பங்களில் மட்டுமே மாத வருமானம் ரூ.8,500 வரையில் உயர்வானதாக இருந்து வந்தது.

### பிள்ளைகள் புழங்கும் சூழல்

இந்தப் பெற்றோர் பரந்த சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இருந்து வருவது போல, விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் பிள்ளைகளும் பல விடயங்களில் சாதாரண பிள்ளைகளாகவே இருந்து வருகின்றனர். அவர்கள் துடிப்பும் சுறுசுறுப்பும் கொண்ட பிள்ளைகளாக உள்ளனர்; மனவாட்டத்தினையோ ஒதுங்கிப்போகும் உணர்வுகளையோ அவர்கள் வெளிப்படுத்திக் காட்டுவதாக தெரியவில்லை. இவர்களில் பல சிறுவர்கள் அயலவருடனும், ஏனைய சிறுவர்களுடனும், பாடசாலை நண்பர்களுடனும் கிராம நண்பர்களுடனும் பழகி வருகின்றனர். அவர்களுடைய பாலுறவுடனான எதிர்கொள்ளல்கள், ஏதேனும் ஒரு நோய்க்குறி நிலையொன்றின் வெளிப்பாடாக நிச்சயம் இருந்து வரவில்லை. பொழுதுபோக்குகளை பொறுத்தமட்டில், விளையாட்டுக்கள (45%), வாசிப்பு (13%), ஆடல் பாடல் (10%) மற்றும் கடற்கரையில் விளையாடுதல் (8%) என்பன முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிள்ளைகளில் ஒரு பிள்ளை மட்டுமே, பாடசாலைக்கு செல்வதுடன் பகுதி நேர தொழிலொன்றிலும் ஈடுபட்டு வந்தது. எனவே, (பணத்துக்காக) விபச்சாரத்தில் ஈடுபடுவதனை அவர்கள் ஒரு தொழிலாக கருதி வரவில்லை என்பதனை இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டும். அவர்கள் பாலுறவினை ஒரு பொழுது போக்காக கருதுகின்றார்களா? இது குறித்து பேசுவதற்கு கூச்சப்பட்டாலும் கூட, பெரும்பாலானவர்களைப் பொறுத்தமட்டில் இது தான் உண்மைபோல் தோன்றுகின்றது.

இப்பிள்ளைகளில் சுமார் நான்கிலொரு பங்கினர் (25.28%) விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்ற சிரமமான பாடங்களில் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், பாடசாலை நேரத்தின் பின்னர் டியுட்டரி ஒன்றுக்கும் சமூகமளித்து வந்தனர். ஆனால், கல்விக்கு இத்தகைய மேலதிக செலவுகளை மேற்கொள்வதற்கான வசதிகள் பெரும்பாலானவர்களிடம் இருக்கவில்லை. கல்வியில் அவர்கள் மேலதிக நேரத்தை செலவிட்டு வருவது, சுற்றுலாப் பயணிகளிடம் பாலுறவில் ஈடுபடுவதினின்றும் அவர்களை தடுத்து வரவில்லை. இவர்களில் சுமார் 86% பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைக்கு சமூகமளித்து வருகின்றார்கள்; சுமார் 13% மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை என ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிள்ளைகளில், ஒரேயொரு 16 வயது பையனைத் தவிர ஏனைய பிள்ளைகள் அனைவரும் தமது முதல் பாலுறவினையும் அடுத்தடுத்த உறவுகளையும் வெளிநாட்டு ஆண் அல்லது பெண் ஒருவருடனேயே வைத்துக் கொண்டிருந்தனர். இந்த மாதிரியில் தொடக்க வயது 10 வருடங்களாக (12.64%) இருந்ததுடன், முடிவு வயது 15 வருடங்களாக (8.05%) இருந்தது. ஆகக்கூடிய விகிதத்தினர் 12 (35%), 13 (20%), 14 (13%) ஆகிய வயதுத் தொகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள். ஆண், பெண் அடிப்படையில் நோக்கும் பொழுது பகிர்வு அநேகமாக ஒரே மாதிரியாகவே இருந்தது.

இந்த நிலைமை இச்சமூகத்தின் பாலியல் வாழ்க்கை மாதிரியின் ஓர் அங்கமாக நிச்சயமாக இருந்து வரவில்லை. ஏனெனில், இந்தச் சமூகத்திலும், ஒருவர் திருமணம் செய்யும் வரையில் பாலுறவில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது. வயது வந்தவர்களில் பெரும்பாலானவர்களிடையே கூட, ஒழுக்கக்கேடான பாலியல் நடைமுறைகள் நிலவி வரவில்லை. அப்படியானால், இந்தப் பிள்ளைகள் வெளிநாட்டவர்களுடன் உறவு கொள்ளக் கூடியவர்களாக ஏன் மாற்றமடைந்துள்ளார்கள்? பிள்ளைகள் பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வந்தார்கள் என்பதற்கோ அல்லது பாலுறவில் பயன்படுத்திக் கொள்ளப்படுவதற்காக குறிப்பிட்ட ஓரிடத்தில் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கோ எத்தகைய ஒரு சான்றும் கிடைக்கவில்லை. மாறாக, வெளிநாட்டவர்களுடன் பழங்கி, தமது தொடக்க அச்ச உணர்வுகளை போக்கிக் கொண்ட பின்னர், அவர்கள் தாமாகவே விரும்பி இத்தகைய உறவுகளில் ஈடுபடத் தொடங்குகின்றனர்.

ஆண் பிள்ளைகள் 55 பேரில் பெரும்பாலானவர்கள் (61%) வெளிநாட்டு ஆண்களுடன் பாலுறவு கொண்டிருந்தனர்; 23 சதவீதத்தினர் வெளிநாட்டு பெண்களுடன் உறவு கொண்டிருந்தனர். மிகுதி ஆண் பிள்ளைகள் வெளிநாட்டு ஆண், பெண் குழுவினருடன் – வழமையாக ஒரு வெளிநாட்டு ஜோடியுடன் – பாலுறவை வைத்துக்கொண்டிருந்தனர். பெண் பிள்ளைகள் 32 பேரில் பெரும்பாலானவர்கள் (56%) வெளிநாட்டு ஆண்களுடன் பாலுறவு வைத்திருந்தனர்; 34% பேர் வெளிநாட்டுப் பெண்களுடன் உறவு வைத்திருந்ததுடன், மிகுதிப் பேர் ஆண்களுடனும் பெண்களுடனும் ஒரே நேரத்தில் உறவு கொண்டிருந்தனர்.

விபச்சாரத்தில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு ஆண்களினதும் பெண்களினதும் வயது அமைப்பைப் பொறுத்த மட்டில், அவர்கள் பெரும்பாலும் 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருந்து வந்தனர். ஆண் பிள்ளைகளுடன் உடலுறவில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு ஆண்களில் சுமார் 70 சதவீத்தினர் இந்த வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பெண் பிள்ளைகளுடன் பாலுறவில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டுப் பெண்களில் பெரும்பாலானவர்களும் (54%) இந்த வயதுப் பிரிவில் உள்ளவர்களாக இருந்தனர்; 46% வெளிநாட்டுப் பெண்கள் ஆண் பிள்ளைகளுடனும், 66% வெளிநாட்டு ஆண்கள் பெண் பிள்ளைகளுடனும் உறவு வைத்திருந்தனர். இவ்விதம் உறவுகளில் ஈடுபட்டு வரும் இளம் வெளிநாட்டு பயணிகளில் அதிகமானவர்கள் ஜெர்மனி, சுவீடன் போன்ற வட ஐரோப்பிய நாடுகளிலிருந்தே வருகின்றனர்.

## பாலுறவு கொள்ளும் முறை

சுற்றுலாப் பயணிகளுக்கும் உள்ளூர் சிறுவர், சிறுமியர்களுக்கும் இடையிலான பாலுறவு பல்வேறு முறைகளில் இடம் பெற்று வருகின்றது. சுமார் 22% பிள்ளைகள் வாய்மூலமான பாலுறவில் ஈடுபட்டு வந்துள்ளனர்; அதாவது, ஒன்றில், இவர்கள் வெளிநாட்டுப் பயணிகளின் பாலுறுப்புக்களை தமது வாய்க்குள் எடுப்பதன் மூலம் பாலுறவில் ஈடுபட்டுள்ளனர்; அல்லது, பயணிகள் இப்பிள்ளைகளின் பாலுறுப்புக்களில் வாயை உபயோகித்து உறவு கொண்டுள்ளனர். சுமார் 21% பிள்ளைகள் – ஆண்பிள்ளைகள் மட்டும் – பின்துவாரத்தின் மூலமான பாலுறவுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். 12% பிள்ளைகள் வாய்மூலம் மற்றும் பின்துவாரத்தின் மூலமான உறவுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்; இதிலும் ஆண் பிள்ளைகள் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். மேலும், 12 சதவீதம் பிள்ளைகள் வாய் மூலமான மற்றும் கால்களுக்கிடையிலான பாலுறவில் சம்பந்தப்பட்டிருந்தனர். பெண் பிள்ளைகளில் சுமார் 28 சதவீதத்தினர் வாய்மூலமான – அதாவது தமது பாலுறுப்பை மற்றவரின் வாய்க்குக் கொடுத்தோ அல்லது மற்றவரின் பாலுறுப்பில் தனது வாயை உபயோகித்தோ – உறவில் ஈடுபட்டு வந்திருந்தனர். வெளிநாட்டுப் பெண்களை தமது பாலுறவு கூட்டாளிகளாக கொண்டிருந்த பெண் பிள்ளைகளில் 28 சதவீதத்தினர், வாய்மூலமான மற்றும் கால்களுக்கிடையிலான உறவில் ஈடுபட்டு வந்தனர். சுமார் 21 சதவீதத்தினர் மட்டுமே (பெரும்பாலும் பெண்கள்) ஆண்களுடன் அல்லது பெண்களுடன் கால்களுக்கிடையில் உறவு கொள்ளும் முறைக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர். பாலுறுப்புக்களில் உறவு கொள்வது ஆண் பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் 6% ஆகவும், பெண் பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் 9% ஆகவும் இருந்து வந்தது. மிகுதிப் பேர் பாலுறுப்பை கையினால் தடவி சுகம் அனுபவித்தல் மற்றும் வேறுவகைப்பட்ட பாலுறவு நடவடிக்கைகள் என்பவற்றில் ஈடுபட்டு வந்தனர்.

வெளிநாட்டுப் பயணிகள் பாலுறவு வைத்து வந்துள்ள விதத்தை நோக்கும் பொழுது, எய்ட்ஸ் அபாயம் குறித்து அவர்கள் சற்றும் எச்சரிக்கையுணர்வுடன் செயற்பட்டு வரவில்லை என்பதனை காண முடிகிறது. உதாரணமாக, (ஒன்றைத்தவிர) பாலுறுப்புக்களில் உறவு கொள்ளல், வாய்மூலமான செக்ஸ், பின்துவாரத்தில் புணர்தல் போன்ற

அனைத்து நடவடிக்கைகளிலும் அவர்கள் ஆணுறைகளை அறவே பயன்படுத்த வில்லை. ஆண் பிள்ளைகளுடன் பாலு றுப்பில் உறவு கொண்ட சில வெளிநாட்டுப் பெண்கள், உறவுக்கு முன்னர் பிள்ளை களின் ஆண் குறிகளில் ஒரு வகையான களிம்பினை தடவி வந்துள்ளனர். எய்ட்ஸ் அச்சுறுத்தல் ஒருபுறமிருக்க, வயது முதிராத நிலையில் பாலுறவில் ஈடுபடுவதும், தம்மைவிட வயதில் பல வருடங்கள் மூத்தவராக இருக்கும் நபரொருவருடன் பாலுறவில் ஈடுபடுவதும் பிள்ளைகளுக்கு பெருமளவு பாதிப்புக்களை எடுத்து வர முடியும்.

பெரும்பாலான பிள்ளைகள் (ஆண்கள் 69%; பெண்கள் 53%) தனியொரு செக்ஸ் கூட்டாளியுடன் மட்டுமே உறவு வைத்துக் கொண்டிருந்தனர். ஆகக்கூடிய எண்ணிக்கையிலான செக்ஸ் கூட்டாளிகள் ஆண் பிள்ளைகளைப் பொறுத்தவரையில், 5 பேராகவும், பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் 7 பேராகவும் இருந்தனர். கணிசமான அளவு பிள்ளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட செக்ஸ் கூட்டாளிகளை கொண்டிருந்ததுடன், தமது கூட்டாளிகள் மீண்டும் திரும்பி வந்தால் அவர்களுடன் உறவு வைத்துக் கொள்ளும் ஒரு போக்கினையும் காட்டினர். இந்த வகையில், சுமார் நான்கிலொரு பங்கு பிள்ளைகள், பயிற்சியற்ற செக்ஸ் நடை முறைகளிலிருந்து நகர்ந்து, தொழில் ரீதியான செக்ஸ் உறவு முறையை நோக்கி சென்று கொண்டிருந்தனர். ஒவ்வொரு சமூகத்திலும், விடலைப் பருவத்தைச் சேர்ந்த தொழில்சார் ஆண், பெண் விபச்சாரிகள் இருந்து வருவதனை அவதானிக்க முடிந்தது. முன்னர் விபச்சாரத்தில் ஈடுபட்டு வந்த சிறுவர்களே இவ்விதம் தொழில் முறை விபச்சாரிகளாக முதிர்ச்சி கண்டுள்ளார்கள் என்று நம்புவதற்கு காரணமுள்ளது. சிறுவர்க ளைத் தவிர்த்து, விபச்சாரத்துக்காக வயது முதிர்ந்த கூட்டாளிகளை நாடும் வெளி நாட்டவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இவர்கள் காலப்போக்கில் முன்வரக்கூடும்.

## சந்திப்பு முறைகள்

சிறுவர்களுக்கும் வெளிநாட்டவர்க ளுக்குமிடையிலான சந்திப்புக்கள் பல்வேறு முறைகளில் இடம் பெற்று வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. சுமார் 41% பிள்ளைகள் தமது செக்ஸ் கூட்டாளிகளை கடற்கரையில் சந்தித்துள்ளனர்; வேறு சிலர் (9%) பாடசாலை சென்று திரும்பும் வழியில் அல்லது நகரத்தில் (4%) சந்தித்துள்ளனர். சில சிறுவர்கள் ஜேர்மன் மொழியில் அல்லது ஆங்கிலத்தில் வெளிநாட்டவர்களுடன் ஓரிரு வார்த்தைகள் பேசி, நட்புக் கொண்டு சந்திப்புக்களை மேற்கொள்கின்றார்கள். பெரும்பாலான பிள்ளைகள் (22%) வெளிநாட்டவர்களை தமது வீடுகளிலேயே சந்தித்துள்ளனர்; குறிப்பிட்ட ஒரு வீட்டுடன் – புடவை போன்ற பொருட்களை வாங்குவதன் மூலம்- ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ள பயணிகள் அவ்வீட்டுக்கு வரும் பொழுது இத்தகைய சந்திப்புக்கள் இடம் பெறுகின்றன.

வீட்டில் வெளிநாட்டவர்களைச் சந்தித்தவர்களில் பெரும்பாலானவர்கள் (46%) பெண் பிள்ளைகளாவர். மேலும் 11 சதவீதத்தினர், தம்மை ஹோட்ட லொன்றுக்கு அல்லது கடற்கரைக்கு அழைத்துச் சென்ற ஏனைய நபர்களுக்கூடாக வெளிநாட்டவர்களைத் தெரிந்து கொண்டனர். பெற்றோர், சகோதரர் அல்லது வெளிநாட்டவர்களுடன் வேறு வகையான தொடர்புகளைக் கொண்டிருந்த நெருங்கிய உறவினர் என்போர் இந்த "ஏனைய நபர்கள்" என்ற வகையில் அடங்குகின்றனர்; அல்லது ஏற்கனவே விபச்சாரத்தில் ஈடுபட்டுவந்த சகாக்கள் இதற்கான ஏற்பாட்டாளர்களாக செயற்பட்டு வந்தனர்.

## கொடுப்பனவு

பாலுறவு சேவைகளை வழங்கு வதற்கான கொடுப்பனவுகளை பெரும்பாலான பிள்ளைகள் (88%) பண வடிவிலேயே பெற்றுக் கொண்டனர். ஏனையவர்கள் உணவுப் பார்சல்கள், இனிப்புக்கள், ஆடை வகைகள் மற்றும் பாடசாலைக்குத் தேவையான பொருட்கள் என்பவற்றின் வடிவில் கொடுப்பனவு களைப் பெற்று வந்தனர். கொடுப்பனவுத் தொகை, பொதுவாக எத்தனை தடவை உறவு வைத்துக் கொள்ளப்பட்டது என்பதன் அடிப்படையிலேயே நிர்ணயிக் கப்பட்டு வந்தது. (சராசரியாக ஒரு தடவைக்கு 200 ரூபா அளவில் வாங்கப்பட்டு வந்தது). மேலும், ஆண் பிள்ளைகளிலும், பார்க்க பெண் பிள்ளைகளுக்கு கொடுப்பனவுகள் அதிகமாக வழங்கப்பட்டன. சுமார் 1,000 ரூபா வரையில் கொடுப்பனவு பெற்றவர்களில் ஆண்கள் 48% ஆகவும், பெண்கள் 15% ஆகவும் இருந்தனர். அதேவேளையில், ரூ.1,000 க்கு அதிகமாக கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்ட வர்களில் பெண்களே அதிகமாக இருந்தனர்.

## பிள்ளைகளின் எதிர்காலம்

பெருந்தொகையான பிள்ளைகள் (82%) தாம் சுற்றுலாப் பயணிகளுடன் பாலுறவு கொள்வதனை நிறுத்திக் கொண்டிருப்பதாக கூறிய போதிலும், அவர்கள் அதற்கு முன்வைத்த காரணங்கள், மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்த மாத்திரத்திலேயே அத்தகைய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவார்கள் என்பதனைக் குறித்துக் காட்டின. வெளிநாட்டவர் இலங்கையை விட்டுச் சென்றிருப்பதே தாம் உறவை நிறுத்திக் கொண்டதற்கான காரணம் என பெருந்தொகையானோர் (72%) தெரிவித்தனர். அதேவேளையில், இந்த அனுபவத்தை தாம் விரும்பவில்லை என 12 சதவீதத்தினர் தெரிவித்தனர். போலீஸ் பயம் (5%), பெற்றோரின் புத்திமதி (6%) மூத்த சகோதரரின் புத்திமதி (1%) போன்ற காரணங்களை ஒரு சில பிள்ளைகள் தெரிவித்தனர்.

## சமூக கட்டுப்பாடு

குடும்பத்துக்குள் அல்லது குறிப்பிட்ட சமூகத்துக்குள் சமூக கட்டுப்பாடு குறைவாக இருந்து வருவது, இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு தூண்டுதல் அளித்துவரும் முக்கிய பங்களிப்புக் காரணியாக உள்ளது. கடும் வறுமை இச்சமூகத்தில் அநேகமாக நிலவி வரவில்லை என்றே கூற வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளுடன் பொருளாதாரக் காரணிகள் மிகக் குறைந்த அளவிலேயே சம்பந்தப்பட்டிருப்பதனை காண முடிகிறது. பெற்றோரின் மனப் பாங்குகள் குறித்து வினவப்பட்ட பொழுது, தமது நடவடிக்கைகளை பெற்றோர் அறிந்திருக்கவில்லையென சுமார் 35% பிள்ளைகள் தெரிவித்தனர்; அத்துடன் தமக்கு கிடைக்கும் பணத்தையும் தாம் ஒளித்தே செலவழித்து வருவதாகவும் கூறினார்கள். தாம் என்ன செய்தாலும் அதனைப் பெற்றோரோ அல்லது

குடும்பத்தில் உள்ள மூத்தவர்களோ அதிகளவு பொருட்படுத்தவில்லை என வேறு சில பிள்ளைகள் தெரிவித்தனர். அவர்கள் குடிகாரர்களாகவோ வீட்டில் சண்டை பிடிப்பவர்களாகவோ அல்லது காலையில் வேலைக்குச் சென்று இரவு தாமதமாக வீடு திரும்புபவர்களாகவோ இருந்து வந்ததனால், தமது நடவடிக்கைகளை கவனிப்பதற்கு அவர்களுக்கு நேரமிருக்கவில்லையென இப் பிள்ளைகள் கூறினர்.

பெற்றோரில் சிறு தொகையினர் (41%) தமது பிள்ளைகளின் முறைகேடான நடத்தையை அறிந்துகொண்டபொழுது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப் பழக்கத்தை உடனடியாக நிறுத்தி விடுமாறு பிள்ளைகளை வற்புறுத்தினர். கணிசமானளவு வயது முதிர்ந்தோர் (17%) இந்த நடப்புக்களை நன்கு அறிந்திருந்தனர்: இந்த பாலுறவு நடவடிக்கைகள் குடும்பத்துக்கு எடுத்துவரும் பண வருமானங்களை அவர்கள் பெரிதும் மதித்ததனாலும், பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வதாக அல்லது திருமணம் செய்து கொள்வதாக வெளிநாட்டவர்கள் வாக்குறுதி அளித்திருந்தமையாலும் இதனை எதிர்க்காது வாளாவிருந்தனர்.

சிங்கள சமூக அமைப்பு (பர்மிய மற்றும் தாய்லாந்து சமூக அமைப்புக்களைப் போலவே) தளர்வான கட்டமைப்பொன்றினைக் கொண்டுள்ளது என சில சமூக விஞ்ஞானிகள் கூறிவருவது, இந்தப் பின்னணியில் நம்பகத்தன்மையைப் பெறுகின்றது: அதாவது, வாழ்க்கை நிலைமைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த கண்டிப்பான விதிமுறைகளும் எதிர்பார்ப்புக்களும் குறைவாக இருந்து வரும் ஒரு நிலையை, வெளிநாட்டவர்களுடன் விபச்சாரத்தில் ஈடுபடும் நடவடிக்கை பிரதிபலித்துக் காட்டுகின்றது. இதற்கு மாறாக, இதே மாவட்டத்தைச் சேர்ந்த சுற்றுலா அமைவிடங்களுக்கு மிக அருகாமையில் வாழ்ந்துவரும் முஸ்லிம் சமூகங்கள் சுற்றுலாத் துறையின் செக்ஸ் அம்சத்துடன் பெரும்பாலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை: அதிலும், குறிப்பாக சிறுவர் விபச்சாரம் அறவே இடம்பெற்று வரவில்லையென்றே கூறவேண்டும். இத்தகைய சமூகங்களில் சமய அமைப்புக்கள் கண்டிப்பான சமூக விதிமுறைகளை விதித்து வருவதே இதற்கான காரணமாகும்.

### அபிலாஷைகள்

பெரியவர்களாக வளர்ச்சியடையும் பொழுது தாம் என்ன நிலையை அடைய வேண்டும் என்பது குறித்து, பெரும்பாலான பிள்ளைகள் தெளிவான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். சாதாரண சமூகத்துடனான அவர்களுடைய பிணைப்புக்கள் உறுதியானவையாக இருந்து வருகின்றன என்பதனையும், சுற்றுலாப் பயணிகளுடனான உறவு அவர்களுடைய மனநிலையை இன்னமும் பாதித்துவிடவில்லை என்பதனையும் இது எடுத்துக் காட்டுகிறது. பெரும்பாலான பிள்ளைகள் உயர் கல்வியை மேற்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்தனர். இரு சிறுமிகள் தாம் டாக்டர்களாக விரும்புவதாக தெரிவித்ததுடன், வேறு இருவர் பள்ளி ஆசிரியர்களாக வர விரும்புவதாக கூறினர். சுமார் 14 சதவீதத்தினர் வெளிநாடு செல்வதில் ஆர்வம் காட்டினார்கள். இந்த ஆய்வின் முக்கிய கண்டு பிடிப்புக்களை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

### சிறுவர் விபச்சாரம்: பரந்த சமூகத்தின் ஓர் அம்சம்

சுற்றுலாப் பயணிகளுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டு வரும் சிறுவர்களில் பெரும்பாலானவர்கள், பொதுவாக கருதப்படுவதுபோல, ஒரு கீழ் தட்டு சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது வறுமை உப கலாச்சார குழுவொன்றைச் சேர்ந்தவர்களாகவோ இருந்து வரவில்லை: மாறாக, அனைத்து அம்சங்களிலும் அவர்கள் பரந்த சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினராகவே இருந்து வருகின்றனர். அவர்கள் வாழும் சமூகத்தின் அனைத்து சமூக-பொருளாதார மட்டங்களிலிருந்தும் அவர்கள் வருகின்றார்கள். அவர்கள் ஒழுங்காக பாடசாலைக்கு செல்கிறார்கள்: சராசரி ஆளுமை வளர்ச்சி மட்டங்களைக் கொண்டுள்ளார்கள்: ஏனைய பிள்ளைகளைப் போலவே இயல்பான ஆர்வங்களை, பொழுதுபோக்குகளை, விருப்பங்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள். சமூகத்திலிருந்து தடம் புரண்டு சென்றவர்கள் என்றோ அல்லது மனோ வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் என்றோ அவர்களை கருத முடியாது. சட்ட நடவடிக்கையின் பிடிக்குள் அவர்கள் மிகக் கடுமையான முறையில் எடுத்து வரப்பட்டால், அவர்களுடைய நடத்தை மாதிரிகள் மேலும் தீவிரமடைந்து இளம் குற்றவாளிகள் என்ற பிரிவுக்குள் அவர்கள் பிரவேசித்துவிட முடியும்.

### தூண்டும் காரணிகள்

சிறுவர் விபச்சாரத்துக்கு, ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பல காரணிகள் பங்களிப்புச் செய்து வருவதனை காண முடிகிறது. வீட்டில் படிப்பதற்கு வசதியில்லாமை, பொருத்தமற்ற வீடுகள், மூத்தவர்களின் கண்காணிப்பு இல்லாமை, பெற்றோர், பாதுகாவலர் மற்றும் சமூகத் தலைவர்களின் அலட்சியம், பிள்ளைகளின் நடமாட்ட சுதந்திரம், சுற்றுலாத்துறையின் ஏதாவது ஒரு பிரிவில் ஏற்கனவே ஈடுபட்டு வரும் பெற்றோரின் அல்லது மூத்த சகோதரரின் தூண்டுதல் மற்றும் வறுமை போன்ற காரணிகள் இதற்குள் பிள்ளைகளைப் பிடித்து தள்ளி வருகின்றன. பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து பெற்றோரின் அலட்சியமும் போதிய கண்காணிப்பின்மையும் இவற்றில் மிக முக்கியமான காரணியாக இருந்து வருகின்றது. இது, சிறுவர்கள் விபச்சாரத்துக்கு தூண்டியிழுக்கப்படும் ஒரு நிலைமைக்குள் அவர்களைத் தள்ளிவிடுகின்றது. இத்தகைய சிறுவர்கள், இந்த வகையைச் சேர்ந்த பாலுறவுத் திருப்தியை நாடிவரும் வெளிநாட்டவர்களுக்கு எளிதில் இரையாகி விடுகின்றனர். இனிப்புப் பண்டங்கள், ஆடைகள், பேனாக்கள், உணவுப் பார்சல்கள், பணம் மற்றும் வெளிநாடு செல்லக்கூடிய வாய்ப்பு போன்றவை விபச்சாரத்துக்கு சிறுவர்களை உந்தித் தள்ளும் காரணிகளாக இருந்து வருகின்றன. இவை சிறுவர்களை ஒரு மாய உலகுக்குள் இட்டுச் செல்கின்றன.

பெரும்பாலான சிறுவர்கள் மிக மோசமான வறுமை நிலையில் இருந்து வரவில்லை. எனவே, விபச்சாரம் அவர்களைப் பொறுத்தமட்டில், வேண்டுமென்றே வரவழைத்துக் கொள்ளும் ஒரு கேடாக இருந்து வருகின்றது. இரண்டாந்தரக் கல்வியை முடித்த பின்னர் அவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள். இளைஞர்களாக வாழ்க்கையை எப்படி ஆரம்பிப்பது என்ற பிரச்சினை அவர்கள் முன் தோன்றும். உள்ளூர் வேலைவாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டவையாக இருந்து

வருகின்றன. தனிப்பட்ட அபிலாஷைகளை நிறைவு செய்து கொள்வதற்கான பொருளாதார வாய்ப்புக்களும், கல்வி வாய்ப்புக்களும் கிடைத்தாலேயொழிய, இவர்களில் பெரும்பாலானவர்கள் தொழில் முறை விபச்சாரிகளாக மாறிவிடக் கூடிய அபாயம் நிலவி வருகின்றது. விபச்சாரம் ஒரு வாழ்க்கை மாதிரியாக இவர்களிடையே வேரூன்றி விடுமானால், அவர்களை மீண்டும் சாதாரண சமூகத்துக்குள் எடுத்து வருவது சிரமமானதாகிவிடும்.

### மோசமான தாக்கங்கள்

சிறுவர் விபச்சாரம் இலங்கைக்கு பெற்றுக் கொடுத்துள்ள அபகீர்த்தி ஒருபுறமிருக்க, முதிரா பருவத்தின் பாலுறவும், வயது முதிர்ந்தவர்களுடனான பாலுறவும் சிறுவர்களின் மன நிலையில் எடுத்துவரக்கூடிய தாக்கங்கள் மதிப்பிடப் படுதல் வேண்டும். இந்தப் பிள்ளைகள் அனைவருமே அநேகமாக பாடசாலைகளுக்கு சமூகமளிப்பவர்களாக இருந்து வந்த போதிலும், எவருமே படிப்பில் நல்ல கெட்டிக்காரர்களாக இருந்து வரவில்லை; அவர்களுடைய வெளிநடவடிக்கைகள் இதற்கு பங்களிப்புச் செய்திருக்க முடியும். மேலும், இச்சிறுவர்கள் அனைவரும் பாதுகாப்பற்ற முறையிலான பாலுறவுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதனால், எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் என்பவற்றை எதிர்நோக்கக்கூடிய அபாய ஏதுவையும் கொண்டுள்ளனர்.

இந்த ஆய்வு ஒரு சிறிய புவியியல் பிரதேசத்துக்கு மட்டுமே வரையறுக்கப் பட்டதாக இருந்து வந்தது; அத்துடன், குறிக்கப்பட்ட ஒரு காலப் பிரிவுக்குள் அது முடிக்கப்பட வேண்டியுமிருந்தது. எனவே, விபச்சாரத்தில் ஈடுபட்டுவரும் சிறுவர்களின் சரியான எண்ணிக்கையை இந்த ஆய்விலிருந்து மதிப்பிட்டுக் கொள்வது அநேகமாக சாத்தியமில்லை. இந்த ஆய்வுக்கான மாதிரியின் அளவு உயர்த்தப்பட்டிருந்தால், விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த சிறுவர்களின் எண்ணிக்கை இந்த ஆய்வு நிர்ணயித்திருந்த அளவிலும் (அதாவது, பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளில் 2 சதவீத்தினரிலும்) பார்க்க உயர்வானதாக இருந்திருக்க முடியும். சுற்றுலா வலயத்தில் பாடசாலைக்கு சமூகமளிக்கும் மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கையை கவனத்தில் எடுக்கும் பொழுது, இந்த 2 சதவீதமே கணிசமான ஓர் அளவாக இருந்து வர முடியும்.

### சிபார்சுகள்

இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கண்டறிந்து, பிரயோகிப்பதில் பாடசாலைகளும் பாடசாலை அதிகாரிகளும் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வரமுடியும். பள்ளி ஆசிரியர்கள் இப்பிள்ளைகளுடனும், இவர்களுடைய பெற்றோருடனும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருப்பதால், இப்பிரச்சினையை நன்கு அறிந்துள்ளனர். எனினும், இந்த வகையைச் சேர்ந்த சமூகப் பிரச்சினையொன்றைக் கையாள்வதற்குத் தேவையான பயிற்றப்பட்ட ஆளணியினரையும், பொருள் வளங்களையும் பாடசாலைகள் வரையறுக்கப் பட்ட அளவிலேயே கொண்டுள்ளன. இங்கு முன்வைக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட சிபார்சுகள், பாடசாலையை தடுப்பு நடவடிக்கைக்கான மையமாக கவனத்தில் எடுக்கின்றன:

(அ) பிள்ளைகள் விபச்சாரத் துக்கு தூண்டப்படக்கூடிய அபாய ஏது உயர் அளவில் நிலவி வரும் பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளிலாவது, இரண்டு பயிற்றப்பட்ட பணியாளர்கள் வைத்திருக்கப்படுத்தல் வேண்டும்; இவர்கள், விபச்சாரத்தில் ஈடுபட்டுவரும் அல்லது ஈடுபடக்கூடிய நிலையில் இருந்துவரும் சிறுவர்களுக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் கவனிப்பினையும் வழங்கி வர முடியும். இந்தப் பணியாளர்கள், சம்பந்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த வயது முதிர்ந்தவர்களுக்காகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்யக்கூடிய நிலையில் இருந்து வருவார்கள். சேமிப்பினை ஊக்குவிப்பதற்கும், சுகாதார பராமரிப்புக்கும், வீடமைப்பு நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், பிள்ளைகளை கவனித்துக் கொள்வதற்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் வறிய குடும்பங்களிடையே சிறு உதவிக் குழுக்களையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

(ஆ) இலக்குக் குழுவினருக்கென, பாடசாலை நேரத்தின் பின்னர் தொழிற்பயிற்சி வழங்கும் மேலதிக வகுப்புக்களை நடத்த முடியும். இதற்கான நிதிகளை இந்த விடயம் குறித்து அக்கறை காட்டிவரும் தொண்டு நிறுவனங்களிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம். தமது மீட்சிக்கான ஒரே வழி சுற்றுலாத் துறையாகும் எனக் கருதிவரும் பிள்ளைகளின் எண்ணப் போக்கினை இது மாற்றியமைக்கும்.

(இ) பாடசாலைகளில் தற்பொழுது கிடைக்கக் கூடியதாக இருக்கும் பொழுது போக்கு வசதிகள் விரிவாக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) இலக்குக் குழுவினருக்கு சிறி தளவில் வருமானம் எடுத்து வரும் செய்திட்டங்களை பாடசாலையில் ஏற்பாடு செய்ய முடியும். குறிப்பாக இலக்குப் பிரிவுப் பிள்ளைகளின் திறமைகளையும் ஆற்றல்களையும் (உதாரணமாக, வரைதல், நடனம், இசை மற்றும் கைவினை போன்றவற்றை) இதற்காக பயன்படுத்துக் கொள்ளலாம்.

(உ) வயது முதிர்ந்தவர்களிடையே விழிப்புணர்வைத் தூண்டுவதற்கும், கடற்கரைகளில் பிள்ளைகள் அலைந்து திரிவதனைத் தடுப்பதற்கு சமூக கண்காணிப்பு முறையொன்றை உருவாக்கிக் கொள்வதற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை பயன்படுத்திக் கொள்ள முடியும்.



# கட்டுநாயக்கா ஏ.மு. வலயத்தில் மகளிர் ஊழியம் : நடத்தை மாதிரிகள் மீதான தாக்கம்

பேராசிரியர் ரீ. ஹெட்டியாராச்சி
(சமூகவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம்)

கட்டுநாயக்கா ஏற்றுமதி முறைப் படுத்தும் வலயத்தில் வேலை செய்துவரும் இளம் பெண்கள் தனித்துவமான பிறவிகளல்லர்; அவர்கள் இலங்கையின் பரந்த சமூகதிலிருந்து அங்கே வந்துள் ளார்கள்; அந்தச் சமூகத்தின் விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகள் என்பவற்றுடன் வளர்ந்தவர்களாகவும் உள்ளனர். பொதுவில், இந்த இளம் பெண்கள் வறிய கிராமிய சமூகங்களைச் சேர்ந்த வர்களாக இருந்து வருவதுடன், ஒரு பாரம்பரிய பின்னணியையும் கொண்டுள் ளனர். அவ்வாறானால், தாங்கள் வளர்க்கப்பட்ட இலங்கையின் பாரம்பரிய சமூகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட சமூகமொன்றினை பிரதிநிதித்துவம் செய்யும் மகளிர் குழுவொன்றாக அவர்கள் மாற்றமடைந்தது எப்படி? தனியான ஒரு உப கலாச்சாரத்தைக் கொண்ட சமூகப் பிரிவினராக அவர்களை அடையாளம் கண்டு கொள்வதனை சாத்தியமாக்கும் இந்த வித்தியாசங்கள் தோன்றியது எவ்விதம்? இந்த உப கலாச்சாரம், இந்தப் பெண் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்தே எழுச்சியடைந் துள்ளது என்பது எமது அனுமானமாகும். இந்தப் பிரச்சினைகளை அவர்கள் தமது புதிய வேலைசெய்யும் /வாழும் சூழ்நிலைகளில் எதிர் கொள்கின் றார்கள். அத்தகைய ஒரு நிலைமையில், சவால்களை எதிர்கொள்வதற்காக ஒரு புதிய நடத்தை மாதிரியை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

முதலில், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக எடுத்து நோக்குவோம். இதில் காணப்படும் மிக முக்கியமான அம்சம், பெருமளவுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு சிறு பிரதேசத் துக்குள் உயர் எண்ணிக்கையிலான இளம் பெண்கள் ஒன்று திரண்டிருப்பதாகும். இது சுதந்திர வர்த்தக வலயத்தைச் சூழவுள்ள சமூகத்தின் பால் விகிதா சாரத்தை முற்றிலும் மாற்றியமைத்துள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்தின் அயல் பகுதிகளில் சுமார் 70,000 இளம் பெண்கள் ஒன்று திரண்டிருப்பதாக தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இந்த வகைக்குள் வருபவர்களில் பெரும்பாலான வர்கள் 18-25 வயதுத் தொகுதிக்குட்பட்ட இளம் பெண்களாவர். இவர்களில் 10 சதவீதத்துக்கும் குறைவானவர்களே திருமணம் செய்தவர்களாக இருந்து வருகின்றனர். மேலும், பெரும்பாலான வர்கள் விடுதிகளிலேயே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். சுதந்திர வர்த்தக வலயத்தின் தொடக்கத்தின் போது, தேவைப்பட்ட ஊழியம் சுற்றுப்புறங்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்பட்டபோதும், இன்று நாட்டின் அனைத்துப்பகுதிகளிலிருந்தும் -அநுராத புரம், மாத்தறை, பதுளை போன்ற தொலைதூரப் பகுதிகளிலிருந்து- ஊழியர்கள் இங்கு வருகின்றார்கள்.

பெரும்பாலான இளம் பெண்கள் தமது ஊதியத்தில் ஒரு பகுதியை, குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் வீடுகளுக்கு அனுப்பி வந்த போதிலும், வீட்டாருடனான பயனுள்ள தொடர்புகளை வைத்துக் கொள்வது அவர்களைப் பொறுத்தவரையில் அநேகமாக சாத்தியமற்றதாகவே உள்ளது. இந்த உழைக்கும் பெண்கள் குறிப்பிட்ட சில வருடாந்த விடுமுறை நாட்களுக்கு உரித்துடையவர்களாக இருந்து வருகின்றனர்; ஆனால், பெரும்பாலானவர் களைப் பொறுத்தவரையில், தமது பெற்றோரைப் பார்ப்பதற்காக வருடத்துக்கு ஒரு முறை வீட்டுக்குச் செல்வதும் கூட முடியாத காரியமாக உள்ளது.

ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயத்தில் அவர்கள் தங்கியிருக்கும் ஆரம்ப வருடங்களின் போது, 6 மாத காலத்துக்கு தற்காலிக பணியில் அவர்கள் அமர்த்தப் படுகின்றனர். இந்தப் பணிக் காலம் ஒன்றில் நீடிக்கப்படுகின்றது; அல்லது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்படு கின்றது. அவ்விதம் சேவை முடிக்கப்பட்டால், வேறெங்காவது வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கும், மேலும் ஒரு தொழில் பயிற்சிக் காலத்தை முடிப்பதற்கும் அவர்கள் நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இந்த நிலைமைகளில், இந்தப் பெண்களால் தமது பெற்றோரின் குடும்பங்களைப் போய்ப் பார்த்து வருவதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை.

மறுபுறத்தில், இந்தப் பெண்களின் பெற்றோர் பிறிதொரு கையறு நிலையில் இருந்து வருகின்றனர்; அவர்கள் வறியவர்களாக இருந்து வருவதனால், வருடத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறைக்கு மேலதிகமாக தமது பிள்ளைகளைச் சென்று பார்ப்பதற்கான பொருளாதார வசதி அவர்களிடமில்லை. இதன் விளைவாக, இந்த இளம் பெண்களுக்கும் தமது பெற்றோர்களுக்கு மிடையில் இதுவரை காலமும் நிலவி வந்த மிக நெருக்கமான பிணைப்பு குன்றிச் செல்கின்றது. இது தவிர, இந்த இளம் பெண்கள் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் எந்த சமூகத்துக்குள் வந்திருக்கின்றார்களோ, அந்தச் சமூகத்தி லிருந்து அவர்களுக்கு சொற்ப அளவிலான ஆதரவு மட்டுமே கிடைத்து வருகின்றது.

இந்தப் பெண்பிள்ளைகள் தமது விடுதிகளில் ஆடு மாடுகளைப் போல

அடைக்கப்பட்டுள்ளார்கள். தொழிற்சாலைகளில் ஓர் இயந்திரத்தின் பாகங்களை போல உணர்ச்சியும் ஜீவனுமற்ற ஒரு வாழ்க்கையை அவர்கள் நடாத்தி வருகின்றார்கள். மேலும், சாத்தியமற்ற இலக்குகளை நிறைவு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். பரந்த சமூகத்துக்குள்ளேயும் கூட அவர்கள் சிறந்த முறையில் கவனிப்பினைப் பெற்று வரவில்லை. இந்தப் பெண்களின் எளிதில் ஊறுபடத்தக்க நிலைமைகளை நன்கு புரிந்து கொண்டுள்ள ஆண்கள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை பயன்படுத்தி கொள்ள முயன்று வருகின்றனர். பொதுமக்கள் அவர்களை ஒருவிதமான ஏளனத்துடன் நோக்குகிறார்கள்: அவர்களை பகிரங்க மாகவே (ஜுக்கி கெலி, படுகெலி, மெசின் கெலி போன்ற) பட்டப் பெயர்களைச் சொல்லி பரிகாசமாக அழைத்து வருகின்றனர். உழைக்கும் பெண்கள் இந்த நிலைமையை பல்வேறு வழிகளில் எதிர்கொள்கின்றனர். தொடக்க கட்டத்தில் பெரும்பாலான பெண்கள் மனமுறி வடைவதுடன், அவர்களுடைய சகாக்கள் தொடர்ச்சியாக அவர்களுக்கு ஆறுதலளிக் கின்றார்கள். காலப்போக்கில் பலர் இந்த நிலைமையை ஏற்றுக் கொள்வதுடன், புதிய சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்துச் செல்ல பழகிக் கொள்கின்றனர். இந்த அனுசரிப்பு நிலை, அவர்களுடைய மனப் பாங்குகளிலும் நடத்தையிலும் மிகத் தீவிரமான ஒரு மாற்றத்தை எடுத்து வருகின்றது. அது தனியொரு உப கலாச்சாரக் குழுவினராக அவர்களை அடையாளம் கண்டு கொள்வதனையும் சாத்தியப்படச் செய்கின்றது. சிலர் இந்த உப கலாச்சாரத்தை, தம்மை இத்தகைய நிலைக்கு ஆளாக்கிய சமூகத்தின் மீது பழி வாங்க வேண்டும் என்ற வன்மத்துடன், மிகத் தீவிரமான முறையில் பின்பற்றி வரும் கட்டத்துக்கு சென்று விடுகின்றனர்.

வேலைத் தளங்களில் அவர்கள் எத்தனையோ பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்கள். எட்டமுடியாத இலக்குகள், மேற்பார்வையாளர்களிடமிருந்து அடிக்கடி கிடைக்கும் திட்டுக்கள் மற்றும் தாக்குதல்கள், சில சந்தர்ப்பங்களில் ஆண் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் அல்லது முகாமையாளர்கள் போன்றோரின் பாலியல் துஷ்பிரயோகம், அவசரக் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியமையால் இரண்டாவது முறைமாற்றில் வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுதல் என்பன இப்பிரச்சினைகளாகும். இவை, இவர்கள் தொழிற்சாலைகளில் எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன.

இந்தப் பெண் தொழிலாளர்கள் தொழிற்சாலையிலிருந்து விடுதிகளுக்கு நடந்து செல்லும் பொழுது, பாதுகாப்பற்ற பிரச்சினையை எதிர்கொள்கின்றார்கள். பெரும்பாலான தொழிற்சாலைகளில் மாலை 5.30 க்கு வேலை முடிவடைந்த போதிலும், அதிகமான பெண்கள், தமது மிகக் குறைவான சம்பளத்துக்கு குறைநிரப்பு செய்து கொள்ளும் பொருட்டு, 2-3 மணி நேர மேலதிக வேலையில் ஈடுபடுகின்றார்கள். இந்த நிலையில், இரவு 8 மணியளவிலேயே தொழிற்சாலை வளவிலிருந்து அவர்கள் வெளியேறிச் செல்ல வேண்டியுள்ளது. நெடுஞ்சாலைகளில் வீதி விளக்குகளின் வெளிச்சம் இருந்த போதிலும், விடுதிகளுக்குச் செல்லும் குறுகிய பாதைகள் எப்போதும் இருண்டவையாகவே இருந்து வருகின்றன. இத்தகைய இடங்களில் இப்பெண்கள் அடிக்கடி துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளனர்.

தொழிற்சாலைகளில் கண்காணிப்புத்தரங்களில் ஆண் ஊழியர்கள் இருந்து வருவதனால், பெண் தொழிலாளர்கள் பல்வேறு நெருக்குதல்களையும் சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது. முகாமையினால் வைக்கப்படும் பல்வேறு வகையான கோரிக்கைகளையும் எதிர்த்து நிற்கமுடியாத பலவீனமான நிலை அவர்களிடம் காணப்படுகின்றது. சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் தொழிற்சங்கங்கள் இல்லாதிருப்பதே இதற்கான காரணமாகும்.

சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதற்கு பாரம்பரிய தொழிற்சங்க இயக்கம் எத்தகைய முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, தம்மை ஒன்று திரட்டிக் கொள்வதற்கான தொழிலாளர்களின் உரிமை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அநீதிக்கு எதிராக பாரம்பரிய தொழிற்சங்கங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சவால் விடவில்லை. இந்தச் சங்கங்கள், இந்த நிலைமையை ஒரு பிரச்சினையாக நோக்கியிருக்கவுமில்லை. இலங்கையின் பாரம்பரிய தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்து வென்றெடுப்பதற்கு முயற்சிப்பதிலும் பார்க்க தேசிய அரசியல்வாதிகளுக்கு துதிபாடுவதிலேயே அக்கறை காட்டி வருகின்றன என்பது தான் இதற்கான காரணமாகும். ஏழு வலயத்தில் தொழில் செய்யும் தொழிலாளர்களில் அரைவாசிப் பகுதிக்கும் குறைவானவர்களே, சுரண்டலிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக தொழில்சட்ட விதிகள் இருந்து வருகின்றன என்பதனை அறிந்துள்ளனர்.

இதன் விளைவாக, தொழில் இழப்பு குறித்த பயம் எப்போதும் அவர்களிடையே மேலோங்கியுள்ளது. இந்தப் பய உணர்வே தொழிற்சாலைகளில் அவர்களுடைய நடத்தையை நெறிப்படுத்தி வருகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஊழியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படுவதில்லை. அதனால் நிர்வாகம் நினைத்த மாத்திரத்தில்அவர்களை வேலை நீக்கம் செய்ய முடியும். இந்தப் பின்னணியில், தொழிற்சாலையில் நிர்ப்பந்தங்களை எதிர்நோக்கும் பொழுது, அவர்கள் ஒன்றில் வேலையை விட்டுச் செல்ல வேண்டும் அல்லது ஆண் மேலதிகாரிகளின் இச்சைகளுக்கு அடிபணிந்து செல்ல வேண்டும். இந்த நிலையை எதிர்கொள்வதற்கு பெண் ஊழியர்கள் கண்டு பிடித்துள்ள ஒரு வழி "காதலர்" ஒருவரை வைத்திருப்பதாகும். இந்தக் காதலர், சக ஆண் தொழிலாளர்களிடமிருந்து அல்லது மேற்பார்வையாளர்களிடமிருந்து வரும் பாலியல் தொடர்பான கோரிக்கைகளிலிருந்து தமது சிநேகிதிகளை பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். ஆயுதப்படையைச் சேர்ந்த ஆளணியினர் தொழிற்சாலைப் பெண்களின் "காதலர்கள்" என்ற முறையில் முக்கியமான ஒரு பங்கு வகித்து வருவதற்கு இது ஒருவேளை காரணமாக இருக்க முடியும்.

மேலதிக நேர வேலையை ஒதுக்கிக் கொடுப்பது நிர்வாகத்தின் கையிலுள்ள மற்றொரு ஆயுதமாகும். பெண் ஊழியர்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக மேலதிகாரிகள் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள். அநேகமாக எல்லாப் பெண் தொழிலாளர்களும் மேலதிக நேரத்தில் வேலை செய்து, தமது வருமானங்களை உயர்த்திக்

கொள்ளவே விரும்புகின்றார்கள். மேலும், எந்த ஒரு தொழிற்சாலையிலும் ஆண்டு முழுவதிலும் மேலதிக நேர வேலை கிடைப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில், வெளிநாட்டுக் கட்டளைகள் தொடர்பான காலக் கெடுவினை பூர்த்தி செய்வதற்கு ஆக உச்ச மட்டத்தில் தொழிலாளர்களை மேலதிக நேர வேலையில் ஈடுபடுத்து வதற்கு நிர்வாகம் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. வேறு சில சந்தர்ப்பங்களில், கிடைக்கக் கூடியதாக இருக்கும் மேலதிக நேர வேலை, அனைத்துத் தொழிலாளர் களுக்கும் பிரித்துக் கொடுப்பதற்குப் போதிய தாக இருப்பதில்லை. இந்த இரு சந்தர்ப்பங்களிலும், நிர்வாகம், தொழிலா ளர்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற் கான ஓர் ஆயுதமாக மேலதிக நேர வேலையை பயன்படுத்திக் கொள்கின்றது.

தொகுத்து நோக்கும் பொழுது, கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில், பிரதானமாக 18–25 வயதுக்கு இடைப்பட்ட கடும் ஏழ்மை நிலையில் இருந்து வரும் சுமார் 60,000 இளம் பெண்கள் வாழ்ந்து வருகின்றனர். மாட்டுக் கொட்டில்கள் போன்ற விடுதிகளில் அவர்கள் அடைக்கப் பட்டுள்ளார்கள். வேலைத்தளத்திலும் வேலைத் தளத்துக்கு வெளியேயும் பல்வேறு விதமான துன்புறுத்தல்களையும், அவமானங்களையும் அவர்கள் சந்திக்கின் றார்கள். இந்த நிலைமைகள் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகின்றன: அதாவது, இங்குள்ள சமூகம் இதனால் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதே இந்தக் கேள்வியாகும். கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் வாழ்ந்து வரும் பொது மக்களிடமிருந்து இந்தக் கொடுமைகள் குறித்து ஏன் எதிர்ப்புக் கிளம்பவில்லை என்ற கேள்வியை ஒருவர் எழுப்பமுடியும். இதற்கான பதில் மிகத் தெளிவானதாகும்: கட்டுநாயக்காவைச் சூழ வாழும் சமூகம், இந்த ஊழியர் படை அங்கு பிரசன்னமாகியிருப்பதன் மூலம் பேரளவிலான பொருளாதார நன்மைகளை பெற்றுவருகின்றது.

1989இன் முடிவின் போது, சுதந்திர வர்த்தக வலயத்தை சூழ அமைந்திருந்த பிரதேசத்தில் 1200 க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட விடுதி வசதி வழங்கும் வீடுகள் இருந்து வந்தன. வேலை செய்யும் பெண்களுக்கான விடுதிகளை நடாத்துவது இப் பிரதேசத்தின் முக்கிய மான பொருளாதார நடவடிக்கை யொன்றாக இருந்து வருகின்றது. பெரும்பாலான விடுதி வசதிகளை வழங்கும் வீடுகள், 1990ன் ஆரம்பத்தில், வேலை செய்யும் பெண்களுக்கு படுத்துக் கொள்வதற்கு இடமளிப்பதன் மூலம் மட்டும் மாதமொன்றுக்கு 6,000 ரூபாவுக்கும் கூடுதலாக சம்பாதித்து வந்தன. விடுதிகள் தவிர, பெண் தொழிலாளர்களின் பிரசன்னத்துடன் நேரடியாகச் சம்பந்தப் பட்டுள்ள கடைவீதிகள், கடைகள், மலிவான உணவகங்கள், சில்லறைக் கடைகள், தையல் நிலையங்கள், வேறு பல பொருளாதார நடவடிக்கை மையங்கள் என்பனவும் இப்பிரதேசத்தில் முளைத் துள்ளன.

தொழிலாளர்களின் தற்போதைய சராசரி வருமானம் (மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவுகளையும் சேர்த்து) மாதமொன்றுக்கு சுமார் 2,000 ரூபாவாக இருந்து வருகின்றது என்று கருதப்படுகின்றது. பிந்திய உத்தியோக பூர்வ தரவுகளின் பிரகாரம், சுதந்திர வர்த்தக வலயத்தில் சுமார் 70,000 பெண் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இந்த இரு தரவுகளையும் ஒன்றாக எடுத்து நோக்கும் பொழுது, இப்பெண்கள் மாதமொன்றுக்கு 140 கோடி ரூபா பெறுமதியான பொருளாதார நடவடிக்கைகளை இப்பிரதேசத்தில் உருவாக்கி வருகின்றார்கள் என்று கூற முடியும். இந்த தொழிலாளர்கள் தமது வருமானங்களில் சுமார் 20 சதவீதத்தினை வீடுகளுக்கு அனுப்பி வைத்தாலும் கூட, அவர்கள், இப்பிரதேசத்தில் சுமார் 120 கோடி ரூபா பெறுமதியான பொருளாதார நடவடிக்கைகளை தூண்டி வருகின் றார்கள் என்று கூற முடியும்.

இந்த வலயத்தைச் சூழ வாழும் சமூகம் பெருமளவு பொருளாதார பயன்களைப் பெற்று வருவதனால், இப்பெண்கள் மேலும் அதிக எண்ணிக்கையில் இங்கு வர வேண்டும் என்று விரும்புகின்றார்கள். அதே வேளையில், இச் சமூகத்தினர் இப் பெண்களின் கட்டற்ற நடத்தையினாலும் கட்டுப்பாடற்ற நிலைமையினாலும் அவர்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர். தனிப்பட்ட சம்பாஷனைகளில் இந்தப் பகிஷ்கரிப்பினை நன்கு காணமுடிகிறது. இந்தப் பெண்களின் 'துர்நடத்தையினால்' தமது பிள்ளைளின் ஒழுக்கம் கெட்டுவிடும் என்று இச்சமூகத்தினர் அஞ்சுகின்றனர். "வலயத்தின் பெண்களைப் போல நடந்து கொள்கின்றீர்கள்" என்ற வசவினை அவர்கள் அடிக்கடி தமது பிள்ளைகள் தொடர்பாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த அணுகுமுறையின் விளைவாக, இந்தப் பெண்கள் வாழ்ந்து வரும் விடுதிகள், குடும்ப இருப்பிடங்களிலிருந்து படிப்படியாக தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், இந்தப் பெண்கள் "வேண்டாத விருந்தாளிகளாக" நோக்கப்பட்டு வருகின்றார்கள். அதே வேளையில், அவர்கள் எடுத்து வரும் வருமானத்துக்காக பெரிதும் விரும்பப் பட்டும் வருகின்றார்கள்.

திருமணமான ஆண்கள்-குறிப்பாக விடுதிவீட்டு எஜமானர்கள்- இந்தப் பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்த மையின் விளைவாக அடிக்கடி குடும்பத் தகராறுகள் இடம் பெற்று வந்துள்ளன. இப்பிரதேசத்தின் வதிவிடச்சமூகத்தின் பிரச்சினைகளுக்கு இது ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளது. மேலும், இப்பிரதேசத்தின் ஆண் -பெண் விகிதாசாரத்தில் செயற்கையாக உருவாக் கப்பட்டுள்ள சமநிலையின்மையையும் இது பிரதிபலிக்கின்றது. இப் பெண்கள் காதலர்களை வைத்துக் கொள்ளும் விஷயத்தில், ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு வருகின்றார்கள் என்று இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்தக் காதலர்கள், இப்பிரதேசத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க இளைஞர்கள் என்று கருதப்படுகின்றது. விபச்சார விடுதிகள் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் போலீஸ் சோதனைகள், இப்பகுதி பெற்றோரின் கவலைகளை அதிகரிக்கச் செய்துள்ளன. இவற்றில் சிலவற்றில் பள்ளி மாணவிகளும் சம்பந்தப்பட்டிருந் ததாக கூறப்படுகின்றது. இப்பகுதியைச் சேர்ந்த இளவயதுப் பிரிவினர், வலயத்தின் பெண்களுக்கென ஏற்பாடு செய்யப்படும் இசை நிகழ்ச்சிகளுக்கு செல்வதுடன், அவர்கள் அங்கு அவதானிக்கும் நடத்தை மாதிரிகளை தாமும் பின்பற்றத் தொடங்கு கின்றனர்.

இறுதியாக, இந்த முழுச் சமூகமும் ஒரு பாரிய அச்சுறுத்தலை இப்பொழுது எதிர்நோக்கி வருகின்றது. இதனைப் பலர் இன்னமும் அறிந்து கொள்ள வில்லை. எச்ஐவி தொற்று மற்றும் எய்ட்ஸ் போன்ற அபாயங்களுக்கு இப்பெண்கள் எளிதில் உட்படக் கூடியவர்களாக இருந்து வருகின்றனர்.

( 55 ஆம் பக்கம் பார்க்க)

# புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடு (NIC) என்ற அந்தஸ்தினை இலங்கை எவ்வளவு தூரம் அண்மித்திருக்கின்றது ?

பேராசிரியர் ஏ.டி.வி.டி.எஸ். இந்திரரத்ன

## அறிமுகம்

இலங்கை 'NIC' அந்தஸ்தினை எவ்வளவு தூரம் அண்மித்து வந்துள்ளது என நாங்கள் கூறுவதற்கு முன்னர், புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடு (NIC) என்று கூறுவதன் மூலம் நாங்கள் எதனை குறிக்கின்றோம் என்பது குறித்து ஒரு தெளிவு எம்மிடம் இருத்தல் அவசியமாகும். 'NIC' நாடுகள் குறித்து பேசி வரும் பெரும்பாலானவர்களும், இலங்கை 2000 ஆவது ஆண்டளவில் 'NIC' அந்தஸ்தினை எட்டிவிடும் என தீர்க்கதரிசனம் தெரிவித்து வருபவர்களில் பெரும்பாலானவர்களும் இதன் உண்மையான தாத்பரியம் என்ன என்பதனை சரியாக அறிந்திருக்கவில்லை போல் தெரிகிறது. இத்தகைய அந்தஸ்தினை நாடு எட்டிக் கொள்வதற்கு உருவாக்கப்பட வேண்டிய முன் நிபந்தனைகள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் என்பவை குறித்து அவர்கள் அதிகமாக எதனையும் அறிந்திருக்க வில்லை.

என்னைப் பொறுத்தமட்டில், இந்த 'NIC' கருதுகோள் குறித்து எந்த மாயாஜாலமோ அல்லது அற்புதமோ இருந்து வருவதாக தெரியவில்லை. ஒரு நாடு, பிரதானமாக வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திலிருந்து, கைத்தொழில் துறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை நோக்கி தீவிரமாக எட்டியுள்ள ஓர் அபிவிருத்திக் கட்டமாக/மட்டமாக அது இருந்து வருகின்றது. இந்த நிலையில், பொருள் உற்பத்தித்துறை பொருளாதாரத்தின் மிக முக்கியமான தனியொரு துறையாக எழுச்சியடைகின்றது. மேலும், அந்நிலையில் மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரமொன்றை வழங்கக்கூடிய அளவுக்கு நாட்டின் அபிவிருத்தி மட்டமும் உயர்ந்து காணப்படுகின்றது. எனினும், பொருளாதாரப் பகுப்பாய்வினை எளிதாக்கும் நோக்குடன், உலக வங்கி 'NIC' என்ற அந்தஸ்தினை பின்வருமாறு வரையறுத்துக் கூறியுள்ளது:

" தலைக்குரிய மெய் வருமானம் (1992 இன் விலைகளில்) ஆண்டொன்றுக்கு 1100 அ.டொலர்களுக்கு உயர்வானதாக இருப்பதுடன், மொத்த, உள்நாட்டு உற்பத்தியில் 20% க்கும் மேற்பட்ட பகுதியையும், மொத்த, ஏற்றுமதிகளின் அதே அளவையும் பொருள் உற்பத்தித் துறை பங்களிப்பு செய்து வரும் ஒரு நாடு."

உலகெங்கிலும் இருந்து 'NIC' நாடுகள் தொடர்பாக பல உதாரணங்களை வழங்க முடியும். தென் அமெரிக்காவில் ஆர்ஜன்டீனா மற்றும் பிரேஸில், இலத்தீன் அமெரிக்காவில் மெக்ஸிக்கோ, மேற்கு ஆசியாவில் இஸ்ரேல், ஐரோப்பாவில் கிரீஸ், போர்த்துக்கல், ஸ்பெயின் மற்றும் யூகோஸ்லோவியா, கிழக்காசியாவில் தாய்வான், கொரியா, ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் என இவ் உதாரணங்களை அடுக்கிக் கொண்டு போகமுடியும்.

'NIC' அந்தஸ்துக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 1100 அ.டொலர் வருமானம் மெய் அளவுகளிலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் சராசரி பணவீக்க விகிதம் 4.5% ஆகவும், உலகின் விகிதம் 14.7% ஆகவும் இருந்து வரும் நிலையில்) இன்றைய விலைகளில் இது சுமார் 2000 அ.டொலர் அளவில் இருந்து வர வேண்டும். சந்தைச் செலாவணி விகிதங்களின் அடிப்படையிலேயே இது இவ்விதம் உள்ளது. கொள்வனவுச் சக்தி அல்லது வாழ்க்கைச் செலவின் அடிப்படையில், இலங்கையை (அதேபோல இலங்கையை ஒத்த ஏனைய நாடுகளையும்), 'NIC' நாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்த ஏனைய கைத்தொழில் நாடுகள் என்பவற்றுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, நாட்டின் கொள்வனவுச் சக்தி அதன் சந்தைச் செலாவணிப் பெறுமதி விகிதத்திலும் பார்க்க இரட்டிப்பானதாக இருந்து வருவதாகக் கருதிக் கொள்ள முடியும். இலங்கையின் தலைக்குரிய வருமானம்

**சாதகமான காரணிகள்**

1. பணவீக்கத்தை தடுத்தல்
2. தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு ஊடாக உற்பத்தித்திறன் அதிகரிப்பு

(1, 2: இதன் விளைவாக ஏற்றுமதிப் போட்டித் திறன் அதிகரிக்கும்)

3. ஊழியச் செறிவு உயர்வு தடுக்கப்படுதல்
4. குடித்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தப்படல்
5. உள்நாட்டு சேமிப்பு விகிதத்தில் அதிகரிப்பு
6. ஏற்றுமதிகள் பன்முகப்படுத்தப்படல்
7. தொழில்நுட்ப இடமாற்றத்துடன் கூடிய நே.வெ.முதலீட்டுக்கு ஊக்குவிப்புக்கள்
8. அரசியல் ஸ்திர நிலையும் பயங்கரவாதம் நிலவாமையும்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

1992 இல் 500 அ.டொலர்களாக இருந்தது. மேற்சொன்ன அடிப்படையில் இது சுமார் 1000 அ.டொலர் அளவில் இருந்திருக்க முடியும். துரிதமான கைத்தொழில் மயமாக்கலுடன் இணைந்த விதத்தில், பொருள் உற்பத்தித்துறை மொ.உ.உ.யின் 20% க்கும் அதிகமான அளவினை பங்களிப்புச் செய்யும் ஒரு நிலையில், இந்த தலைக்குரிய வருமான மட்டத்தினை இருமடங்கா பெருக்கிக் கொள்வதனையே அநேகமாக 'NIC' அந்தஸ்தினை அடையும் ஒரு நிலையாகக் கருத முடியும்.

### இலங்கையின் தற்போதைய நிலைமை

இலங்கை 2000 ஆவது ஆண்டளவில் புதிதாக, கைத்தொழில்மய மாகவுள்ள நாடு என்ற 'NIC'அந்தஸ்தினை எட்டிவிடும் என சிலர் துணிச்சலாக கூறிவருகின்றனர். இன்றைய வளர்ச்சியடைந்த நாடுகள் இத்தகைய அந்தஸ்தினை எட்டிக் கொள்வதற்கு எத்தனை வருடகாலம் தேவைப்பட்டது ? ஐக்கிய இராச்சியமே உலகின் முதலாவது கைத்தொழில்மயமாகிய நாடாக இருந்தது. இதனையடுத்து, ஐக்கிய அமெரிக்காவும் ஜப்பானும் கைத்தொழில்மயமாகிய நாடுகள் என்ற அந்தஸ்தினை எட்டின. இன்று ஆக உயர்ந்த தலைக்குரிய வருமானத்தைக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் (OECD) 24 நாடுகளைச் சேர்ந்த குழுவுக்குள்இருந்து வரும் பெருமளவுக்குக் கைத்தொழில்மய மாகியுள்ள 7 நாடுகளில் இந்த மூன்று நாடுகளும் இடம் பிடித்துள்ளன. புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடுகள், கைத்தொழில்மயமாகிய இரண்டாவது அடுக்கினைச் சேர்ந்த நாடுகளாக அதன்பின்னர் அபிவிருத்தி அடைந்தன. மலேசியாவும் தாய்லாந்தும் 'NIC' குழுவில் சேர்ந்து கொள்வதற்கு அண்மையில் தகைமை பெற்றுக் கொண்டுள்ளன. இலங்கை, சில தென்னாசிய மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுடன் சேர்ந்து,தனது முறை வரும் வரையில் காத்துக் கொண்டிருக்கின்றது. ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகள் தமது தலைக்குரிய வருமானங்களை இரட்டிப்பாக்கிக் கொள்வதற்கு எடுத்த கால அளவு கீழே தரப்படுகின்றது:

சிலர் மிகுந்த துணிச்சலுடன் கூறிவருவது போல, இலங்கை இந்த நிலைமையை 1993-1999 ஏழு ஆண்டு காலத்துக்குள் சாதித்துக்கொள்ள முடியுமா? பொருளாதாரக் கொள்கையில் அண்மையில் இடம் பெற்று வந்துள்ள மாற்றங்களின் பின்னணியில் இதற்கான விடையைத் தேடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

| | | வருடங்கள் |
|---|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 1780-1838 | 58 |
| ஐக்கிய அமெரிக்கா | 1839-1886 | 47 |
| ஜப்பான் | 1885-1919 | 34 |
| தென்கொரியா | 1966-1977 | 11 |

### திறந்த பொருளாதாரக் கொள்கை

இலங்கை, 1977 நவம்பர் மாதத்தில், பொருள் உற்பத்திக் கைத்தொழில்களின் விரிவாக்கத்தின் ஆதரவுடனான ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சியை எடுத்து வரும் பொருட்டு, அதன் பொருளாதாரத்தை

அட்டவணை 1

சில சாதகமான குறிகாட்டிகள்

| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|
| மொ.உ.உ. வளர்ச்சி விகிதம் | 6.2 | 4.8 | 4.6 | 5.6* | 6.0* |
| குடித்தொகை | | 1.3 | 1.0 | | 1.0 |
| வ.செ.திட்ட பற்றாக்குறைகள் (மொ.உ.உ. யின் சதவீதமாக) | 10.0 | 11.7 | 9.0 | 8.0** | 6.8** |
| பணவீக்கம் (கொ.நு.வி.சு) | 21.5 | 12.2 | 11.0 | 9.0* (12.0)** | 8.7* (10.0)** |
| வெளிநாட்டு நேரடி முதலீடு மொ.உ.உ. யின் % ஆக | | 0.79 | 1.36 | 1.34f | கி.வி. |

குறிப்புகள் : ● மதிப்பிடப்பட்டது

●● 1994 வ.செ. திட்ட உரையிலிருந்து PF முதல் மூன்று காலாண்டுகளின் குடித்தொகை தரவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

ஆதாரம்: உலக அபிவிருத்தி அறிக்கை 1993

ஆசிய அபிவிருத்தி நோக்கு 1993

மத்திய வங்கி வருடாந்த அறிக்கை 1992

அட்டவணை 2

புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடு என்ற அந்தஸ்தினை நோக்கிய வளர்ச்சிப் பயணத்தின் பல்வேறு நிலைகள்

| ஆராய்ச்சி/அபிவிருத்தி செலவினம் மொ.உ.உ. யின் %ஆக | குடித்தொகை வளர்ச்சி விகிதம் | தேவைப்படும் மொ.உ.உ. யின் %ஆன முதலீடு | மொ.உ.உ. வளர்ச்சி விகிதம் | [illegible] |
|---|---|---|---|---|
| 1. 0.17% | 1.4 | 25.0% | 4.3% | 24 வருடங்கள் |
| 2. 1.0% | 1.0 | 25.0% | 6.0% | 14 வருடங்கள் |
| 3 1.0% | 1.0 | 30.0% | 7.5% | 12 வருடங்கள் |
| 4. 1.0% | 1.0 | 40.0% | 11.4% | 7 வருடங்கள் |

தேசிய மட்டத்தில்
ஊழியர் உற்பத்தித் திறன்
சுட்டெண்கள்-1990

(1985=100)

| | |
|---|---|
| பங்களாதேஷ் | |
| சீனக்குடியரசு | 136.49 |
| பிஜி | 110.66 |
| ஹொங்கொங் | 140.17 |
| இந்தியா | 119.86 |
| இந்தோனேஷியா | 111.68 |
| ஜப்பான் | 117.90 |
| கொரியா | 134.76 |
| மலேசியா | 116.45 |
| பாகிஸ்தான் | 114.06 |
| பிலிப்பைன்ஸ் | 110.28 |
| சிங்கப்பூர் | 127.64 |
| இலங்கை | 101.45 |
| தாய்லாந்து | 137.09 |

ஆதாரம்: A P O 1992

அட்டவணை 3

**விவசாய பொருளாதாரத்திலிருந்து கைத்தொழில் பொருளாதாரத்துக்கு நிலைமாற்றம் அடைவதற்கான குறிகாட்டிகள்**
(மொ.உ.உயின் %ஆக)

| | 1960 அல்லது 1961 | | 1965 | | 1965-1970 | | 1975-1977 அல்லது 1976-1980 | | 1982 | | 1980-1986 | | 1987-1992 | | 1991 or 1992 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேளாண்மை | பொருளுற்பத்தி | வேளாண்மை | பொருளுற்பத்தி | வேளாண்மை | பொருளுற்பத்தி | வேளாண்மை | பொருளுற்பத்தி | வேளாண்மை | பொருளுற்பத்தி | வேளாண்மை | பொருளுற்பத்தி | வேளாண்மை | பொருளுற்பத்தி | வேளாண்மை | பொருளுற்பத்தி |
| ஹொங்கொங் | 04 | 25 | 02 | 24 | - | - | 01 | 24 | - | - | - | 21 | - | - | 00 | 17 |
| கொரியா | - | - | 38 | 18 | - | - | 20 | 25 | - | - | 15 | 30 | - | - | 08 | 28 |
| தாய்வான் | - | 22 | - | - | - | - | - | 38 | - | - | - | 44 | - | - | - | - |
| சிங்கப்பூர் | 04 | 12 | 03 | 15 | - | - | 02 | 26 | - | - | - | 27 | - | - | 00 | 29 |
| இலங்கை | 40.4 | 11.5 | 36.7 | 12.4 | 36.0 | 13.0 | 25.9 | 15.0 | 26.4 | 14.4 | 22.3 | 14.3 | 22.8 | 17.2 | 21.4 | 18.5 |

ஆதாரம்: உலக அபிவிருத்தி அறிக்கை,
ஆசிய அபிவிருத்தி நோக்கு,
மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள் (இலங்கைக்கு மட்டும்)

**எதிர்மறை காரணிகள்**

உள் (1) உயர் வ.செ.திட்ட பற்றாக்குறை
(2) வட்டிவீத அதிகரிப்பு
(3) விலை வீக்கம்
(4) துரித குடித்தொகைப் பெருக்கம்
(5) குறைந்த உள்நாட்டு சேமிப்பு விகிதம்

வெளி (1) எதிர்மறை வர்த்தக நிலுவை, நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை என்பவற்றின் அதிகரிப்பு
(2) வெளிக்கடன் அதிகரிப்பு
(3) கடன் சேவைக் கொடுப்பனவு அதிகரிப்பு

**இவற்றின் விளைவாக**
(1) பொருளாதார மந்தம்
(2) வேலையில்லாத் திண்டாட்டம்

திறந்து விட்டது. பொருளாதாரம் திறந்து விடப்பட்டதன் விளைவாக, ஏற்றுமதி, மொ.உ.உ., வேலை வாய்ப்புக்கள் மற்றும் வாழ்க்கைத்தரம் என்பவற்றில் வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. 1978க்கும் 1982க்கும் இடையில் இந்த எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அநேகமாகச் சாதித்துக் கொள்ளப்பட்டன. வளர்ச்சி 1970இல் 3% ஆக இருந்து, 1978இல் ஆக உயர்ந்த மட்டமான 8.2% ஐ பதிவு செய்திருந்தது. ஏற்றுமதிகளும் கணிசமான அளவில் பெருகி வந்தன. பொருள் உற்பத்தித்துறை, ஏற்றுமதிகளின் கணிசமான ஒரு பாகத்துக்குப் பொறுப்பாக இருந்து வந்தது. மொ.உ.உ. வுக்கான பொருள் உற்பத்தித்துறையின் பங்களிப்பு சுமார் 15% வரையில் பெருமளவுக்கு அதிகரித்திருந்தது. 1978–1982 காலப்பிரிவில் இந்த வளர்ச்சி வேகப் போக்கினை நாடு தொடர்ந்தும் பேணி வரக்கூடியதாக இருந்திருக்குமேயானால், அது, இப்பொழுது 'NIC' அந்தஸ்தினை பெருமளவுக்கு அண்மித்திருந்திருக்க முடியும்.

எனினும், இந்த எதிர்பார்ப்பு, 1983க்கும் 1989க்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளினால் முறியடிக்கப்பட்டிருந்தது. ஏற்றுமதிகள் அதிகரிக்கத் தொடங்கியிருந்தபோதிலும், இறக்குமதிகளும் வேகமாக அதிகரித்துக் கொண்டு வந்தன. உயர்ந்து வரும் அரசாங்க செலவினங்கள் குறிப்பாக, உள் கட்டமைப்பு வசதிகள் தொடர்பான செலவுகளின் அதிகரிப்பு, அதனை உடனடுத்து ஏற்பட்டு வந்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைகள் என்பன– பணவீக்கத்தை இரட்டை இலக்கங்களில் அதிகரிக்கச் செய்திருந்தது. பணவீக்கம் 1990 இல் ஆக உயர்ந்த அளவில் 21.5% ஐ எட்டியிருந்தது. மேலும், நடைமுறைக் கணக்கு நிலுவைகள் தொடர்ச்சியாக எதிர்மறையானவையாக மாற்றம் அடைந்து கொண்டு வந்ததுடன் இணைந்த விதத்தில், வர்த்தக நிலுவைப் பற்றாக்குறைகள் இடையறாது அதிகரித்துக் கொண்டிருந்தன. மேலும், வெளிநாட்டுக் கடனிலும் கடன் சேவைக் கொடுப்பனவுகளிலும், பேரளவிலான பெருக்கம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. வட்டி விகிதங்கள் அதிகரித்து வந்ததுடன், அவை தனியார் முதலீட்டின் மீது மிக மோசமான ஒரு தாக்கத்தினை எடுத்து வந்திருந்தன. பொருளாதார வளர்ச்சி மட்டங்கள் படிப்படியாக வீழ்ச்சி கண்டுவந்து, 1987 இல் 1.5% ஆகக்குறைந்த வளர்ச்சி விகிதம் பதிவு செய்யப்பட்டிருந்தது. இக்கால கட்டம் முழுவதிலும் குடித்தொகையில் 1.5% க்கும் குறைவான அளவில்அதிகரிப்பு ஏற்பட்டு வந்திருந்த போதிலும், வேலையில்லாத்திண்டாட்டம் 18% வரையில் உயர்ந்து சென்றிருந்தது. இந்தக் காரணிகள் அனைத்தும் சேர்ந்து, நாடு புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடு என்ற அந்தஸ்தினை நோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்கு இடையூறுகளாக இருந்து வந்தன.

ஓரளவுக்கு சிறந்த பொருளாதார முகாமை மேற்கொள்ளப்பட்டதனை யடுத்து, 1990 தொடக்கம் பொருளாதார வளர்ச்சியில் சிறிதளவு விருத்தி நிலை தோன்றத் தொடங்கியிருந்தது. 1990–1992 காலப்பிரிவில் வளர்ச்சி 4.5% ஆக

காணப்பட்டதுடன், 1993 இல் அது மேலும் ஒரு சதவீதத்தினாலும், 1994 இல் 0.5% த்தினாலும் அதிகரித்துச் செல்லும் என எதிர்பார்க்கப் பட்டிருந்தது. எவ்வாறிருப் பினும், இலங்கையின் பொருளாதார செயலாற்றத்தினை, கடந்த 10–12 வருடகால ஆசியாவின் புதிதாக கைத்தொழில் மயமாகியுள்ள நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இலங்கை 'NIC' அந்தஸ்து நிலையிலிருந்து இன்னமும் வெகு தூரத்திலேயே இருந்து வருவதனை காண முடிகிறது. நியாயமான ஒரு கால எல்லைக்குள் நாங்கள் உண்மையிலேயே 'NIC' அந்தஸ்தினை எட்ட வேண்டு மானால், நடைமுறைக் கணக்கு மற்றும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்; வெளிநாட்டுக் கடன் சுமையை குறைத்துக் கொள்ளும் அதேவேளையில், உள்நாட்டுச் சேமிப்புக்கள் கணிசமான அளவில் உயர்த்திக் கொள்ளப்படுதல் வேண்டும்; எமது ஏற்றுமதிப் பொருட் களின் சர்வதேச போட்டித்திறனுக்கு உத்தரவாதமளிக்கும் அதேவேளையில், பொருள் உற்பத்திக் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி துரிதப்படுத்தப் படுதல் வேண்டும். சுமார் 8% வளர்ச்சி என்பது என்னைப் பொறுத்தமட்டில், எட்டமுடியாத ஓர் இலக்காக இருந்து வரவில்லை; ஏனெனில், அந்த வீகிதத்தை நாங்கள் முன்னர் ஒரு முறை எட்டி யிருந்தோம். பின்வரும் சாதகமான காரணிகளையும் இங்கு சுட்டிக் காட்டுதல் அவசியமாகும்.

குறிப்பாக, 1990 இன் பின்னர், நாட்டைச் சூழ்ந்திருந்த கருமேகங்களிடையே ஒரு சில ஒளிக்கீற்றுக்கள் தென்படத் தொடங்கியிருந்தன. வீழ்ச்சியடைந்துவரும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் , பணவீக்க விகிதம் குறைவடைந்து வருதல், குடித்தொகை வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு போன்ற இந்த சாதகமான சமிக்ஞைகள் அட்டவணை–1 இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எனினும், இவை போதியளவுக்கு காணப்படவில்லை. வட்டி விகிதங்கள் கணிசமான அளவில் வீழ்ச்சியடைய வேண்டும்; அதேநேரத்தில், பணவீக்க விகிதங்களும் குறைந்து வருதல் வேண்டும்; மெய்க்கூலிகளை கட்டுப் பாட்டில் வைத்துக்கொள்வதுடன், வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகள் கணிசமான அளவில் உயர்ந்து செல்ல வேண்டியுள்ளது. உள்நாட்டு சேமிப்பு விகிதம் பெருமளவுக்கு அதிகரிப்பதுடன் இணைந்த விதத்தில், கடன் சேவை விகிதம் கணிசமான மட்டங்களில் வீழ்ச்சியடைய வேண்டியுள்ளது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் மீதான செலவினங்கள் நியாயமான ஓர் அளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டியிருப்பதுடன், அதனையடுத்து, உற்பத்தித் திறனில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். உள் கட்டமைப்பு மற்றும் திறன்களின் அபிவிருத்தி என்பவற்றில் அரசு முக்கியமான ஒரு பங்கினை வகித்து வர வேண்டும். இந்த சாதகமான காரணிகள் அனைத்துக்கும் மத்தியிலும் கூட, 1992 இன் இலங்கையின் தலைக்குரிய வருமானத்தை 2000 ஆவது ஆண்டளவில் இரட்டிப்பாக்கிக் கொள்ள வேண்டிய பணியின் பிரமாண்டமான தன்மையை அட்டவணை–2 இல் எடுத்துக் காட்டப் பட்டுள்ள நான்கு முக்கிய நிலைகளில் கண்டு கொள்ள முடியும். எதிர்காலத்தில் (அதாவது, 1993ன் பின்னர்) நாங்கள் 8% வருடாந்த சராசரி வளர்ச்சியினை சாதித்துக் கொண்டாலும் கூட, 1992 இன் தலைக்குரிய வருமானத்தை இருமடங்காகப் பெருக்கிக் கொள்வதற்கு 9 வருடங்கள் பிடிக்கும்.

### அரசு வகிக்க வேண்டியிருக்கும் பங்கு

இப்பாரிய பணியினை ஓரளவுக்கு இலகுவாக்கும் பொருட்டு, வகை தொகையற்ற அல்லது நெறிப்படுத்தப் படாத "திறந்த தன்மை" தவிர்க்கப்படுதல் வேண்டும். 1978க்கு முன்னர் இருந்தது போல, பொருளாதாரத்தை ஓர் ஒழுங்குபடுத்தும் அமைப்பு அல்லது கட்டுப்படுத்தும் அமைப்பு என்ற பங்கினை அரசு வகித்து வரக்கூடாது. ஆனால், பிறிதொரு தளத்தில் அது மிக முக்கியமான ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளது. தனியார் துறைக்கு வசதிகளைச் செய்து கொடுத்து, வழிகாட்டிச் செல்லும் பங்கினையே அது முக்கியமாக வகிக்க வேண்டியுள்ளது. இங்குள்ள மிகப் பெரிய இடையூறு, நாட்டின் உற்பத்தித் திறன் பெருமளவுக்குக் குறைந்த மட்டத்தில் இருந்து வருவதாகும். உள் கட்டமைப்பு வசதிகளின் குறைபாடு, திறன் அபிவிருத்தியின் தாழ்ந்த மட்டம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் மீது குறைந்த அளவிலான செலவுகள் மேற் கொள்ளப்படுதல் என்பவற்றின் விளைவாகவே நாட்டின் உற்பத்தித் திறன் இவ்விதம் தாழ்ந்த மட்டத்தில் இருந்து வருகின்றது. அரசாங்கம் தேவையான நீர்ப்பாசனம், மின்சக்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் என்பவற்றை வழங்குவதில் பாரிய அளவில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. மேலும், நாட்டின் தொழில்திறன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு, அரசாங்கம், அதன் மூன்றாம் நிலைக் கல்வியமைப் பையும் தொழிற்கல்வி அமைப்பையும் பொருத்தமான முறையில் வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.

ஏற்றுமதிகள் தொடர்பான தேறிய அந்நியச் செலாவணிச்சம்பாத்தியங்களை கவனத்தில் எடுக்காது, நாடு வெறுமனே ஏற்றுமதி மாயையை பின்பற்றிச்செல்லக் கூடாது; அதாவது, ஏற்றுமதி செய்ய வேண்டும் ன்பதற்காகவே ஏற்றுமதிகளை மேற்கொள்ளக் கூடாது. இறக்குமதிக் கூறு பெருமளவுக்குக் குறைந்த மட்டத்தில் இருந்து வரும் பாரம்பரிய ஏற்றுமதிகள் அல்லது உள்நாட்டுக் கைத்தொழில்கள் என்பவற்றின் செலவில் ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டு வரக்கூடாது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தியில், உற்பத்தித் திறனில் வீழ்ச்சி ஏற்படுவதற்கு எந்த வகையிலும் இடமளிக்கக் கூடாது. (1981 க்கும் 1990 க்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் தேசிய மட்டத்தில் உற்பத்தித் திறன் 13.8% உயர்ந்து சென்றிருக்கும் அதேவேளையில், வேளாண்மைத்துறையின் விளைதிறனில் 13.2% வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது). மெய்க் கூலி விகிதங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும், தாக்கமான செலாவணி விகிதங்களை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கும், ஏற்றுமதித் துறையின் போட்டித்திறன் பாதிப்படையா திருப்பதற்கும் இத்தகைய நிலைமைகள் நிலவி வருவது அவசியமாகும். 'NIC' அந்தஸ்தினை எட்டுவதற்கான அதன் அதீத ஆர்வம் காரணமாக, அரசாங்கம் திட்டமிடப்படாத கைத்தொழில் பெருக்கத்துக்கு, பாகுபாடு எதுவுமற்ற முறையில் இடமளித்து வரக்கூடாது. குறிப்பாக, சுற்றுச்சூழலுக்குச் சேதத்தை எடுத்து வந்து, உயிரினவியல் சூழல் சமநிலையை சீர்குலைத்து, நிலையான அபிவிருத்தியின்மீது மிக மோசமான தாக்கங்களை எடுத்து வரக்கூடிய சுற்றுலாத்துறை மற்றும் கடற்றொழில்

என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய கைத்தொழில்களுக்கு அனுமதி வழங்குவதில் மிகவும் கவனமான முறையில் அரசு நடந்து கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் கூட தாறுமாறான விதத்தில் வரவேற்கப் படக்கூடாது. அது உள்நாட்டுத் தொழில் முனைவோருக்கு பயில்வு நிகழ்வுப்போக் கொன்றை வழங்கக்கூடிய தொழில்நுட்ப இடமாற்றத்துடன் இணைந்த வகையில் நாட்டுக்குள் வர வேண்டும். ஒட்டு மொத்தமாக நோக்கும் பொழுது, தனியார் துறைக்கான வழிகாட்டுதலை வழங்குவதில் திட்டமிடுதல், கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன தொடர்பாக அனைத்துமடங்கிய ஒரு கண்காணிப்புப் பங்கினை அரசு வகித்து வர வேண்டியுள்ளது. சமூக அபிவிருத்தியையும், சமூக-பொருளாதார நலனோம்புகையையும் மேம்படுத்து வதற்கான சமூகக் கொள்கைகளும் உருவாக்கப்படுதல் அவசியமாகும். நாட்டில் இடம்பெற்று வரும் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்ததாக இது இருந்து வருதல் வேண்டும். கல்வி கற்ற, ஆரோக்கியமான, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு தேசம் நாட்டின் சமூக பொருளாதார முன்னேற் றத்தைத் துரிதப்படுத்தும் மிகப் பெரிய கருவியாக இருந்து வருகின்றது. இறுதிப் பகுப்பாய்வில், அரசாங்கம் இதனையே செய்ய வேண்டியுள்ளது.

இன்றைய உலகில் எந்த ஒரு நாடும், முழு அளவில் திறந்து விடப்பட்டுள்ள ஒரு நாடாக இருந்து வரவில்லை. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் போன்ற முதலாளித்துவத்தின் மிகப் பெரிய ஜாம்பவான் நாடுகளிலும் கூட, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு முக்கியமான ஒரு வழிகாட்டல் பங்கினை வகித்து வருகின்றது. மேலும் (கொரியா போன்ற) கிழக்காசியாவின் புதிதாக கைத்தொழில்மயமாகியுள்ள நாடுகள், பலர் தவறாக நினைத்துக் கொள்வது போல, முழு அளவு தலையிடாக் கொள்கைகளின் கீழ் ' NIC ' அந்தஸ்தினை சாதித்துக் கொள்ளவில்லை. இதற்கு மாறாக, வழி நடாத்தப்படும் முதலாளித்துவம் என்றழைக்கப்படும் ஒரு முறையின் கீழேயே இந் நாடுகள் இந்நிலையை எட்டின. கொரியாவின் வெற்றிக் கதையை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

". . . 1960 களின் நடுப்பகுதிகளின் பின்னர், கொரியா, மிகை ஊழியத்தை கொண்டிருந்த வறிய கமத்தொழில் பொருளாதாரமொன்றிலிருந்து நகர்ந்து, முதலில், ஊழியச் செறிவுமிகுந்த கைத்தொழில்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஏற்றுமதி நோக்கிலான பொருளாதாரமொன்றாகவும், அதனை யடுத்து மூலதனச் செறிவும், தொழில் தேர்ச்சிச் செறிவையும் கொண்ட ஏற்றுமதி நோக்கிலான பொருளாதார மொன்றாகவும் மாற்றமடைந்தது. கொரியா, கட்டற்ற வர்த்தக முறையைக் கொண்ட அமைப்பொன்றின் கீழ் இயங்கி வரவில்லை; அரசாங்கத்தின் தலையீடு பெருமளவுக்கு நிலவிவந்த ஒரு சூழ்நிலையிலேயே அந்நாடு இயங்கி வந்தது. இந்த நிலையில், அரசாங்கம், மிகுந்த சுறுசுறுப்புடன் ஏற்றுமதிகளை ஊக்குவித்ததுடன், நிதி மற்றும் அந்நியச் செலாவணிச் சந்தைகளை உள்ளிட்ட பெருந்தொகையான சந்தைகளில் பரந்த அளவில் அது தலையீடுகளை மேற் கொண்டும் வந்துள்ளது.

. . . . கொரியாவின் மற்றொரு தனித்துவ அம்சம், அரசாங்கத்தின் மத்திய மயப்படுத்தப்பட்டுள்ள இயல்பாகும். இது 1970 களில் பொருளாதாரத்தின் முதலீட்டு மூல வளங்களில் சுமார் மூன்றில் இரண்டு பகுதியினை நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ கட்டுப்படுத்தி வந்தது. அரசாங்கம், அரசியல்மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை பேணி வருவதுடன், (மேலைத்தேய ஜனநாயகங்களில் செயற்படுத்துவது பல வழிகளில் சிரமமானதாக இருக்கக்கூடிய) பல முக்கியமான கொள்கை மாற்றங்களையும் முன்னெடுத்துச் செல்கின்றது. தொழிலாளர் அமைப்புக்கள் பலவீனமானவையாக வைக்கப்பட்டி ருப்பதுடன், அதனால், கூலிகளும் குறைந்த மட்டத்தில் வைக்கப்பட்டுள்ளன. மூலவள ஒதுக்கீட்டில் அரசாங்கம் உறுதியான கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டுள்ளது. 1960களில் அரசாங்க சேமிப்புக்களும் வெளிநாட்டு சேமிப்புக்களும், கொரியாவின் வருடாந்த உள்நாட்டு முதலீட்டில் சுமார் 60 சதவீதத்தினை நிதிப்படுத்தியிருந்தன. இது தவிர, ஒழுக்கமைந்த நிதித்துறையில் கடன் பகிர்ந்தளிப்பினை அரசாங்கம் தொடர்ந்தும் நெறிப்படுத்தி வருகின்றது. கொரியாவைப் பொறுத்தமட்டில், அரசாங்கம், விலைகள் சந்தைகளை நிர்ணயித்து, மூலவளங்களை ஒதுக்கி வரும் தலையீடு எதுவுமற்ற தாராள பொருளாதார முறை ஒன்றை அறிமுகம் செய்திருக்குமேயானால், அந்நாடு பொருளாதார வெற்றியையும், மீளமைப்பினையும் சாதித்துக் கொண் டிருக்க முடியும் என்று கூறுவது சிரமமாகும்."

(யங்சுல் பார்க், 1991)

இலங்கை ' NIC ' அந்தஸ்தினை எட்டுவதற்கான அதன் முயற்சியில், இந்நாடுகளிலிருந்து பல படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் தற்போதைய சமூக-பொருளாதார நிலைமைகள், கொள்கை அமுலாக்கல் மட்டம் என்பவற்றின் அடிப்படையில் நோக்கும் பொழுது, அடுத்த 15 வருட கலத்துக்குள்ளாவது இலங்கை 'NIC' அந்தஸ்தினை எட்டும் என எதிர்வுகூறுவது சாத்தியமில்லை.

( 50-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பியோ அல்லது நிர்ப்பந்தம் காரணமாகவோ இப் பெண்களில் பெரும் பாலானவர்கள் பகுதிநேர செக்ஸ் தொழிலாளர்களாக மாறியுள்ளனர். இவர்கள் உள்ளூர் வாசிகளுக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் பாலியல் சேவைகளை வழங்கி வருகின்றார்கள். வேறிடங்களில் குடும்பங் களை வைத்திருக்கும் பல திருமணமான ஆண்கள் அடிக்கடி இப்பெண்களைத் தேடி வருகின்றனர். சுற்றுலாப் பிரதேசமான நீர்கொழும்பில், எச்ஐவி வைரஸ் காவிகள் இருந்து வருவதாக ஏற்கனவே சந்தேகிக்கப்பட்டு வருகின்றது.

சுதந்திர வர்த்தக வலயம், உடனடி எதிர்காலத்தில், எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தொற்று அபாய ஏது உயர் அளவில் நிலவி வரும் ஒரு பிரதேசமாக வகைப்படுத்த பட முடியும். இங்கு வழங்கப்பட்டு வரும் மிகத் தாழ்ந்த மட்டத்திலான சுகாதாரப் பராமரிப்பினால் இந்நிலைமை மேலும் தீவிரமடைய முடியும். "மாதவிலக்கு கால இடைவெளிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்" அல்லது "கருக்கலைப்புக் களை செய்து கொள்ளுங்கள்" போன்ற அறிவுறுத்தல்களே இப்பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் தொழில் புரியும், ஒரு டாக்டர், தன்னிடம்- "தமது மாதவிலக்கினை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக" நாளொன்றுக்கு சுமார் 300 வலயப் பெண்கள் வருவதாக குறிப்பிட்டதை இதற்கு முத்தாய்ப்பாக கூற முடியும்.

# இலங்கையில் வருமானப் பகிர்வும் வறுமையும்

ஜே. டப். விக்கிரமசிங்க

(சென்ற இதழ் தொடர்ச்சி)

குறிப்பாக, 1977இன் பின்னர் நலன்புரிச் சேவைகளில் பெருமளவுக்கு வெட்டுக்கள் மேற்கொள்ளப் பட்டமை, விலைக் கட்டுப்பாடு நீக்கப் பட்டமை, இக்காலப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் பெருமளவுக்கு உயர்ந்த மூலதனச் செறிவினைக் கொண்ட பாரிய உற்பத்தி அலகுகளாக இருந்து வந்தமை என்பனவே இதற்கான காரணங்களாகும். இந்தச் சீர்திருத்தங்களின் பின்னர், பெரும் எண்ணிக்கையிலான சிறிய மற்றும் உள்நாட்டுக் கைத்தொழில்கள் உற்பத்தியை நிறுத்திக் கொண்டன (கைஅச 1983).

மிகச்சமீபத்திய வருடங்களில் வருமானப் பகிர்வின் ஏற்றத் தாழ்வுகளில் மேலும் அதிக அளவிலான அதிகரிப் புக்கள் ஏற்பட்டிருந்தன. இதுவரை காலமும் செயற்படுத்தப்பட்டுவந்த பெரும்பாலான மானியங்கள் – குறிப்பாக உரம் மற்றும் விவசாயக்கடன் தொடர்பான மானியங்கள் – ஒழிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும். பண வீக்கப் போக்கு, வேளாண்மைத் துறை தொழிலாளர்களின் கூலிகளை உயர்த்தியுள்ளதுடன், வெளி ஊழியம் செலவு கூடியதாக இருந்து வருவதனால் புதிய விவசாயிகளால் அத்தகைய ஊழியத்தினை வாடகைக்கு அமர்த்த முடியாதுள்ளது. இதற்குப் பதிலாக குடும்ப ஊழியம் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. இது நிலமற்ற வேளாண்மைத் துறை தொழிலாளர் களிடையே அதிகரித்தளவிலான வேலை யில்லாத் திண்டாட்டத்தினையும், கீழ் உழைப் பினையும் எடுத்து வருகின்றது. வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்ந்திழுக்கும் நோக்கில் அரசாங்கம் பின்பற்றிவரும் கூலிகள் தொடர்பான கொள்கை, பண வீக்கத்துக்கு ஈடு செய்யும் விதத்தில் கூலிகள் அதிகரிப்பதனை தடுத்து வருகின்றது. இதன் விளைவாக, மெய்க் கூலிகளில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வருமான வரி விகிதம் ஒரே சீராகக் குறைக்கப்பட்டு வந்துள்ளதனால் செல் வந்தர்களின் வருமானம் உயர்மட்டத்தில் நிலவி வருகின்றது.

மெய்யாதனத்தின் மீதான உயர்ந்த வாடகை, சேவைத்துறை தொழில் முயற்சிகளின் உயர்ந்த இலாபங்கள் மற்றும் உயர் அளவிலான வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றின் விளைவாகவே நகரத்துறையில் ஆக உயர்ந்த மட்டத்திலான ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. பங்குச்சந்தை நவீனமயமாக்கப்பட்டதன் விளைவாக, இதுவரை காலமும் முதலீடுகளை மேற்கொள்ளாதிருந்து வந்த நடுத்தர வர்க்க மக்கள் தனியார் கைத்தொழில்களில் முதலீடுகளை மேற் கொள்வதற்கு முன்வந்துள்ளனர். பங்கு களின் சந்தை விலைகளை பன்மடங்கினால் உயர்த்திவிடும் இந்த 'பங்கு செழிப்பு நிலை', பிரதானமாக நகர மேல்தட்டு மற்றும் நடுத்தட்டு மக்கள் பிரிவினரான பங்குதாரர்களின் வருமானத்தை அதிகரித் துள்ளது.

## துறைவாரியான வேறுபாடுகள்

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை (2) 1973, 1978/79, 1985, 1990/91 ஆகிய வருடங்களில் நகர, கிராம மற்றும் தோட்டத் துறைகளில் ஒவ்வொரு வருமானப் பிரிவினரும் பெற்றுக் கொண்ட வருமான அளவுகளை எடுத்துக் காட்டுகின்றது. நகரத்துறையின் வருமான ஏற்றத்தாழ்வு 1973 தொடக்கம் 1978/79 வரையில் அதிகரித்து வந்துள்ளது. இந்தத் துறையில் உள்ள ஆக உயர்ந்த வருமானப்பிரிவினர் மட்டுமே தமது சார்புரீதியான பங்கினை உயர்த்திக் கொண்டுள்ளனர். தோட்டத் துறையில் ஆகத் தாழ்ந்த மட்டத்தில் இருந்த பிரிவினர், நகரத்துறையில் அல்லது கிராமப் புறங்களில் வாழ்ந்து வந்த தமது சகாக் களிலும் பார்க்க அதிகரித்த அளவிலான ஒரு பங்கினைப் பெற்று வந்தனர். நகர்ப்புறத்தில் வாழ்ந்து வந்த உயர் வருமானப் பிரிவினரைப் பொறுத்த வரையில், சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானம் மிக முக்கியமான ஒரு வருமான மூலமாக இருந்து வந்தது. 1977 இன் கொள்கைச் சீர்திருத்தங்களின் பின்னர் நகர்ப்புற சொத்துக்கள் மீதான வாடகை பெருமளவுக்கு அதிகரித்து வந்ததுடன், சொந்தக்காரரே வாழ்ந்து வரும் வீடுகளின் (கருதப்படும்) வாடகை அளவு அதிகரித்தது. இது நகரத்துறைக்கும் ஏனைய இரு துறைகளுக்குமிடையில் நிலவி வரும் உயர் அளவிலான வருமான ஏற்றத்தாழ்வுக்கும், நகர்ப்புறத்தில் உயர் வருமானப் பிரிவினரின் வருமான அதிகரிப் புக்குமான காரணத்தை ஓரளவுக்கு எடுத்து விளக்குகின்றது.

வருமானப்பகிர்வு தொடர்பான ஆக உச்சமட்ட ஏற்றத்தாழ்வு 1985இல் நகரத் துறையில் நிலவி வந்தது. இதே நிலைமை 1978/ 79 காலப்பிரிவிலும் காணப்பட்டதுடன், இத்தகைய போக்குகள் 1953/63 மற்றும் 1973 ஆகிய வருடங்களின் மதிப்பீட்டாய்வுகளில் கூட அவதானிக்கப் பட்டுள்ளன என்பதனை நுகர்வோர் நிதி ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தத் துறையில் வாழும் மக்கள் பிரிவினரின் ஒருமித்த தன்மையே இதற்கான காரணமாகும். 1985இல் நகர்ப்புறத்தில் வாழ்ந்த வருமானம் உழைப்பவர்களில் சுமார் 80 சதவீதத்தினர் அனைத்து வருமானம் உழைப்பவர்களினதும் ஆகக்குறைந்த வருமானத்திலும் பார்க்க குறைவான ஒரு வருமானத்தைப் பெற்று வந்தனர். கிராமிய மற்றும் தோட்டத் துறைகள் தொடர்பான இந்த அளவு முறையே 70 சதவீதமாகவும் 60 சதவீத மாகவும் இருந்து வந்தது. இது 1990/91ல் நகரத்துறையில் 80.7 சதவீதமாக ஓர் எல்லை அதிகரிப்பினைக் காட்டியது. இக்காலப்பிரிவுக்கான கிராம மற்றும் தோட்டத் துறைகளின் அளவு முறையே 63 சதவீதம் 54 சதவீதம் என நிலவி வந்தன.

நகரத்துறையில் வாழ்ந்துவந்த செல்வந்தர்களான சமூகப் பிரிவினரின் ஆகக்குறைந்த வருமானம் ஏனைய

வர்களின் ஆகக்குறைந்த வருமானத்திலும் பார்க்க உயர்வானதாக இருந்து வந்தது. உரிமையாளரே வாழும் வீடுகளின் வாடகை தொடர்பான கூறு இன்னமும் ஒரு முக்கியமான காரணியாக இருந்து வருகின்றது என்பதனையும், உயர் வருமானத்தை எடுத்து வரும் பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் இன்னமும் நகர்ப்புறங்களிலேயே செறிந்துள்ளன என்பதனையும் இது காட்டுகிறது. சேவைத்துறையின் விரிவாக்கம் –குறிப்பாக, நிதி நிறுவனங்களின் விஸ்தரிப்பு–இந்த நிலைமைக்குப் பொறுப்பாக இருந்திருக்க முடியும். நகர்ப்புறத்தில் வாழும் செல்வந்தரான சமூகக் குழுவினரின் சராசரி வருமானம், 1990/ 91 காலப்பிரிவில் கிராமப்புறத்தில் வாழ்ந்து வந்த ஆக உயர்ந்த வருமானப் பிரிவினரின் வருமானத்திலும் பார்க்க இருமடங்கு அதிகமானதாக இருந்தது. துறைகளுக்கிடையே வருமானம் சார்புரீதியில் பகிரப்பட்டிருக்கும் விதம் குறித்து அவதானிக்கப்பட்டுள்ள மற்றொரு முக்கிய விடயம், நகரத்துறையின் சார்பு ரீதியான முக்கியத்துவம் 1981இல் 28.2 சதவீதமாக இருந்து 1985ல் 35.6 சதவீதமாக விருத்தி அடைந்திருந்தது என்பதாகும். நகரத்துறையில் 1985க்கும் 1990க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆகக்குறைந்த வருமானத்தில் ஆகக்கூடிய அதிகரிப்பு ஏற்பட்டு வந்திருப்பதனால் இந்த நிலைமை 1990/91 காலப்பகுதியில் மேலும் விருத்தி கண்டிருக்க முடியும்.

1985க்கும் 1990க்குமிடையில் சராசரி வருமானத்தில் ஏற்பட்ட ஆகக்கூடிய வளர்ச்சி நகரத்துறையிலேயே (13%) காணப்பட்டது. தொகை மதிப்பு, புள்ளிவிவர துணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம், இக்காலப்பிரிவில் கிராமத்துறையில் 57%, தோட்டத்துறையில் 55% என வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆகக்குறைந்த உயர் வருமானம்இவ்விதம் நகரத்துறையை நோக்கி நகர்ந்து சென்றமை, சேவைகள் துறையின் விரிவாக்கம் – குறிப்பாக அண்மைய வருடங்களில் நகரத்துறையில் வங்கித்தொழில் மற்றும் ஏனைய நிதிசார் சேவைகளின் விரிவாக்கம்– மற்றும் வானளாவ உயர்ந்து சென்ற வாடகை விகிதங்கள் என்பவற்றின் விளைவாகவே தோன்றியிருந்தது. கொள்கைச் சீர்திருத்தத்துக்குப் பின்னர் ஏனைய பிரதேசங்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை பரவலாக்கும் வேலை மிகவும் மெதுவாகவே இடம் பெற்று வந்தது.

அட்டவணை 2

ஒவ்வொரு வருமானப் பிரிவினரும் பெற்றுக் கொண்ட ஆகக் குறைந்த வருமானம் 1973, 1978 /79, 1985 / 86, 1990 /91

| வருடம் | பிரிவு | நகர | கிராம | தோட்ட |
|---|---|---|---|---|
| 1973 | ஆகக்குறைந்தது | 5.39 | 5.35 | 7.51 |
| | இரண்டாவது | 10.74 | 11.60 | 11.73 |
| | மூன்றாவது | 16.13 | 16.95 | 14.90 |
| | நான்காவது | 22.42 | 23.39 | 20.65 |
| | ஆகக் கூடியது | 45.32 | 42.71 | 45.21 |
| 1978/79 | ஆகக்குறைந்தது | 3.34 | 3.49 | 7.73 |
| | இரண்டாவது | 8.49 | 8.60 | 13.21 |
| | மூன்றாவது | 13.24 | 14.11 | 16.76 |
| | நான்காவது | 19.26 | 20.82 | 22.22 |
| | ஆகக் கூடியது | 55.67 | 52.98 | 40.07 |
| 1985/86 | ஆகக்குறைந்தது | 1.20 | 1.40 | 1.80 |
| | இரண்டாவது | 5.20 | 5.60 | 12.10 |
| | மூன்றாவது | 9.30 | 12.20 | 18.10 |
| | நான்காவது | 15.80 | 21.00 | 23.40 |
| | ஆகக் கூடியது | 67.50 | 59.40 | 44.60 |
| 1990/91 | ஆகக்குறைந்தது | 1.4 | 1.5 | 5.9 |
| | இரண்டாவது | 6.0 | 8.0 | 18.0 |
| | மூன்றாவது | 11.0 | 13.0 | 20.0 |
| | நான்காவது | 15.0 | 25.0 | 26.0 |
| | ஆகக் கூடியது | 66.0 | 53.0 | 31.0 |

ஆதாரம்: தொகை மதிப்பு, புள்ளிவிவர திணைக்களம், ஊழியர் படை மற்றும் சமூக-பொருளாதார மதிப்பீடு 1985/86

எவ்வாறிருப்பினும், கடந்த சில வருடங்களின் போது –முக்கியமாக 1990இன் பின்னர்– பெரும் எண்ணிக்கையிலான ஆடைத் தொழிற்சாலைகள் கிராமப் பிரதேசங்களை நோக்கி சென்றிருப்பதனால் இப்பொழுது இந்த நிலைமை சற்று மாறுபட்டதாக இருந்துவர முடியும்.

கிராமியத் துறையில் ஆகத்தாழ்ந்த மட்டத்திலிருந்த வருமானப் பிரிவினர் மொத்த வருமானத்தில் பெற்ற பங்கு 1972இல் 5.39 சதவீதமாக இருந்து 1978/79 காலத்தில் 3.34 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இதே காலப் பிரிவின்போது, உயர்ந்த வருமானத் தொகுதியில் இருந்து வந்த பிரிவினரின் வருமானம் 24 சதவீதத்திலிருந்து 52.9 சதவீதமாக காணப்பட்டது. இக்காலப் பிரிவின்போது, கிராமியத் துறையினால் பெறப்பட்டுவந்த சராசரி வருமானம் நெற்செய்கையில் ஏற்பட்ட விளைதிறன் அதிகரிப்பின் விளைவாக மெய் அளவுகளில் அதிகரித்திருந்தது. எனினும், இது நிலமற்ற கூலித் தொழிலாளர்களின் நிலையை விருத்தியுறச் செய்திருக்கவில்லை. 1978/ 79இல் வருமானம் உழைப்பவர்களில் 21 சதவீதத்தினர் வேளாண்மைத்துறையில் பெற்ற சமயாசமய வேலை வாய்ப்புக்களிலிருந்தே வருமானங்களை உழைப்பவர் களாக இருந்து வந்தனர். ஆனால், கிராமியத் துறையின் வருமானத்துக்கான அவர்களுடைய பங்களிப்பு 10 சதவீதமாக மட்டுமே இருந்து வந்தது. கிராமியத் துறையின் வருமானப் பகிர்வில் நிலவி வரும் பாரிய அளவிலான ஏற்றத்தாழ்வுக் கான காரணத்தை இது ஓரளவுக்கு விளக்குகின்றது.

கிராமியத் துறை, 1985இல் ஆகக் குறைந்த வருமானக் குழுவினர்பெற்ற ஆகக்குறைந்த பங்கினை (1.4%) பதிவு செய்திருந்தது. இந்நிலைமை 1990 இல் 1.5% ஆக எல்லை அளவில் விருத்தியடைந்திருந்தது. எனினும், ஆக உயர்ந்த வருமானத் தொகுதியினர் மொத்த வருமானத்தில் பெற்றுக் கொண்ட பங்கு 1985ல் 59 சததவீதமாக இருந்து 1990 இல் 53 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. தோட்டத்துறையில் உயர் வருமானப் பிரிவினர் 1973இல் பெற்றுக் கொண்ட வருமானத்தின் அளவிலும் பார்க்க குறைந்த

அளவிலான வருமானத்தை 1978/ 79 காலத்தில் பெற்று வந்தனர். தேயிலைத் தோட்டங்களில் எழுச்சியடைந்து வந்த நெருக்கடி உயர் வருமானப் பிரிவினரின் வருமானத்திலேற்பட்டு வந்த வீழ்ச்சிக்கு காரணமாக இருந்திருக்க முடியும். தோட்டப்பகுதிகளில் கூலிகளில் 1973க்கும் 1978/ 79க்கும் இடைப்பட்ட காலத்தில் தீவிர அதிகரிப்பு ஏற்பட்டிருந்தமை காரணமாக, ஆகத்தாழ்ந்த மட்டத்தில் இருந்து வந்த வருமானப் பிரிவினரின் ஆகக் குறைந்த வருமானம் 1973 இன் அளவிலும் பார்க்க அதிகரித்துக் காணப்பட்டது. மகளிரின் நடவடிக்கை விகிதம் உயர்ந்து கொண்டு வந்தமையும், தோட்டங்களில் நிலவி வந்த ஆண் தொழிலாளர்களுக்கும் பெண் தொழிலாளர்களுக்கும் இடையிலான கூலி விகித வேறுபாடு குறைக்கப் பட்டமையும் கூட இதற்குப் பங்களிப்புச் செய்திருக்க முடியும்.

தோட்டப்பகுதி வருமானம் உழைப்பவர்களில் ஆக வறிய பிரிவினரான 60 சதவீதத்தினரின் குறைந்த பட்ச வருமானம் கிராமிய மற்றும் நகரத்துறை வருமானம் உழைப்பவர்களின் வருமான மட்டங்களிலும் பார்க்க உயர்வானதாக இருந்து வந்துள்ளது என்பது மற்றொரு சுவாரஸ்யமான அம்சமாகும். தோட்டத்துறையில் அண்மைக்காலத்தில் இடம் பெற்ற கூலி அதிகரிப்புக்களின் விளைவாக அங்கு வாழ்ந்து வந்த மிக வறிய பிரிவினரின் வருமான நிலை, கிராமத்துறையில் வாழ்ந்து வந்த அவர்களுடைய சகாக்களின் வருமான நிலையிலும் பார்க்க சிறந்ததாக இருந்து வந்துள்ளது என்பதனையே இது காட்டுகின்றது. இந்தத்துறையைப் பொறுத்தவரையில், கூலி வருமானம் மிக முக்கியமான வருமான மூலமாக இருந்து வருகின்றது. எனினும், மொத்தத்தில் இவர்கள் பெற்றுக் கொள்ளும் பங்கு உயர்வானதாக இருந்து வந்துள்ள போதிலும், இந்தப் பிரிவினர் பெற்றுவரும் மெய் வருமானம் கணிசமான அளவுக்குக் குறைவானதாக இருந்து வருகின்றது.

ஏசியன் டிவலப்மன்ட ரிவியூ என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ள ஓர் ஆய்வின் பிரகாரம், இலங்கையின் வறுமை நிலை 1970 களிலும் 1980 களிலும் தொடர்ச்சியாக நீடித்து வந்துள்ளது. அந்த ஆய்வுக் கட்டுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள வேறு சில ஆய்வுப் பரிசீலனைகளின் பிரகாரம், வறுமை கிராமியத் துறையிலேயே மிக உயர்ந்த அளவில் நிலவி வந்துள்ளதை காண முடிகின்றது. இந்தத் துறையில் சுமார் 25 சதவீதத்துக்கு மேற்பட்ட குடித்தொகையினர் வறுமையால் துன்புற்று வருகின்றனர். இலங்கையின் வறுமை நிலை குறித்து மார்கா நிறுவனம் மேற்கொண்ட ஓர் ஆய்வு, வறுமைக் கோட்டினை, 1973இன் விலைகளில் தலைக்குரிய மாதாந்த உணவுச்செலவாக மாதாந்தம் ரூபா 37 என நிர்ணயம் செய்திருந்தது. குணரத்ன என்பவர் 1978/ 79ல் மாதமொன்றுக்கான ஆளொருவருக்கான உணவுச் செலவாக ரூபா 70ஐ நிர்ணயம் செய்திருந்தார். இது முன்னர் குறிப்பிடப்பட்ட சஞ்சிகையின் ஆய்வின் அடிப்படையில் பொருத்தி நோக்கப் பட்டிருந்தது. 1969/70 காலப்பிரிவுக்கான வறுமைக்கோடு ரூபா 21 ஆகவும், 1980/ 81 காலப் பிரிவுக்கான வறுமைக்கோடு ரூபா 106 ஆகவும் மதிப்பிடப்பட்டிருந்தது. 1973ஆம் வருடத்துக்கான அளவு ரூபா 27.12 ஆகும். இதனை 1992ம் வருடத்துக்கான உணவுச் செலவினச் சுட்டெண்ணைப் பயன்படுத்துவதன் மூலம் மேலும் விரிவாக்க முடியும். அதன் பெறுமதி 1990/ 91 இல் ரூபா 331 ஆக இருந்ததுடன், 1992இல் மாதாந்தம் தலைக்குரிய அளவு ரூபா 392 ஆக இருந்தது. 1990/ 91 குடும்ப வருமான மற்றும் செலவின மதிப்பீட்டாய்வின் பிரகாரம், மொத்தச் செலவினத்தின் 59.2 சதவீதம் உணவுக்கும் பானங்களுக்குமென செலவிடப்பட்டு வந்தது. நாங்கள் இந்த்தரவுகளைப் பயன்படுத்தி, மாதமொன்றுக்கு ஆள் ஒருவருக்கான வறுமைக் கோட்டின் மொத்தச் செலவு ரூபா 559.12 என மதிப்பிட்டுக் கொள்ள முடியும். இது குடும்பமொன்றுக்கு ரூபா 1,848.44 என காணப்படுகின்றது.

மார்கா ஆய்வினால் முன்வைக் கப்பட்ட தரவுகளை 1990/ 91 காலத்துக்கு விரிவுபடுத்தும் பொழுது, வறுமைக் கோட்டின் செலவு மட்டம் ஆளொருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 462.80 ஆக இருந்து வருவதுடன், குடும்பமொன்றுக்கு 1,527.24 ஆக இருந்து வருகிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள விரிவு படுத்திப்பார்க்கும் முறை வறுமையை மதிப்பிடுவதற்கான மிகவும் மேலோட்ட மான ஒரு முறையாகும். ஏனெனில், இக்காலப் பிரிவின்போது உணவுப் பழக்கங்கள் மாற்றமடைந்து வந்துள்ளதுடன், வெவ்வேறு உணவுப் பண்டங்களின் சார்புரீதியான முக்கியத் துவமும் மாற்றமடைந்திருக்க முடியும்.

குடும்ப வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான மதிப்பீட்டாய்வு 1990/ 91 இன் பிரகாரம் ரூபா 545 – 623 தலைக்குரிய செலவு வீச்சினைக் கொண்டவர்கள் குடித்தொகையில் சுமார் 45 சதவீதத்தினராக (70 இலட்சம் பேராக) இருந்து வருகின்றனர். இது 1990/ 91 காலப் பிரிவில் குடித்தொகையில் 45 சதவீதத்தினர் ஆகக்கூடிய வறியவர்கள் என்ற வகைக்குள் அடங்கியிருந்தனர் என்பதைக் காட்டுகின்றது. எனினும், மார்கா ஆய்வின்படி, 1990/ 91இல் குடித் தொகையில் சுமார் 23.8 சதவீதத்தினர் (33,80,000 பேர்) வறியவர்களாக இருந்து வந்தனர். இது மிகத் தெளிவாகவே இலங்கையின் வறுமை நிலை தொடர்பான ஒரு குறை மதிப்பீடாகவே உள்ளது. சார்புரீதியான வறுமையில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களை, முழு நாட்டுக்குமாக ஆகக்குறைந்த அல்லது சராசரி வருமான மட்டத்துக்குக் கீழ வருமானம் பெற்றுவரும் குடித்தொகை யினரின் சதவீதத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை பரிசீலனை செய்வதன் மூலம் மதிப்பிட்டுக் கொள்ள முடியும்.

## முடிவுக் குறிப்புகள்

இந்தக் கட்டுரையில் மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி ஆய்வுகள் மற்றும் தொகை மதிப்பு, புள்ளிவிவர திணைக்களத்தின் மதிப்பீட்டுத் தரவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, இலங்கையின் வருமானப் பகிர்வு மாதிரி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு மூலங்களிலிருந்தும் கிடைக்கும் தரவுகளை, அவற்றுக்காக பயன்படுத்தப் பட்டுள்ள முறையியலில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக ஒப்பிட்டு நோக்க முடியாது. எனினும், 1963 இன் பின்னர் 1977 வரையில் பெருமளவுக்கு சமத்துவமான வருமானப் பகிர்வு முறை ஒன்று உருவாகி இருந்தது என்பதனை இந்தத் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. அதனையடுத்து, ஒரு நேர் மாறான போக்கு உருவாகியதுடன், 1990 வரையில் வருமானப் பகிர்வு பெருமளவுக்கு ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட ஒரு போக்கினைக் காட்டி வந்துள்ளது. சமீபத்திய 1990/91 தரவுகள் மிக மெதுவான ஒரு மாற்றப்போக்கு இடம் பெற்று வருகின்றது என்பதனைக் காட்டுகின்றன.

# திருமணத்தின் பொருளியல்

டப். ஏ.விஜேவர்தன

'பொருளியல் நோக்கு' இந்த இதழ் தொடக்கம், பொருளாதாரத்தின் நவீன போக்குகளை எடுத்துவிளக்கும் ஒரு புதிய பகுதியை ஆரம்பித்து வைக்கின்றது.

சமூகவியலாளர்கள், 'திருமணம்' என்ற பந்தத்தினை, குழந்தைகளை உருவாக்கும் நோக்கத்துடனும், மனிதர்களை சமூகமயப்படுத்தும் நோக்கத்துடனும் சமூக ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு வழியில் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் உருவாக்கப்படும் பாலியல் உறவுமுறை ஒன்றாகவே நோக்கி வருகின்றனர். எனினும், ஒரு பொருளியலாளரைப் பொறுத்தவரையில், 'திருமணம்' என்பது, கணவன் மற்றும் மனைவி என்ற இரு உற்பத்திக் காரணிகளிடையே இடம் பெற்றுவரும் ஒரு கூட்டாகவே நோக்கப்படுகின்றது. இந்த இரு உற்பத்திக் காரணிகளும், குடும்ப அலகைச் சேர்ந்த உறுப்பினர்களின் சேமநலனை உச்சப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, 'குடும்பம்' என்று அழைக்கப்படும் ஒரு நிறுவனத்துக்குள் ஐக்கியப்படுத்தப்படுகின்றன. ஒரு குடும்பத்தின் வேலை, அதன் உறுப்பினர்களுக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்வதற்காக மூலவளங்களைப் பகிர்ந்தளிப்பதாகும். இந்த முயற்சியின்போது, சம்பந்தப்பட்ட குடும்பம், பொருளியலில் எடுத்து விளக்கப்பட்டுள்ள திறமையான மூலவளப் பகிர்வு தொடர்பான கோட்பாட்டினை பின்பற்றி வராவிட்டால், அந்தக் குடும்ப அலகின் உற்பத்தி மட்டம் ஒரு தாழ்ந்த நிலையிலேயே இருந்து வரும்.

பொருளாதாரத்தில் நிலவி வரும் ஓர் அடிப்படையான அனுமானம், தனிநபர் ஒருவர் தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மூலவளங்களை, தனது பயன்பாட்டு மட்டத்தினை உச்சப்படுத்திக் கொள்வதற்காக பயன்படுத்தி வருகின்றார் என்பதாகும். இந்தப் பயன்பாட்டினை ஒரு தர ரீதியான காட்சியுண்மையாக விளக்க முடியும். இந்தக் காட்சியுண்மை, தனி நபர் ஒருவரின் வெளி உலகுடனான இடைத்தொடர்புகளில், அவர் இன்பமடைவதற்கு வழிகோலுகின்றது. ஒவ்வொரு தனி நபரும், அவருடைய பயன்பாட்டின் மீது பாதிப்பினை எடுத்து வரும் பல்வேறு காரணிகளை உள்ளடக்கிய ஒரு பயன்பாட்டுக் கருமத்தினை கொண்டுள்ளார். ஒரு தனிநபரின் பயன்பாட்டினை பாதித்து வரும் இக் காரணிகள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அவருடைய சொந்த நுகர்வின் வடிவத்தினை பெற்று வருகின்றன என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், குடும்பப் பொருளியலில், ஒரு நபரின் பயன்பாடு அவருடைய சொந்த நுகர்வில் மட்டும் தங்கியிருப்பதில்லை; அவருடைய குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களின் நுகர்விலும் அது தங்கியுள்ளது. எனவே, ஒரு கணவன், தனது மனைவி மற்றும் பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு இன்படைய முடியும். இந்த வகையில், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் ஏனையவர்களின் நன்மைக்காக தியாகங்களைச் செய்வது சாதாரணமான ஒரு விஷயமாகும். இவ்விதம் தியாகம் செய்யும் நபர், இந்தத் தியாகத்துக்குக் கைமாறாக பண வடிவிலான ஆதாயங்களை எதிர்பார்ப்பதில்லை. தன்னைச் சார்ந்திருப்பவர்களின் நேசத்தினையும் விசுவாசத்தினையும் மட்டுமே அவர் எதிர்பார்க்கிறார். மற்றவர்களின் நன்மைக்காக உழைக்க வேண்டும் என்ற குடும்ப உறுப்பினர் ஒருவரின் இந்த விருப்பு "பெருந்தன்மை" என்று அழைக்கப்படுகின்றது.

குடும்ப அலகில் உற்பத்தி என்பது இரு முனைகளில் ஏற்படுகின்றது: வெளி உலகுக்கு அதன் ஊழிய வளங்களை விற்பனை செய்தல் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் வீட்டுச் குள்ளேயே உற்பத்தி செய்தல் என்பன இந்த இரண்டு பிரிவுகளுமாகும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு குடும்ப உறுப்பினர்களுக்குமிடையே நன்கு வரையறுக்கப்பட்ட ஊழியப் பிரிவு முறை ஒன்று குடும்ப அலகினால் பின்பற்றப்பட்டுவருவதனை அவதானிக்க முடியும். பல்வேறு உறுப்பினர்களுக்குமிடையே வேலையைப் பகிர்ந்தளிக்கும் பொழுது, ஒவ்வொரு தனிநபரினதும் உற்பத்தித்திறனுக்கு ஏற்ற விதத்தில் வேலையை பகிர்ந்தளித்தால், அது குடும்ப அலகுக்கு அனுகூலமளிக்கக் கூடிய ஒரு நடவடிக்கையாக இருக்கும். இவ்விதம் வேலைகளைப் பகிர்ந்தளிப்பதில், சமூக வழக்கத்தை அல்லது பாரம்பரியத்தை பின்பற்ற முடியாது. ஒவ்வொரு தனி நபரின் உற்பத்தித்திறன், அவருடைய சிறப்புத் தேர்ச்சித் திறன்கள் மற்றும் தேர்ச்சிகள் என்பவற்றிலேயே தங்கியிருக்கும். எனவே, ஒரு நபர் தோட்ட வேலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தால் அவருக்கு சமயலறையில் வேலை கொடுத்தால் அந்த வேலையை அவர் சரிவர செய்ய முடியாது. அதே போல, சமயலறை வேலைகளில் சிறப்புத் தேர்ச்சிகளைப் பெற்றிருக்கும் ஒரு நபர், தோட்ட வேலைகளில் மிக மோசமாக செயற்பட முடியும். இந்த விதத்தில், பல்வேறு பணிகளை மேற்கொள்வதில் குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் பெற்றிருக்கும் உற்பத்தித் திறனை கவனத்தில் எடுக்காது வேலைகளைப் பகிர்ந்தளித்தால், அது, அக்குடும்ப அலகில் செயல்திறனற்ற உற்பத்தி ஏற்படுவதற்கு வழிகோல முடியும்.

எவ்வாறிருப்பினும், பல்வேறு குடும்ப உறுப்பினர்களிடையே வேலகளை பகிர்ந்தளிப்பதில் குடும்ப அலகு பல இடையூறுகளை எதிர்கொள்கின்றது. உதாரணமாக, (செவிலித்தாய் ஒருவரை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளக்கூடிய சந்தை ஏற்பாடுகள் இப்பொழுது நிலவி வந்த போதிலும்) உயிரியல் ரீதியாக குழந்தை வளர்ப்பும் அதனுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் மனைவியிடம் சுமத்தப்படுவது அவசியமாகும். மேலும், பல்வேறு வேலைத் தேவைகள் தொடர்பான விசேஷ தேர்ச்சிகளும் திறன்களும் வேலைப் பகிர்வுக்கு இடையூறாக இருந்து வருகின்றன. சிறப்பு வேலைகளை மேற்கொள்வதில் குடும்ப உறுப்பினர்கள் முன்னரேயே செயல் திறனைப் பெற்றிருக்காவிட்டால், இந்த

உறுப்பினர்கள், தமக்கு வழங்கப்படும் வேலைகளில் பொருத்தமான பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் வரையில், சம்பந்தப் பட்ட குடும்ப உறுப்பினர்களை மீளப் பயிற்றுவிப்பதற்காக மூலவளங்களை செலவிட வேண்டி இருப்பதுடன், அத்தகைய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வெளி வழிமுறைகளையும் நாட வேண்டியிருக்கும். எனவே, குடும்பப் பொருளியல், குடும்ப அலகுக்குள் மேற்சொன்ன இடையூறுகளுக்கு ஏற்ற விதத்தில் மூலவளங்கள் மிகவும் திறமையான முறையில் பயன்படுத்தப்பட வேண்டிய தேவையை அங்கீகரிக்கின்றது. மூலவளப் பகிர்வில் குடும்ப அலகுக்குள் செயல்திறனைப் பராமரித்து வருவது, நீண்ட காலத்தில் அக்குடும்பத்தின் நிலையான அபிவிருத்தியை உறுதிப் படுத்தும்.

மூலவளங்களின் திறமையான பயன்பாடு குறித்த இந்தத் தேவை சமகால சமூக ஒழுங்குமுறையுடன் எந்த அளவுக்கு ஒத்துப்போக கூடியதாக இருந்து வருகின்றது? கடந்த ஐம்பது வருட காலத்தில் மகளிர் குறித்த அணுகுமுறையும், சமூகத்தில் அவர்கள் வகித்து வரும் பங்கும் கணிசமான அளவில் நிலைமாற்றம் கண்டு வந்துள்ளது. இந்த விதத்தில், அநேகமாக அனைத்து சமூகங்களும் மகளிருக்கு எல்லாத்துறைகளிலும் சமமான வாய்ப்புக்களை அளிக்கும் விஷயத்தில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன. கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் சமூகப் பங்கேற்பு ஆகிய அனைத்துத் துறைகளிலும் இப்பொழுது மகளிருக்கு ஆண்களுக்கு வழங்கப்படும் அதே வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கேற்ப, இப்பொழுது பெண் குழந்தைகள் அனைவருக்கும் அவர்களுடைய பெற்றோர் உள்வீட்டு உற்பத்திக்குத் தேவையான திறன்களையன்றி வெளிச்சந்தையில் தமது ஊழியத்தை விற்பனை செய்வதற்கு இயலச் செய்யக்கூடிய திறன்களில் பயிற்சி அளித்து வருகின்றனர். இதற்கு இணைந்த விதத்தில், சமீப காலத்தில் குடும்ப அலகுக்குள் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் சதவீதம் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. அதே வேளையில், சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்படும் இப்பொருட்களினதும் சேவைகளினதும் அளவு தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. இதன் பின்விளைவாக, கடந்த சில தசாப்த காலங்களின் போது, அநேகமாக அனைத்து மேலைத்தேசப் பொருளாதாரங்களிலும் "சேவைத்துறை" என்றழைக்கப்படும் ஒரு புதிய துறையில், சந்தை முன் எப்பொழுதும் இருந்திராத மட்டங்களில் விரிவாக்கம் பெற்று வந்துள்ளது.

இந்தப் புதிய சவாலை எதிர் கொள்வதற்காக சந்தைப் பொருளா தாரத்தில் பல்வேறு புதிய மாற்றங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. முதலில், வேலை செய்யும் பெண்களின் நேரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பான கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கும் விதத்தில், பரந்த வீச்சிலான (வேலையைக் குறைக்கும்) உபகரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, வர்த்தக அடிப்படையில் சந்தைக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய பொருட்களுக்கு ஏற்கனவே பேரளவிலான ஒரு கிராக்கி நிலவி வந்தமையால், இப்புதிய உற்பத்திப் பொருட்கள் சந்தையில் உடனடியாக வெற்றி பெற்றன. இந்த வகையில், சலவை இயந்திரங்கள், மைக்ரோவேவ் அடுப்புக்கள், குளிர் பதனப்பெட்டிகள், அரைக்கும் இயந்திரங்கள் போன்ற உற்பத்திப் பொருட்கள் சந்தையில் வந்து குவிந்தன. இந்த உபகரணங்கள், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு 'இன்றியமையாதவை' எனக் கருதப்பட்டன. இந்த உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக குடும்ப அலகு கணிசமான அளவிலான மூலதனச் செலவினத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை இருந்து வந்தபோதிலும், இவை எடுத்து வரும் நேரச் சிக்கனம், பெண்கள் வெளியே சென்று சந்தைக்குத் தமது ஊழியத்தை வழங்குவதில் இதுவரையில் நிலவி வந்த ஒரு முக்கியமான இடையூறினைப் போக்கியுள்ளது. இரண்டாவதாக, புதிதாக வளர்ச்சியடைந்து வந்த சேவைத்துறை, முன்னர் பெண்களினால் வீட்டுக்குள்ளேயே உற்பத்தி செய்யப்பட்டு வந்த பல்வேறு விதமான வீட்டுச் சேவைகளையும் வழங்கின. நகர்ப்புறங்களில் உணவகங் களும் உடன் உணவு வழங்கும் மையங்களும் திடீரென முளைத்துள்ளன. குடும்ப உறுப்பினர்களுக்காக, வீட்டில் சமையல் செய்ய வேண்டிய அவசியத்தை இந்தச் சேவைகள் இல்லாமல் செய்துள்ளன. இலங்கையிலும் கூட, அண்மைக் காலத்தில் பாதையோர உடன் உணவு வழங்கும் கடைகள் பல்கிப் பெருகி வந்துள்ளன; இக்கடைகள் இடியப்பம், அப்பம், பிட்டு மற்றும் கொத்து ரொட்டி போன்ற பாரம்பரிய உள்நாட்டு உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றன. மேலைய நாடுகளில், இத்தகைய உடன் உணவுகளை இப்பொழுது தொலைபேசி அழைப்பின் மூலமே வரவழைத்துக் கொள்ளக் கூடிய வசதிகள் ஏற்பட்டுள்ளன. சங்கிலித் தொடர் போல் அமைந்துள்ள மேலை நாட்டு உணவகங்கள் வாடிக்கையாளரின் வாசல்படிக்கே அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று, விநியோகித்து வருகின்றன. இந்த ஏற்பாடு குடும்ப உறுப்பினர்களின் நேரத்தை மிச்சப் படுத்துகின்றது. அதேபோல வீட்டைத் துப்புரவு செய்தல், சலவை செய்தல், தோட்டப் பராமரிப்பு போன்ற பெருமள வுக்கு ஊழிய நுகர்வினைக் கொண்ட வீட்டு வேலைகளையும் கூட, இப்பொழுது, சந்தைக்கூடாக பூர்த்தி செய்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

வீட்டுக்கு வெளியே உழைக்கும் மகளிரின் சம்பாத்தியங்கள், இந்தப் புதிய சந்தைக் கொள்வனவுகள் மீதான செலவினங்களிலும் பார்க்க உயர்ந்த மட்டங்களில் இருந்து வரும் வரையில், குடும்ப அலகு நிதி நெருக்கடிகளை எதிர் கொள்ளாது, தொடர்ந்தும் இந்தப் புதிய ஏற்பாடுகளை வைத்துக் கொள்ள முடியும். வேறொரு கண்ணோட்டத்திலிருந்து நோக்கும் பொழுது, இத்தகைய ஏற்பாடுகள், சிறப்புத் தேர்ச்சி கொண்ட தொழில்சார் சேவைகளை குடும்ப அலகு சந்தையிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு உதவின. அதன் காரணமாக, குடும்ப அலகு இத்தகைய ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட வில்லை. இந்தப்புதிய மாற்றங்கள் அனைத்தும், வீட்டுத் துறைக்குள் எத்தகைய தியாகங்களையும் மேற்கொள்ளப் படாமலேயே மகளிரைச் சந்தைக்கு விடுவிப்பதற்கு குடும்ப அலகுக்கு உதவின. இது பெண்கள் தமது ஓய்வு நேரத்தை அதிகரித்துக் கொள்வதற்கும், சரியான ஒரு மன நலத்தினை பேணிக் கொள் வதற்கும், பிள்ளைகள் தொடர்பாக அதிக நேரத்தை செலவிடுவதற்கும் வாய்ப்பை அளித்தது.

( 36 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் மிகக் குறைந்த மட்டத்தில் நிலவி வந்துள்ளதுடன், (பெருமளவுக்கு ஜனரஞ்சகமான டியுசன் பாடமொன்றாக இருந்துவரும்) ஆங்கிலப் பாடத்தில் சித்தி அடைந்தவர்கள் 5 சதவீதத்துக்கும் குறைந்தவர்களாகவே இருந்துள்ளனர். 1993 க.பொ.த. (சா.த.) பரீட்சை ஆங்கிலப் பாடத்தில் 77.58 சதவீத்தினர் தோல்வியடைந்திருந்தனர். தனியார் டியுசன் வகுப்புக்கள் எல்லா மட்டங்களிலும் எல்லா வகுப்புக்களிலும் உறுதியான ஒரு சந்தையைக் கொண்டுள்ளன என்பதனை இந்தத் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த வகுப்புக்களை நிலையாக நடத்தி வருவதற்கு பொருத்தமான சேவையொன்று வழங்கப்படுதல் வேண்டும். இந்த துறையின் வாடிக்கையாளர்கள் பிள்ளைகளாக இருந்து வருவதுடன், அவர்களுக்கு சேவையும் உதவியும் தேவைப்படுகின்றன. அவர்கள் தமது படிப்புக்கு பணம் செலுத்தி வருவதனால், அதிலிருந்து ஒரு இலாபத்தினை பெற்றுக் கொள்வதற்கான உரிமையையும் கொண்டுள்ளனர். குறிப்பிட்ட ஒரு வகை சவர்க்காரத்தை விளம்பரப்படுத்துவதற்காக அழகிய பெண் ஒருத்தியை வாடகைக்கு அமர்த்துதல் அல்லது பொதுவான உடல் நோவுகளுக்கு நிரந்தரமான நிவாரணம் தருவதாக யாராவது ஒரு வைத்தியர் பத்திரிகைகளில் கூறுவது போன்ற விளம்பர முறைகள் கல்வித் தொழிலில் பயன்தரப் போவதில்லை. விளம்பரங்களும் உதவி வருகின்றன என்பதனை இங்கு வலியுறுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை. கல்வியைப் பொறுத்த வரையில், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவை குறித்தும் சமூகத்தின் மீதான அதன் தாக்கங்கள் குறித்தும் மிகவும் தீவிரமான முறையில் சிந்தித்தல் அவசியமாகும்.

நடுநிலைக் கல்வி முறையிலிருந்து வெளியே தள்ளப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களை அம்முறையில் மீண்டும் திணித்து விடுவதற்கு பிறிதொரு சக்தி முயற்சி எடுப்பது ஒரு பயனற்ற வேலையாகும். அதற்கு இங்கு இடமில்லை. இவர்களை மீண்டும் அந்த முறைக்குள் தள்ளிவிடாமல் இருப்பதே இன்றைய தேவையாக உள்ளது. நடுநிலை மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி முறையில் தோல்வி கண்டவர்களின் பெரும் எண்ணிக்கையிலான பிரசன்னம், அதனை நிலைநிறுத்திக் கொள்வதற்கான ஒரு முறையின் அவசியத்தை எடுத்து வரவில்லை. பெருமளவுக்கு செயல் முனைப்பான, உறுதிமிக்க முறையொன்றை முன்வைப்பதே இன்றைய தேவையாகும். டியுசன் வகுப்புக்களும் நிறுவனங்களும் புதிய சவால்களை எதிர்கொள்ளக் கூடிய நடைமுறைப் பயிற்சிகளையும், போதிய திறன்களையும் உள்ளடக்கிய புதிய பாடநெறிகளை அறிமுகம் செய்து வைக்க வேண்டும்.

( 38 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆடுகளை சந்தைப்படுத்துவதில், போக்குவரத்து வசதிகளும் விலைத் தகவல்களும் போதியளவில் கிடைக்காமை, கலாச்சாரத் தடைகள் போன்ற பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. போக்குவரத்து வசதிகளும் விலைத் தகவல்களும் போதியளவில் கிடைக்கவில்லை என 44% க்கும் அதிகமான விவசாயிகள் தெரிவித்தனர். இது, இடைத்தரகர்கள் குறைந்த விலைகளைக் கொடுத்து விவசாயிகளை சுரண்டுவதற்கு வாய்ப்பளித்தது. அவசரமாக ஆடுகளை விற்க வேண்டி நேரிடும்பொழுது, பேரம்பேசும் சக்தியும் அவர்களிடம் இருப்பதில்லை. வயது முதிர்ந்த பெட்டை ஆடுகளை விற்பனை செய்வதில் தாம் சமய மற்றும் பாரம்பரிய இடையூறுகளை எதிர்நோக்கி வந்ததாகவும் சிலர் தெரிவித்தனர்.

## முடிவுரை

இந்த இரு மாவட்டங்களிலும் ஆடு வளர்ப்பவர்களின் சராசரி வருடாந்த குடும்ப வருமானத்தில் பாரிய வேறுபாடுகள் நிலவி வரவில்லை. எனினும், அம்பாறை மாவட்ட விவசாயிகளின் ஆடு வளர்ப்பு மூலமான வருமானம் இருமடங்கானதாக காணப்பட்டது. அவர்கள் அதிக எண்ணிக்கையிலான ஆடுகளை விற்பனை செய்ததும், நல்ல விலைகளைப் பெற்றுக் கொண்டதுமே இதற்கான காரணமாகும். குடும்ப வருமானத்தில் ஆடு வளர்ப்பு மூலமான வருமானத்தின் பங்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 14% தொடக்கம் 22% வரையில் இருந்து வந்ததுடன், (பெரும்பாலான விவசாயிகள் முழுநேர ஆடு வளர்ப்பில் ஈடுபட்டிருந்த) அம்பாறை மாவட்டத்தில் 39% தொடக்கம் 65% வரையில் காணப்பட்டது.

இரு மாவட்டங்களிலும் வளர்ந்த ஆடுகள் பிரதானமாக பண வருமானத்துக்காகவே (52%) விற்பனை செய்யப்பட்டு வந்தன; ஆனால், சிலர் மந்தையை பரிபாலிப்பதனை இலகுவாக்கும் பொருட்டு ஆடுகளை விற்று வந்துள்ளனர்; வேறு சிலர் நோய்த்தொல்லைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக விற்பனை செய்துள்ளனர். ஆடுகளை விற்பனை செய்வதற்கான முறையான சந்தைகள் இருந்து வரவில்லை. வயது, பால் மற்றும் தோற்றம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உயிருள்ள ஆடுகளுக்கு புறத்தோற்றத்தின் அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு வந்தன. போக்குவரத்து வசதிகள் பற்றாக்குறை, விலைத்தகவல்கள் இன்மை மற்றும் குறைந்த விலைகள் என்பவற்றை, விவசாயிகள் தமது சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளாக சுட்டிக் கா' - னர்.

விலைகளை நிர்ணயிப்பதற்காக ஆடுகளின் புறத்தோற்றத்தை மதிப்பிடும் போக்கு, விவசாயிகளை, இடைத்தரகர்களினதும், வியாபாரிகளினதும் சுரண்டலுக்கு ஆளாக்கி வருகின்றது. ஆடு வளர்ப்பவர்கள் தொடர்ந்தும் இத்துறையில் ஈடுபட்டு வருவதனை ஊக்குவிக்க வேண்டுமானால், பொருத்தமான சந்தைப்படுத்தல் முறையொன்று வகுக்கப்படுதல் அவசியமாகும். மேலும், விவசாய விரிவாக்கல் சேவைகள், ஆடு வளர்ப்பினைத் தூண்டுவதற்கும் நவீன உற்பத்தி மற்றும் முகாமை முறைகளை உருவாக்கிக் கொள்வதற்கு உதவுவதற்கும் இது வகை செய்யும். எனவே, சந்தைப்படுத்தலில் உதவுவதற்கும் நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக் கொள்வதற்குமான ஆடு வளர்ப்போர் சங்கங்கள் உருவாக்கப்படுதல் அவசியமாகும். அரசாங்கம், சந்தைப்படுத்தல் முறைகளை ஏற்பாடு செய்வதன் மூலம் அல்லது ஆடு சந்தைப்படுத்துவதில் தனியார் துறை ஈடுபடுவதற்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் இது தொடர்பாக உதவ முடியும். முழு நேர அடிப்படையில் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் நிலைத்திருப்பதற்கும், நீண்ட காலத்தில் நாட்டின் ஆட்டிறைச்சி உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கும் இது அவசியமாகும்.

---

1. ஆடுகளைத்திரட்டும் ஒப்பந்தம்: 'ஒப்பந்த அடிப்படையில் ஆடுகளைத் திரட்டுபவர்' ஆடுகளை சொந்தமாக வைத்திருப்பதில்லை. ஒவ்வோராண்டு முடிவிலும், மொத்த விற்பனைப் பெறுமதியில் ஒரு பாகம் இவர்களுக்கு உரிமையாளர்களால் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த தொகை மொத்த விற்பனையில் வீதமொன்றாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகின்றது. 'ஒப்பந்த திரட்டுபவர்' விற்பனைக்காலம் வரையில் ஆடுகளுக்கு உணவூட்டி, அவற்றை பார்த்துக் கொள்ள வேண்டும்.

தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண் : QD/46/News/94

மக்கள் வங்கி ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

(இரட்டை) இதழ் விலை : ரூ.20/-

உரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு,
அதில் இடம் பெறும் கடடுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் பிரசுரிக்கவோ முடியும்.

யுனைற்றெட் மேர்ச்சன்ஸ் லிமிற்றெட், கொழும்பு 13.